
பூவே
உனக்காக...
கலைவாணி சொக்கலிங்கம்
பூவே உனக்காக... ★ கலைவாணி சொக்கலிங்கம்
பூவே
உனக்காக...
கலைவாணி சொக்கலிங்கம்

## நூல் குறிப்பு

| | |
|---|---|
| ♦ நூல் தலைப்பு | பூவே உனக்காக... |
| ♦ ஆசிரியர் | கலைவாணி சொக்கலிங்கம் |
| ♦ மொழி | தமிழ் |
| ♦ முதற் பதிப்பு | ஏப்ரல், 2013 |
| ♦ உரிமை | ஆசிரியருக்கு |
| ♦ தாளின் தன்மை | 11.6 K.g. வெள்ளைத் தாள் |
| ♦ நூலின் அளவு | 1 × 8 கிரவுன் |
| ♦ அச்சு எழுத்து | 11 புள்ளிகள் |
| ♦ மொத்தப் பக்கங்கள் | 364 |
| ♦ பைண்டிங் | சாதா அட்டை |

**விலை: ரூ. 160.00**

வெளியிடுவோர் **அருண் பதிப்பகம்**
எண். 107/8, கௌடியா மடம் சாலை,
இராயப்பேட்டை, சென்னை - 600 014.

கணினி அச்சு

அச்சிட்டோர்: மாதா பிரிண்டர்ஸ், சென்னை - 116.


# பூவே
# உனக்காக...

# பூவே உனக்காக...

## 1



கதிரவனைக் காணும் போதெல்லாம்
இந்தப் பூ முகம் மலர்ந்து சிரிக்கும்!
மற்ற நேரங்களில் இந்தப் புன்னகை
மறைவது என்ன நியாயம்?

அதிகாலையிலே எழுந்து வீட்டின் கதவைத் திறந்து கொண்டு வெளியே வந்தாள் சூரியகாந்தி. தூங்கியும் தூங்காமலும் கலைந்திருந்த கூந்தலோடு எவ்வித

ஒப்பனையும் இன்றியே களையான முகம். மாநிறமாய் இருந்தபோதும் பளபளவென மின்னும் அழகு முகம். கனவுகளைத் தேக்கி வைத்திருக்கும் மலர்க் கண்களால் வானத்தைக் கூர்ந்து பார்த்தாள்.

கரிய மேகங்கள் சூழ்ந்திருக்க, நட்சத்திரக் கூட்டங்களையோ, வட்ட நிலவையோ காணாமல் சூரியகாந்தியின் முகம் வாடிப் போனது. வானம் முழுக்கப் பார்வையைப் படர விட்டாள்.

ம்ஹூம்! ஒரு நட்சத்திரம் கூடக் கண்ணில் படவில்லை.

"ஒரு நட்சத்திரம் கூட இல்லையே. வானம் இப்படிக் கும்முன்னு இருக்கே. அப்போ இன்னிக்கும் மழை பெய்யுமோ?" - தனக்குள்ளேயே முனகியவாறு வானத்தையே இமைக்காமல் பார்த்துக் கொண்டு நின்றாள்.

முந்தைய நாள் நள்ளிரவுவரை கொட்டித் தீர்த்த மழை, விடியும் நேரத்தில் நின்றுவிட, இனி மழை வராது. விடிந்ததும் வேலைக்குப் போய் விடலாம் என்ற ஆசையில் கொட்டக் கொட்ட விழித்திருந்து கடிகாரத்தில் நான்கு மணி ஆனதும் ஆவலாய் வெளியே வந்தாள்.

வழக்கமாய் இந்த நேரத்திற்கெல்லாம் விடியலின் அறிகுறி தென்பட்டுவிடும். கூரை மேல் அடைந்திருக்கும் சேவல்கள் தங்களது சிறகுகளைப் படபடவென அடித்துக் கொண்டு தங்களது மணித் தொண்டையைத் திறந்து, "கொக்கரக்கோ... கோ..." எனக் கூவி ஊரையே எழுப்பி விடும்.



அதைத் தொடர்ந்து, விடாமல் கரையும் காகங்களின் ஒலியும், பறவை இனங்களின் இனிய சங்கீதமும், தெருவில் சாணம் தெளிக்கும் சளசள ஓசையும், மாடுகளை ஓட்டிக் கொண்டு வயலுக்குக் கிளம்பும் உழவர்களின் குரலோசையுமாய் ஊரே விழித்து விடும்.

ஆனால் இன்று கொசுக்களின் ரீங்காரத்தையும் தவளைகளின் இரைச்சல்களையும் தவிர, வெகு அமைதியாய் இருந்தது ஊர். நான்கு நாட்களாய்த் தொடர்ந்து பெய்து கொண்டிருந்த மழையால் கடும் குளிர் பரவியிருந்தது.

இந்தக் குளிருக்குப் பயந்து மனிதர்கள் மட்டுமல்ல, பறவை இனங்கள் கூடப் பதுங்கிக் கொண்டதோ? மழை பெய்ததால் முற்றத்தில் சாணம் தெளிக்க வேண்டியதில்லை. வயல்களில் தோட்டங்களில் நீர் பாய்ச்ச வேண்டிய அவசியமில்லை. அதனால் இந்த அதிகாலையில் யாரும் எழுந்து வரவில்லை.

நன்றாகப் போர்த்திக் கொண்டு உறங்குகின்றனர் போலும். ஆனால் தனக்கு மட்டும் ஏன் உறக்கம் வர மறுக்கின்றது? இமைகள் ஒன்றோடொன்று இணைய மாட்டேன் என்கிறதே... இன்று மட்டுமல்ல, இந்த நான்கு நாட்களாய் ஒரு நிமிடம் கூடத் தூங்க முடியவில்லையே... ஏன்?

வழக்கமாய் வேலை முடிந்து களைப்பாய் வீடு திரும்பிச் சுடுதண்ணீரில் ஒரு குளியல் போட்டு விட்டு அம்மா செய்து தரும் சாப்பாட்டைச் சாப்பிட்டு விட்டுப்

பாயில் விழுந்தால், மறுநாள் அதிகாலை நான்கு மணிக்கு எழுவதுதான் வழக்கம்.

ஆனால் இப்போது மட்டும் ஏன்? இந்த நான்கு நாட்கள்... வேலைக்குச் செல்லாத, செல்ல முடியாத நான்கு நாட்கள்... ஆதவனை நேரில் காண இயலாத இந்த நான்கு நாட்களாய்த்தான் இந்த அவஸ்தை.

பசித்தும் சாப்பிட முடியாமல்... படுத்தும் உறக்கம் வராமல்... ச்சே! இது என்ன அவஸ்தை? இதே அவஸ்தை ஆதவனுக்கும் இருக்குமா? என்னைப் போல் விழித்து உட்கார்ந்து இன்றாவது மழை விட்டு விடாதா என ஏக்கமாய் வானத்தைப் பார்த்துக் கொண்டிருப்பானா?

ம்ஹூம்... அப்படியெல்லாம் இருக்காது. சரியான கல்லுளிப் பய. இந்நேரம் குப்புறப் படுத்துக் குறட்டை விட்டுட்டு இருப்பான். நான்தான் பைத்தியக்காரி. அதான் இப்படி அவன் நினைப்புலேயே பித்துப் பிடிச்சவ மாதிரி அலைந்து கொண்டு திரிகிறேன்.

இந்த நான்கு நாட்களில் ஒரு முறையாவது தன்னை நினைத்திருப்பானா அவன்? ஜடம். கல்லுப் பிள்ளையார். வாயைத் திறந்து ஒரு வார்த்தை பேசவே பத்து முறை யோசிப்பவனாயிற்றே. போயும் போயும் அந்தக் கல்லைப் போய்த் தேர்ந்தெடுத்தேனே!

'இருக்கட்டும். மழை நிற்கட்டும். கண்ணில் சிக்காமலா போய் விடுவாய்? அப்போ இருக்கு உனக்கு?' மேற்குத் திசை நோக்கி நின்று ஆதவனே நேரில் நிற்பதாய் எண்ணிக் கொண்டு முணுமுணுத்துக்



கொண்டிருந்த போது முதுகின் பின்னால் அதட்டலான குரல் கேட்டது.

"ஏய்! யாரது இருட்டுல?" - முருகேசனின் குரலில் பதறித் திரும்பினாள்.

"அ... அண்ணே! நான்...தான்."

"என்ன செய்யுற நீ?"

"வந்து... சும்மாதான்..."

"என்ன?" - தூக்கம் கலையாத குரலில் மீண்டும் அதட்டினான்.

"இல்லண்ணே! வந்து... விடியப் போகுதே. அதான் சாணி தெளிக்கலாம்னு..."

"என்ன? சாணி தெளிக்கப் போறியா? லூசா நீ? இல்ல... கனா கினா கண்டியா?"

"அண்ணே!"

"விடிய விடிய மழை கொட்டியிருக்கு. தெரு முழுக்கத் தெப்பமா தண்ணி நிறைஞ்சு கிடக்கு. சாணி தெளிக்கிறாளாம் சாணி!" - கொட்டாவியோடு அவன் சொன்ன பிறகே இவ்வளவு நேரமாய்த் தான் தண்ணீரில் நின்று கொண்டிருக்கிறோம் என்ற உணர்வே வந்தது சூரியகாந்திக்கு.

கணுக்காலிற்கும் மேல் தண்ணீர் தேங்கி நிற்க, சட்டெனப் பாவாடையை லேசாய் உயர்த்திப் பிடித்துக் கொண்டாள். வீட்டின் கூரையில் சொட்டுச் சொட்டாய் இன்னும் நீர் வழிந்து கொண்டிருந்தது.

முருகேசன் எரிச்சலாய்த் தங்கையை விரட்டினான். "போ. போய்க் கதவைச் சாத்திட்டுப் படு. சும்மாவே கொசுத் தொல்லை தாங்கலை. இதுல கதவை வேற திறந்து போட்டுட்டு தெருவில வந்து பேய் மாதிரி நின்னுட்டு இருக்கா. போ... போ..."

"ச...ரிண்ணே!" - மறு வார்த்தை பேசாமல் வீட்டிற்குள் நுழைந்தாள் சூரியகாந்தி.

சற்றுப் பெரிதாய் நீளமாய் இருந்த ஒரே அறையில் வரிசையாய்த் தம்பி, தங்கை, அம்மா எனத் தரையில் பாயில் படுத்திருக்க... அவர்களின் மேல் மிதித்து விடாமல் கவனமாய்ப் பாதம் பதித்துச் சுவரோரமாய்க் கிடந்த தன் பாயில் சென்று படுத்தாள்.

வாசலுக்கு இடப்புறமாய்க் கிடந்த நார்க் கட்டிலில் வந்து படுத்துக் கொண்டான் முருகேசன். சற்று நேரத்தில் மெலிதான குறட்டை ஒலி அவனிடமிருந்து வெளிவர... மெல்லத் தலையை உயர்த்திப் பார்த்தாள்.

முருகேசனிடமோ தாயிடமோ எந்த அசைவும் இல்லை என்று தெரிந்ததும்... மெதுவாய் எழுந்தாள். இனி வாசல் கதவைத் திறந்தால் அண்ணன் விழித்து விடக் கூடும் என்று அஞ்சியவாறே ஓசையின்றிப் பின்பக்கக் கதவை அடைந்தாள்.

மரப் பலகைகளை இணைத்து அதைக் கதவாக்கி இருந்தாள் அம்மா. சுலபமாய் எந்த ஓசையும் இன்றி அது திறந்து கொள்ள, காற்றைப் போல் வெளியேறிக் கதவைப் பூப்போல் சாத்தி வெளியே உள்ள கயிற்றால் கட்டினாள். கிணற்றடியை நோக்கி நடக்கத் துவங்கினாள்.



தொடர்ச்சியாய்ப் பெய்த மழையில் பின்கட்டின் மண் பகுதி முழுக்கச் சேறும் சகதியுமாய் மாறியிருந்தது. கிணற்றின் பக்கமாய் வளர்த்து வந்த செம்பருத்தி, கனகாம்பரம், சாமந்திச் செடிகள் அனைத்தும் பாதியளவிற்கு நீரில் மூழ்கியிருந்தன.

'முதலில் இந்த இடத்திற்கு சிமெண்ட் தரை போட வேண்டும். காலைத் தரையில் வைக்க முடியவில்லை.' - சேற்றில் புதைந்த கால்களைக் கவனமாய் எடுத்து நடந்து கிணற்றை நெருங்கினாள். இப்போது லேசாய் வெளிச்சம் தெரிந்தது.

மனம் முழுக்க உற்சாகத்துடன் வானத்தைப் பார்த்தாள். இதுவரை சூழ்ந்திருந்த கரும் மேகங்கள் மெல்ல மெல்லக் கலைந்து செல்ல, கதிரவனின் ஒளி லேசாய்ப் பளீரிட்டது. எங்கோ சோம்பலாய் ஓர் சேவல் கூவியது. அதைத் தொடர்ந்து சில காக்கைகள் கரைய... சூரியகாந்திக்கு உற்சாகம் பீறிட்டது.

கிணற்றை எட்டிப் பார்த்தாள். நீர்மட்டம் உயர்ந்து கைக்கெட்டும் ஆழத்தில் நீர் நிறைந்திருந்தது. கிணற்றின் மீது கவிழ்த்து வைத்திருந்த இரும்பு வாளியை எடுத்துச் சற்றுக் குனிந்து வாளி நிறைய நீரை எடுத்தாள்.

கால்களில் அப்பியிருந்த சகதியைத் தேய்த்துக் கழுவினாள். 'குளித்து விடலாமா? வேண்டாம். மாற்றுத் துணி எடுப்பதற்கு வீட்டிற்குள் போக வேண்டும். விளக்கைப் போட்டால் அண்ணனோ அம்மாவோ எழுந்து விடலாம். முதலில் விடியட்டும். பிறகு குளித்துக் கொள்ளலாம்.'

கிணற்றுச் சுவர் மீது அமர்ந்து வானத்தைப் பார்க்கத் துவங்கினாள். 'வருண பகவானே! தொடர்ந்து இத்தனை நாளாய் எங்கள் ஊரை நனைத்தது போதும். மழையே காணாமல் எத்தனையோ பூமி வறண்டு கிடக்கிறதே. அங்கே சென்று உங்கள் கருணையைக் காட்டுங்கள். இனியும் இங்கேயே நீங்கள் மழை பொழிந்தால் எங்கள் பூமி குளிரும். ஆனால் எங்கள் வயிறு காய்ந்து விடும்.

'அதனால் உங்கள் பணியைத் தேவைப்படும் இடத்தில் தொடருங்கள். சூரியனை வெளியே வர விடுங்கள். வெயில் வரட்டும். நான் வேலைக்குச் செல்ல வேண்டும். என் உயிரை நேரில் காண வேண்டும். எனக்காகத் தயை செய்யுங்கள், வருண பகவானே!' - மேகக் கூட்டத்தைப் பார்த்த வண்ணம் கைகூப்பிக் கேட்டுக் கொண்டிருந்தவளைப் பார்த்துக் கேலியான நகைப்பொலி கேட்டது.

அந்தச் சிரிப்புக்குச் சொந்தக்காரி யார் என்று தெரியும் என்பதால்... லேசான கோபத்துடன் தன் வீட்டுக்கு அடுத்த வீட்டின் பின் பக்கத்தைத் திரும்பிப் பார்த்தாள் சூரியகாந்தி.

வாயில் வேப்பங் குச்சியுடன் பாவாடை தாவணியுமாய்... முகத்தில் கேலிப் புன்னகையுமாய் நின்றாள் துளசி. சூரியகாந்தியின் நெருங்கிய தோழி. நெருங்கிய உறவும் கூட.

"என்ன சூரி? வழக்கம் போலத் தவம் பண்றியாக்கும்! ஆதவனைத் தேடுறியா?" - மென்மையான கேலிக் குரல்தான் என்றாலும் விடிந்தும் விடியாத அமைதியான பொழுதில் துளசியின் குரல் பலமாய் எதிரொலிக்க, சூரியகாந்தி பதறினாள்.



கிணற்றுச் சுவரை விட்டு இறங்கி வேகமாய் வேலியோரத்திற்குச் சென்று துளசியிடம் சீறினாள். சுற்றுமுற்றும் பார்த்துக் கொண்டே கேட்டாள்.

"ஏய்! ஏன்டி இப்படிக் கத்துற? இப்ப எதுக்கு அவர் பேரைச் சொல்ற?"

"நான் ஒன்னும் உன் அவரைச் சொல்லலை. சூரியனைத்தான் சொன்னேன்!" - என்றவாறே துளசி மீண்டும் புன்னகைக்க, கடுகடுவெனக் கோபம் ஏறியது.

"துளசி! வர வர உன் இம்சை தாங்கலை. நீயே என்னை மாட்டி விட்டுடுவ போலிருக்கே!"

"ஏய்! பதறாதேடி. நான் ஒன்னும் உன்னை மாட்டி விட வேண்டாம். நீயே தானே மாட்டிப்ப!"

"என்னடி சொல்ற?"

"ஆமா. கொட்டுற மழையிலும் பனியிலும் நின்னுட்டு மழை நிற்கட்டும்... மழை வர வேண்டாம்னு தவம் பண்ணிட்டு இருக்கியே.... இது போதாதா?"

"ஏன்? நான் என்ன சும்மாவா வேண்டுறேன்? வேலைக்குப் போனாத்தான் நமக்குச் சாப்பாடு. மழை நின்னாத்தானே நமக்கு வேலை. உனக்கும் சேர்த்துத்தான் வேண்டிட்டு இருக்கேன். இதுல என்ன தப்பு இருக்கு?"

துளசியின் புன்னகை பெரிதானது. "சூரி! பரவாயில்லைடி. நீயும் மேஸ்திரி கூடச் சேர்ந்து ரொம்ப விபரமா பேச ஆரம்பிச்சிட்ட..."

"ஏய்! மெல்லப் பேசேன்டி. ஏன் கத்துற? நீ முதல்ல வீட்டுக்குள்ளே போ. போடின்றேனில்ல..."

"ஏய்! விடிஞ்சாச்சி. இனிமே சீக்கிரமாக் குளிச்சிட்டு வேலைக்குப் போக வேண்டாமா? என்கிட்ட சண்டை போடுறதை விட்டுட்டு நீ கிளம்பு. உனக்குத்தான் ரொம்ப அவசரம்."

"துளசி!" - பற்களைக் கடித்தாள் சூரியகாந்தி.

"சரி... சரி. இனிமே கிண்டல் பண்ணலை... சூரி! ஆனா ஒன்னு மட்டும் உண்மைடி."

"என்ன?"

"உன்னோட அன்பு ரொம்ப ஆழமானது. நாம கட்டுற கட்டடங்களை மாதிரி உறுதியானதுன்னு நினைக்கிறேன்."

"என்ன திடீர்ன்னு?"

"இல்லை. ஒரு வாரம் மழை நீடிக்கும்னு ரேடியோவில, டி.வி.யில எல்லாம் சொல்லிட்டே இருந்தாங்களே. நீ செய்த தவத்தைப் பார்த்து வருண பகவான் மனசு இரங்கிட்டாரு போலிருக்கே..."

"ஏய்!"

"நாலே நாள்ல தன் வேலையை நிறுத்திட்டாரே. எவ்வளவு அதிசயம் இது. உன் அன்பு எவ்வளவு உறுதியானதுன்னு அந்தக் கடவுளுக்குக் கூடத் தெரிஞ்சிருக்கு. இந்தச் சூரியனுக்குத்தான் தெரிய மாட்டேங்குது."



"சூரியனுக்கா?"

"அதான்டி. அந்த ஆதவனுக்கு..." - துளசி குரலைக் குறைத்தபடி சொல்ல... சூரியகாந்தி அவளது தலையில் நறுக்கெனக் கொட்டினாள்.

"ஸ்... ஸ்...! ஏய், ஏன்டி இப்படிக் கொட்டுற?"

"உன்கிட்ட எத்தனை தரம் சொல்லியிருக்கேன். அவர் பேரைச் சொல்லாதேன்னு..."

"ஏன்? அவர் உனக்கு மட்டுமில்ல. எனக்கும் முறைப் பையன்தான். நினைவிருக்கட்டும். நான்தான் போனா போகட்டும்னு உனக்காக விட்டுக் கொடுத்திருக்கேன்."

"ம்... ம்... இந்தப் பேச்சு மட்டும் மேலத்தெருக் காரனுங்க காதுல விழுந்தது அருவா கம்போட வந்திடு வானுங்க, பார்த்துக்கோ."

"அவனுங்களை விடு. உன் அண்ணன் காதில விழுந்தாப் போதுமே. அரிவாளை எடுத்து நம்மைக் கூறு போட்டுடுவானே!" - என்றதும் சூரியகாந்தியின் முகம் பயத்தில் வெளிறியது.

"அதனாலதான் துளசி சொல்றேன். தயவு செய்து அவர் பேரை இங்கே யார் காதுலேயும் விழற மாதிரி சொல்லிடாதே. நம்ம தெருக்காரங்க எப்பவுமே பொறுமை இல்லாதவனுங்க. என்ன ஏதுன்னு பொறுமையாக் கேட்கக் கூட மாட்டானுங்க...

"அரிவாளைத் தூக்கிட்டு வெட்டுறதுக்குக் கிளம்பிடு வானுங்க. அவருக்கு மட்டும் ஏதாவது ஆச்சின்னா...

அப்புறம்... அப்புறம் என்னை உசிரோடவே பார்க்க மாட்டாய்."

"ஏய்! என்ன சூரி இது? நான் சும்மா விளையாட்டாத்தானே சொன்னேன். அழாதே சூரி! இனி இப்படிப் பேச மாட்டேன்."

"துளசி! கடைசி வரைக்கும் இந்தப் பிரியம் வேற யாருக்கும் தெரியக் கூடாதுடி. நீ யார்கிட்டயும்..."

"என் உயிரே போனாலும் என் வாயில இருந்து ஒரு வார்த்தை வராது. போதுமா?"

"உன்னை நம்ப முடியாது. என் தலைமேல அடிச்சுச் சத்தியம் பண்ணு."

"என்னை நம்ப மாட்டியா சூரி?"

"ம்ஹூம். நீ யார் கிட்டயாவது உளறிட்டா? அதனால சத்தியம் பண்ணு..." தலையைக் குனிந்து காட்டினாள்.

துளசியின் மனம் கனத்தது. 'இன்னும் எத்தனை காலம்தான் மனசுக்குள் அந்த ஆதவனைச் சுமந்து கொண்டு மௌனியாய் இருப்பாளோ? சமயம் பார்த்து அவனிடம் பேசலாம் என்றால்...'

"ஏய்! என்ன யோசனை? எவ்வளவு நேரம்தான் குனிஞ்சிட்டே நிற்கிறது? சீக்கிரம் சத்தியம் பண்ணுடி."

"என்ன செய்யணும்?"

"என்னையும் உன்னையும் தவிர இந்த விஷயம் வேற யாருக்கும் தெரியக் கூடாது. உன் வாயால யார்கிட்டயும் சொல்லக் கூடாது. சொல்லு..."



"சரி... உன் மேல ஆணையா நான் ஒரு வார்த்தைகூட மூச்சு விட மாட்டேன். யார்கிட்டயும் சொல்ல மாட்டேன்..." - பெருமூச்சோடு உள்ளங்கையைத் தோழியின் தலையில் வைத்துச் சத்தியம் செய்தாள் தோழி.

கரிய மேகங்கள் சுத்தமாய் விலகியிருக்க... கதிரவனின் ஒளி பளீரிட்டது. சுற்றுப்புறம் முழுக்க வெளிச்சம் பரவ... அக்கம் பக்கம் வீடுகளில் நடமாட்டம் துவங்கியது.

"சரி... சூரி! பொழுது விடிஞ்சி போச்சு. ஒரு ஏழு மணிக்கா... உன் தம்பியை அனுப்பி இன்னிக்கு வேலை இருக்கான்னு கேட்டுட்டு வரச் சொல்லு. வேலை இருந்தா உடனே எனக்குக் குரல் கொடு. சீக்கிரமா கிளம்பிப் போயிடலாம்."

"சரிடி."

துளசி விலகிச் சென்றுவிட... சூரியகாந்தி மீண்டும் வானைப் பார்த்தாள்.

சூரியனின் பிம்பம் சற்றுத் தெளிவின்றித் தெரிந்த போதும், அதன் பிரகாசத்தை மனநிறைவோடு பார்த்துப் புன்னகைத்தாள். சூரியக் கதிர்களின் நடுவே ஆதவனின் முகம் தோன்றிச் சிரித்தது.

'எத்தனை நாளாயிற்று, உன்னைப் பார்த்து? இப்போதுதான் வெளியே வர வேண்டும் என்று தோன்றியதா? என்னைப் பார்த்தால் உனக்குப் பாவமாக இல்லையா? இனி இப்படி என்னைத் தவிக்க விடாதே. பிறகு உன்னைப் பார்க்கவே மாட்டேன். சொல்லி விட்டேன்.'

"அடியே சூரி! கதவை வெளிப்பக்கமா கட்டிட்டு என்னடி பண்ற? கதவைத் திற!" - கனகத்தின் குரல் கேட்டுப் பதறி ஓடிக் கதவைத் திறந்து விட்டாள்.

மெலிந்த தேகமும் வற்றிய வயிறுமாய் இருந்த கனகம் கலைந்த தலைமுடியை உதறிக் கொண்டையாக்கியவாறே வெளியே வந்தாள். வறுமையின் மொத்த வடிவம் என கனகத்தை நிறுத்தி வைத்தால் வெகு பொருத்தமாய் இருப்பாள். நைந்த ஆடையென்றாலும் கிழிசல் இன்றி இருந்தது.

"ஏய்! இங்கே நின்னு என்ன பண்ணிட்டு இருக்க?"

"ஒன்னுமில்லைம்மா. இன்னிக்கு வேலை இருந்தாச் சொல்லுன்னு துளசி சொன்னாள். அதான் பேசிட்டு இருந்தேன்."

"பொல பொலன்னு விடிஞ்சி போச்சே. நான்தான் சித்த அசந்து தூங்கிட்டேன். நீ ஒரு குரல் கொடுத்திருக் கலாமில்ல?" - என்றவாறே கிணற்றிலிருந்து நீர் இறைத்து முகத்தைக் கழுவத் துவங்கினாள் கனகம்.

"அதனால என்னம்மா? பாவம்! தூங்கிறியேன்னு தான் எழுப்பலை."

"உனக்கும் அண்ணனுக்கும் சோறு பொங்கிக் கொடுத்தனுப்ப வேண்டாமா? நேரமாகிப் போச்சே. விறகெல்லாம் வேற ஈரமாக் கிடக்கு!" - கழுவிய முகத்தைத் தன் புடவைத் தலைப்பால் துடைத்துக் கொண்டே, வீட்டின் பின்புறமாய் ஓலைகளால் வேயப்பட்டிருந்த அடுக்களைக்குள் நுழைந்தாள்.



தாயின் பின்னே வந்தாள் சூரியகாந்தி. சுவரோரமாய் இருந்த சுள்ளிக் கட்டைப் பிரித்து, சாணத்தால் மெழுகியிருந்த மண் அடுப்பைப் பற்ற வைக்க கனகம் முயல... சாப்பாடு செய்வதற்கான முயற்சியில் இறங்கினாள் சூரியகாந்தி.

"யம்மோவ்! முத்து மாமா வீட்டில இருக்கிற மாதிரி நாமளும் காஸ் அடுப்பு வாங்கிடலாமா?"

"என்னது?"

"அதாம்மா! சிலிண்டர் அடுப்பு. புகை, கரி எதுவும் வராது. சும்மா ஜம்முன்னு நின்னுட்டே சமைக்கலாம். ப்பூ ப்பூன்னு ஊத வேண்டாம். சட்டுன்னு சமைச்சிடலாமாம். நாமளும் வாங்குவோமா?"

"ஆகுற வேலையைப் பாருடி. உன் அப்பன் வச்சிட்டுப் போன கடனையே அடைக்க இயலாம மூச்சு முட்டுது. இதுல சிலிண்டராம்... அடுப்பாம். பேசாம வேலையைப் பாரு. நம்ம தலையெழுத்து இந்தப் புகை அடுப்புதான். கடவுள் கண்ணைத் திறந்தான்னா... நீ வாக்கப்பட்டுப் போகிற வீட்டுலயாவது அந்த மாதிரி வசதி கிடைக்கட்டும்."- பெருமூச்சோடு கனகம் தன் வேலையில் ஆழ்ந்துவிட... சூரியகாந்தியின் மனம் மீண்டும் ஆதவனிடமே சென்றது.

'அவன் வீடு எப்படி இருக்கும்? தன்னைப் போல் வேலை செய்பவன் வீடு என்ன பெரிய பங்களாவாகவா இருக்கும்? நிச்சயம் இதே போல் சிறிய வீடாகத்தான் இருக்கும். போதும். நாங்கள் மனமொன்றி வாழ அந்தக் குடிசை போதும்.'

சூரியகாந்தியின் முகத்தில் செம்மை படர்ந்தது.

# 2



நீ மட்டும் என் கனவில்
வருவதாக இருந்தால் - என்
வாழ்நாள் முழுவதும் இமைகளை
மூடிக் கொண்டே இருப்பேன்!

**பு**ன்னை வனம் கிராமத்தின் மேற்குத் திசையில் அமைந்திருந்தது.

சூரியகாந்தியின் மனம் முழுக்க நிறைந்திருந்தது ஆதவனின் வீடு. சிறிய கிராமம். அதில் மேற்குத் திசையில் எழுபது வீடுகள், கிழக்குத் திசையில் ஐம்பது வீடுகள் என மொத்தம் நூற்று இருபது குடும்பங்தள் மட்டுமே வசிக்கும் ஒரு குக்கிராமம்.

தண்டியூர்ப் பகுதியில் இருந்து வசித்த இரண்டு குடும்பங்கள் விறகு வெட்டிப் பிழைப்பு நடத்தவென்று புன்னை மரங்கள் சூழ்ந்த அந்த வனப் பகுதிக்கு வந்து குடிசை போட்டுத் தங்கிவிட, நாளடைவில் அடர்ந்த மரங்களை வெட்டித் தங்களது உறவினர்களையும் வரவழைத்து, அதே ஊரில் தங்க... அந்த வனம் புன்னைவனம் கிராமம் ஆனது.

பிறகு அந்தக் குடும்பங்கள் பல்கிப் பெருகித் தோட்டம், துரவு, கடைகள், பேருந்துப் போக்குவரத்து, பாடசாலை எனக் கிராமத்திற்குரிய அனைத்தும் நிறைந்து



பசுமையும் செழிப்பும் ஒற்றுமையாய், ஒரே குடும்பமாய் வாழ்ந்து கொண்டிருந்த ஊர்தான்.

உழைப்பிற்கும் ஒற்றுமைக்கும் பெயர் போன ஊரும் கூட. அந்தச் சமயத்தில்தான் ஊர்த் திருவிழா வந்தது. வழக்கமாய் ஆட்டம், பாட்டம், விருந்து என அமர்க்களப்படும் விருந்தில் மேற்குத் தெருவில் உள்ள ஒருவன் போதை அதிகமாகிவிட... கிழக்குத் தெருவில் வசிக்கும் வேலப்பன் வீட்டு விருந்தினர் பெண்ணிடம் சில்மிஷத்தைக் காட்டி விட... ஊரே ரெண்டு பட்டுப் போனது.

அதுவரை ஒரே குடும்பமாய் அண்ணன், தம்பியாய்ப் பழகியவர்கள் எதிர் எதிர்த் துருவங்களாய் மாறி ஒருவரையொருவர் அடித்துக் கொண்டனர். தகராறு முற்றிப் போய் வெட்டு, குத்து எனக் கொலைவெறியாய் மாறிப் போனதில் இத்தனை பிரச்சனைக்கும் காரண மானவனின் உயிர் பறிபோனது.

பதிலுக்குப் பதில்... இரத்தத்திற்கு இரத்தம் என மேற்குத் தெருவில் உள்ளவர்கள் வேலப்பனை வெட்டிச் சாய்க்க... பகை நிரந்தரமாகிப் போனது.

அன்று முதல் கோவில் இரண்டாய் ஆனது. அவரவர் தெருவில் உள்ள கோவிலில் விழாக் கொண்டாடலாம்.

இந்தத் தெருவிற்கு அந்தத் தெருவில் உள்ளவர்கள் வரக் கூடாது. அந்தத் தெருவில் திருமணம் முதல் இழவு காரியம்வரை எது நடந்தாலும் இங்கிருந்து யாரும் போகக் கூடாது எனக் கடுமையான சட்டம் போடப்பட்டது.

இரண்டு தெருவிற்கும் நடுவே இருந்தது ஒரு சிமெண்ட் பாதை. அந்தப் பாதை வழியே நடந்து மேற்குத் திசையின் எல்லையில் இருந்த பள்ளிக் கூடத்திற்குச் செல்வதற்குப் பள்ளிக் குழந்தைகளுக்கு மட்டும் அனுமதி. அதுவும் தெருவில் இறங்கிக் குறுக்குப் பாதையில் செல்லக்கூடாது.

ஆசிரியர்கள் வெளியூரில் இருந்து வந்து செல்வதால் அவர்களிடம் எந்தக் கெடுபிடியும் காட்டுவதில்லை. மற்றப்படி இரு தெருக்களில் நடக்கும் எந்த நல்லது கெட்டதில் யாரும் கலந்து கொள்வதில்லை.

வெளியே எங்கேனும் ஒருவருக்கொருவர் நேர் எதிரே சந்தித்துக் கொண்டால் எலியும் பூனையும் போல் சிலிர்த்துக் கொண்டு போவது வழக்கம். இதில் மிகவும் பாதிப்படைந்தவள் சூரியகாந்திதான். அப்போது அவளுக்கு வயது பதினைந்து.

வயதுக்கு வந்தபோது தாய்மாமன் இல்லாதவள் என்று ஒன்றுவிட்ட மாமன் மகனான ஆதவனே முறைசீர் செய்ய, சீர் செய்தவன்தான் வருங்காலக் கணவன் என்ற கொள்கையில் அறியாத வயதிலேயே ஆதவனைக் கணவனாய் எண்ணியவள் ஊர் இரண்டு பட்டதில் திண்டாடிப் போனாள்.

அவனைக் காணாமல், பேச இயலாமல் தவித்தவள்... மனதில் ஆதவன் அழுத்தமாய் வேரூன்றி இருந்ததை எவரும் உணரவில்லை. பெற்றவள் கூட அதை அறியவில்லை. ஆனால் சூரியகாந்தியோ பிறர் அறியாமல் தன் மனத் தோட்டத்தில் பாத்தி கட்டி... நீரூற்றி



உரம் வைத்து அவனது நினைவுகளை விருட்சமாய் ஆக்கியிருந்தாள்.

ஆதவனும் அதே நிலையில்தான் இருந்தான் என்றாலும் வாய் விட்டு ஒரு வார்த்தை பேச மாட்டான். ஏனெனில் வெட்டுப்பட்டு உயிரை விட்டவன் ஆதவனின் சொந்தப் பெரியப்பாவின் மகன். அந்தக் கடுப்பில் பெரியவர்களின் மோசமான போதனைகளைக் கேட்டு வெறியூட்டப்பட்டு வளர்ந்த சந்திரனின் தம்பி.

சந்திரன் மகா வெறியன். கீழத் தெருவில் நடமாடும் நாய் கூடத் தன் தெருவில் நுழைந்தால் கொன்று புதைக்கும் அளவிற்கு வெறி பிடித்தவன். அவனது வெறிச் செயலைக் கண்டே வளர்ந்ததால் சூரியகாந்தியின் மீதுள்ள அபரிமிதமான நேசத்தைக் கூட வெளிக் காட்டாதவன்.

அவர்களை இணைக்கும் ஒரே பாலம் அவர்கள் பணிபுரியும் இடம்தான். கட்டடத் தொழிலாளர் பணியில் இருந்ததால் வேலை நடக்கும் நாட்களில் இருவரும் நேராய்ப் பார்த்துக் கொள்ளலாம். ஆனால் பேசிக் கொள்ள முடியாது.

இவர்கள் மட்டுமல்ல. இவர்களுடன் பணிபுரியும் மற்றவர்களும் கூடத் தங்கள் குழுவினருடன் மட்டுமே பேசிக் கொள்வதுண்டு. தண்டியூரில் உள்ள பிரபல நிலக்கிழார் தங்களது நிலத்தில் கட்டடங்களைக் கட்டி விற்கும் பணியில் ஈடுபட, கட்டும் பணியில் நிரந்தரத் தொழிலாளர் ஆயினர் புன்னைவனம் தொழிலாளர்கள்.

இரண்டு தெருக்களுக்கும் தனித் தனி வண்டிகள் வந்து ஆட்களை ஏற்றிச் செல்லும். இடம்தான் ஒன்று. ஆனால் பணி புரியும் தளம் வேறு வேறாகத்தான் இருக்கும். அதனால் இதுவரை எந்தப் பிரச்சனையும் இன்றி அவர்களது வயிற்றுப் பிழைப்பு ஓடிக் கொண்டிருந்தது.

இதில் தன்னால் எந்தத் தடங்கலும் சிக்கலும் ஏற்பட்டு விடக் கூடாது என்று வெகு ஜாக்கிரதையாய் இருந்தான் ஆதவன். அதனால்தான் நேரில் தன் மனம் கவர்ந்தவளிடம் பேச முடியாதவற்றைக் கனவில் பேசிச் சிரித்துக் கொண்டிருந்தான்.

சின்னதாய் ஓட்டு வீடு. அதில் நான்கு அறைகள். வீட்டுக்குத் தேவையான பொருட்கள் என அம்சமாய் இருந்தது, ஆதவனின் வீடு.

முன் பக்க வராந்தாவில் கயிற்றுக் கட்டிலில் படுத்திருந்தான் ஆதவன். கறுப்பு நிறம். உழைத்து உரமேறிய உடம்பு. தலை கொள்ளாத கேசம். கருகருவென்ற அடர்ந்த மீசை என ஆஜானுபாகுவான ஆண்மகன்.

கண்டு கொண்டிருந்த கனவில் லயித்திருந்ததால் அவனது முகம் புன்னகையோடு வசீகரித்தது. வாசல் கதவு திறந்திருக்க... வீசும் காற்று அவனது கேசத்தைக் கலைத்து விளையாடிக் கொண்டிருந்தது.

கழுத்து வரை இழுத்துப் போர்த்திக் கொண்டிருந்தவனை ரசனையாய்ப் பார்த்துக் கொண்டு நின்றாள்



மரிக்கொழுந்து. ஆதவனின் அத்தை மகள். அதே வீட்டில் வசிப்பவள். தனக்குத்தான் ஆதவன் என்று உறுதியாய் நம்பிக் கொண்டிருப்பவள்.

புரண்டு படுத்தான் ஆதவன். மூடியிருந்த போர்வை விலக, குளிர் காற்றுப் பட்டு, அவனது உடல் சிலிர்த்துக் கொண்டது. பார்த்துக் கொண்டு நின்ற மரிக்கொழுந்து புன்னகை முகமாய் உரிமையாய் அவன் முதுகில் கை வைத்து எழுப்பினாள்.

"மாமோய்! மாமோய்!"

ஆதவனின் உறக்கம் கலைந்தது. கண்களைத் திறக்க மனமின்றி முனகினான். "ம்..."

"மாமோய்! எழுந்திரு மாமா. விடிஞ்சு ரொம்ப நேரமாச்சு!" - காதருகே ஒலித்த குரலில் விருட்டென எழுந்தான்.

தூங்கி எழுந்து கலைந்த தலையுடன் நின்ற மரிக்கொழுந்தைத் தனக்கு வெகு அருகே கண்டதும் ஆதவனின் புன்னகை மறைந்தது.

"ஏய்... நகரு! இது என்ன புதுசா இருக்கு?"

"எது மாமா?"

"இப்படி என்னைத் தொட்டு எழுப்புறது? உன்னைத்தான் என் ரூமுக்கு வரக் கூடாதுன்னு சொல்லியிருக்கேனில்ல?"

"ஏன்? ஏன் வரக்கூடாது? இது என் தாய்மாமன் வூடு."

"இந்த வேலை யெல்லாம் எங்க அப்பனோட நிறுத்திக்க."

"மாமோய்!"

"ச்சீ! நகரு. எப்பப் பாரு, ஒட்டுப் புல்லு மாதிரி கூடவே ஒட்டிக்கிட்டு. காலங்கார்த்தால நிம்மதியா தூங்க விடாம...." - சத்தமாய் முனகியபடியே அவன் மீண்டும் படுக்க... உள்ளே நுழைந்தார் சாமிக்கண்ணு. மடித்துக் கட்டிய வேட்டியும் முறுக்கு மீசையுமாய் எதிரே வருபவர் மிரண்டு ஒதுங்கும் அளவுக்கு ஒரு முரட்டுத் தோற்றம்.

"என்னல... இங்கன சத்தம்?" - சாமிக்கண்ணுவின் அதட்டலான குரல் கேட்டதும், மரிக்கொழுந்து கண்ணைக் கசக்கத் துவங்கினாள்.

"மரிப்புள்ள! ஏந்தாயி கண்ணு கலங்குற?"

"மாமா! உங்க புள்ள என்னை அசிங்க அசிங்கமாப் பேசுது!" - என அழுகுரலில் சொல்ல... ஆத்திரமாய் மீசையை முறுக்கினார்.

"என்னது? அசிங்கமா பேசினானா? எவன் - மூத்தவனா? இளையவனா?"

"இவர்தான் மாமா!" - ஆதவனைச் சுட்டிக் காட்ட, கோபமாய் எழுந்தான் ஆதவன். இடுப்பில் கட்டியிருந்த லுங்கியை இறுகக் கட்டியவாறே அவளிடம் சீறினான்.

"ஏய்! நான் என்னடி அசிங்கமாப் பேசினேன்?"

"இப்பத்தானே பேசினே..."

"என்னடி பேசினேன்?"



"அதான்... இந்த வேலை யெல்லாம் என் அப்பனோட நிறுத்திக்கன்னு சொன்னியே. அதுக்கு என்ன அர்த்தமாம்?"

"ஆதவா! என்னடா இதெல்லாம்?"

"அப்பா! நான் ஒன்னும் தப்பாச் சொல்லலை. எப்பவும் எதையாவது நோண்டிட்டே இருக்கா. கேட்டா என் தாய்மாமன் வூடு. எனக்கில்லாத உரிமையான்றா."

"அவ சொல்றதும் சரிதானடா!"

"அதான் இந்த உரிமை கொண்டாடுறது செல்லமா கொஞ்சிக் காரியத்தைச் சாதிச்சுக்கிற வேலை யெல்லாம் உங்களோட நிறுத்திக்கச் சொன்னேன். இதுல என்ன தப்பு?"

"தப்புதான்டா. அவ என் தங்கச்சி மக. என் தங்கச்சிக்கும் அவ பெத்த பிள்ளைக்கும் இந்த வீட்டில எல்லா உரிமையும் இருக்கு."

"உரிமை வீட்டோட மட்டும் இருக்கட்டும்."

"வீடு மட்டுமில்லடா. இந்த வீட்டில உள்ள எல்லார் கிட்டயும் உரிமை இருக்கு. அதுவும் உன்கிட்ட உரிமை அதிகமாவே இருக்கு."

"அப்பா!"

"என்னடா குரலை உசத்துற? என்னிக்கு இருந்தாலும் இவதான் என் மருமவ. நீதான் என் தங்கச்சிக்கு மருமவன். அந்த நினைப்பு உன் மனசில இருக்கட்டும்."

"என்னால முடியாது!" - கடுத்த முகத்தோடு பட்டெனச் சொன்ன மகனைக் கூர்மையாய்ப் பார்த்தார் சாமிக் கண்ணு.

"என்னடா சொல்ற?"

"என்னால இப்போதைக்குக் கல்யாணமெல்லாம் பண்ணிக்க முடியாது."

"ஏன்டா?"

"நான் இன்னும் நிறையச் சம்பாதிக்கணும். எனக்குன்னு தொடங்கின சொந்த வீட்டைக் கட்டி முடிக்கணும்."

"அதான் பாதி கட்டிட்டியே. இன்னும் ரெண்டு மூனு மாசத்துல முடிஞ்சிடுமில்ல?"

"இல்லைப்பா. அதுக்குக் கொஞ்ச நாளாகும். இப்ப மழை சீசன்றதால வேலை அதிகம் இருக்காது. வீடு கட்டப் பணம் வேணாமா?"

"மாமோய்! என் பேர்ல இருக்கிற பணத்தை வேணா எடுத்துத் தரட்டுமா?" - ஆர்வமாய்க் கேட்டாள் மரிக்கொழுந்து.

"வேணாம்... வேணாம். நானே சுயமாச் சம்பாதிச்சு வீட்டுச் செலவுக்குப் போகச் சேமிக்கும் தொகையை வெச்சுத்தான் அந்த வீட்டைக் கட்டுவேன். ஒரு செங்கல்கூட ஓசியில வாங்க மாட்டேன்."

"ம்க்கும்! இப்படியே சொல்லிட்டு இருந்தா நீ வீட்டைக் கட்டி முடிக்கிறதுக்குள்ள எம்மவளுக்குத் தலை



நரைச்சிடும்!" - வெற்றிலைக் குதப்பலோடு கையில் காபிக் குவளையைக் கொண்டு வந்த முத்தரசி நொடித்தாள்.

"அண்ணே! காப்பித்தண்ணி குடிண்ணே!" - வெகு கரிசனையாய்ச் சாமிக்கண்ணுவிடம் காபிக் குவளையை நீட்டினாள்.

சாமிக்கண்ணுவின் முகம் கனிந்தது. "நீ குடிச்சியா தாயீ?"

"இனிமேத்தான்ணே. முதல்ல நீ குடி. சூடு ஆறிடப் போவுது!"

"இந்த வீட்டில எத்தனை பொம்பளைங்க இருந்தாலும் நீதான் இதையெல்லாம் செய்யணுமா? உன் மதினி என்னத்த வெட்டி முறிக்கிறா?"

"இட்லி அவிச்சிட்டு இருக்காங்க மாமா! உங்களுக்குக் குளிக்க வெந்நீர் ரெடியா இருக்கு மாமா!" - எனப் பவ்யமாய்ச் சொன்ன மூத்த மருமகள் தாமரை, தன் கொழுந்தன் இக்கட்டில் மாட்டிக் கொண்டு நிற்பதை அடிக்கண்ணால் கண்டு கொண்டாள்.

"ம்... ம்... வர்றேன்!" - என்றவாறு சாமிக்கண்ணு காபியைக் குடிக்க, தாமரை ஆதவனை மெல்லிய குரலில் அழைத்தாள்.

"தம்பி!"

"என்னங்க மதினி?"

"காலையில உங்களைத் தேடி மேஸ்திரி வந்தாரு."

"என்ன? எப்போ?"

"ஒரு அரை மணி நேரத்துக்கு முன்னால..."

"என்னை எழுப்பியிருக்கலாமில்ல மதினி! எதுவும் சொன்னாரா?"

"ம்... இன்னிக்கு வேலை இருக்காம். எட்டு மணிக்கு வண்டி வந்திடும்னு சொன்னார். மணி ஏழு தாண்டியாச்சு. சீக்கிரமாக் குளிச்சிட்டுக் கிளம்புங்க. சாப்பாடு எல்லாம் எடுத்து வெச்சிட்டேன்!" - என்றவாறே கண்ணை அசைத்தாள்.

'இங்கே நிற்காதே. சீக்கிரமாய்த் தப்பிப் போ!' என்பதாய் அவள் உணர்த்தியதைச் சட்டெனப் புரிந்து கொண்டவனாய் ஆதவன் போர்வையைக் கட்டிலில் போட்டு விட்டு அவசரமாய் நகர்ந்தான்.

"இதோ, பத்தே நிமிஷத்துல ரெடியாகிடுவேன். மதினி! சாப்பாடு கட்டி வெச்சிடுங்க."

"டேய்... நில்லுடா."

"என்னப்பா?"

"முக்கியமான விஷயம் பேசிட்டு இருக்கோமில்ல. நீபாட்டுக்குக் கிளம்பினா எப்படி?"

"அப்பா! மணியாகுதுப்பா. வேலைக்குக் கிளம்பணும்."

"கொஞ்சம் தாமதமாப் போனா எவனும் உன் தலையை எடுத்துட மாட்டான். இதுக்கு ஒரு முடிவைச் சொல்லிட்டுக் கிளம்பு."

"எதுக்கு?"



"உன் கல்யாணப் பேச்சுக்கு..."

"அதான் ஏற்கெனவே சொல்லிட்டேனே... வீடு கட்டி முடிச்சப்புறம்தான் கல்யாணம்."

"வீட்டை எப்போ கட்டி முடிப்ப?"

"காசு சேரச் சேரக் கட்டிட்டேதானே இருக்கேன். முடியும்போது முடியட்டும். எனக்கொன்னும் அவசரமில்ல."

"ஆனா... என் பொண்ணுக்கு வயசு ஏறுதே ஆதவா!" - வெடுக்கெனக் கேட்டாள் முத்தரசி.

"அதுக்கு நான் எதுவும் பண்ண முடியாது அத்தை. உங்களுக்கு அவசரம்னா நீங்க மரியை யாருக்கு வேணாலும் கட்டிக் கொடுக்கலாம்!" - ஆதவன் அலட்சியமாய்ச் சொல்ல, மரிக்கொழுந்துவிற்குப் பொசு பொசுவெனக் கோபம் ஏறியது.

முத்தரசி ஆத்திரமாய் அண்ணனிடம் திரும்பினாள். "பார்த்தியாண்ணே! இந்தப் பய பேச்சைப் பாரு. எவனாவது தனக்குன்னு பேசி வெச்சிருக்கிற பெண்ணை இன்னொருத்தனுக்குக் கட்டிக் கொடுன்னு சொல்வானா?"

"ஆதவா! என்னடா பேசுற? மரிக்கொழுந்து உன் முறைப் பொண்ணு. உனக்குன்னு பொறந்து வளர்ந்தவ."

"அப்பா! யார் என்ன சொன்னாலும் சரி. முதல்ல நான் என் வீட்டைக் கட்டி முடிக்கணும். கல்யாணமாகி என் பொஞ்சாதிகூட அந்த வீட்டுலதான் வாழணும்."

"ஏன்? உன் அண்ணனுங்க எல்லாம் இதே வீட்ல வாழலையா? உனக்கு மட்டும் என்ன?"

"இருக்கிறது நாலு அறை. அதில ஒன்னு சமையல் அறை. இதோ இது வராந்தா. நாலு பக்கமும் திறந்துதான் கிடக்குது. உருப்படியா இருக்கிற ரெண்டு ரூம்ல ஒன்னை அத்தைக்குக் கொடுத்தாச்சு. இன்னொன்னுல மத்த எல்லாரும் படுத்துக்கிறாங்க.

"அண்ணனுக்கும் மதினிக்குமே தனியா ரூம் இல்லை. இதுல நானும் கல்யாணத்தைக் கட்டிக்கிட்டு எங்க போய்க் குடும்பம் நடத்துறதாம்?"

"எலேய்! என்னல பேசுத?"

"மதினி! இந்த வீட்டுல கிடந்து அடிமாட்டுச் சேவை செய்யுறதை விட்டுட்டுப் பேசாம அண்ணனைக் கூட்டிக்கிட்டு வேற ஒரு வீடு பார்த்துட்டுப் போங்க."

"நல்லா இருக்குடா. நீயே இவளுக்குச் சொல்லிக் கொடுக்கிறியா? ஏய்! நீ என்ன இங்க நின்னு வாயைப் பார்த்திட்டு... போய் வேலையைப் பாரு..." - முத்தரசி பற்களைக் கடித்தவாறே அதட்ட, வேகமாய் உள்ளே சென்று மறைந்தாள் தாமரை.

"கொடுமைதான்!"

"என்னடா கொடுமை?"

"வழக்கமா மாமியார் கொடுமையைத்தான் கேள்விப்பட்டிருக்கோம். இங்கே பாருங்க. யார் யாரெல்லாமோ மதினியை வேலை வாங்குறாங்க."

"டேய்! அவ ஒன்னும் யாரோ இல்லை. என் தங்கச்சி."



"உங்க தங்கச்சியா இருந்தா அவங்க மகளையோ மருமகளையோ வேலை வாங்கட்டும். அம்மா கூட நம்ம மதினியை இப்படி விரட்டுறதில்ல. இவங்க ஏம்ப்பா விரட்டுறாங்க?"

"அண்ணே! உம் புள்ளை ஏதேதோ பேசிப் பேச்சை மாத்துறான். என் மகளுக்கு வழி என்னன்னு கேளுண்ணே."

"அத்தை! யார் கேட்டாலும் என் பதில் இதுதான். நான் வீட்டைக் கட்டி முடிச்சிட்டு வீட்டுக்குத் தேவையான எல்லாப் பொருளும் வாங்கின பிறகுதான் கல்யாணம். எனக்கு மனைவியா வரப் போறவளை என் வீட்டுல ராணி மாதிரி வெச்சுக்கணும்னு ஆசைப்படுறேன்..."

ஆதவனின் உறுதியான குரலில் பூரித்துப் போனாள் மரிக்கொழுந்து.

'எத்தனைதான் கோபப்பட்டாலும் மாமனுக்குத்தான் என் மீது எத்தனை பிரியம்! என்னை ராணி மாதிரி வாழ வைப்பதற்காக எவ்வளவு கஷ்டப்பட்டு... தானே அந்த வீட்டைக் கட்டுகிறார். இந்தப் பிரியம் போதாதா?' - மன நிறைவோடு புன்னகைத்தாள்.

"கட்டு மாமா! நீ எத்தனை வருஷம் கட்டினாலும் சரி. நான் காத்திருப்பேன்."

"ஏய்! என்னடி நீ?" - என இடித்த தாயை அதட்டினாள்.

"சும்மா இரும்மா. மாமா யாருக்காக வீடு கட்டுது? எனக்காகத்தானே! கட்டட்டும்மா. நானும் என் மாமாவும் புது வீட்டில வாழ்ந்தா உனக்கும் சந்தோஷம்தானே!"

"அதுக்கில்ல மரி... உனக்கும் வயசு ஏறுதில்ல?"

"இப்பத்தானேம்மா பதினெட்டு முடிஞ்சிருக்கு. மாமா பொறுமையா வீடு கட்டட்டும். என்னால தாமரையக்கா மாதிரி அடுக்களையில குடும்பம் நடத்த முடியாது. நான் என் மாமன் கட்டுற பங்களாவிலதான் வாழ்வேன்.

"நான் எந்தக் கஷ்டமும் இல்லாம வாழணும்னு தானே என் மாமன் இவ்வளவு கஷ்டப்பட்டு உழைக்குது. இனிமே கல்யாணப் பேச்சை எடுத்து யாரும் மாமனைக் கோபப்படுத்தாதீங்க. எப்பக் கல்யாணம் பண்ணணும்னு எங்களுக்குத் தெரியும்.

"போங்க. போய் வேலையைப் பாருங்க. மாமா! நீ குளிச்சிட்டு சாப்பிட்டு வேலைக்குக் கிளம்பு மாமா. நாளைக்குச் சம்பள நாளாச்சே..." - மரிக்கொழுந்து பேசிக் கொண்டிருக்க... இப்போதைக்குத் தன்னை விட்டால் போதும் என்ற விடுதலை உணர்வுடன் குளிக்க ஓடினான் ஆதவன்.

கண்களில் கல்யாணக் கனவு மின்ன... ஜன்னல் வழியே அந்த வெற்றுக் கட்டடத்தைப் பார்த்தாள் மரிக்கொழுந்து. தான் வாழப் போகும் மாட மாளிகை என்ற கர்வம் அவளது முகத்தில் தெரிந்தது.



# 3



அன்பு கொண்ட இதயம்
அருகில் இருந்தால் என்ன,
தொலைவில் இருந்தால் என்ன?
தொலையாத நினைவுகள் - உள்ளவரை
தொலைவும் ஒரு சுகம்தான்!

முகம் பார்க்கும் கண்ணாடியில் தெரிந்த தன் முகத்தைப் புன்னகையோடு பார்த்துக் கொண்டே பவுடர் பூசினாள் சூரியகாந்தி. மஞ்சள் பூசிக் குளித்ததில் முகம் பளபளப்பாய் மின்னியது. எந்த அழகு நிலையத்திற்கும் சென்று சீர் செய்யப்படாமலே வில்லாய் வளைந்திருந்தன புருவங்கள்.

கண்களுக்கு லேசாய் மையிட்டுக் கொண்டாள். நெற்றியில் கண் மையால் சிறிய பொட்டு. 'கண் மையில பொட்டு வெச்சாத்தான் கண் திருஷ்டி படாது!' என்பாள் அம்மா.

'கலரா இருக்கிறவங்களுக்கு அது சரி. இவளுக்கு ஏம்மா கண் மை? இவ கலருக்குக் கண் மை வெச்சா எடுப்பா இருக்குமா?' எனச் சிடுசிடுப்பான் முருகேசன்.

அது அவனது இயல்பான குணம். தன்னைவிட நிறம் குறைவான, அழகிலும் படிப்பிலும் சற்று மட்டமான தங்கையைக் கண்டால் அவனுக்கு அலர்ஜி. ஆனால் இதில் சூரியகாந்தியின் தவறு எதுவும் இல்லையே!

பிறக்கும்போது அவளும் தாயைப் போலவே நல்ல நிறமாய்த்தான் பிறந்தாள். ஆனால் வளர்ந்த இடம்? கட்டடம் கட்டும் பணியில் இருந்த தாயும் தந்தையும் மூத்த மகனைப் பள்ளிக்கு அனுப்பி விட்டுத் தன் மகளைத் தங்களுடன் கொண்டு சென்று விடுவார்கள்.

வேலை செய்யும் இடத்தில் தாயின் நைந்த புடவையால் கட்டிய தூளியிலும் வெயில், நிழலிலும் எனத் தவழ்ந்து வளர்ந்தவள் சூரியகாந்தி. பெண் பிள்ளைகளுக்குப் படிப்பு எதற்கு? ஆண்பிள்ளையைப் படிக்க வைத்தால் நம் கடைசிக் காலத்தில் கஞ்சி ஊற்றுவான் என்ற எண்ணத்தில் தன் மகனைப் படிக்க வைத்தான் மலையாண்டி.

அதனால் எந்தக் கஷ்டமும் இல்லாமல் நிழலில் இருந்து சொகுசாய்ப் படித்தான் முருகேசன். சூரியகாந்தியோ நான்கு வயதாகும் முன்னரே தம்பி, தங்கைகளை வளர்க்கும் பொறுப்பேற்றாள். கைக் குழந்தைகளை அவளிடம் தந்து விட்டு வேலைக்குச் சென்று விடுவாள் கனகம்.

பசியில் அழும் தம்பியையும், தங்கையையும் அப்போதிருந்தே வளர்க்கும் தாயாய் மாறினாள் சூரியகாந்தி. காட்டிற்குச் சென்று விறகு பொறுக்குவதும், அடுப்படியில் சமைப்பதும் பெற்றவர்களுக்குச் சாப்பாடு கொண்டு செல்வதுமாய்ச் சூரியகாந்தி வெயிலுடனே வளர... அவளது நிறம் மங்கிப் போயிற்று.

ஆனால் அதற்கெல்லாம் கவலைப்பட அவளுக்கு நேரமிருப்பதில்லை. அதோடு எப்போதும் யாரிடமும் ஒட்டாமல் கர்வத்தோடு விலகியே நிற்கும் மூத்த மகனை விட... குடும்பத்தில் ஓடாய்த் தேயும் மகள் மீது கனகத்திற்குத் தனிப் பிரியம்.



நிறத்தைப் பற்றி முருகேசன் மட்டம் தட்டும் போதெல்லாம், 'கலர் என்னடா பெரிய கலரு! என் மகளோட அழகு உனக்கு வருமா? கலர் மட்டும் இருந்தாப் போதுமா? என் மக முகம் எம்புட்டுக் களையா லட்சணமா இருக்கு. சூரி மட்டும் உன்னை மாதிரி சீவிச் சிங்காரிச்சிக்கிட்டு டிப்-டாப்பா வேலைக்குப் போனான்னு வையி... அவ அழகுக்கு நீயெல்லாம் தூசியை விடக் கேவலம்!' - என நொடிப்பாள்.

சூரியகாந்திக்குப் பெருமையாய் இருக்கும். உண்மையிலேயே தான் அவ்வளவு அழகா? இல்ல... அம்மா தன் மனம் வருந்தக்கூடாது என்பதற்காகப் பொய் சொல்லுகிறாளா? கண்ணாடியை நன்றாய் உற்றுப் பார்த்தாள். அதில் தெரிந்த தன்னுடைய பிம்பம் சர்வ லட்சணமும் பொருந்தி அம்சமாய்த்தான் இருந்தது.

இல்லை. அம்மா பொய் சொல்லவில்லை. நான் உண்மையிலேயே அழகுதான். எனக்கு இந்த அழகு போதும். என்னை ஆதவனுக்கு மட்டும் பிடித்தால் போதும். எங்கள் இருவருக்கும் இந்த நிறம் போதும்.

"எவ்வளவு நேரம்தான் கண்ணாடியைப் பார்த்திட்டு இருப்பே? விலகு. நான் தலை வாரணும்!" - என்ற முருகேசனின் கடுப்பான குரலில் திரும்பினாள்.

"இ.. இதோ! ஒரே நிமிஷம்ணே!" - என்றவாறு நெற்றிக்குத் திருநீறு பூசிக் கொண்டு கண்ணாடியை அவனிடம் கொடுத்தாள்.

"அக்கா! தலையைப் பின்னி விடுக்கா. பள்ளிக்கூடத்துக்கு நேரமாவுது!" - கையில் சீப்பும் ரிப்பனுமாய் வந்த தங்கையை அமர வைத்து மளமள வெனத் தலை வாரிப் பின்னலிட்டாள்.

"செண்பகம்! நாளையில இருந்து சீக்கிரமா எழுந்துக்கணும். அக்கா வேலைக்குப் போகணுமில்ல. உனக்குத் தலை வாரி விட்டுட்டு உட்கார்ந்திட்டு இருந்தா நேரமாகிடும். சரியா?"

"சரிக்கா!"

"மத்தியானச் சாப்பாட்டுக்குத் தட்டு எடுத்து வெச்சிட்டியா?"

"கதிரேசன் பையில இருக்குக்கா."

"தம்பி குளிச்சிட்டானா?"

"அவன் ஆய் இருக்கப் போயிருக்கான். இன்னும் குளிக்கலை."

"சரி. தம்பி வந்ததும் ரெண்டு பேரும் கிளம்பிச் சாப்பிட்டுட்டு ஸ்கூலுக்குப் போங்க. அக்காவுக்கு இப்ப வண்டி வந்திடும்."

"அக்கா! வரும்போது எனக்குப் பென்சில் வாங்கிட்டு வாக்கா."

"சரி."



"அக்கா! அப்படியே எனக்கு ஒரு ரப்பரும் இரண்டு மிட்டாயும் வாங்கிட்டு வாக்கா!" - என்றவாறே மூன்றாம் வகுப்புப் படிக்கும் கதிரேசன் ஓடி வந்தான். ட்ரவுசர் கையில் இருக்க, நிர்வாணக் கோலத்தோடு நின்றிருந்த தம்பியைக் கண்டு முகம் சுழித்தான் முருகேசன்.

"ஏலேய்! உன்னை எத்தனை தரம் சொல்லி யிருக்கேன் - இப்படியே வீட்டுக்குள்ள வராதேன்னு?"

"அக்கா! ஆய் கழுவி விடுக்கா."

"நீ என்ன இன்னும் குழந்தையா? போடா! போய் நீயே கழுவு. சூரி! நீ எனக்குச் சாப்பாடு போடு. டயமாகுது."

"சரிண்ணே!" - என்றவள் தம்பியிடம் கிசுகிசுத்தாள். "தம்பி! நீ பின்கட்டுக்குப் போ. அம்மா நிக்குது. கழுவி விடும்."

"ம்..." - என்றவாறே கதிரேசன் ஓடி விட, செண்பகத்தைத் தயார் செய்து விட்டு, முருகேசனுக்குச் சாப்பாடு எடுத்து வைத்துத் தானும் சாப்பிட்டு விட்டு, பித்தளைத் தூக்கு வாளியில் சாப்பாடை எடுத்து வைத்துக் கொண்டிருக்கும்போது துளசியின் குரல் கேட்டது.

"சூரி! வண்டி வந்திடுச்சுப்பா. சீக்கிரம் வா."

"இதோ வந்திட்டேன். அம்மா! நான் போயிட்டு வர்றேன்."

"சூரி... நில்லு."

"என்ன அண்ணே?"

"இன்னிக்கு எங்கே வேலை?"

"தண்டியூர்லதான்."

"அது தெரியும். எந்த இடத்தில வேலைன்னு கேட்டேன்?"

"வழக்கம் போலத்தான். இன்னும் கடையைக் கட்டி முடிக்கலண்ணே!"

"மேற்கே உள்ளவனுங்களும் வர்றானுங்களா?"

"ம்..." - தலையாட்டினாள்.

"ஒரே இடத்திலயா நிற்பீங்க?"

"இல்லண்ணே! அந்தத் தெருக்காரங்க நாலாவது மாடியில தளம் போடுறாங்க. நாங்க தரைத் தளத்தில பூச்சு வேலை செய்திட்டு இருக்கோம்."

"ம்... நடுவில காபி வேளை சாப்பாட்டு வேளையில எவனாவது வந்து உங்ககிட்ட பேச்சுக் கொடுப்பானுங்களா?"

"இல்லண்ணே!" - பதட்டமாய் மறுத்தாள்.

கண்களில் பயம் தோன்றியது.

"எவனாவது பேசினான்னா சொல்லு. வகுந்திடுறேன்."

"ச... சரிண்ணே!"

"ஆம்பிளைன்னு இல்ல... பொம்பளகூடயும் பேச்சு வெச்சுக்காதீங்க. ஊர் நிலவரம் தெரியுமில்ல?"



"தெரியும்ண்ணே!" - தொண்டை அடைத்து... கண்கள் கலங்கின.

"தெரிஞ்சு நடந்துகிட்டா நல்லது. இல்லன்னா திரும்பவும் ஊருக்குள்ள இரத்த ஆறு ஓடும். நினைவில வெச்சுக்கிட்டுப் போ!" - அதட்டலாய்ச் சொன்ன முருகேசனிடம் நடுக்கமாய்த் தலையசைத்தாள்.

அதற்குள் கையில் சாப்பாட்டுக் கூடையுடன் துளசி உள்ளே வந்தாள்.

"ஏ சூரி! வண்டிக்காரன் ஆரனடிச்சிட்டே இருக்கான். இன்னும் என்ன பண்றே?"

"இ...தோ வந்திட்டேன்."

"சூரி! இதையெல்லாம் துளசி கிட்டயும் சொல்லி வை. உங்க மேல நம்பிக்கை இல்லாம இல்ல... எச்சரிக்கிறேன். அவ்வளவுதான்!"

வீட்டிற்குள் பாத்திரங்களைக் கழுவிக் கொண்டிருந்த தாயிடம் சொல்லி விட்டு, துளசியுடன் இணைந்து ஓட்டமும் நடையுமாய் வந்து அந்த டெம்போவில் ஏறிக் கொண்டாள்.

ஏற்கெனவே பதினைந்திற்கும் மேற்பட்ட ஆண்களும் பெண்களுமாய் வண்டி நிறைந்திருக்க... இருவருக்கும் ஒரு ஓரமாய் இடம் கிடைத்தது.

"எல்லாரும் ஏறியாச்சா?"

"ஏறியாச்சு... ஏறியாச்சு..."

"ஏய்! வண்டியை எடுப்பா!" - மேஸ்திரி குரல் கொடுக்க... வண்டி ஒரு ஹாரனுடன் புறப்பட்டது.

மேற்கூரை இல்லாத வாகனத்தில் சுள்ளென வெயில் ஏற... மௌனமாய் அமர்ந்திருந்த சூரியகாந்தியின் தோளில் கை வைத்தாள் துளசி.

"சூரி!"

"ம்..."

"என்னடி? முகமெல்லாம் ஒரு மாதிரி இருக்கு."

"ஒன்னுமில்ல..."

"பொய் சொல்லாதே. எதுவும் பிரச்சனையா? அண்ணன் எதுனா கோபமா பேசிச்சா?"

"அண்ணன் கோபப்படாம இருந்தாத்தான் விசேஷம்."

"வேற என்னடி பிரச்சனை?"

"இங்கன வெச்சி எதுவும் பேச வேணாம் துளசி. பிறகு சொல்றேன்."

"ம்... நீ சாப்பிட்டியா?"

"சாப்பிட்டேன். நீ...?"

"ஏன்டியம்மா! ரெண்டு பேரும் சித்தப்பா, பெரியப்பா மக்க. அடுத்தடுத்த வீட்டுக்காரவுக. எப்பவும் பேசிக்கிறீங்க. வேலைக்கு வந்தாக்கூட எங்ககூடப் பேசமாட்டீகளாக்கும். அப்படியென்ன ரகசியம் பேசுவீங்களோ... குசுகுசுன்னு..." - வெற்றிலையை மென்று கொண்டே ஒரு பெண்மணி குரல் கொடுக்க... துளசி திரும்பினாள்.



"சுப்பக்கா! அதான் வெத்தலையை மென்னுகிட்டு இருக்கியே... எதுக்கு அவங்களை வம்புக்கு இழுக்கிற?"

"ஆத்தீ! நான் என்ன வம்புக்கா இழுக்கேன்? வழக்கமா சூரி முகம் சூரியனாட்டம் பிரகாசமா இருக்குமே. இன்னிக்கு என்ன அமாவாசையாட்டம் இருண்டு கிடக்கு!"

"ஒன்னுமில்லக்கா. நாலு நாளா பெஞ்ச மழையில சளி பிடிச்சிடுச்சு."

"சளியா! நமக்கெல்லாம் அது எப்படிப் பிடிக்கும்? நமக்கு மழை என்ன புதுசா?"

"சுப்பு! அவ அவளுக்கு ஆயிரம் வருத்தம் இருக்கும். நீ ஏன் சும்மா அதுக வாயைக் கிண்டுற? கம்முன்னு வாயேன்!" - தேனம்மா பாட்டி அதட்டினாள்.

"அட போ ஆத்தா! யாருக்குத்தான் வருத்தம் இல்ல? வீட்டிலயே அடைஞ்சு கிடந்து துக்கத்தில விம்மி வெடிக்காம இப்படி வெளியே வரும்போதுதானே நாலு வார்த்தை பேசிச் சிரிக்க முடியும். அப்பத்தானே மனசில உள்ள பாரம் போகும். வீட்டிலயோ வேலை செய்யுற இடத்திலேயோ பேசிச் சிரிக்க முடியுமா?

"அப்படியே சிரிச்சிட்டாலும் மேலூர்க்காரனைப் பார்த்துச் சிரிச்சியான்னு கேட்டு நம்மூர்க்காரனுங்க கலவரத்தை உண்டு பண்ணிடுவானுங்களே... நம்ம ஊரு வர வரக் கலவர பூமியா மாறிட்டு வருது."

"வாயை மூடு சுப்பு. கொஞ்ச நாளா அமைதியா இருக்கிற ஊரை நீ உசுப்பேத்தி விட்டுடாதே. வேற ஏதாவது கதையைப் பேசு."

"ஹூம்... வேற என்னத்தைப் பேசுறது? கலகலப்பா பேசுறதுக்கு இந்தச் செவ்வந்திப் பொண்ணும் வரலை. அவ இல்லாம ரொம்ப வெறிச்சுன்னு இருக்கு."

"இருக்காதா? ஆறேழு வருஷமா கூடவே வந்தவளாச்சே. போன வாரம் வரைக்கும் கல்யாணம் முடிவானதைப் பத்தி ஒரு வார்த்தை கூட நம்மகிட்ட சொல்லலை... பாரேன்."

"அடியேய்! அவளுக்கே தெரியாமதான் அவ ஆத்தா இந்தக் கல்யாணத்தை ஏற்பாடு பண்ணியிருக்கா. அது தெரியுமா உனக்கு?"

"என்னக்கா சொல்ற?"

"ஆமா மருதாயி! பொண்ணு நல்லா மூக்கும் முழியுமா இருப்பா. மாப்பிள்ளை அண்டங்காக்கா மாதிரி இருக்கான். சுப்பம்மாவோட கூடப் பொறந்த தம்பியாம்."

"அப்படின்னா அவ மாதிரிதானே இருப்பான்...?"

"ஏய்! நான் அதுக்குச் சொல்லலைடி. அவ தம்பி ஏற்கெனவே குடிச்சிப்புட்டு ஊரைச் சுத்திட்டு அலையுறானாம். அவனுக்குப் போயி ஏன் இந்த அழகான பிள்ளையைக் கட்டி வைக்க முடிவு பண்ணினா சுப்பம்மா?"

"அவ வீட்டுக்குள்ளே என்ன குழப்பமோ... யார் கண்டது?"

"ஒருவேளை செவ்வந்திக்கு வேற யார் மேலயும் இஷ்டமோ! அது தெரிஞ்சிதான் அவ ஆத்தா இப்படி அவசரக் கல்யாணத்துக்கு ஏற்பாடு செய்தாளோ?"



"இந்தா! அந்தப் பொண்ணைப் பத்தித் தப்பாப் பேசாதே. அது சுத்தத் தங்கம்."

"ஆத்தா! இப்பல்லாம் யாரையும் உடனே எடை போட முடியலை. யார் மனசுல என்ன இருக்கோ யாருக்குத் தெரியும்?" - சுப்புலட்சுமி பெருமூச்சோடு சொல்ல... சூரியகாந்திக்குச் சுருக்கெனத் தைத்தது.

வெடுக்கென நிமிர்ந்து ஏதோ சொல்ல முயன்றவளை அடக்கியவாறே குரல் கொடுத்தாள்.

"சுப்பக்கா! சுப்பம்மாவைப் பத்தி உனக்குத் தெரியாதா? நீ இந்த மாதிரிப் பேசுறதைக் கேட்டான்னு வையி... கடிச்சிக் குதறிடுவா. தூங்குற சிங்கத்தை நீ தட்டி எழுப்பிடாதே."

"ஏய்! மேலத் தெரு வண்டி வருதுப்பா. யாரும் பேசாம அமைதியா வாங்க!" - ஒரு பெண் தாழ்ந்த குரலில் எச்சரிக்க... சூரியகாந்தி திடுக்கென நிமிர்ந்து விழிகளைப் படர விட்டாள்.

வெகு அருகே அந்த வண்டி பின் தொடர, ஓட்டுனரின் அருகே அமர்ந்திருந்த ஆதவனைக் கண்டதும் உடல் முழுக்கப் புல்லரித்துப் போனது. கண்ணாடியின் பின்புறத்திலிருந்து மிகச் சிறிய புன்னகையைச் சிந்தித் தனது மகிழ்வை அவளுக்குக் காட்டினான் ஆதவன்.

அவ்வளவுதான். சூரியகாந்தியின் மனம் ஜிவ்வென்று வானில் பறக்கத் துவங்கியது. அதுவரை மனத்தை அழுத்திய பாரங்கள், அண்ணனின் எச்சரிக்கை அனைத்தும் பகலவனைக் கண்ட பனித் துளியாய் மறைந்து போனது.

'எப்படி இருக்கே? சாப்பிட்டியா? என்னை நினைச்சியா? உன்னைப் பார்க்காம என்னால இருக்கவே முடியலை?' - எனப் புன்னகையும் துளிக் கண்ணீருமாய்ச் சூரியகாந்தி பார்வையால் வினாத் தொடுக்க... ஆதவனும் புன்னகையால் பதிலளிக்க... துளசி பிறர் அறியாமல் சூரியகாந்தியைக் கிள்ளினாள்.

"என்னடி?"

"சூரி! உனக்கு இவனைப் பார்த்ததும் எல்லாம் மறந்திடுச்சா? அவன் பக்கத்தில உட்கார்ந்திருக்கிற குரங்கு உன்னையே முறைக்குது பாரு!" - மூடிய உதட்டிற்குள் சூரியகாந்திக்கு மட்டுமே கேட்கும்படியாய்த் துளசி சொல்ல... பதட்டமாய்ப் பார்த்தாள்.

ஆதவனுக்கு இப்புறமாய் அவன் அமர்ந்திருந்தான். ஆதவனின் அத்தை மகன் சுடலை. அவனைக் கண்டதும் உடம்பெல்லாம் உதற, பார்வையைத் திருப்பிக் கொண்டாள்.

மனம் வேகமாய் அடித்துக் கொண்டது. ச்சே! ஆதவனை நேரில் பார்ப்பதே அரிது. அதில் இவன் வேறு சனி போல் கூடவே இருந்து கொண்டு... இவனும் இவன் முகரையும்.. கடுத்த முகமாய் முகத்தைத் திருப்பிக் கொண்டவளை வெறித்து நோக்கினான் சுடலை.

'என்னைப் பார்த்தா முகத்தைத் திருப்பிக் கொள்கிறாய்?' - ஓரக் கண்ணால் ஆதவனைப் பார்க்க... அவனது முகம் புன்னகையோடு பூரித்துப் போயிருந்தது.



'தன் தங்கையிடம் பேசும்போது எள்ளும் கொள்ளும் வெடிக்கும் முகத்தில் இவளைப் பார்க்கும் போது மட்டும் என்ன ஒரு தேஜஸ்?

அப்படியென்றால் இவனும் என்னைப் போலவே சூரியை விரும்புகிறானா? இவனுக்காகவே பிறந்து வளர்ந்த என் தங்கை வீட்டில் காத்திருக்க... இவன் எவளிடமோ மயங்கிக் கிடக்கிறானா? விட மாட்டேன்.

இந்தச் சூரி எனக்கு மட்டும்தான். இவளை என் தங்கைக்குச் சக்களத்தியாக விடுவதா? இனி இவர்களைத் தெளிவாய்க் கண்காணிக்க வேண்டும். இந்தச் சுடலைக்குத் தெரியாமல் ஒரு துரும்புகூட அசையாது. அசையவும் கூடாது.' - பற்களை நறநறவெனக் கடித்த வாறே ஆதவனை அழைத்தான்.

"மாப்பிள்ளே!"

"ம்?"

"என்ன இது புதுசா இருக்கு?"

"எது?"

"கீழூர் வண்டி எப்பவுமே சீக்கிரமாப் போயிடுமே. இன்னிக்கு என்ன இப்பத்தான் போகுது?"

"அதை அந்த டிரைவர்கிட்ட போய்க் கேளு."

"விட்டாக் கேட்டுடுவேன். ஆனா ரெண்டு தெருக் காரங்களும் வெட்டு குத்துன்னு இறங்கிடுவீங்களேன்னு பார்க்கிறேன்," - சுடலை நக்கலாய்க் கூற... கடுத்த முகத்துடன் அவனை ஏறிட்டான் ஆதவன்.

"என்ன உளர்ற?"

"ஆமா மாப்பிள்ளை! நான் இறங்கிப் போய்... ஏன்டா எங்க வண்டிக்கு முன்னால போறேன்னு கேட்பேன். வண்டியில போறவன் சும்மா இருப்பானா? அப்படித்தான் போவோம்... உனக்கு என்னடான்னு கேட்பான். உடனே நம்ம வண்டியில உள்ளவனுங்க சும்மா இருப்பானுங்களா? மேட்டர் என்னன்னு தெரியாமலேயே அடிக்கப் போயிடுவானுங்க.

"தானாவே சூலவரம் தொடங்கிடும். ஏற்கெனவே ஒருத்தரை ஒருத்தர் அடிச்சிட்டு இருக்கீங்க. இதுல என்னால பிரச்சனை வரணுமான்னு பார்க்கிறேன்."

"என்னபே! பேச்செல்லாம் ஒரு மாதிரி இருக்கு?"

"இல்ல... ஆயிரம் இருந்தாலும் நான் அசலூர்க் காரன். நீ உள்ளூர்க்காரன்."

"அசலூர்க்காரனுக்கு இங்கே என்ன வேலை? உன் ஊரைப் பார்த்துப் போக வேண்டியதுதானே?"

"என்ன மாப்பிள்ளை, இப்படிச் சொல்லிட்ட? என் அப்பன் போன பிறகு எங்களுக்கு அந்த ஊர்ல என்ன இருக்கு? எங்களுக்கு எல்லாமே மாமன்தானே!"

"அப்போ மூடிட்டு வா!" - என்றவன் சின்னக் குலுங்கலுடன் வண்டி நின்றுவிட... ஓட்டுநரை ஏறிட்டான்.

"என்னாச்சு துரை?"

"அண்ணே! அந்த வண்டி நின்னு போச்சுண்ணே! என்னன்னு பார்த்திட்டு வர்றேன்..." - என்றவாறு கதவைத் திறந்து இறங்கி முன்னே செல்ல... தானும் இறங்கினான். கூடவே இறங்க முயன்ற சுடலையை உள்ளே இருக்கும்படி சொல்லிவிட்டுக் கதவை அறைந்து சாத்தினான்.



முன்னே நின்றிருந்த வண்டியில் இருந்த ஆண்கள் இறங்கி நிற்க... பெண்கள் தங்களுக்குள் சலசலத்துக் கொண்டிருந்தனர்.

'என்ன பிரச்சனை என்று யாரிடமும் சென்று கேட்கவும் முடியாது. உடனே சீறிக்கொண்டு வந்து விடுவர். ஓட்டுநர் வரட்டும்,' என்று மௌனமாய் நின்று கொண்டான்.

சூரியகாந்தியின் விழிகள் தயங்கித் தயங்கி அவனை ஏறிட்டன. அவளது பார்வைக்காகவே காத்திருந்தது போல் ஆதவன் புன்னகை சிந்த, அவளது முகம் குங்குமமாய்ச் சிவந்தது.

துளசி கமுக்கமாய்ச் சிரித்தாள்.

"ஏன்டி சிரிக்கிற?"

"சூரி! நாலு நாளா மழை பெய்தது நல்லதுதான்."

"என்ன?"

"ஆமா! நாலு நாளா உன்னைப் பார்க்காம உன் ஆளும் உன்னை மாதிரியே ஏங்கிப் போயிருச்சு போல. அதான் உலக மகா அதிசயமா சிரிக்கிறாரு."

"ஷ்! சும்மா இரு."

"நீ தினமும் சூரியனைப் பார்த்து வேண்டுவியே... அந்த வேண்டுதல் வீண் போகலை சூரி!"

"என்னடி சொல்ற?"

"இன்னிக்கு உனக்கு ரொம்ப அதிர்ஷ்டம். பாரேன்! எப்பவுமே நம்ம வண்டி சீக்கிரமாப் போயிடும். இன்னிக்கு உன்னாலதான் லேட்டாகிப் போச்சு. அதனாலதான் உனக்கு இந்தச் சாமியோட தரிசனம் கிடைச்சது.

"இப்பப் பாரு... நம்ம வண்டியோட டயர் போயிடுச்சாம். இந்த ஒத்தையடிப் பாதையில இந்த வண்டி நகராம அந்த வண்டியும் போக முடியாது. எப்படியும் நம்ம வண்டி நகர ஒரு மணி நேரமாவது ஆகும்."

"ஐயோ! அவ்வளவு நேரமாகுமா?"

"பின்னே! கம்பெனிக்குச் சொல்லி அங்கிருந்து ஆள் வந்து டயரை மாத்த வேண்டாமா? எப்படியோ உன் காட்டுல மழைதான் போ."

"என்ன?"

"ஆமா! பார்க்கணும்... பார்க்கணும்னு துடிச்சியே... இன்னிக்குப் பாரு. கடவுளே உன் பக்கம் இருக்காரு. உன் கண் முன்னால உன் ஆளு நிக்கிறாரு. நம்ம ஊர் ஆட்கள் எல்லாம் எப்படி வேலைக்குப் போறதுன்னு பேசிட்டு இருக்காங்க. உன்னை யாரும் கவனிக்கப் போறதில்லை.

"போ... போய் எதுவும் பேசுறதா இருந்தா பேசிடு. இனிமே இதே மாதிரி வாய்ப்புக் கிடைக்காது. போடி... நான் மத்தவங்களைக் கவனிச்சிக்கிறேன். போ..." – துளசி கிசுகிசுத்தவாறே நெட்டித்தாள். உடல் முழுக்க நடுங்க ஆதவனை நிமிர்ந்து பார்த்தாள்.



அவன் அதே புன்னகையோடு நின்று கொண்டிருக்க.... தயக்கமாய் ஓர் அடி எடுத்து வைத்தவள்... ஆதவனின் பின்னே நின்றவனைக் கண்டு மிரண்டு நின்றாள்.

# 4



அன்பு என்பது கல்லுக்குள்
இருக்கும் சிற்பம் போல!
உணர்ந்தவனுக்கு அது சிற்பம்!
உணராதவனுக்கு அது வெறும் கல்!

கண்களில் காமவெறி மின்ன நின்றிருந்தவனைக் கண்டதும் முன்னேற முயன்ற பாதங்கள் நின்றுவிட, வெறுப்பாய் முகத்தைத் திருப்பிக் கொண்டாள் சூரியகாந்தி.

அவளது செய்கைக்கான காரணம் புரியாமல் குழப்பமாய்த் தன் பின்னே திரும்பிய ஆதவனின் முகமும் கடுத்தது. அதற்குள் தன் முகத்தை இயல்பாக்கிக் கொண்ட சுடலை விளையாட்டாய்க் கேட்டான்.

"என்ன மாப்பிள்ளை நடக்குது இங்கே?"

"என்ன?"

"இல்ல... கீழுர்க்காரங்க வண்டி நடு ரோட்டில நிக்குதே. என்ன ஏதாவது போராட்டம் பண்ணப் போறாங்களாமா?"

"போய்க் கேட்டுட்டு வா!" என்றான் கடுப்பாய்.

"என்ன மாப்பிள்ளை? மரி கிட்ட பேசுற மாதிரியே என்கிட்டயும் பேசுற."

"சுடலை! இந்த நக்கல் நையாண்டிப் பேச்செல்லாம் என்கிட்ட வேண்டாம். பேசாம வண்டியில ஏறி உட்கார்."

"ஏன்... நான் நிக்கிறது உங்களுக்கு இடைஞ்சலா இருக்கோ?"

"சுடலை!"

"பாதையில இடைஞ்சலா நிற்கிறேனான்னு கேட்டேன்!" - சுடலையின் கேள்வியில் புருவம் உயர்த்தியவன், ஓட்டுநரின் வருகையால் திரும்பினான்.

"என்னவாம் துரை? ஏன் வண்டி நிக்குது?"

"அண்ணே! வண்டியில முன் டயர் கிழிஞ்சிப் போச்சு. வண்டி நகராது. கம்பெனிக்குப் போன் பண்ணியாச்சு. ஆள் வந்து மாத்தி வண்டி கிளம்ப எப்படியும் ஒரு மணி நேரம் தாண்டிடும்."

"ஏய், என்னப்பா இப்படிச் சொல்ற? ஏற்கெனவே நாலு நாளா வேலையில்லை. இன்னிக்காவது வேலைக்குப் போலாம்னா இப்படிப் பண்ணிட்டா னுங்களே!" என்றார் ஒரு பெரியவர்.

"சித்தப்பா! வண்டி ரிப்பேரா ஆனதுக்கு அவங்க என்ன பண்ணுவாங்க?"

"ஆதவா! இந்தக் கீழுர் பயலுக வேணும்னேதான் இப்படிப் பண்ணியிருப்பானுங்க. இவங்களைப் பத்தி



நமக்குத் தெரியாது!" - அவரது குரல் உயர, முன்னே இருந்து ஒருவன் குரல் கொடுத்தான்.

"யோவ் பெரிசு! பேசுறதை யோசிச்சிப் பேசு. நாங்களும்தான் நாலு நாளா வேலைக்குப் போகலை. நாங்களே வண்டியை ரிப்பேராக்க... நாங்க என்ன உங்களை மாதிரி அரைக் கிறுக்கனுங்களா?"

"ஏலேய்! யாரைப் பார்த்துக் கிறுக்கனுங்கிற?"

"உங்களைப் பார்த்துத்தான்... இதில் என்ன சந்தேகம்?" - அவனும் நக்கலாகவே பதில் சொல்ல வார்த்தைகள் தடித்தன.

பிரச்சனை ஆரம்பமாகப் போகிறது எனத் தெரிந்ததும், ஆதவன் இடையில் புகுந்தான்.

"அட என்னப்பா! எப்பப் பாரு சண்டை சச்சரவுன்னு? நாம என்ன சண்டை போடவா வந்திருக்கோம்?"

"அதை உன் சித்தப்பன் கிட்ட சொல்லு."

"ஏலேய்! கையை நீட்டிப் பேசினா கை இருக்காது மவனே!"

"சித்தப்பா! ஏன் இப்படிக் கத்துறீங்க? பெரியவங்களே இப்படி ஆத்திரப்பட்டா எப்படி? பேசாம இருங்க."

"ஆதவா! நீ சின்னப் பய. உனக்கு ஒன்னும் தெரியாது."

"எல்லாம் தெரியும் சித்தப்பா. பத்து வருஷமா ஒருத்தர் மேல ஒருத்தர் விரோதத்தைத்தான் வளர்த்திட்டு இருக்கோம். மனக் கசப்பும் வெறுப்பும்தான் வளருது. யாருக்காவது ஒரு துளி நிம்மதி கிடைக்குதா?"

"என்ன மாப்பிள்ளை பேசுற? நாம என்ன வேலை வெட்டி இல்லாமலா அவனுங்ககிட்ட சண்டைக்குப் போறோம். வம்புக்குன்னு வந்தா... சும்மா விட நாம என்ன சொங்கிப் பயல்களா?"

"சுடலை! இது எங்க ஊர்ப் பிரச்சனை. நீ வாயை மூடிட்டு இரு."

"என்ன மாப்பிள்ளை, இப்படிப் பிரிச்சுப் பேசுற? நானும் இந்த ஊருக்கு வந்து பதினைஞ்சு வருஷமாச்சு. உங்கள்ல ஒருத்தனாத்தானே வளர்ந்தேன். எனக்கும் இந்த ஊர் மேல.... நம்ம தெரு சனங்க மேல அக்கறை இருக்காதா?"

"உன் அக்கறையைக் கொண்டு உடைப்பில போடு. சித்தப்பா! நாம இப்ப நடக்க வேண்டிய காரியத்தைப் பார்ப்போம்."

"என்ன செய்யலாம் ஆதவா?"

"துரை! நம்ம வண்டியை வேற வழியா எடுத்திட்டுப் போயிடலாமா?"

"போகலாம்ணே! எப்படியும் குருவிகுளத்தைச் சுத்திப் போக ஒரு மணி நேரமாயிடும்."

"ஓ! எப்படிப் பார்த்தாலும் அவ்வளவு நேரம் ஆகுதே. சித்தப்பா! பேசாம வண்டி ரெடியான பிறகே போகலாமா?"



"நேரமாகிப் போயிடுமேப்பா!"

"அதனால என்ன? சாயந்தரம் கூட கொஞ்ச நேரம் நின்னு வேலை செய்திடலாம். இல்லன்னா... மதியச் சாப்பாடு முடிஞ்சதும் உட்காராம வேலையைத் தொடங்கிடலாம். ஏய்! நீங்க எல்லாம் என்னப்பா சொல்றீங்க?" - தன்னுடன் வந்தவர்களைப் பார்த்துக் கேட்டான் ஆதவன்.

"சரிதாம்ப்பா! அப்படியே செய்திடலாம்."

"அப்ப சரி. எல்லாருமா வண்டியில உட்காருங்க. அந்த வண்டியைச் சரி பண்ணினதும் நாம கிளம்பலாம்!" - என்றவாறே சூரியகாந்தி குழுவினரைப் பார்க்க... வண்டியிலிருந்த அனைவரும் தங்களது உடைமைகளை எடுத்துக் கொண்டு புறப்பட்டுக் கொண்டிருந்தனர்.

சற்றுக் குழப்பத்தோடு தயக்கமாய்க் கேட்டான். "எல்லாரும் எங்கே கிளம்பிட்டீங்க?"

ஒருவரிடமும் பதில் இல்லை. மாறாகச் சத்தமாய்த் தங்களுக்குள் பேசிக் கொண்டனர்.

"அவனுங்க நிக்கிற இடத்தில நமக்கு என்னல வேலை? வாங்க, நாம நடந்தே போயிடலாம். நடையை எட்டிப் போட்டா அரை மணி நேரத்தில போயிடலாம். இவனுங்க நிழல் கூட நம்ம மேல படக்கூடாது.

"ஏய் பொண்டுகளா! அங்கே என்ன வாய் பார்த்திட்டு இருக்கீங்க? வாங்க! எல்லாரும் முன்னால நடங்க. ம்... ம்... ஏரிப் பக்கமாப் போயிடலாம்!" - என இளவட்டங்கள் சொல்ல, சூரியகாந்தி ஏக்கமாய் ஆதவனைப் பார்த்தாள்.

'போ!' - என்பதாய்த் தலையசைத்து வழியனுப்பினான்.

ஆசையும் நேசமுமாய்ச் சில நொடிகள் அவனைப் பார்த்துக் கொண்டே நின்றவளைக் கைப்பற்றி அழைத்துப் போனாள் துளசி.

பார்வையை விட்டு மறையும்வரை அவர்களையே பார்த்துக் கொண்டு நின்றவன்... அவர்கள் சென்றதும் ஒரு பெருமூச்சுடன் வேனில் ஏறி அமர்ந்து கொண்டான்.

முன்னால் நின்ற வாகனத்தில் சூரியகாந்தி அமர்ந்த இடம் வெறுமையாய் இருக்க... அதை உற்றுப் பார்த்தான்.

அவன் கண்களுக்குச் சூரியகாந்தி அதே இடத்தில் அமர்ந்து புன்னகைப்பதாய்த் தோன்ற தன்னையும் மீறிப் புன்னகைத்தான். அவளே தன் எதிரில் இருப்பதாய் எண்ணித் தனக்குள் லயித்துப் போனான்.

பெரிய ஏரி. நீளமாய் அகலமாய்ச் சலசலத்து ஓடிக் கொண்டிருந்த நீரோடு காட்சியளித்தது. தொடர்ச்சியாய்ப் பெய்த மழையில் ஏரி நிரம்பத் துவங்கியிருந்தது. ஏரிக்குள் வளர்ந்திருந்த கருவேல மரங்களின் தலைப் பகுதி மட்டுமே வெளியே தெரிந்தது.

"அடேயப்பா! நம்ம ஊர்ல பெரிய ஏரி இதுதான். இதுவே நிறைஞ்சிருக்கே. சரியான மழைதாம்ப்பா..."

"கொஞ்ச மழையா பெய்தது? கொட்டித் தீர்த்திடுச்சில்ல!"

"ஏய் புள்ளைகளா! தரையெல்லாம் வழுக்குது. பார்த்து ஏறுங்க." ஏரிக்கரை மீது ஏறி நின்ற ஆண்கள் எச்சரிக்கை செய்ய... அலுப்போடு முணுமுணுத்தாள் சுப்புலட்சுமி.



"ம்க்கும்! இவனுங்களுக்கென்ன? முட்டிக்கு மேல லுங்கியை மடிச்சிக் கட்டிட்டு சரசரன்னு ஏறிடுவானுங்க. நாம பொம்பளைங்க. இந்தச் சீலைத் துணியைக் கட்டிட்டு இதுல எப்படி ஏறுறதாம்?"

"அதானே! இவனுங்களுக்கு அப்படியென்ன வீம்பு? அந்தத் தெருக்காரனுங்க அவனுங்க பாட்டுக்கு நிற்கிறானுங்க. நாம நம்ம வேலையைப் பார்த்திட்டு ஒரு ஓரமா நின்னுட்டு வண்டியிலேயே வந்திருக்கலாம்."

"நம்மூருக்காரனுங்களுக்கு எது இருக்குதோ இல்லையோ வறட்டுக் கர்வத்துக்கு மட்டும் ஒரு குறைச்சல் இல்லை."

"சுப்பக்கா! மெல்லப் பேசு. எவன் காதுலயாவது விழுந்திடப் போகுது."

"விழுந்தா விழட்டுமே. எனக்கென்ன பயம்?"

"என்ன சுப்பு? யாரை விழுந்தா விழட்டும்கிற?"

"அது ஒன்னுமில்லண்ணே! களிமண்ணா இருக்குதே. கால் வழுக்குது. அதான்..."

"பக்கத்தில வேப்ப மரம் இருக்கு பாரு. அந்தக் கிளையைப் பிடிச்சி ஏறுங்க. எல்லாரும் ஏறி வாங்கம்மா. மசமசன்னு நிற்காதீங்க. பொழுதாகிட்டே இருக்கு."

"நீங்க நகர்ந்து நில்லுங்க. நாங்க ஏறி வர்றோம்!" - என முன்னே சென்ற சுப்புலட்சுமி காலை வைக்கும் இடத்தில் சிறு சிறு பள்ளம் தோண்டியவாறே ஏற, அவளைத் தொடர்ந்து மற்றவர்களும் ஏறி ஏரிக்கரை மீது வந்து சேர்ந்தனர்.

ஏரிக்கரைக் காற்று சிலுசிலுவென வீசியது. பெண்கள் குதூகலித்தனர்.

"ஏய்! எவ்ளோ தண்ணி பாரேன். இதுல ஒரு குளியல் போட்டா எப்படி இருக்கும்?"

"எப்படி இருக்குமா? ஆழம் எவ்வளவு தெரியுமா? அம்பது அறுபதடி இருக்கும். உள்ளே விழுந்தா உசுரோட திரும்ப முடியாது. பேசாம நடங்க. சீக்கிரமாப் போகணும்!" - மேஸ்திரி சொல்லி விட்டு முன்னே நடக்க... தோளில் கிடந்த துண்டைச் சும்மாடாய் ஆக்கித் தலையில் வைத்துக் கையில் வைத்திருந்த உபகரணங்களையும் சாப்பாட்டுக் கூடையையும் தலையில் ஏற்றிக் கொண்டு அனைவரும் அவரைப் பின் தொடர்ந்தனர்.

"எல்லாரும் ஏதாவது பேசிக்கிட்டே வாங்க."

"ஏன் மேஸ்திரி உங்களுக்குப் பயமா இருக்கா?"

"பயம்தான். எதையாவது பார்த்துப் பயந்து யாரும் ஏரிக்குள்ள குதிச்சிடக் கூடாதில்ல. பிறகு உங்க வீட்டுக்கு யார் பதில் சொல்றது?"

"என்ன அண்ணே சொல்றீங்க?"

"ஏரியைச் சுற்றி எவ்வளவு புதர் மண்டிக் கிடக்கு பார்த்தியா? இது உள்ள ஏகப்பட்ட விருந்தாளிக இருப்பாக."

"விருந்தாளியா? அது யாரு?"

"அதான்... ஒரு பழமொழி கூடச் சொல்வாங்களே. இதைக் கண்டா படையும் நடுங்கும்னு..."



"எதைக் கண்டா? ஐயோ! பாம்பா?" - கத்தினாள் துளசி.

"பாரு. பேரைச் சொல்றதுக்கே இப்படிக் கத்துது. ஈரத்துக்கு வரிசையா ஏரிப்பாதையில சுருண்டு கிடக்கும். கீழே பார்த்து நடங்க. பேசிகிட்டே வந்தா நம்ம சத்தம் கேட்டு அதுகளே போயிடும். அதான் பேசிகிட்டு வாங்கன்னு சொன்னேன்."

"ஏலேய்! எங்களைக் கொல்றதுக்குன்னா இப்படி ஏரி வழியா நடத்திக் கூட்டியாந்தீக?" - தேனம்மா பாட்டியின் குரலில் நடுக்கம் தொனித்தது.

"ஆத்தா! பாம்புதான் நம்மைப் பார்த்துப் பயப்படும். நீ ஏன் பயப்படுற?"

"உனக்கென்னடா? இளவட்டப் பய. நான் கிழவியாச்சே!"

"பயப்படாதே ஆத்தா! நாங்கதான் முன்னே போறோம். கடிக்கிறதா இருந்தா எங்களைத்தான் கடிக்கும்."

"ஏன் எல்லாரும் இதைப் பத்தியே பேசுறீங்க? வேற ஏதாவது பேசுங்களேன்."

"அட! சூரி கூடப் பயப்படுறாளே?"

"இது ஒன்னும் பயமில்லை. இப்படிக் காலார நடந்து போகும்போது பார்க்கவும் பேசவும் எவ்வளவோ விஷயம் இருக்குதே. ஆத்தா! கரையோரமெல்லாம் எவ்வளவு கொடி ரோஜா பூத்துக் கிடக்குது பாரேன். தொட்டாச்சுருங்கிச் செடி கூடப் பூத்திருக்குது பாரு."

"பொம்பளைப் புள்ளைகளோட பார்வையே தனிதான் ராமய்யா. நாமெல்லாம் தண்ணி மரம் மட்டைன்னு பார்த்தோம். ஆனா... இந்தப் புள்ளையைப் பாரு. கண்ணுக்கு அழகா இருக்கிறதைத்தான் பார்க்குது!" - ஆண்கள் கேலியும் கிண்டலுமாய் முன்னே செல்ல... துளசி சூரியைப் பின்னால் இழுத்தாள்.

"சூரி!"

"என்னடி?"

"அங்கே பாரேன்."

"எங்கே?"

"அதோ... அந்தப் புதர் பக்கத்தில..." - எனத் துளசி சுட்டிக் காட்டிய திசையில் பார்க்க... முகம் மாறினாள் சூரியகாந்தி.

யாரோ கவிழுந்து படுத்திருப்பதைப் போல் தெரிந்தது.

"என்ன துளசி இது?"

"இதோ இந்தப் பக்கம் பாரு. நல்லாத் தெரியுது."

"எங்கே?" - என்றவாறு துளசியை நெருங்கி நின்று பார்க்க... உள்ளம் தடதடத்தது. ஏரிக்கரையின் ஓரமாய்ப் புதரருகே நீரோடு நீராகக் கவிழ்ந்த நிலையில் மிதந்து கொண்டிருந்தது ஒரு உருவம்.

நெஞ்சம் பதற... இரண்டடி முன்னே சென்று பார்த்தாள். இப்போது மிதந்து கொண்டிருந்தது ஒரு பெண்ணின் உடல் என்று தெளிவாகத் தெரிய வீறிட்டாள்.



முன்னே சென்று கொண்டிருந்தவர்கள் பதறித் திரும்ப, உடல் தள்ளாடியவளைப் பற்றிக் கொண்டாள் துளசி.

"ஏ புள்ளைகளா, என்ன ஆச்சு?"

"அண்ணே! ஓடியாங்க. ஏரியில... ஒரு... ஒரு பொணம்."

"என்னது?" - அனைவரும் ஓட்டமும் நடையுமாய் வர, சூரியகாந்தியின் பார்வை அந்த உருவத்தை வெறித்தது. பாவாடை தாவணியுடன் இருந்த உடலைச் சுற்றிலும் ஏராளமான மீன் கூட்டங்கள். தலை கவிழ்ந்தே இருக்க, கூந்தல் பிரிந்து நீரோட்டத்தில் மிதந்து கொண்டிருந்தது.

"ஏலேய்! ஏதோ பொட்டப்புள்ள மாதிரி தெரியுதுப்பா."

"ஆமா. எந்த ஊருப் புள்ளன்னு தெரியலையே!"

"தானா குதிச்சதா... இல்ல, வழுக்கி விழுந்ததான்னு தெரியலையே!"

"ஏய்! ரெண்டு பேர் போயி ஊருக்குள்ள நாலு பேரைக் கூட்டிட்டு வாங்க. சீக்கிரம் போங்க."

"நமக்கெதுக்குண்ணே வம்பு? அப்புறம் போலீசு கேசுன்னு அலையணும். வாங்கண்ணே... வேலைக்குப் போலாம்."

"ஏலே! கூறுகெட்ட மூதேவி! வயசுப் புள்ள ஏரியில பொணமா மிதக்குது. யார் பெத்த புள்ளையோ? ஆயி அப்பன் தேடிட்டு இருக்க மாட்டாங்க. வேலையாம் வேலை! வேலையை எப்ப வேணா செய்துக்கலாம். போ. முதல்ல போயி ஆட்களைக் கூட்டி வா."

"சரிண்ணே!"

"ஏ புள்ள சூரி! நீ என்ன ஆத்தா அப்படியே நிற்க... போ... போய்ப் பொண்டுகளோட சேர்ந்து நில்லு. பயந்திடப் போற!"

"துளசி! இது... இந்தப் பாவாடைத் துணியைப் பார்த்தியா? இது நம்ம செவ்வந்தியோடது மாதிரி யில்ல..." - சூரியகாந்தியின் குரல் திணறியது.

"எது? செவ்வந்தியோடதா?" - மற்றப் பெண்களும் கூடிப் பார்க்க, நீரின் ஓட்டத்தில் காற்றோடு சேர்ந்து தலையணை போல் உப்பித் தெரிந்த பாவாடைத் துணியைக் கூர்ந்து பார்த்தனர்.

"அட! ஆமாம்... பார்த்தா அப்படித்தான் தெரியுது."

"சந்தேகமே இல்ல. இது... இது கண்டிப்பா செவ்வந்திதான்!" - பயமும் கண்ணீருமாய் அரற்றி யவளைத் தேனம்மாள் அதட்டினாள்.

"சூரி! உனக்கு என்ன கோட்டியா பிடிச்சிருக்கு? அவ கல்யாணப் பொண்ணா லட்சணமா வீட்டோட இருக்கா. அவளைப் போயி..."

"இல்ல ஆத்தா! இது செவ்வந்திதான். துளசி! உனக்குத் தெரியலையா? இந்தப் பாவாடைத் துணி... நாம மூணு பேரும் சேர்ந்துதானே நம்மூரு ஜவுளிக்காரர் கிட்ட வாங்கினோம்..."

"ஆமா."



"இந்தா! சும்மா நீங்களா ஏதாவது கற்பனை பண்ணிகிட்டு உளறாதீங்க. ஜவுளிக்காரன்கிட்ட நீங்க மட்டும் இதே மாதிரி துணி எடுத்தீங்களா? வேற யாரும் எடுத்திருக்க மாட்டாங்க?"

"அதானே! நிச்சயமான பொண்ணு எப்படி வெளியே வருவா? இது எந்த ஊருப் பொண்ணோ?"

"சூரி! இப்படிச் சட்டுன்னு பேசிடாதே. செவ்வந்தியோட ஆத்தா காதுல மட்டும் இது விழுந்தது உன்னைக் கிழிச்சி நட்டிடுவா."

"இல்ல சுப்பக்கா! எனக்கு என்னவோ... இது..."

"ஏய்! சித்த நேரம் வாயை மூடிட்டு இருக்க மாட்டே. சும்மா தொணதொணன்னுகிட்டு. செவ்வந்தி நம்ம ஊர்ப் பொண்ணு. அவ ஏன் இங்க வந்து விழப் போறா?"

"இதே ஏரிதானே நம்ம ஊர் வரைக்கும் இருக்கு. அங்க விழுந்தா தண்ணியில இழுத்திட்டு வந்திருக்காதா?"

"இந்தச் சூரிக்குப் பைத்தியம்தான் பிடிச்சிருக்கு. தேனாத்தா! அவளை அப்படிக் கீழே கூட்டிட்டுப் போ. பயத்தில ஏதேதோ உளறுது."

"இல்ல... இல்ல..." - என மறுத்தவளை நான்கைந்து பெண்கள் கைப்பற்றி அழைக்க... அவர்களை உதறினாள்.

"இல்ல... நான் வர மாட்டேன். இது யாருன்னு நான் பார்க்கணும்..."

"இதோ பாரும்மா. ஏற்கெனவே பொணம் மிதக்குது. தண்ணியில ஊறிப் போயிருக்கு. அதோட மீன் கூட்டத்தைப் பார்த்தியா? இது கடிச்சு முகத்தைச் சிதைச்சிருக்கும். வெளியே தூக்கிப் போட்டாக்கூட அடையாளம் தெரியாது."

"எனக்குத் தெரியும். செவ்வந்தி என் கூடவே வளர்ந்தவ. அவளை எனக்கு அடையாளம் தெரியும்." - அழுத்தமாய்ச் சொன்னவளை ஆளாளுக்குத் திட்டித் தீர்க்க... அதற்குள் செய்தி காட்டுத் தீயாய்ப் பரவ ஊரே திரண்டு வந்தது.

ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமான புரளியைக் கிளப்பிவிட... சூரியகாந்தியின் மனம் மட்டும் அது செவ்வந்திதான் என அடித்துக் கூறியது. பத்து நாட்களுக்கு முன்பு கூடத் தன்னிடம் சொன்னாளே... 'கட்டுனா கண்ணப்பனைத்தான் கட்டுவேன். இல்லேன்னா... ஆத்துலயோ குளத்துலயோ விழுந்து சாவேனே தவிர, இன்னொருத்தனைக் கட்டிக்கிட்டு குடும்பம் நடத்த மாட்டேன்!' - என்று அடித்துக் கூறினாளே... அதன் பிறகு இரண்டே நாளில் நிச்சயதார்த்தம் என்றார்கள்.

சொந்தத் தாய்மாமனையே கட்டிக் கொள்ளப் போவதாகச் சொன்னார்கள். அவளை நேரில் பார்க்கத்தான் முடியவில்லை. எப்போது சென்றாலும் அவளது அம்மா அனுமதிக்கவில்லை.

இதுவரை அவள் கண்ணில் படவில்லை. ஆனால்... இந்த உடை, இந்த நீண்ட கூந்தல்... நிச்சயம் இது செவ்வந்தியாகத்தான் இருக்கும். இல்லை... அவளாக



இருக்கக் கூடாது. அவள் உயிரோடு இருக்க வேண்டும். என் தோழி மரித்திருக்கக் கூடாது.

"சூரி! ஏய் சூரி...!" - துளசியின் தொடுதலில் திடுக்கிட்டுத் திரும்பினாள்.

"ம்..."

"வா... வீட்டுக்குப் போகலாம்."

"என்ன? வீட்டுக்கா... எதுக்கு?"

"சொன்னாக் கேளு. வா... போயிடுவோம்."

"அதான் ஏன்னு கேட்கிறேன்?" - என்ற சூரியகாந்தியின் நாசியை எதுவோ நெருட... மூக்கைச் சுழித்தவாறே திரும்பினாள். தண்ணீர் சொட்டச் சொட்ட நான்கைந்து பேராய்க் கரையில் கொண்டு வந்து போட்ட சடலத்தைக் கண்டதும் மூச்சற்றுப் போனாள்.

உடல் மொத்தமும் மீன்களால் சிதைந்து போயிருக்க... அதற்கு மேலும் அதைக் காணச் சக்தியற்று மயங்கிச் சரிந்தாள்.

# 5



இரவில் கண்ட கனவு
மறந்து போகலாம்! - ஆனால்
இதயம் தொட்ட உன் நினைவு
என்றும் மறப்பதில்லை!

ஏழு மாடிகளைக் கொண்ட அந்தக் கட்டடத்தின் நான்காவது தளத்தில் வேலை செய்து கொண்டிருந்தான் ஆதவன். தரை மட்டத்தின் அளவைத் துல்லியமாய்க் கணித்துத் தரையைப் பூசிக் கொண்டிருந்தான். சிமெண்ட் மணமும் தரையின் ஜில்லிப்பும் வழக்கம் போல் அவனை ரசிக்கச் செய்யவில்லை.

மாறாக... அவனது மனம் சூரியகாந்தியை எண்ணிக் குழம்பித் தவித்துக் கொண்டிருந்தது. நான்கு பக்கங் களிலும் கண்ணாடி ஜன்னல்கள் அமைப்பதற்கென விடப்பட்ட திறந்த வெளி மூலம் கீழே பார்ப்பதும்... ஏமாற்ற மாய்ப் பணியைத் தொடர்வதுமாய் இருந்தான்.

அவர்களது பணியை மேற்பார்வையிட்டுக் கொண்டிருந்தவரை அழைத்தான்.

"அண்ணே! மணி என்ன?"

"ஒன்னாகப் போகுதுப்பா."

மீண்டும் குழப்பமாய்த் தரைத் தளத்தை எட்டிப் பார்த்தான். பணி நடைபெறாமல் வெறிச்சென்று இருக்க... மனம் கனத்தது.

'என்ன ஆயிற்று? எட்டு மணிக்குப் புறப்பட்ட வர்கள்... பொடி நடையாய் நடந்திருந்தாலும் பத்து மணிக்கெல்லாம் வந்திருக்கலாமே... இன்னும் ஏன் வரவில்லை?

வரும் வழியில் ஏதேனும் பிரச்சனை? சேச்சே! ஒற்றுமைக்குப் பெயர் பெற்றவர்கள் கிழக்குத் தெருக் காரர்கள். அவர்களுக்குள் பிரச்சனை வர வாய்ப்பில்லை.



வேறு என்ன? யாருக்கும் ஏதேனும் ஆகியிருக்குமோ? எதுவும் விபத்து...?

அப்படியிருந்தாலும் மொத்தமாய் விடுப்பு எடுக்க மாட்டார்களே? ஒருவர் கூட வரவில்லையென்றால்... என்ன காரணம்?'

தனக்குள் உழன்று கொண்டிருந்தவனை அதட்டினார் மேற்பார்வையாளர்.

"ஆதவா! என்னாச்சி உனக்கு? போட்ட இடத்திலேயே உட்கார்ந்து பூசிட்டு இருக்கே?"

சட்டென நிமிர்ந்தான். "மன்னிச்சிடுங்கண்ணே! ஏதோ ஞாபகத்துல... இதோ, சரி பண்ணிடுறேன்."

"என்னப்பா நீ? எவ்வளவு டென்ஷன் இருந்தாலும் வேலையில சுத்தமா இருப்பியே... இன்னிக்கு என்ன? உடம்பு எதுனா சரியில்லையா?"

"இல்லண்ணே! அதெல்லாம்... ஒன்னுமில்லை."

"இதையேதான் கண்ணப்பனும் சொல்றான். ஆனா உங்க ரெண்டு பேர் முகமும் சரியில்லையே... என்ன ஆதவா? உங்க ஊருக்குள்ள மறுபடியும் எதுவும் பிரச்சனையா?"

"சேச்சே! அப்படியெல்லாம் எதுவும் இல்லண்ணே!"

"என்னவோப்பா! நமக்கு வேலை சுத்தமா நடக்கணும். இல்லன்னா... பேர் கெட்டுப் போயிடும். இந்த பார்ட்டியே இந்த வேலை முடிஞ்சதும் பக்கத்திலேயே ஓட்டல் கட்டப் போறாராம். அந்த வேலையும் நமக்குத்தான் தர்றதாச் சொன்னார். பார்த்துச் செய்யுங்கப்பா..."

"செய்துடலாம்ணே!"

"சரி. மணி ஒன்னாகுது. எல்லாரும் சாப்பிட்டு வேலையைப் பாருங்க."

"சரிண்ணே!"

"முதல்ல கண்ணப்பனைப் போய்ப் பாருப்பா... பேயறைஞ்சவன் மாதிரி திரியுறான். காலையில சாந்து குழைக்கச் சொன்னா... சிமெண்ட்டைக் கொட்டி வெச்சிட்டு குடம் குடமாத் தண்ணியை எடுத்து ஊத்துறான்."

"என்ன?"

"மூனு மூட்டை சிமெண்ட் வீணாப் போச்சு. நல்ல வேளை ஓனர் அந்த நேரம் இங்கே இல்லை. இருந்தா என்ன ஆகியிருக்கும்?"

"நான்... பார்க்கிறேண்ணே!" - என்றவாறு எழுந்து கண்ணப்பனைத் தேடினான் ஆதவன். வேலை செய்த அனைவரும் கீழே இறங்கிக் கொண்டிருக்க... கண்ணப்பனைக் காணவில்லை.

"கண்ணா! கண்ணா!" - என்றவாறே குரல் கொடுத்தான் ஆதவன்.

வெற்றுக் கட்டடம் அவனது வார்த்தையை எதிரொலிக்க... கண்ணப்பனைத் தேடியபடி ஒவ்வொரு தளமாக இறங்கி வந்தான்.

தரைத் தளத்தில் இருந்த குடிநீர்க் குழாயில் கை கால் அலம்பிக் கொண்ட மற்றவர்கள் சாப்பிடத் தயாராக, தன் சாப்பாட்டுக் கூடையை எடுக்கச் சென்றவனின் நெற்றி சுருங்கியது.



சிமெண்ட் மூட்டைகளை வரிசையாய் அடுக்கி வைத்திருந்த அறையில் கண்ணப்பன் தலையைப் பற்றிக் கொண்டு அமர்ந்திருந்தான். சாப்பிடும் எண்ணத்தைக் கைவிட்டு அந்த அறைக்குள் நுழைந்தான்.

"கண்ணா!" - ஆதவனின் அழைப்பில் திரும்பியவன்... சட்டென எழுந்தான்.

அவசரமாய்க் கண்களைத் துடைத்துக் கொண்டதைக் கண்டதும் ஆதவனின் முகம் மாறியது.

"கண்ணா! என்னடா?"

"என்ன ஆதி?"

"உடம்புக்கு எதுவும் பண்ணுதா கண்ணா? கண்ணெல்லாம் சிவந்து போயிருக்கே!" - கரிசனையாய்க் கேட்ட நண்பனைக் கண்டதும்... கண்ணப்பனின் விழிகளில் நீர் நிறைந்தது.

பதறினான் ஆதவன். "கண்ணா! என்னடா இது? ஏன்டா கண் கலங்குற? முதல்ல இப்படி உட்கார்!" - சிமெண்ட் மூட்டை மீது அமர வைத்தான்.

கண்ணப்பனின் தொண்டை அடைத்துக் கொண்டது.

"ஆதி! நான்... நான்..."

"சொல்லுடா. எதுவா இருந்தாலும் சொல்லு..."

"நம்ம ஆட்களை யெல்லாம் எங்கே?"

"எல்லாரும் சாப்பிட்டுட்டு இருக்காங்க. ஏன்டா?"

"ஆதி! எனக்கு... எனக்கு என்ன பண்றதுன்னே தெரியலைடா!" - விசும்பினான் கண்ணப்பன்.

"ஏன்டா? என்னடா பிரச்சனை உனக்கு?"

"ஆதி! நீ கவனிச்சியா? செ... செவ்வந்தி ஒரு வாரமா... வேலைக்கு வரலை."

"ப்பூ! இதுதானா உன் பிரச்சனை? உடம்பு எதுவும் சரியில்லையோ என்னவோ? நாமளே நாலு நாள் கழிச்சி இன்னிக்குத்தானே வந்திருக்கோம். அவளும் வருவா."

"இல்ல... அவ வர மாட்டா!" - என்றான் கண்ணப்பன் உறுதியாய்.

"கண்ணா?"

"அவ வர மாட்டா ஆதி. அவளால வர முடியாது."

"ஏன்டா?"

"ஒரு நிமிஷம்!" - என்றவன் எழுந்து சென்று மற்றவர்கள் என்ன செய்கிறார்கள் என வெளியே எட்டிப் பார்த்தான். வேப்ப மரத்தின் நிழலில் அமர்ந்திருந்து அனைவரும் பேசிச் சிரித்தபடி சாப்பிட்டுக் கொண்டிருக்க... மீண்டும் உள்ளே வந்து தன் சட்டைப் பையிலிருந்து ஒரு துண்டுக் காகிதத்தை எடுத்து நீட்டினான்.

"ஆதி! இதைப் படி."

"என்னடா இது?"

"செவ்வந்தி கொடுத்தனுப்பியிருக்கா..."



"என்ன? யார் கிட்ட?"

"அவங்க தெருப் பையன் மூலமா..."

"ஓஹோ! இதெல்லாம் கூட நடக்குதா? எத்தனை நாளா நடக்குது?" - ஆதவன் கேலியாய்க் கேட்க... கண்ணப்பன் கண்களில் நீர் வழிந்தது.

"கேலி செய்யுற நேரம் இது இல்லை ஆதி. முதல்ல இதைப் படிச்சுப் பாரு."

ஆதவனின் முகம் மாற, கையில் இருந்த பேப்பரை விரித்தான். மிகச் சிறிய காகிதம். தினசரி காலண்டரின் ஒரு பேப்பரைக் கிழித்துப் பென்சிலால் அவசரம் அவசரமாகச் சில எழுத்துப் பிழைகளுடன் அந்தக் கடிதம் எழுதப்பட்டிருந்தது. பிழையின்றிக் கவனமாய் அதைப் படித்தான் ஆதவன்.

"இன்று ஒரு நாள் மட்டும் காத்திருப்பேன். நீ எதுவும் செய்யவில்லை என்றால் நாளை என் உயிர் இருக்காது." - இரண்டே வரிகளில் கடிதம் முடிந்து போயிருந்தது.

திகைப்பாய்க் கண்ணப்பனிடம் நிமிர்ந்தான் ஆதவன்.

"என்னடா இது?"

"செவ்வந்திதான் எழுதியிருக்கா."

"அது சரி. எதுக்காக... இப்படி எழுதியிருக்கா? உங்க விஷயம் அவங்க வீட்டுக்குத் தெரிஞ்சு போச்சா?" - ஆதவன் படபடப்பாய்க் கேட்டதும் அழ ஆரம்பித்தான் கண்ணப்பன்.

"என்னன்னு தெரியலை ஆதி. போன வாரத்தில ஒரு நாள் இதே மாதிரி ஒரு சீட்டுக் கொடுத்தனுப்பினா. அதில அடுத்த மாசம் எனக்கும் என் மாமனுக்கும் கல்யாணம். எப்படியாவது என்னைக் காப்பாத்துன்னு எழுதியிருந்தா.

"லட்டர் கொண்டு வந்த பயகிட்ட லேசுபாசா விசாரிச்சேன். நிச்சயதார்த்தம் பண்ணிட்டாங்களாம். செவ்வந்தியக்கா அழுதிட்டே இதைத் தந்ததுன்னு சொன்னான்..."

"நீ ஏதாவது பதில் கொடுத்தியா?"

"இல்லடா. எங்க வீட்டு நிலைமைதான் உனக்குத் தெரியுமே! ஏழெட்டுப் பேர் வீடு நிறைய இருப்பாங்க. நான் எப்படி எழுதிக் கொடுக்கிறது?"

"சரி. அந்தப் பயகிட்டயாவது கொஞ்சம் ஆறுதலா பேசி அனுப்புனியா? தைரியமா இருன்னு..."

"எப்படிடா? அது ஒரு பத்து வயசுப் பயடா. யார்கிட்டயாவது போய் உளறிட்டா...?"

"அப்போ... நீ எதுவும் பதில் அனுப்பலை?"

"இல்ல... ஆனா என்ன செய்யலாம்னு யோசிச்சேன். ம்ப்ச்! ஒரு வழியும் கிடைக்கலை."

"ஏன்?"

"என்ன ஏன்? நான் எப்படி இதை நிறுத்த முடியும்?"

"விரும்பினே இல்ல... மனசுல ஆசை இருக்கில்ல... அப்போ தைரியமாப் போய்ப் பொண்ணு கேளு!" -



ஆதவன் அழுத்தமாய்ச் சொல்ல... கண்ணப்பனின் உடல் நடுங்கியது.

"ஆதி! எ...ன்ன சொல்ற?"

"போடா. போய் உரிமையோட பொண்ணு கேளு. எல்லாருமே நம்ம உறவுக்காரங்கதானேடா. சும்மா போய்க் கேளு."

"விளையாடாதே ஆதி! ரெண்டு தெருக்காரங்களும் எவ்வளவு வெறியில இருக்காங்கன்னு தெரியாதா உனக்கு?"

"எனக்குத் தெரியும். உனக்குத் தெரியுமா?"

"ஆதி!"

"நம்ம ஊர்க்காரங்களுக்குள்ள எத்தனை வருஷமா பகை இருக்கு?"

"ஏன் கேட்கிற?"

"சும்மா சொல்லு."

"ப... பத்து... பதினோரு வருஷமா இருக்கு."

"ம்... நீ எத்தனை வருஷமா அந்தப் புள்ளைய விரும்புற?"

"நா...லு... வருஷமா."

"அப்போ... பகை இருக்குன்னு தெரிஞ்சப்புறம் தானே விரும்பினே! அப்ப இருந்த தைரியம் இப்ப எங்கே போச்சு?"

"ஆ...தி!"

"மனசுல தில் இல்லைன்னா ஆசைப்படக் கூடாது கண்ணா! ஆசைப்பட்ட பிறகு உலகமே எதிர்த்தாலும் விரும்பின பெண்ணை விட்டுடக் கூடாது."

"நீ... சுலபமா சொல்லிட்ட. ஆனா கீழ ஊர்க்காரனுங்களை நினைச்சாலே எனக்குக் குலை நடுங்குது. காலையில கூட பாரு... நாம நின்னதுக்காக நம்ம நிழல்கூட படக் கூடாதுன்னு கோவிச்சிட்டுப் போயிட்டாங்க.

"இவனுங்க கிட்ட போய் எப்படிடா பொண்ணு கேட்கிறது? வெட்டிக் கூறு போட்டுட மாட்டாங்க. என்னால ஊருக்குள்ள திரும்பவும் கலவரம் வரணுமா?"

"அப்ப ஒன்னு பண்ணு. பேசாம அந்தப் புள்ளையைக் கூட்டிட்டுப் போய் மாரியாத்தா கோவில்ல வெச்சித் தாலியைக் கட்டிடு. மத்ததைப் பிறகு பார்த்துக் கலாம்."

"ஆதி! எதையாவது யோசிச்சுத்தான் பேசுறியா?"

"ஏன்டா?"

"எனக்கு இன்னும் ரெண்டு அண்ணனும் மூனு தங்கையும் இருக்கிறதை மறந்துட்டியா? இவங்களை வெச்சிட்டு நான் எப்படிக் கல்யாணம் பண்ண முடியும்?" - என்ற கண்ணப்பனைப் புழுவைப் போல் பார்த்தான் ஆதவன்.

"உனக்கு வெட்கமா இல்ல! இதெல்லாம் அந்தப் பொண்ணை விரும்புறதுக்கு முன்னால யோசிச்சி ருக்கணும்."



"ஆதி!"

"பேசாதே. சுயமா முடிவெடுக்கிற துணிச்சலும் கிடையாது. குடும்ப நிலை தெரிஞ்சு நடக்கிற பொறுப்பும் கிடையாது. உனக்கென்னத்துக்கு இந்த ஆசையெல்லாம்? போ. போய் மூஞ்சைக் கழுவிட்டு வேலையைப் பாரு!" - என்றான் வெறுப்பாய்.

"என்ன ஆதி கோவிச்சுக்கிற?"

"வேற என்ன செய்யச் சொல்ற? என்னையும் உன் கூட உட்கார்ந்து அழச் சொல்றியா?"

"ஆதி! ஏதாவது ஒரு வழி சொல்வேன்னுதானே உன்கிட்ட கேட்டேன். நீயே, இப்படிப் பேசினா... நான் யார்கிட்ட போவேன்?" - மீண்டும் கண்ணீர் விட்டவனை அதட்டினான்.

"டேய்! மொதல்ல அழறதை நிறுத்து. ஆம்பிளையா தைரியமா நீயே ஒரு முடிவை எடு. உனக்கு என்ன உதவி வேணும்னாலும் நான் செய்வேன்."

"இல்லை ஆதி! என் மனசு பூரா செவ்வந்திதான் இருக்கா. அவ இல்லாம என்னால வாழ முடியாது. ஆனா அவகூட வாழவும் வழியில்லையே... பேசாம செத்துடலாம்னு கூட யோசிக்கிறேன்."

"அடச் சீ! வாயை மூடு. ஏன்டா இப்படிக் கோழை யாட்டம் பேசுற?"

"நான் வேற என்ன பண்றது ஆதி? என் குடும்பத்தைப் பார்ப்பேனா? நம்ம ஊரை நினைச்சுப் பயப் படுவேனா? இல்ல... செவ்வந்தியைப் பாதுகாப்பேனா?

எனக்கு யோசிச்சு யோசிச்சுப் பைத்தியமே பிடிச்சிடும் போல இருக்கு!" - தலையை இறுகப் பற்றிக் கொண்டவனை இரக்கமாய்ப் பார்த்தான் ஆதவன்.

சில கணச் சிந்திப்பிற்குப் பிறகு கண்ணப்பனின் தோளைத் தொட்டான்.

"கண்ணா! வா... எழுந்திரு."

"எங்கே ஆதி?"

"செவ்வந்தி வீடு வரைக்கும் போயிட்டு வரலாம்."

பதறிப் போனான் கண்ணப்பன். "ஐயய்யோ! கீழ ஊருக்கா?"

"அவ வீடு அங்கேதானே இருக்கு?"

"ஆமா."

"அப்போ வா."

"வேண்டாம் ஆதி! எதுனா பிரச்சனை ஆகிடப் போகுது."

"எல்லாம் நான் பார்த்துக்கிறேன். வா. முதல்ல முகத்தை அலம்பு. நான் போய் இஞ்சினியர்கிட்ட சொல்லிட்டு வர்றேன்."

"ஐயோ... வேண்டாம் ஆதி! எனக்குப் பயமா இருக்கு."

"உனக்குச் செவ்வந்தி வேணுமா... வேண்டாமா?"

"வேணும்... வேணும்."

"அப்ப என் கூட வா!" - என்றவாறு கண்ணப்பனைக் கைப்பற்றி வெளியே அழைத்து வர...



சாப்பிட்டுக் கொண்டிருந்தவர்கள் கூட்டமாய்க் கூடிச் சலசலத்துக் கொண்டிருந்தனர். குழப்பமாய் அவர்களை நெருங்கினான்.

"என்ன ஆச்சு? ஏன் சாப்பிடாம அப்படியே கூட்டம் போட்டுட்டு இருக்கீங்க?"

"ஆதவா! கீழ ஊர்ல சாவு நடந்து போச்சாம்ப்பா!" - பெரியவர் சொல்ல இருவரும் திடுக்கிட்டனர்.

முகம் மாறாமல் கேட்டான் ஆதவன். "எப்போ சித்தப்பா? யாராம்?"

"அதாம்ப்பா! இங்க கூட வேலைக்கு வருமே... ஒரு பொண்ணு. பேர் சரியாத் தெரியலை. பொட்டப்புள்ளை தான். அதுவும் நிச்சயம் பண்ணின பொண்ணாம்."

"ஐயோ!" - அலறினான் கண்ணப்பன். உடன் இருந்தவர்களின் பார்வை மாறியது.

"ஏய்! அந்தத் தெருவில சாவு விழுந்ததுக்கு நீ ஏன்டா கத்துற?"

"விடுங்க சித்தப்பா! கண்ணன் எப்பவுமே இளகின மனசுக்காரன்... அதான்."

"இந்த இளக்கமெல்லாம் நம்மோட இருக்கட்டும்..." என்றான் ஒருவன்.

"கேசவா! இந்த விஷயம் இங்க வரைக்கும் எப்படி வந்தது?"

"மாப்பிள்ளை! நான்தான் சொன்னேன். மதியச் சாப்பாட்டுக்கு வீட்டுக்குப் போனேனில்ல... அப்பத்தான் கேள்விப்பட்டேன்."

"சுடலை! நல்லாத் தெரியுமா? அது... கீழூர் பொண்ணுதானா?"

"அட ஆமாம்ப்பா! ஏரியில குதிச்சிச் செத்துப் போச்சாம். உடம்பெல்லாம் அழுகி மீன் தின்னு... பொணம் கரை ஒதுங்கியிருக்கும் போல. காலையில நம்மகிட்ட வீராப்பா பேசிட்டு ஏரிக்கரை வழியா போனானுங்கள்ல! அப்பத்தான் கூட வந்த பொட்டப் புள்ளைங்க கண்ல பட்டிருக்கு.

"ஊர்க்காரங்க எல்லாம் கூடி எடுத்து இப்பப் போலீசெல்லாம் கூட வந்திருக்குப்பா. ஏரி முழுக்க ஒரே நாத்தம்தான். வேணும்னே குதிச்சதா... இல்ல... ஒதுங்கப் போன இடத்தில தெரியாம சறுக்கிடுச்சான்னு ஊர் பூரா ஒரே பேச்சு."

"பொண்ணு யாருன்னு அடையாளம் தெரிஞ்சிடுச்சா?" - பதறும் இதயத்தோடு கேட்டான்.

"சுப்பம்மா கிழவியோட ஒப்பாரிதான் கேட்டுது. அவ பொண்ணுதானாம்!" - சுடலை சொல்லி முடிப்பதற்குள் வீறிட்டான் கண்ணப்பன்.

"செவ்வந்தி! செவ்வந்தி! என்னை விட்டுட்டுப் போயிட்டியா? ஐயோ! உன்னைக் காப்பாத்த முடியாத பாவியாகிட்டேனே!" - தலையில் அடித்துக் கொண்டு அலறியவனை அனைவரும் மொய்த்தனர்.

"ஏலேய்! என்னலே சொல்லுதே?"

"அந்தப் புள்ளை போனதுக்கு நீ ஏன் ஒப்பாரி வைக்கிற? அவளுக்கும் உனக்கும் என்னலே சம்பந்தம்?"



"கேட்டதுக்குப் பதில் சொல்லுல?"

"யோவ்! போங்கய்யா நீங்களும் உங்க ஊரும். பாவிகளா! ஒன்னா இருந்த ஊரைப் பிரிச்சீக. உங்க வறட்டுக் கர்வத்தால இப்படி எத்தனை உசுரைப் பிரிக்கப் போறீக. ஐயோ! இந்த ஊரை நினைச்சுப் பயந்து என் உசிரை இழந்திட்டேனே.... நான் பாவி! நான் பாவி!" - தலையிலும் நெஞ்சிலும் அடித்துக் கொண்டு கண்ணப்பன் கதறிக் கொண்டிருக்க... ஊரார் விக்கித்துப் போயினர்.

"ஆதவா! இவனுக்கு என்ன புத்தி கித்தி கலங்கிப் போச்சா?"

"ஆமாய்யா! புத்திதான் கலங்கிப் போச்சு. இல்லன்னா... அவ சொன்ன அன்னிக்கே அவ கழுத்தில தாலியைக் கட்டியிருப்பேனே... அந்தப் பூவு .லை அழுக விட்டிருக்க மாட்டேனே... போச்சே... போச்சே... எல்லாம் போச்சே."

"கண்ணா, அழாதேடா! நான் சொல்றதை..."

"ஆதி! இந்த ஊர்க்காரனுங்களை நம்பாதே. நான் என் செவ்வந்தியைத் தொலைச்சிட்டுத் தவிக்கிற மாதிரி உன்னையும் தவிக்க விட்டுடுவானுங்க. நீயாவது எச்சரிக்கையோட இருந்துக்க."

"கண்ணா!"

"நான் கோழை ஆதி! அதான்... அதான் என் உசுரைத் தொலைச்சிட்டேன். நீ வீரன் ஆதி. உன் மனசு போல வாழுவ. நான் போறேன் ஆதி... நானும் என்

செவ்வந்தி கூடவே போயிடுறேன்..." - வேகமாய்த் திரும்பி நடக்க முயன்றவனைத் தடுத்தான் ஆதவன்.

"கண்ணா! எங்கே போற?"

"என் செவ்வந்தி போன இடத்துக்கே... இவனுங்க மூச்சுக் காத்து கூட படாத இடத்துக்குப் போகப் போறேன். என்னை மாதிரி கோழையால் வேற என்ன செய்ய முடியும்? நான் போறேன்!" - என்றவன் விறுவிறுவென மாடிப் படிகளில் ஏறத் துவங்கினான்.

அவன் எதற்காக ஓடுகிறான் எனப் புரிந்து... மற்றவர்கள் சுதாரிக்கும் முன் கண்ணப்பன் ஏழாவது மாடியை அடைந்து முற்றிலும் பூசப்படாமல் இருந்த மொட்டை மாடிச் சுவரை அடைந்திருந்தான். ஆதவனும் மற்றவர்களும் பதறித் துடித்தனர்.

"டேய் கண்ணா! கண்ணா... அவசரப்படாதே..."

"ஏலேய்! கிறுக்குப்பய மவனே! ஏதாவது ஏடாகூடமா செய்திடாதே..."

"கண்ணப்பா, வந்துருடா.... லேய்!" - ஆளாளுக்குக் கூக்குரலிட...

கண்ணப்பன் காதுகளில் எதுவும் விழவில்லை.

'வாழ்ந்தா உன்னோடதான் வாழுவேன்!' - என்ற செவ்வந்தியின் குரல் செவியில் மோத... வெறித்த பார்வையோடு கீழே குவிக்கப்பட்டிருந்த கருங்கற்களைக் குறி வைத்துத் தலை கீழாய்க் குதித்தான்.



அனைவரின் உடலும் உள்ளமும் பதற... அவர்களின் கண் முன்னே இரத்தமாய்ச் சிதறினான் கண்ணப்பன்.

# 6



விழிகளை மூடினால் கனவாய்
வருகிறாய்! விழிகளைத்
திறந்தால் பார்க்கும் பொருளில்
எல்லாம் தென்படுகின்றாய்!

குளிரால் நடுங்கிக் கொண்டிருந்த சூரியகாந்தியை இரண்டு போர்வைகளைக் கொண்டு போர்த்தினாள் கனகம். அதையும் மீறி அவளது உடல் நடுங்க... தனது புடவைகள் இரண்டை எடுத்து அதை நான்காய் மடித்துப் போர்த்தி விட்டாள். அப்போதும் நடுக்கம் நின்றபாடில்லை.

"மாரியாத்தா! எம்புள்ளைக்கு என்ன ஆச்சோ தெரியலையே! எவ ஆவி வந்து சேட்டை பண்ணுதோ? மகமாயி! எம் புள்ளைய காப்பாத்தம்மா!" - என்றவாறே சாமி படத்தை வணங்கி, கைநிறையத் திருநீறை அள்ளிச் சூரியகாந்தியின் உச்சந்தலையில் சிறிது தூவி விட்டு, நெற்றியில் பட்டையாய்ப் பூசி விட்டாள்.

செண்பகமும் கதிரேசனும் அக்காவின் நடுக்கத்தையும் முனகலையும் கண்டு பயந்து போய்ச்

சுவரோரமாய் ஒண்டிக் கொண்டிருக்க, முருகேசன் ஆத்திரமாய்க் கத்திக் கொண்டிருந்தான்.

"இவளுக்கு ஏன் இந்த வேண்டாத வேலை? எல்லாரும் பேசாம பாதையைப் பார்த்து நடந்தாங்கல்ல... இவளுக்கு மட்டும் ஏன் கண்ணு மேயணும்? கண்டதைப் பார்க்கணும். இப்படிக் கிடந்து அவஸ்தைப் படணும்?"

"என்னய்யா நீ? ஏற்கெனவே புள்ள பயந்து போயிருக்கா. இதுல..."

"அட சும்மா இரும்மா. சுப்பு, தேனம்மா பாட்டி எல்லாரும் கீழே வாடின்னு கூப்பிட்டதுக்குப் பொணத்தை நேர்ல பார்க்காம நகர மாட்டேன்னு சட்டமா சொன் னாளாம். அப்ப இந்தப் பயம் எங்கே போச்சாம்?"

"என்ன?"

"ம்... இப்பத்தான் தேனம்மா பாட்டி சொல்லிச்சு. பொணத்தை நேர்ல பார்த்து இவதான் அடையாளமும் சொல்லியிருக்கா. இவளுக்கு எதுக்கு இந்த சி.ஐ.டி. வேலை?"

வெடுக்கென நிமிர்ந்தாள் சூரியகாந்தி. "அண்ணே! நான் இப்ப என்ன குற்றம் பண்ணிட்டேன்னு இப்படிக் குதிக்கிற? பொணமாக் கிடந்தவ என் ஃப்ரெண்ட். அவளை அடையாளம் காட்டினது எப்படித் தப்பாகும்?"

"தப்புதான்டி. பெத்தவளே மகளைக் காணோம்னு தெரிஞ்சும் யார்கிட்டயும் மூச்சு விடாம இருந்திருக்கா. எதுக்கு? நம்ம மானம் கெட்டுப் போயிடக் கூடாதுன்னு.



நீயானா... நம்ம தெரு மானத்தையே கூறு போட்டு வித்திட்டு வந்திருக்கே."

"எய்யா! என்னய்யா சொல்ற?"

"ஆமாம்மா. செவ்வந்தி ஒன்னும் தானா விழலை. மனசுல ஏதோ கண்ட கருமத்தை நினைச்சிகிட்டு, இந்தக் காரியத்தைப் பண்ணியிருக்கா. மேலத் தெரு நாய்கூட ஓடிப் போயிட்டாளோ என்னவோன்னு நினைச்சிப் பயந்துதான் சுப்பம்மா வெளியே சொல்லாம இருந்திருக்கா.

"இவ மட்டும் பொணத்தைப் பார்க்காமப் போயிருந்தா... அது மீனுக்கு இரையாகி யிருக்கும். விஷயம் வெளியே தெரியாமப் போயிருக்கும். இப்பப் போலீஸ் வந்து அக்கு வேறு ஆணி வேறா விசாரிக்குது."

"ஐயோ! ஊர் மானம் போயிடுமே!"

"அதான்... நாங்கள்லாம் சேர்ந்து அவ தற்கொலை செய்யலை. வேலியோரமா ஒதுங்கப் போனப்போ தவறித் தண்ணியில விழுந்திடுச்சின்னு சொல்லி ஒரு வழியா கேஸை முடிச்சாச்சு."

"அண்ணே! அவ ஒன்னும் தவறி விழலை!"

"வாயை மூடு. இனி இதைப் பற்றி ஒரு வார்த்தை பேசக் கூடாது. மேல ஊர்லயும் ஒரு இழவு விழுந்திருக்கு. அவனுங்க ரொம்ப சாமர்த்தியமா கட்ட வேலை செய்திட்டு இருக்கும்போது தவறி விழுந்திட்டான்னு கேஸைத் திருப்பிட்டானுங்க.

"நீ எதையாவது உளறி இரண்டு சாவையும் சம்பந்தப்படுத்திக் குடும்பத்தைக் கேவலப்படுத்திடாதே. இந்த ஊர்ல ஒரு வீட்டுககு ஒரு அவமானம்ன்னா அது எல்லாருக்கும்தான். புரியுதா?"

"அண்ணே! செவ்வந்தி என்னண்ணே பாவம் பண்ணினா?"

"பாவம்தான். நமக்கு ஆகாதவனுங்க கூட என்ன பிரியம் வேண்டிக் கிடக்கு? ஏன் தேவையில்லாத ஆசையை வளர்க்கணும்? ஏன் இப்படி அநாதையா சாகணும்?"

"அப்போ... நான் யார் மேலயும் ஆசைப்பட்டா இப்படித்தான் சாக விடுவியா?"

"நானே கண்டம் துண்டமா வெட்டிக் கொன்னு டுவேன்."

"அ...ண்...ணே!" - திகிலாய் அண்ணனை வெறித்தாள்.

"இதோ பாரு! நீ ஒரு பேச்சுக்குக் கேட்டியா? இல்ல... உன் மனசில அப்படி ஒரு எண்ணத்தை வெச்சுகிட்டு கேட்டியான்னு எனக்குத் தெரியாது. ஆனா தப்பித் தவறிக் கூட இந்த மாதிரி எண்ணம் வந்திடக் கூடாது."

"அண்ணே!"

"ஒழுங்கா வேலைக்குப் போனோமா வீட்டுக்கு வந்தோமான்னு இருக்கணும். அதை விட்டுட்டு வேற ஏதாவது கேள்விப்பட்டேன். மவளே! அதோட உன் சோலி முடிஞ்சது."



"ஏன்யா! நம்ம புள்ளையப் பத்தி நமக்குத் தெரியாதா? அவ அப்படியெல்லாம் பண்ண மாட்டா."

"சொல்லி வையும்மா... உன் பொண்ணுகிட்ட. இப்பச் செத்தாளே, அவளும் இவளும்தான் ஒன்னாவே திரிவாளுங்களாம். அவ புத்தி இவளுக்கும் வந்திடாம...." - முருகேசன் எச்சரிக்க, சூரியகாந்திக்கு அழுவதா சிரிப்பதா என்று தெரியவில்லை.

இவர்களே ஊரைக் கூட்டிச் சீர் செய்தவன்தான் மணவாளன் என்பார்கள். பிறகு ஏதாவது பிரச்சனை என்றால் சண்டை போட்டு ஊரை ரெண்டாக்கி விட்டு இப்போது மனதை மாற்றிக் கொள் என்றால் எப்படி மாற்றுவது? இதென்ன உடம்பை மறைக்கும் துணியா? நினைத்தவுடன் கழற்றி எறிவதற்கு?

உடம்போடும் உயிரோடும் இணைந்த உறவல்லவா? ஊர் விட்டோ, ஜாதி விட்டோ, மதம் விட்டோ யாருடனும் பழகவில்லையே... எல்லாம் ஒரே குடும்பமாய் வாழ்ந்தவர்கள். மாமன், மச்சான், அக்காள், தம்பி எனப் பழகிக் களித்தவர்கள். திடீரென ஏற்பட்ட பிளவால் எல்லாம் மாறிப் போயிற்று.

ஆனால் மனம்! அது எப்படி மாறும்?

அதை மாற்ற இயலாமல்தானே செவ்வந்தி உயிரை விட்டாள். அதே நாளில் கண்ணப்பனும் உயிரை விட்டான் என்றதைக் கேள்வியுற்றதும் துளி நிம்மதி பரவியது, உண்மைதான்.

ஆனால்... இது எத்தனை பெரிய பாவம்! வாழ வேண்டிய வயதில் பாடையில் அனுப்பி விட்டு அதற்காக வருந்தாமல் ஊர்க் கௌரவம்தான் பெரிது எனப் பரிதாபகரமான மரணத்தை விபத்து எனச் செய்தியாக்கி விட்டார்களே!

இந்த மனித நேயமற்ற மனிதர்களுக்காகவா... இவர்கள் அடித்துக் கொண்டு சாகக் கூடாது என்பதற்காகவா அந்த இரண்டு உயிர்கள் தங்களை மாய்த்துக் கொண்டன? நாளை இதே நிலைதான் தனக்கும் ஆதவனுக்கும் வருமா?

மனிதர்களை அவர்களது உணர்வுகளைப் புரிந்து கொள்ளாத இந்தக் காட்டுமிராண்டிகளுக்காக நாங்கள் உயிரை விட வேண்டுமா? அப்படி உயிரை விட்டால் மட்டும் இவர்கள் பகை மறந்து உறவாடி விடுவார்களா? அதையும் விபத்தென்று சொல்லி அடுத்த வேலையில் இறங்கி விடுவர்.

கூடாது. என்ன நடந்தாலும் சரி. செவ்வந்தியைப் போல் பயந்து உயிரை விடக் கூடாது. இனியும் இந்த முட்டாள்களைக் கண்டு பயந்து நடுங்கக் கூடாது. ஆதவனிடம் பேச வேண்டும். தன் மனத்தைச் சொல்ல வேண்டும். தங்களது எதிர்காலத்தைப் பற்றி முடிவெடுக்க வேண்டும். இனியும் தாமதிக்கக் கூடாது.

"சொல்றது காதுல விழுதா இல்லையா?" - முருகேசன் அதட்டியதும் திடுக்கென நிமிர்ந்தாள்.

"எ...ன்...ன?"



"வேலைக்குப் போற இடத்தில யார் கூடவும் பேசினேன்னு கேள்விப்பட்டேன்னு வையி..."

"ஏம்ப்பா! இவ்வளவு பேசுறவன் எதுக்காக இவளை வேலைக்கு அனுப்புற? சூரிக்கும்தான் வயசு கூடுதே. பேசாம ஒரு மாப்பிள்ளை பார்த்துக் கட்டி வெச்சிட்டா என்ன?" - கனகம் சூசகமாய்த் தன் மனக்கிடக்கையை வெளிப்படுத்தத் திடுக்கிட்டாள் சூரியகாந்தி.

கலக்கமாய் அண்ணனை ஏறிட... அவன் தடுமாறுவது தெரிந்தது. ஏளனமாய்ப் புன்னகைத்தாள்.

அவளுக்குத் தெரியும் அண்ணன் ஒரு சுயநலவாதி என்று. பாவம்! அம்மாவிற்குத்தான் எதுவும் புரியவில்லை.

"என்னய்யா! ஒன்னுமே பேச மாட்டேங்கிற? தங்கச்சிக்கு ஒரு மாப்பிள்ளை பாருய்யா. சட்டுப் புட்டுன்னு கல்யாணத்தைப் பண்ணி வெச்சிட்டா... இப்படிக் கண்டதையும் நினைச்சிப் பயப்படாம இருக்கலாமில்ல?"

"ஏம்மா! நீ எதையாவது யோசிச்சுத்தான் பேசுறியா?"

"ஏன்யா?"

"கல்யாணம்ன்னா என்ன பத்து ரூபா, இருபது ரூபா செலவோட முடியுற வேலையா?"

"எப்படியும் செய்துதானய்யா ஆகணும்!"

"செய்யலாம் செய்யலாம். இப்ப என்ன அவசரம்?"

"வர்ற பங்குனியோட சூரிக்கு இருபத்தைஞ்சு வயசு முடியுதுய்யா. அப்பா இருந்தா எப்பவோ இவ

கல்யாணத்தை நடத்தியிருப்பாக. வீட்டுக்கு மூத்த புள்ளை நீ. இனி நீதானய்யா எல்லாம் செய்யணும்."

"ஏம்மா! நான் என்ன சும்மாவா இருக்கேன்? சம்பாதிக்கிற பணத்தை அப்படியே சீட்டுக் கட்டிட்டு இருக்கேன். இங்கேயிருந்து குருவிக்குளம் போயிட்டு வர்றதுக்கே மாசம் ஆயிரம் ரூபா ஆயிடுது."

"சீட்டு எப்பய்யா முடியும்?"

"ஏன்... ஏன் கேட்கிற?"

"இல்ல... சீட்டு முடிஞ்சதும் அந்தப் பணத்தை வெச்சு இவளுக்கு..."

"அம்மா! நீ பாட்டுக்கு ஏதாவது கற்பனை பண்ணிக்காதே. அதை வெச்சு நான் நிறைய பிளான் போட்டு வெச்சிருக்கேன்."

"என்னய்யா சொல்ற?"

"அதையெல்லாம் இப்பவே சொல்ல முடியாது. நேரம் வரும்போது சொல்றேன். இப்ப இவளை ஒழுங்கா வேலைக்குப் போயிட்டு வரச் சொல்லு. அது போதும்!" - என்றவாறு வெளியேறியவனை வெறித்தாள் சூரியகாந்தி.

"சூரி! என்னடி இவன் இப்படி மொட்டையாச் சொல்லிட்டுப் போறான். சீட்டுப் பணத்தை வெச்சு உன் கல்யாணத்தை முடிப்பான்னு நினைச்சேன்."

"அம்மா! அண்ணனை நம்பி எந்தக் கனவும் காணாதே. ஏமாந்திடுவ."

"சூரி!"



"நீ ரொம்ப ஏமாளிம்மா. உலகமே புரியாம இருக்கியே!"

"என்னடி சொல்ற?"

"பெரிய கம்பெனியில எம் புள்ளைக்கு வேலை கிடைச்சிருச்சுன்னு அப்பா கண்டவன் கிட்ட எல்லாம் கடன் வாங்கி இவனை வேலையில சேர்த்தாரே. வேலையில சேர்ந்து நாலு வருஷம் ஆச்சு. ஒரு நாளாவது அந்தக் கடனை அடைக்கப் பத்துப் பைசா தந்தானா?"

"அதான்... சீட்டுப் போடுறானாமே?"

"அவன் ஒன்னும் கடனை அடைக்கச் சீட்டுப் போடலைம்மா."

"பிறகு?"

"கொஞ்ச நாள் பொறு. எல்லாம் உனக்கே தெரியும்."

"சூரி?"

"பயப்படாதேம்மா. உம் பிள்ளை பணத்தைப் பாதுகாப்பாத்தான் சேர்க்கிறான். ஆனா அது யாரோட பாதுகாப்புக்குன்னு உனக்குத் தானாவே தெரிய வரும். அதுவரைக்கும் உன் புள்ளைக்குத் தினமும் சுடச்சுடச் சாப்பாடு செய்து கொடு."

"என்னடி! ஒரு மாதிரி பேசுற?"

"அடப் போம்மா! கடைசி வரைக்கும் நாமதான் கஷ்டப்பட்டு உழைக்கணும். நம்ம வயித்துப்பாட்டை நாமதான் பார்த்துக்கணும். நமக்காக இல்லாட்டியும் இந்தச் சின்ன உசிருக்காகவாவது நாம உழைச்சித் தான் ஆகணும்."

"சூரி! நம்ம கஷ்டமெல்லாம் இன்னும் கொஞ்ச நாள்தான்டி. உன் அண்ணன் மட்டும் கடனை அடைச்சிட்டான்னா... அப்புறம் நம்ம மூனு பேரோட சம்பாத்தியமும் முழுசாக் கைக்கு வந்திடும். உனக்குச் சீக்கிரமே ஒரு கல்யாணத்தைப் பண்ணி வெச்சிட்டா..."

"அம்மா! இப்பத்தானே சொன்னேன். கனவு காணாதேன்னு..."

"ஏன்டி?"

"நாளைக்கு நடக்கிறதை நாளைக்குப் பார்த்துக்கலாம். போம்மா... போய் வேலையைப் பாரு!" - என்றவாறே தன்னைப் போர்த்தியிருந்த துணிகளை விலக்கியபடி எழுந்தாள்.

"ஏன் எழுந்திட்ட? படு. இன்னும் ஜுரம் குறையலையே!"

"அதெல்லாம் தானா போயிடும்மா. நான் போய்த் துளசியைப் பார்த்திட்டு வந்திடுறேன்."

"எதுக்குடி?"

"நாளைக்கு வேலைக்குப் போகும்போது குரல் கொடுன்னு சொல்லிட்டு வர்றேன்."

"சூரி! இந்த உடம்போட எப்படி வேலைக்குப் போவ?"

"போகணும்மா. வேலைக்குப் போனா என் உடம்பு சரியாயிடும்..." - என்றவள், தாயின் பதிலுக்கு நில்லாமல் கலைந்த தலைமுடியைக் கொண்டையாக்கியவாறே வீட்டை விட்டு வெளியே வந்தாள்.



துளசி வீட்டுப் படியை நோக்கி நடந்த பாதங்கள் சட்டென நின்றன. அவளது வீட்டை விட்டு மூன்று வீடு தள்ளித்தான் செவ்வந்தி வீடு இருந்தது. கண்கள் தானாய் அந்த வீட்டிற்குச் செல்ல... வெளித் திண்ணையில் தூணோடு சாய்ந்து அமர்ந்திருந்த உருவத்தைக் கண்டதும் அணைந்திருந்த கோபத் தீ மீண்டும் புகையத் துவங்கியது.

விடுவிடுவென நேராய் அந்த வீட்டை அடைந்தாள். தூணில் சாய்ந்திருந்த சுப்பம்மா மெல்ல விழிகளை உயர்த்தினாள். சற்று முன்வரை அழுது கொண்டிருந்ததன் அடையாளமாய் இமைகள் நனைந்திருந்தன. லேசாய்ச் சுருக்கம் விழுந்திருந்த கன்னம் இன்னும் ஈரமாய் இருந்தது.

"என்ன சுப்பாத்தா! அழுதியா?"

"சூரி! வா... ஆத்தா!"

"நான் கேட்டதுக்குப் பதில் சொல்லு. அழுதியாக்கும்...?" - கடுப்பாய்க் கேட்டதும் சுப்பம்மாவின் விழிகளில் மீண்டும் நீர் துளிர்த்தது.

"ஆமா! இப்ப எதுக்கு அழுற? சாகடிக்க இன்னொரு பிள்ளை இல்லையேன்னு அழறியா?" - சூரியின் கேள்வியில் திடுக்கிட்டாள்.

"ச்...சூ...ரி!"

"ச்சீ! நீயெல்லாம் ஒரு பொம்பளை? செவ்வந்தி ஒத்தப் புள்ளதானே உனக்கு? அந்த ஒத்தப் புள்ளையைக் கொன்னுட்டு இன்னும் உசுரோட இருக்கியே... நீயெல்லாம் ஒரு தாயா? உனக்குச் சாப்பாடு இறங்குதா? தூக்கம்

வருமா? நிம்மதியா ஒரு சொட்டுத் தண்ணி குடிக்க முடியுமா உன்னால?

"பாதகத்தி! என் செவ்வந்தி ஒன்னும் தானா ஏரியில குதிச்சிருக்க மாட்டாள். நீ.. நீதான்... நீதான் அவளைப் பிடிச்சித் தள்ளியிருப்ப! நீதானே கொன்னே? சொல்லு... நீதானே அவளைக் கொன்னே?" - வெறி வந்தவள் போல் சுப்பம்மாவின் கழுத்தைப் பற்றியவளை அக்கம் பக்கம் உள்ள பெண்கள் ஓடி வந்து விலக்கினர்.

"ஏ புள்ள சூரி! உனக்கென்ன பேயா பிடிச்சிருக்கு? அவளே பாவம்! ஒத்தப் புள்ளையை எமனுக்குக் கொடுத்திட்டு உடைஞ்சி போய் உட்கார்ந்திருக்கா. அவகிட்ட வந்து ரகளை பண்ணிட்டு இருக்கே. போ ஆத்தா... வீட்டுக்குப் போ."

"ஏய்... விடுங்கடி என்னை! வந்திட்டாளுங்க... பெரிசா பஞ்சாயத்துப் பண்ண. வாழ வேண்டிய ஒரு உசுரை முழுசாத் தின்னுட்டு உட்கார்ந்திருக்கா. இவளை நாலு கேள்வியாவது கேட்க வேண்டாமா?"

"கேளு ஆத்தா... கேளு. இந்தப் பாவியை என்ன வேணாக் கேளு!" - சுப்பம்மாள் சொல்ல... ஆத்திரமாய் மற்றவர்களை உதறி விட்டு முன்னே வந்தாள்.

"உம் பொண்ணு அப்படியென்ன தப்பா ஆசைப்பட்டுட்டா? வேற சாதிப் பயலையா நினைச்சா? அந்தப் பய உன் அண்ணன் மகன்தானே? எத்தனை பகையிருந்தாலும் சொந்தம் இல்லன்னு ஆகிடுமா?"



"ஆகிப் போச்சேம்மா! நான் என்ன பண்ணுவேன்? எவ்வளவோ சொல்லிப் பார்த்தேனே... பாவி மக காது கொடுத்துக் கேட்கலையே... என்னை அநாதையா விட்டுட்டுப் போயிட்டாளே. அப்படி என்ன பாவம் பண்ணினேன் நான்?

"அவ இரண்டு வயசுக் குழந்தையா இருந்தப்பவே அவ அப்பனைப் பறி கொடுத்திட்டு அன்னிலேருந்து இவளுக்காகத்தானே இந்த உசுரைச் சுமந்திட்டு இருக்கேன். இல்லன்னா... நானும் எப்பவோ எம் புருஷன் கூடப் போயிருப்பேனே... எத்தனை கஷ்டத்தோடயும் வறுமையோடும் போராடி அவளை வளர்த்தேனே...!

"சிறு வயசிலேயே புருஷனைத் தொலைச்சவ. தொட்டா மசிஞ்சிடுவான்னு எத்தனை பய ராத்திரி நேரம் கதவைத் தட்டியிருக்கான். வேலை செய்யப் போன இடத்தில எத்தனை பேர் என்னை உரசிட்டுப் போவானுங்க. இதையெல்லாம் யாருக்காகத் தாங்கினேன்? சொல்லு ஆத்தா! யாருக்காகத் தாங்கினேன்?

"இவளுக்காகத்தானே! இவளுக்காகத்தானே... நெருப்பு மேல நின்னேன். எத்தனை கஷ்டம் வந்தாலும் எம் புள்ளைய அநாதையா தவிக்க விட்டுட்டுப் போயிடக் கூடாதுன்னு எத்தனை நாள் கண்ணீரோடு போராடி யிருப்பேன்!

"அதை அவ நினைச்சிப் பார்த்தாளா? சொல்லு! பிள்ளைகளுக்காக நாங்க உசுரைக் கொடுத்து உழைக்கிறோம். பாடுபடுறோம். ஆனா பிள்ளைங்க அதை நினைச்சுப் பார்க்கீகளா? எங்களை அழ

வெச்சிட்டுப் போயிடுறீகளே?" - சுப்பம்மாள் தலையில் அடித்துக் கொண்டு அழ... விக்கித்துப் போனாள் சூரியகாந்தி.

"அந்தக் காலத்தில இருந்து இந்தக் காலம்வரை பெத்தவங்கதான் எல்லா விஷயத்திலேயும் விட்டுக் கொடுக்கிறோம். பிள்ளைக மனசு கல்லாத்தான் இருக்கு."

"இந்தா! சும்மா அப்படியெல்லாம் சொல்லாதே."

"வேற என்ன சொல்றது? நாலு நாளா பார்த்துப் பழகினவன் பெரிசுன்னு இத்தனை வருஷமா பாடுபட்டு வளர்த்த என்னைத் தவிக்க விட்டுட்டு உசுரைப் போக்கிட்டாளே... அவ மனசு கல்லாத்தானே போச்சு."

"அது... அது அவ மனசு எவ்வளவு காயம் பட்டுப் போச்சோ? அதை..."

"ஏன்? ஏன் காயம் படணும்? நம்ம ஊர் சட்ட திட்டம் தெரிஞ்சும்... நடக்கவே நடக்காதுன்னு தெரிஞ்சே... ஏன் ஆசைப்படணும்? பெத்தவங்களைக் கூனிக் குறுகிக் குனிய வைக்கவா? இப்படி நடைபிணமா ஆக்கவா? அப்படி ஒரு கருமத்தை ஏன் நினைக்கணும்?" - சுப்பம்மாள் ஆவேசமாய்க் கேட்க... பேச்சற்றுப் போனவளாய் உறைந்து போனாள்.

"உங்களை வளர்த்து ஆளாக்க நாங்க என்ன பாடு படுகிறோம்? எங்களுக்குத் தெரியாதா உங்களை எப்படி வாழ வைக்கணும்னு? அது வரைக்கும் ஏன் உங்களுக்குப் பொறுமையில்லாமப் போயிடுது. ஒரு ஈ எறும்பு மொய்க்காம பொத்திப் பொத்தி வளர்த்தேனே...



"என்னைப் பத்தி ஒரு கணமாவது நினைச்சாளா? இப்படிப் பொசுக்குன்னு போயிட்டாளே. இந்தக் கிழவி தனிமையில கிடந்து மூச்சு முட்டிச் செத்திடுவாளேன்னு நினைச்சுப் பார்த்தாளா? இந்தத் தாய் என்ன பண்ணுவா?

"ஊருக்காகப் பயப்படுவாளா? மானம் மரியாதைக்குக் கட்டுப்படுவாளா? பெத்த பிள்ளையை எப்படிக் கரையேத்தணும்னுதானே யோசிப்பாள்? நானும் அப்படித்தானே நினைச்சேன். இது பெத்தவளோட கடமைதானே? இதை யெல்லாம் நினைக்காமப் போயிட்டாளே!

"ஆத்தா! உங்களுக்கெல்லாம்... என்னை மாதிரிப் பெத்தவளோட வேதனை இப்பப் புரியாது. நீங்களும் நாளைக்குக் குழந்தைகளைப் பெத்து வளர்த்து ஆளாக்கி நிக்கும்போதுதான் தெரியும். இப்பப் புரியாது. புரியவே புரியாது!" - மீண்டும் தலையில் அடித்துக் கொண்டு சுப்பம்மாள் அழுது துடிக்க... இருண்ட முகத்துடன் பின்னோக்கி நகர்ந்தாள் சூரியகாந்தி.

கூடியிருந்த பெண்கள் சுப்பம்மாவை அணைத்து ஆறுதல் சொல்ல... கனத்த மனதுடன் மெல்ல விலகித் தன் வீட்டை நோக்கி நடக்க ஆரம்பித்தாள்.

சுப்பம்மாளின் ஓலம் காதைப் பிளந்தது. ஒரு கணம் நின்று திரும்பிப் பார்த்தாள்.

தலைவிரி கோலமாய் அவள் அழுது புரண்டு கொண்டிருக்க... அந்த உருவம் தன் தாயாய்த் தெரிந்தது. சட்டெனத் தலையை உதறிக் கொண்டாள். கூடாது. என்

தாயை எந்த நிலையிலும் இப்படி அழ விடக் கூடாது. தாயிடம் எதையும் மறைக்கவும் கூடாது. தன் மனதைத் தாயிடம் சொல்லிவிட வேண்டும்.

அதோடு எந்தச் சூழலிலும் செவ்வந்தி எடுத்த முடிவை எடுக்கவே கூடாது... என்ற வைராக்கியத்தோடு வீட்டை நெருங்கினாள் சூரியகாந்தி.

# 7



பூக்களாக இருக்காதே!
உதிர்ந்து விடுவாய் - செடியாய்
இரு! அப்போதுதான்
பூத்துக் கொண்டே இருப்பாய்!

**வி**டிந்ததில் இருந்தே பரபரப்பாய் இயங்கிக் கொண்டிருந்த கனகத்தை நெருங்கினாள் சூரியகாந்தி. அடுப்பில் ரசம் மணம் பரப்பிக் கொண்டிருக்க... அம்மியில் துவையல் அரைத்துக் கொண்டிருந்தாள் கனகம்.

"யம்மோவ்!"

"ம்..."

"வேலையா இருக்கியா?"

"என்னடி கேள்வி இது? பார்த்தா எப்படித் தெரியுது?"

"இல்ல... உன்கிட்ட கொஞ்சம் பேசணும்."



"சொல்லு!"

"இப்படி வேலை பார்த்திட்டே கேட்டால் எப்படிச் சொல்றதாம்?"

"காது தானே கேட்கும். சும்மா சொல்லு!" - பேச்சு பேச்சாய் இருந்தாலும் வேலையில் கண்ணாய் இருந்தாள் கனகம்.

அம்மிக் கல்லை இழுத்துத் தேய்த்து அரைத்ததில் மூச்சு வாங்கியது.

"யம்மோவ்! முதல்ல நமக்கு ஒரு மிக்ஸி வாங்கிடணும்."

"இதைச் சொல்லத்தான் வந்தியா? போய்... தங்கச்சிக்குச் சடையைப் பின்னு."

"அதெல்லாம் பின்னிட்டேம்மா. இது வேற விஷயம்."

"சொல்லு!"

"அம்மா! நீ என்னம்மா... எப்ப பார்த்தாலும் வேலை செய்திட்டே இருக்க!"

"என்னடி ஆச்சு உனக்கு? காலங்கார்த்தால வேலை செய்யாம காலாட்டிட்டு உட்காரச் சொல்றியா?"

"இல்லம்மா. ராத்திரியாவது பேசலாம்னு பார்த்தேன். அப்பவும் வேலைதான் செய்திட்டு இருக்க. பகல்ல நான் ஒரு பக்கம், நீ ஒரு பக்கம் வேலைக்குப் போயிடுறோம். பிறகு எப்பத்தான் உன்கிட்ட பேசுறதாம்?" - என்ற மகளை வியப்பாய்ப் பார்த்தாள் கனகம்.

"சூரி! அப்படி என்கிட்ட என்ன பேசணும்?"

"நிறையப் பேசணும்மா. மனசு விட்டுப் பேசணும். அம்மா மாதிரி ஒரு சிறந்த வழிகாட்டி கிடையாதுன்னு தாத்தா அடிக்கடி சொல்வாகல்ல? அதான் உன்கிட்ட பேசணும்னு சொல்றேன்."

"எதைப் பத்திப் பேசணும்?"

"நம்மைப் பத்திதான்."

"நம்மைப் பத்தி என்ன பேசப் போற?"

"நிறைய இருக்கும்மா. உன்கிட்ட பேச நேரம்தான் இல்லை..." - என்ற மகளைக் கனிவுடன் பார்த்தாள்.

"சரி. ஞாயிற்றுக்கிழமை லீவுதானே! அப்ப என்கூட நாட்டார் வீட்டுத் தோட்டத்துக்கு வா. தண்ணீர் பாய்ச்சிட்டே பேசலாம்."

"அப்பவும் நீ வேலைதானே செய்திட்டு இருப்ப?"

"இல்லம்மா! சொட்டு நீர்க் குழாயைத் திருப்பி விட்டுட்டு நாம உட்கார்ந்து பேசலாம். நல்ல குளுமையான இடம். அமைதியாவும் இருக்கும்."

"அப்ப சரி. நான் வேலைக்குப் போவட்டுமா?"

"இருத்தா. ரசத்தை இறக்கி ஆற வை. நான் துவையலை வழிச்சிடுறேன்..." - என்றவாறு அம்மிக் குழவியைத் தூக்கி நிறுத்தியவாறே மைய அரைத்திருந்த துவையலை லாவகமாய்ச் சேகரித்தாள்.

"யம்மோவ்! ரசம் சும்மா கும்முன்னு மணக்குதே!"



"ரெண்டு நாளா சுரம் கண்டு படுத்திட்டியே. உனக்காகத்தான் மிளகு ரசம் வெச்சேன். வேர்க்கடலைத் துவையலும் ரசமும் எடுத்து வெச்சுக்க. சாதம் நல்லாக் குழைவா வடிச்சிருக்கேன். வாய் கசக்குதேன்னு சாப்பிடாம வந்திடாதே. ரசம் விட்டுப் பிசைஞ்சு குடிச்சிடு. சரியா?" - அக்கறையாய்ச் சொன்ன தாயை மனமுருகப் பார்த்தாள்.

'இதுதான் அம்மா! தன் உடம்பைப் பற்றியோ வலியைப் பற்றியோ சிந்திக்காத அம்மா. சதா சர்வ காலமும் பிள்ளைகளை அவர்களது உடல் நலனைப் பேணிப் பாதுகாக்கும் அம்மா! அம்மாவைப் போல் தெய்வம் வேறில்லை. சுப்பாத்தா கூட செவ்வந்தியை இப்படித்தான் கண்ணும் கருத்துமாய் வளர்த்திருப்பாள்.

ஆனால் இன்று? சுப்பாத்தா அழுது புரண்ட காட்சி கண் முன்னே வந்தது. நெஞ்சம் கனத்தது. செவ்வந்தி கொஞ்சம் பொறுமையாய் இருந்திருக்கலாமோ? பெற்றவளை இப்படித் தவிக்க விட்டது பெரிய பாவமல்லவா?'

"என்னாத்தா! இப்படியே உட்கார்ந்திட்டு இருக்க?" - அன்னையின் கேள்வியில் புன்னகைத்தாள் சூரியகாந்தி.

"காலம் பூரா உன்னைப் பார்த்திட்டே இருக்கணும்னு தோணுதும்மா..."

"சரிதான். இன்னிக்கு எம் புள்ளைக்கு என்னவோ ஆயிடுச்சு."

"சூரி! வண்டி வர்ற நேரமாச்சுடி. கிளம்பிட்டியா?" - துளசியின் குரலில் இருவரும் பரபரப்பாயினர். சூரியகாந்தி

தாய் கொடுத்த கஞ்சியை மடமடவெனக் குடிக்க... கனகம் மகளுக்கு மதியச் சாப்பாட்டை எடுத்து வைத்தாள்.

"கஞ்சி போதும்மா. நான் கிளம்பட்டுமா?"

"பார்த்துப் போங்க ஆத்தா. மேலுக்கு முடியலைன்னா வூட்டுக்கு வந்திடு. காய்ச்சல் திரும்பிடாம... துளசி! சூரியைப் பார்த்துக்கம்மா..."

"நான் பார்த்துக்கிறேன் பெரியம்மா. வரட்டுமா?"

"ம்..." - புன்னகையோடு தலையசைத்த அன்னையிடம் விடை பெற்று வழக்கமாய் வண்டி வந்து நிற்கும் அரச மரத்தடியை நோக்கிச் சென்றனர்.

"சூரி! நேத்து நம்ம தெருவில பெரிய ரகளையே பண்ணிட்டியாமே! ஏன்டி?"

"உனக்கு யார் சொன்னது?"

"அதான் தெரு முழுக்கப் பேசுதே. உனக்கு அந்தச் செவ்வந்தியோட ஆவிதான் பிடிச்சிருக்குன்னு கூடப் பேசிக்கிறாங்க."

"முட்டாக் கழுதைக!" - விரக்தியாய்ச் சிரித்தாள் சூரியகாந்தி.

"உனக்கு ஏன்டி இந்த வேண்டாத வேலையெல்லாம்?"

"எதை வேண்டாத வேலை என்கிறாய்?"

"ம்... சுப்பம்மாகிட்ட போய்ச் சண்டை போட்டியே! அதைக் கேட்கிறேன்!" - துளசி சற்றுக் கோபமாய்க் கேட்க, உச் கொட்டினாள்.



"தப்புதான்டி. ஏதோ ஒரு வேகத்துல சட்டுன்னு பேசிட்டேன். ஆனா... சுப்பாத்தா பேசினதைக் கேட்டதும் மனசு... ஒரு மாதிரி பாரமா ஆயிடுச்சு துளசி... ம்ப்ச்! சுப்பாத்தாவும் பாவம்தான் இல்ல?"

"சூரி!"

"ஆமாண்டி. நான் என் கோணத்தில இருந்து பார்க்கிறேன். பெத்தவ மனசு என்ன பாடுபடும்னு யோசிக்காம இருந்திட்டேன்."

"அப்போ... செவ்வந்தி பண்ணினது தப்புன்றியா?"

"அப்படின்னு சொல்லலை. ஆனா... பெத்தவளையும் நினைச்சிருக்கணும். இப்ப ஒத்தையாக் கிடந்து தவிக்குதே."

"இதே பாவத்தைத்தானே நீயும் செய்யப் போற சூரி?" - துளசியின் கேள்வியில் சூரியகாந்தியின் நடை தடைப்பட்டது. நின்று தோழியைத் திகைப்பாய்ப் பார்த்தாள்.

"து...ள....சி...!"

"சூரி! நான் சொல்றேன்னு தப்பா எடுத்துக்காதடி. உன் நல்லதுக்குத்தான் சொல்றேன். இது... இதெல்லாம் வேணாம்டி."

"எதெல்லாம்?"

"ஆ...தவன்!"

"துளசி!"

"கோபப்படாதே சூரி! நீயே கொஞ்சம் யோசிச்சிப் பார். நம்ம தெருக்காரங்க நிச்சயமா உங்களைச் சேர

விட மாட்டாங்க. பெத்தவங்க சம்மதமில்லாம நீங்க வாழணும்னு முடிவு பண்ணினா ரெண்டு பேரையும் வெட்டிப் புதைச்சிடுவாங்க.

"இந்தக் கொலைவெறி பிடிச்ச கூட்டத்தில மனசுல வேண்டாத எண்ணத்தை வளர்த்துகிட்டு... ஏன் சாகணும்? இன்னிக்கு சுப்பாத்தா அழுற மாதிரி நாளைக்கு உன் அம்மா அழணுமா?"

"இல்ல... இல்ல. அப்படி யெல்லாம் எதுவும் நடக்காது."

"நடக்கும் சூரி. நிச்சயமா நடக்கும்."

"இல்லை. என் ஆதவன் மேல எனக்கு நம்பிக்கை இருக்கு."

"அவர் என்ன பண்ணிடுவார்ன்னு நம்புற?"

"ஊரைக் கூட்டி எங்களைப் பெத்தவங்க சம்மதத்தோட என்னைக் கல்யாணம் பண்ணுவார்."

"ஹும்... இதெல்லாம் உன் கனவிலதான் நடக்கும்."

"ஏன்?"

"பின்னே? ஏற்கெனவே ரெண்டு தெருவும் கீரியும் பாம்புமா சீறிக்கிட்டு இருக்கு. இதுல இப்பத்தான் ரெண்டு இழவு விழுந்திருக்கு. என்னதான் மூடி மறைச்சாலும் இந்நேரத்துக்கு அந்தப் பயலுக உஷாராகி இருப்பாங்க.

"சும்மாவே ஆதவனோட அத்தை மகன் கண்ணில விளக்கெண்ணெய் விட்டுட்டு உங்களைக் கண்காணிக் கிறான். கொஞ்சம் சந்தேகம் வந்தாலும் போச்சு. அப்புறம் என்ன நடக்குமோ?"



"துளசி! இப்ப ஏன் இப்படி பயமுறுத்துற?"

"நடக்கப் போறதைச் சொல்றேன் சூரி. ஏற்கெனவே அவனோட அத்தை மக அவனுக்குன்னே வீட்டோட இருக்கா. அவளை விட்டுட்டு உன்னை எப்படி அந்த வீட்டில உள்ளவங்க ஏத்துக்குவாங்க?"

"துளசி?" - சூரியகாந்தியின் முகம் பயத்தில் வெளிறியது.

"இத்தனை தடைகளை மீறி நீங்க எப்படி ஒன்னு சேர முடியும் சூரி? நீயே யோசிச்சிப் பாரு..."

"புரியுது துளசி. நானும் இதையெல்லாம் மறக்கலை. ஆனா... நான் ஒன்னும் இன்னிக்கோ நேத்தோ ஆதவனை விரும்பலையே... சின்ன வயசிலயே இவன்தான் கட்டிக்கப் போறவன்னு சொல்லி... என் மனசில பதிச்ச உருவத்தை இனிமே என்னால எப்படி அழிக்க முடியும்?

"இந்த உடம்புல உசிர் இருக்கிற வரைக்கும் அது முடியாது. நான் ஒன்னும் யாருக்கோ நிச்சயித்த ஒருவனை விரும்பவில்லையே! ஆதவன் என் ஒன்றுவிட்ட மாமனின் மகன். எனக்காக ஊர் கூட்டிச் சீர் செய்தவன். நம்ம இனத்தில் சீர் செய்தவன்தான் மணமகன் என்று தெரியாதா, உனக்கு?"

"அது தெரியும் சூரி. ஆனா... இதெல்லாம் இப்போ மாறிப் போச்சே! இந்த உறவுமுறையெல்லாம் இப்போ அறுந்து போச்சே!"

"அதுக்காக எங்க நேசத்தையும் அறுக்கச் சொல்றியா? இது எங்க உசிரோட கலந்த உறவு துளசி. இதை அறுத்தா இந்த உசிரு போயிடும்!" - கண்களில் நீர் மின்னச் சொன்னவளை வேதனையாய்ப் பார்த்தாள் துளசி.

"இது வளர்ந்தாலும் உசிரைத்தானே பறிக்கும்?"

"இல்ல... இனிமேலும் நம்ம ஊர்ல இப்படித் தற்கொலைகள் நடக்காது. பகையும் வளராது. எங்க கல்யாணம் மூலமா நம்ம ஊர் ஒன்னாச் சேர்ந்திடும்!" - உறுதியாய்ச் சொன்னாள்.

"என்ன? ஊரு... ஒன்னாச் சேருமா? நடக்கிற காரியமா?"

"நடக்கும். ஊர் மொத்தமும் கூடி எங்க கல்யாணத்தை நடத்தி வைப்பதை நீ பார்க்கத்தான் போகிறாய்."

"சூரி! என்னடி? எந்த தைரியத்தில இவ்வளவு உறுதியாச் சொல்ற?"

"ஆமா! தைரியம்தான். நேற்று முழுக்க யோசிச்சு எடுத்த தைரியமான முடிவு. இத்தனை நாளா விலகி நின்னே நேசிச்ச நாங்க இன்னிக்கு முக்கியமான முடிவுகளை ஒன்னா உட்கார்ந்து பேசி எடுக்கப் போறோம்."

"என்ன?"

"ஆமா! செவ்வந்தியோட சேர்த்து நம்ம ஊர்ல மூனு ஜோடி உசிர் போயிருக்கு. இனியும் இதைத்



தொடர்கதையா வளர விடக்கூடாது. அதுக்கான தீர்வை இன்னிக்கு நாங்க எடுத்தே ஆகணும்."

"சூரி!"

"துளசி! நான் இன்னிக்கு ஆதவனோட பேசியே ஆகணும்."

"எ...எப்படி? எப்படி முடியும்?"

"நீதான் உதவி செய்யணும்."

"நானா?"

"ஆமா. இன்னிக்கு மதியம் சாப்பாட்டு வேளையில..." - சூரியகாந்தி சொல்லத் துவங்க... வண்டியின் நீண்ட ஹாரன் காதைப் பிளந்தது.

"ஏய் சூரி! நடு ரோட்ல நின்னு என்ன பேச்சு? ஓடியா! வண்டி கிளம்பப் போகுது!" - தேனம்மாள் குரல் கொடுத்துக் கொண்டே வண்டியில் ஏற... இருவரும் வேகமாய் வண்டியை நோக்கி ஓடினர்.

"துளசி! வண்டியில எதுவும் பேசிக்க வேண்டாம். பிறகு பேசுவோம்."

"சரி!" - இருவரும் ஏறி அமர்ந்ததும் வண்டி புறப்பட்டது.

"ஏன் ஆத்தா சூரி! உடம்புக்கு இப்ப தேவலையா?"

"ம்... ம்..."

"முகமே சரியில்லையே! இன்னும் ரெண்டு நாள் ஓய்வெடுக்க வேண்டியதுதானே?"

"ஓய்வெடுத்தா நீ சாப்பாடு போடுவியா?"

"ஏன் ஆத்தா இம்புட்டுக் கோபப்படுற?"

"எனக்குத் தலையெல்லாம் வலிக்குது. பேசாம வா."

"ம்க்கும். துளசியோட மணிக்கணக்கா பேசுறதுக்குத் தலை வலிக்காது. நம்ம கூடப் பேசுறதுக்கு மட்டும் வலிக்கும்!" - அந்தப் பெண்மணி நொடித்தவாறே மற்றவர்களுடன் பேச ஆரம்பிக்க... சூரியகாந்தி யாருடனும் பேசாமல் மௌனம் காத்தாள்.

மனதிற்குள் ஆதவனுடன் பேசுவதற்கான ஒத்திகையைப் பார்த்துக் கொண்டிருந்தபோது, பணிபுரியும் இடம் வந்து விட்டது. வண்டி நின்றதும் அனைவரும் இறங்க... சூரியகாந்தியின் பார்வை ஆதவனைத் தேடியது. மற்றவர்கள் தங்கள் பணியைத் தொடங்கிவிட... அமைதியாய்ப் படியேறினாள் சூரியகாந்தி.

சிமெண்ட் பூச்சோடு நின்ற கட்டடத்தில் மேல் தளத்தில் பணி செய்து கொண்டிருந்தவர்களின் சலசலப்பில் தயங்கி நின்றாள். மேலத் தெருக்காரர்கள் அனைவரும் கூடியிருக்கையில் ஆதவனிடம் எப்படிப் பேச முடியும்? அவனை எப்படித் தனியே பார்ப்பது? பேசுவது?

இப்படியே காலமும் நேரமும் கடந்து விடுமா? இன்னும் எத்தனை ஆண்டுகள் இப்படியே கழியும்? வயது ஏறுவது தனக்கும் ஆதவனுக்கும் மட்டுமல்ல. மரிக்கொழுந்திற்கும்தான். இனியும் தாமதித்தால் அவள் கழுத்தில் தாலி கட்டச் சொல்லி விடுவார் மாமா.



அதற்குள் பேசிவிட வேண்டும். நல்லதொரு முடிவை எடுக்க வேண்டும். எப்படி? எப்படிப் பேசுவது? குழப்பமாய் அங்கேயே நின்றுவிட... முதுகிற்குப் பின்னே மெல்லிய குரல் கேட்டது.

"சூர்யா!" - துள்ளித் திரும்பினாள். பனியனும் லுங்கியுமாய்த் தலையில் தலைப்பாகையுடன் நின்றிருந்தான் ஆதவன்.

இவனா? இவனா அழைத்தான்? நம்ப முடியாமல் அவனைப் பார்த்தாள்.

ஆதவன் அதே மெல்லிய குரலில் கேட்டான். "உடம்புக்குப் பரவாயில்லையா?"

"ம்..."

"இல்ல... சுரம்னு பேசிகிட்டாங்களே?"

"ம்... ம்... இப்ப சரியாப் போச்சு."

"உடம்பைப் பார்த்துக்கோ. ஒரு வாரம் ரெஸ்ட் எடுத்திருக்கலாமே!"

"எடுத்திருக்கலாம். ஆனா... ஒரு வாரம் உன்னைப் பார்க்காம... எப்படி?"

"கஷ்டம்தான். நானே ரெண்டு நாளா... திண்டாடிப் போயிட்டேன். சரி... மேலே வேலை நடக்குது. நான் போகட்டுமா?"

"மா...மா!" - தயக்கமாய் அழைத்தாள். கண்கள் மின்ன அவளைப் பார்த்தான்.

"என்ன சூர்யா?"

"இல்ல. இப்போ என்கூட நீதான் பேசினியா?"

"என்ன?"

"நான் கனா எதுவும் கண்டுட்டு இருக்கேனா?" - கேட்டவளது கன்னத்தில் லேசாய்த் தட்டினான்.

"ஏய்! இது ஒன்னும் கனவில்லை. முழுசா நிக்கிறேனே... தெரியலை?"

"ஆனா... எப்படி?"

"என்ன எப்படி?"

"என்கூடப் பேசணும்னு எப்படித் தோணிச்சி?"

"ஏன்? தினமும்தான் பேசுறோம்."

"என்ன? தினமுமா! என்கூடவா?"

"ஆமா! தூரமாப் பார்க்கும் போது சைகையில... பார்வையால... கொஞ்சம் பக்கத்தில நிற்கும்போது ஜாடைமாடையா... பார்க்கவே முடியாத நாட்கள்ல மனசுக்குள்ளேயே.. இப்படி ஏதாவது ஒரு ரூபத்தில தினமும் பேசுறோமே..." - குறும்பாய் மிக மெல்லிய குரலில் அவன் சொல்ல... கன்னம் சிவக்கத் தலை குனிந்தாள் சூரியகாந்தி.

"என்ன? நான் சொன்னது சரிதானே?"

"ம்..." - தலையாட்டினாள்.

"ஆனா... இப்படித் தனிமையா சந்திக்க வாய்ப்பே கிடைக்கிறதில்ல. அதனால நேர்ல பேச முடியலை. பேசாம நாம குழந்தைகளாகவே இருந்திருக்கலாமோன்னு தோணுது..."



"ஏன்?"

"அப்பத்தானே நாம ஓடிப் பிடிச்சி விளையாட முடியும்? இந்தத் தோள்ல உன்னை எத்தனை நாள் உப்பு மூட்டை சுமந்திருக்கேன்... நினைவிருக்கா?"

சூரியகாந்தியின் முகம் இன்னமும் சிவந்தது. இன்று என்ன ஆயிற்று? என் தேகமெல்லாம் பஞ்சாய்ப் பறக்கிறதே... என் கால்கள் காற்றில் மிதக்கிறதே... இது ஒன்றும் கனவில்லையே! இல்லை... நிஜம்தான். இதோ மூச்சுக் காற்று படும் தூரத்தில் நிற்பவன் என் உயிரோடு இணைந்த என் மாமன்தான்.

'இன்னும் என்ன தயக்கம்? பேசு சூரி. அவனிடம் பேச நினைத்த வார்த்தைகளைப் பேசிவிடு!' - மூளை உத்தரவிட... காய்ந்த உதடுகளை நாவால் ஈரப் படுத்தியவாறே அவனை நோக்கி நிமிர்ந்தாள்.

"மாமா!"

"ம்..."

"நான்... உன்கிட்ட கொஞ்சம் பேசணும்."

"பேசு."

"இப்ப வேணாம்... யாராவது பார்த்திடுவாங்க."

"இதை விட்டா வேற வாய்ப்புக் கிடைக்காது சூர்யா!" - அவனது வார்த்தையில் இருந்த ஏக்கம் சிலிர்க்க வைத்தது.

"மதியம் சாப்பிடுறதுக்கு முன்னே... மொட்டை மாடிக்கு வர்றியா மாமா?"

"மொட்டை மாடிக்கா?"

"ம்... எல்லாரும் சாப்பிட்டுட்டு ஓய்வெடுப்பாங்க. மேலே யாரும் வர மாட்டாங்க. நாம பேசுறது யாருக்கும் தெரியாது."

"சரி. வந்திடுறேன். நீ வந்தா உன்னைத் தேட மாட்டாங்களா?"

"துளசி பார்த்துப்பா. அவகிட்ட சொல்லிட்டுத்தான் வருவேன்."

"சரி. பார்த்துக் கவனமா வா சூர்யா. யார் கண்ணிலேயும் பட்டால் பிரச்சனையாகிவிடும்."

கீழே மேஸ்திரியின் குரல் கேட்டது. "என்னம்மா! உங்க ஆட்கள்ல ஒரு எண்ணிக்கை குறையுது. யார் வரலை?"

"எல்லாருமே வந்திட்டோமே..."

"இல்லையே... செங்கல் சுமக்கிற இடத்தில ஒரு ஆள் குறையுதே. ஆமா! சூரிப்புள்ள எங்கே? இன்னிக்கும் லீவா?"

"வந்தாளே! எங்ககூடதானே வந்து இறங்கினா."

ஆதவன் பரபரப்பானான். "சூரி! உன்னைத்தான் தேடுறாங்க. போயிடு..."

"சரி மாமா!" - என்றவாறு இருவரும் ஒருவரையொருவர் எதிர் எதிராய் விலகிச் செல்ல... இருவரின் கரங்களும் உரசிக் கொண்டன. அந்தச் சில கணத் தீண்டலே உடல் முழுக்கத் தித்திக்க... வெட்கப்



புன்னகையோடு படி இறங்கியவளை ரசனையாய்ப் பார்த்து விட்டு மேலே ஏறிப் போனான் ஆதவன்.

"இந்தச் சூரி எங்கே போனா? துளசி! நீயும் அவகூடத்தானே இருந்தே. அவளைப் பார்க்கலையா?"

"இதோ வந்திட்டேன். இங்கேதான் நின்னுட்டு இருந்தேன்!" - என்றவாறு ஓட்டமும் நடையுமாய் உற்சாகத் துள்ளலாய் ஓடி வந்தவள் சடாரென யார் மீதோ மோதிச் சற்றுத் தடுமாறி நின்றாள். யார் மீது மோதினோம்? பதட்டமாய் நிமிர்ந்தவளின் பார்வை உறைந்து போனது.

"என்ன? இன்னிக்குத் துள்ளல் ரொம்ப அதிகமா இருக்கு?" - என்றவாறே கோணல் சிரிப்போடு நின்றிருந்தான் சுடலை. அவனைக் கண்டதும் சட்டென முகம் மாற, கடுப்பாய் நடக்கத் துவங்கினாள்.

"மோதினதுக்கு ரொம்ப நன்றி!" - என்ற அவனது வார்த்தை தன் காதில் நெருப்பாய்ச் சுட்டது.

# 8



சாய்ந்து கொள்ள - ஒரு
தோள் கிடைத்தால் வலியெல்லாம்
மறைந்து விடுகிறதே!
பற்றிக் கொள்ள ஒரு கரம்
இருந்தால் மனதில் திடமும்
தன்னம்பிக்கையும் மிளிர்கிறதே!

உச்சி வெயில் தகித்துக் கொண்டிருக்க... அதைப் பற்றித் துளியும் கவலையின்றி இருவரும் மொட்டை மாடியில் அமர்ந்திருந்தனர். இரும்புக் கம்பிகள் ஆங்காங்கே நீட்டிக் கொண்டிருக்க... தரை போடப்படாமல் செங்கலும் சிமெண்ட் கலவைத் தீற்றலும் இருந்த தளத்தில் ஆட்காட்டி விரலால் கோலம் போட்டுக் கொண்டிருந்தாள் சூரியகாந்தி.

ஆதவன் புன்னகையும் தவிப்புமாய் மாடிப் படியில் கவனத்தை வைத்தவாறே சூரியகாந்தி பேசப் போகும் வார்த்தைகளைக் கேட்கக் காத்திருந்தான். நொடிக்கொரு தரம் விழிகள் மாடிப்படி வரை சென்று மீண்டு வந்தன.

"சூர்யா!"

"மாமா!"

"என்னவோ பேசணும்னு கூப்பிட்ட! நாம வந்து பத்து நிமிஷம் ஆச்சு. ரொம்ப நேரமா நாம போகாம இருந்தா கீழே தேட ஆரம்பிச்சிடுவாங்க."

"ஆமா மாமா! பேசணும்னுதான் வந்தேன். ஆனா... இப்ப எப்படிப் பேசுறதுன்னு தயக்கமா இருக்கு."

"ஏன்? என்கிட்ட என்ன தயக்கம்?" – என்றவனின் பார்வை மீண்டும் மாடிப் படியருகே செல்ல... முகம் மாறினாள் சூரியகாந்தி.

"பயப்படுறியா மாமா?"

"என்ன?"

"இல்ல... வந்ததுல இருந்து படிக்கட்டையே பார்த்திட்டு இருக்கியே... அதான் கேட்டேன்."



"பயம்தான். என்னைப் பற்றி இல்ல. உன்னைப் பற்றின பயம்தான்."

"ஏன் மாமா?"

"என்னைப் பற்றி நான் ஒரு நாளும் பயப்பட்டதில்லை சூர்யா. உன் அண்ணனைப் பற்றித் தெரியாதா உனக்கு?"

"இன்னும் எத்தனை காலம் மாமா இப்படிப் பயந்திட்டே இருப்ப?"

"சூர்யா?"

"செவ்வந்தி – கண்ணப்பன் நிலை மாதிரி நம்ம நிலைமையும் ஆயிடுமோ..." என்றவளது வாயைத் தன் கரத்தால் மூடினான் ஆதவன்.

"என்ன பேசுற நீ? உன்னை எமன்கிட்ட வாரிக் கொடுக்கவா இத்தினி காலமா மத்தவங்க கண்ணு படாம பாதுகாக்கிறேன்?"

"மா... மா...!"

"சூர்யா! கண்ணப்பன் மாதிரி நான் ஒன்னும் கோழையில்லை. இப்பக் கூடச் சொல்லு. தாலி கட்டிடுறேன்."

"மா... மா...!"

"திருட்டுக் கல்யாணம் பண்ணிட்டு ஊரை விட்டுப் போய் ஒளிஞ்சு வாழற வாழ்க்கை ஒரு வாழ்க்கையா சூரியா? உனக்கு அப்படி ஒரு சிறை வாழ்க்கையைத்

தந்திடக் கூடாதுன்னுதான் நான் ஒதுங்கி நிற்கிறேன். மத்தப்படி ஊருக்கோ உறவுக்கோ நான் பயப்படலை."

"ஆனா... இதுக்கு முடிவுதான் என்ன மாமா?"

"கொஞ்ச நாள் பொறுத்துக்க செல்லம்! நான் நமக்காக நம்ம வீட்டுக்குப் பக்கத்திலேயே சின்னதா ஒரு இடம் வாங்கி வீடு கட்டிட்டு இருக்கேன்."

"என்ன?" - விழிகளை விரித்துக் கேட்டாள்.

"ம்... நான் உனக்காகக் கட்டுற தாஜ்மஹால். அதுலதான் நாம வாழப் போறோம். சீக்கிரமே வீட்டைக் கட்டி முடிச்சிட்டு முறைப்படி வந்து பொண்ணு கேட்கிறேன்," - என்றவனை மகிழ்வோடும் சற்றுப் பயத்தோடும் பார்த்தாள்.

"மாமா! இ...இதெல்லாம்... நடக்குமா?"

"நிச்சயமா நடக்கும். அத்தைக்கு எப்பவுமே என்னைப் பிடிக்குமே! உன்னைத் தரத் தயங்க மாட்டாங்க. உன் அண்ணன்தான் கொஞ்சம் குதிப்பான். பரவாயில்லை. நான் சமாளிச்சுக்கிறேன்."

"ஹய்யோ! மாமா, என்னவெல்லாமோ சொல்றியே.... என்னால எதையுமே நம்ப முடியலியே!"

"ஏன்?"

"உனக்கு இப்படியெல்லாம் பேசத் தெரியுமா? என் மேல இத்தனை பிரியத்தை வெச்சிக்கிட்டு எப்படி மாமா என்கிட்ட முகம் கொடுத்துப் பேசாம இருக்க முடிஞ்சது உன்னால?"



ஆதவன் பெருமூச்சு விட்டான். "மனசு நிறையப் பிரியம் இருக்கு. அதை வெளிக்காட்டத்தான் முடியலை. கல்யாணம் மட்டும் முடியட்டும். அப்புறம் பாரு ஐயாவை..."

"போதும் மாமா விளையாட்டு! இப்ப விஷயத்துக்கு வா. நீ எப்படி பெரியவங்க கிட்ட சம்மதம் வாங்குவ? உங்க வீட்டுல ஒத்துப்பாங்களா?"

"ஒத்துக்க வைக்கணும். இல்லன்னா காலம் பூரா இப்படியே இருந்திடுவேன்னு மிரட்டிப் பார்க்கணும்."

"மிரட்டினா?"

"அம்மாவுக்கோ அண்ணிக்கோ இதுல பரிபூரணச் சம்மதம்தான். அண்ணனும் அப்பாவும்தான் ரொம்பக் கடுப்புல இருக்காங்க. அவங்களைச் சமாளிக்கிறதுதான் கஷ்டம்."

"இன்னும் ரெண்டு பேரை விட்டுட்டியே மாமா!"

"யாரு?"

"உன் அத்தையையும்... அவ மகளையும்..."

"ஏன்? அவங்களுக்கென்ன?"

"போன வாரம் நரசிம்மர் கோயிலுக்குப் போறப்போ உன் அத்தையைப் பார்த்தேன்."

"பேசினியாக்கும்?"

"ம்ஹூம். அவங்கதான் பேசினாங்க. நிறையப் பேசினாங்க."

"உன்கிட்டயா?"

"இல்ல. கூட வந்த உங்க பெரியம்மாகிட்ட."

"என்ன பேசினாங்க?"

"மரிக்கொழுந்துக்குப் பதினெட்டு வயது பிறக்கப் போகுது. பிறந்ததும் என் அண்ணன் கல்யாணத்தை வெச்சிடலாம்னு சொல்லியிருக்காரு. என் அண்ணன் மகனும் சரின்னுட்டான்னு என் காதில விழுற மாதிரி சத்தமாவே சொன்னாங்க!" - சொல்லும்போதே தொண்டை அடைக்க... கண்கள் கலங்கின.

"நீ நம்பிட்டியா?" - அவளது முகத்தை நிமிர்த்தி நேராய்ப் பார்த்துக் கேட்டான் ஆதவன். தலையாட்டி மறுத்தாள்.

"இல்ல மாமா!"

"பிறகேன் கண்ணில தண்ணீர் வருது?"

"பயமா இருக்கு மாமா!" - சொல்லும்போது கண்ணீர் தெறித்தது.

"ஏன்டி? என்ன பயம் உனக்கு?"

"எல்லாருமாச் சேர்ந்து உன்னை என்கிட்ட இருந்து பிரிச்சிடுவாங்களோன்னு பயமா இருக்கு."

"சேச்சே! அதெல்லாம் கனவில கூட நடக்காது."

"நடக்கக்கூடாது மாமா. அப்படி எதுவும் நடந்தா... என் உசிரு இருக்காது."

"வாயை மூடு. இப்படி யெல்லாம் பேசக் கூடாது. என்னை மீறி எதுவும் நடக்காது. இந்த ஜென்மத்தில



நீதான் என் பொஞ்சாதி. இதை யார் தடுத்தாலும் மாறாது!" - என்றவனின் மடியில் கண்ணீரோடு சாய்ந்தாள்.

"போதும் மாமா. இந்த ஒரு வார்த்தை போதும். என் காலம் பூரா உனக்காகக் காத்திருப்பேன் மாமா. இந்த வார்த்தையைக் கேட்கத்தான் இவ்வளவு கஷ்டப்பட்டு உன்கிட்ட பேச வந்தேன்!" - என்றவளைப் பரிவோடு வருடி நெற்றியில் முத்தமிட்டான் ஆதவன்.

"இதோ பாருடி செல்லம்! நான் வீடு கட்டி முடிஞ்சதும் உன் வீட்டில வந்து பெண் கேட்பேன். அவங்களும் உடனே தந்திட மாட்டாங்க. ஏன்னா நம்ம ஊர்க்காரங்க இதை நடக்க விட மாட்டாங்க."

"மாமா!"

"ஆனா நீ எதுக்கும் பயப்படக் கூடாது. நம்பிக்கையை மட்டும் விட்டுடக் கூடாது. இந்த மாமன் மேல உனக்கு நம்பிக்கை இருக்கில்ல?"

"நிறைய இருக்கு மாமா!"

"இதே நம்பிக்கையோட இரு. எத்தனை போராட்டம் நடந்தாலும் சரி. நான் தாலி கட்டப் போறது உன் கழுத்திலதான்!"

அவனது வார்த்தையில் கரைந்து பேச்சற்று விசும்பினாள் சூரியகாந்தி. அவளது கண்ணீரைத் துடைத்தான். "அழக்கூடாது. நான் இருக்கேனில்ல!"

"இந்த நினைப்புலதான் மாமா... நான் நடமாடிட்டு இருக்கேன்."

"சூர்யா! ஏற்கெனவே சுடலை ஊர் வம்பை மூட்டி விடுறதுக்காக நம்மைக் கவனிச்சிட்டே இருக்கான். அதனால பொது இடத்தில வெச்சு என்னைப் பார்க்காதே. பேச முயற்சிக்காதே."

"சரி மாமா!"

"இனிமே இப்படி யெல்லாம் தனியா சந்திக்க வேண்டாம். யார் கண்ணிலயாவது பட்டுட்டா பிரச்சனை பெரிசாகிடும். நாம அமைதியா விலகியே இருக்கிறதுதான் நல்லது. நான் சொல்றது புரியுதா?"

"ம்..."

"நான் சமயம் கிடைக்கும்போது அப்பாகிட்ட பேசுறேன். பேசிச் சம்மதிக்க வைக்கிறேன்."

"முடியுமா மாமா?"

"முயற்சி பண்றேன். கண்டிப்பா முடியும். அப்படியே சம்மதம் கிடைக்கலைன்னாலும் உன்னை விட்டுட மாட்டேன் சூர்யா. நியாயமான வழியில போராடிப் பார்ப்போம். முடியலைன்னா இருக்கவே இருக்கு மாரியாத்தா கோவில். அதுல வெச்சுத் தாலியைக் கட்டிடுறேன்."

"ஊருக்குத் தெரிஞ்சா வெட்டிப்புடுவானுங்களே... மாமா!"

"வெட்டட்டும். தம்பதியா சாவோம். ஏன் உனக்குப் பயமா இருக்கா?" - எனக் கேட்டவனைப் பார்த்துப் புன்னகைத்தாள். அவனது வலக் கரத்தை எடுத்துத் தன் கையோடு சேர்த்துக் கொண்டாள்.



"இல்ல மாமா. இனிமே எதுக்கும் பயப்பட மாட்டேன். நீயும் உன் அன்பும் இருக்கும்போது எனக்கென்ன பயம்? வாழ்ந்தா ஒன்னா வாழ்வோம். இல்லன்னா... சேர்ந்தே போயிடலாம்."

"நாம வாழுவோம் சூர்யா. நிச்சயம் வாழ்வோம்."

"மாமா! அப்புறம் ஒரு விஷயம்?" - என்றாள் தயக்கமாய்.

"என்ன?"

"இந்தச் சுடலை எதுக்கு உன் கூடவே வர்றான்?"

"அவனா? வீட்ல வேலை வெட்டியில்லாம சுத்திட்டு இருக்கான்னு அத்தைதான் கூடக் கூட்டிட்டுப் போயி வேலையைக் கத்துக் கொடுன்னு சொல்லிச்சி. அதான் வர்றான். ஏன்? எதுவும் பிரச்சனை பண்றானா?"

"அப்படின்னு இல்ல. ஆனா... அவன் பார்வையும் பேச்சும் சரியில்ல மாமா. எப்பவும் முறைச்சிட்டே இருக்கான்."

"அதுவா? நீ அவன் தங்கச்சிக்குச் சக்களத்தியா வந்திடுவியோன்னு பயந்திருப்பான்."

"மாமா!"

"சரி சரி... சும்மா ஒரு விளையாட்டுக்குச் சொன்னேன்."

"விளையாட்டுக்குக் கூட இப்படியெல்லாம் பேசாதே."

"சரி... பேசலை. சூர்யா! நேரமாச்சு. கீழே போலாமா?"

"ம்..."

"முதல்ல நீ இறங்கிப் போ. யார் கண்ணிலயும் பட்டுடாதே. ஜாக்கிரதை!"

"சரி மாமா!" - என்றவாறே அவனைப் பற்றியிருந்த கரத்தை மெல்ல விடுவித்தாள். விலக மனமின்றித் தயங்கிய பார்வையோடு நின்றவளைத் தோளோடு அணைத்து ஆறுதலாய்ப் பேசிப் போகச் சொன்னான்.

இந்த அணைப்பும் ஆறுதலும் கடைசி வரை தனக்குக் கிடைக்கும் என்ற நம்பிக்கையில் அவனை விட்டு விலகி நடக்க ஆரம்பித்தாள் சூரியகாந்தி. ஆனால் விதி சுடலையின் வடிவில் மாடிப் படியேறி வந்து கொண்டிருந்தது.

ஆதவனின் பேச்சும் அது தந்த உற்சாகமுமாய்த் தனக்குள்ளே சிரித்துக் கொண்டு இறங்கியவள் எதிரே வந்தவனைக் கண்டதும் திகைத்து நின்றாள்.

சுடலையின் முகமோ முதலில் திகைத்துப் பின் மெதுவாய் மலர்ந்தது. "அடடா! இன்னிக்கு யார் முகத்தில முழிச்சேனோ தெரியலையே... எட்டி எட்டிப் போன மான் கிட்ட கிட்ட வந்து முட்டுதே!" கிறக்கமாய் அவன் சொல்ல, கடுத்த முகமாய் அவனை விட்டு விலகி இறங்க முயன்றவளை வழி மறித்தான்.

"என்ன கண்ணு! முகத்தில எள்ளும் கொள்ளும் வெடிக்குது. ஏன்? இந்த மாமன்கிட்ட பேசக் கூடாதா?"

"ஏய்! யாருடா நீ? நீ எனக்கு மாமனா?"

"அட! பார்றா. எவ்வளவு கோபம் வருது? கட்டிகிட்டா நான் மாமன் முறைதானே வரும்?"



"ச்சீ! வழியை விடு."

"அட நில்லு கண்ணு! எத்தனை நாளா தூரத்தில வெச்சே பார்த்து ரசிக்கிறது? இன்னிக்குத்தான் கையெட்டுற தூரத்தில வந்திருக்க. அதுவும் யாருமில்லாத இடத்தில? உன்னை உடனே அனுப்ப முடியுமா? இரு! கொஞ்ச நேரம் மனம் விட்டுப் பேசலாம்."

"உன்கிட்ட பேச எதுவும் இல்லை."

"எனக்கு இருக்கே? இந்தக் கண்ணையும் மூக்கையும் பார்க்கும்போது அப்படியே பம்பரமாட்டம் மனசு உன்னையே சுத்தி வருது. இந்த..."

"வழியை விடுன்னு சொல்றேனில்ல...? நகருடா!"

"இந்தா! சும்மா கத்தாதே. நான் ஏதோ உன் மேல உள்ள பிரியத்தில உன்கூட அன்பா ரெண்டு வார்த்தை பேசலாம்னு நினைக்கிறேன். சும்மா சத்தம் போட்டு ஊரைக் கூட்டினால் நீ இவ்வளவு நேரம் என்கூடத்தான் மொட்டை மாடியில இருந்திட்டு வந்தேன்னு எல்லார் கிட்டயும் சொல்லிடுவேன்!" - சுடலை மிரட்டலாய்ச் சொல்ல... திடுக்கிட்டு நிமிர்ந்தாள்.

"எ...ன்ன?"

"ஆமாங்கண்ணு! அதுக்கப்புறம் என்ன நடக்கும்னு நான் சொல்லி உனக்குத் தெரியப் போறதில்லை. நம்ம ஊர்க்காரங்களைப் பத்தி உனக்கே தெரியும். நம்ம உறவைப் பற்றி கண்ணு, காது, மூக்கெல்லாம் வெச்சுக் கடைசியில கல்யாணம் வரைக்கும் போயிடும்."

சூரியகாந்தியின் உடல் சில்லிட்டுப் போனது. சற்று முன் வரை இருந்த மயக்கமும் பூரிப்பும் இருந்த இடம் தெரியாமல் போனது. ஆதவன் வந்துவிட மாட்டானா என ஏக்கமாய் மொட்டை மாடியை நிமிர்ந்து பார்த்தாள்.

ஆனால் ஆதவனோ வலப் பக்கமாய்க் கட்டப்பட்டிருந்த சாரங்களின் வழியே கீழே இறங்கிக் கொண்டிருந்ததை அவள் அறியவில்லை. எப்படியும் சத்தம் கேட்டு எட்டிப் பார்ப்பான் என எதிர்பார்த்து ஏமாந்தாள்.

"என்ன கண்ணு! மாடியை எட்டிப் பார்க்கிறே? ஓ! அங்கே போய்ப் பேசலாம்றியா?"

"இ... இல்லை. நான்... கீழே போகணும்."

"போகலாம் சூரி. இப்படி உன்கிட்ட தனியாப் பேச இனி எப்போ சான்ஸ் கிடைக்குதோ? கிடைச்ச வாய்ப்பை நழுவ விடலாமா? ஏன் ஒதுங்கியே நிற்கிற? கீழே விழுந்திடப் போற. வா! என்னை ஒட்டி நில்லு."

"ச்சீ! கையை எடு. சுடலை! இது செங்கல் சுமக்கிற கை. நீ தொட்டா தொட்ட கையை ஒடைச்சி சாந்து கலக்கிடுவேன், ஜாக்கிரதை!"

"அப்படியா? எங்கே தொட்டுப் பார்க்கிறேன்," - என நீட்டிய கையைப் பட்டெனத் தட்டி விட்டாள்.

"கிட்ட வராதே, சுடலை! நான் ஒன்னும் நீ நினைக்கிற மாதிரி பொண்ணு இல்ல."

"அதையும்தான் பார்ப்போமே... உன் ரோஷமெல்லாம் என்கிட்ட எடுபடாது. என்ன இருந்தாலும் என்



தாலியை வாங்கிட்டு என்கூடத்தான் நீ குடும்பம் நடத்தியாகணும்."

"ச்சீ! வாயைக் கழுவு. போயும் போயும் உன்னைக் கட்டுவேனா? அதுக்கு இதுல இருந்து குதிச்சிச் சாகலாம்!" - சூரியகாந்தி வெறுப்பாய்ச் சொல்ல... சுடலையின் முகம் கறுத்துப் போனது.

"குதிடி!" - என்றான் ஆத்திரமாய்.

சூரியகாந்தி மிரண்டு பின் வாங்கினாள்.

"என்னடி பம்முற? குதிடி. என்ன மிரட்டிப் பார்க்கிறியா? நான் நினைச்சா இப்பவே உன்னை என் பெண்டாட்டி ஆக்கிக்க முடியும். பார்க்கிறியா?" - பேசிக் கொண்டே நெருங்கியவனைக் கண்டு திகைத்து... தவிப்பாய் மேலே பார்த்தாள்.

ஆதவன் இருந்த சுவடு தெரியவில்லை. பயமாய்க் கீழே எட்டிப் பார்த்தாள். பணியாளர்கள் சாப்பிட்டு விட்டு ஓய்வெடுக்கத் தரைத் தளத்திற்குச் சென்றிருந்தார்கள். இங்கிருந்து கத்தினாலும் கேட்பது சந்தேகம்தான். இருந்தாலும் முயற்சித்துப் பார்க்கலாம்... என வாயைத் திறந்தபோது அவளது வாயை அழுத்தமாய் மூடினான்.

"சத்தம் போடாதே. உனக்குத்தான் அசிங்கம்."

கெஞ்சுதலாய்த் தலையாட்டினாள். "சுடலை! என்னை விட்டுடு. நான் போகணும். என்னைத் தேடுவாங்க."

"அந்தப் பயம் இருக்கில்ல? பின்னே என்ன சும்மா எகிறுற? இதோ பார்! நான் சொல்றதை நல்லாக்

கேட்டுட்டுப் போ. சும்மா சும்மா என் மாப்பிள்ளையைப் பார்க்கிறது... ஜாடையா பேசுறதுன்னு ஏதாவது பண்ணினா நாறடிச்சிடுவேன். அவன் என் தங்கச்சியைக் கட்டிக்கப் போறவன்.

"எங்க மொத்தக் குடும்பமும் அவனை நம்பித்தான் இருக்கு. ஏதாவது மாயம் பண்ணி அவனை உன் பக்கம் இழுத்திடலாம்னு நினைச்ச... நான் மனுஷனா இருக்க மாட்டேன். இதே இடத்தில உன்னைச் சின்னா பின்னமாக்கிடுவேன்.

"அப்புறம் வேற வழியே இல்லை. என்னைத்தான் கட்டியாகணும். மானம் மரியாதையோடு என்னைக் கல்யாணம் பண்ணிக்கிறியா? இல்ல... அசிங்கப்பட்டுட்டு என்னைக் கட்டிக்கிறியா? நீயே முடிவு பண்ணிக்க. போ!" - என்றவாறு கையை விலக்கினான்.

உடல் முழுக்க வியர்த்துப் போய்த் தடதடவென நடுங்க... விட்டால் போதும் என்பதாய்ப் படிகளில் முட்டி மோதிக் கைகளில் சிராய்ப்போடு ஓடி வந்தவளைத் துளசிதான் முதலில் பார்த்தாள்.

விருட்டென எழுந்து தோழியை நெருங்கினாள். "சூரி! என்னடி... ஏன் இப்படிப் பதறியடிச்சி ஓடி வர்ற? என்னடி சூரி... சொல்லுடி..."

சூரியகாந்தியின் கண்கள் பரபரவெனத் தேடின. ஆதவன் எங்கும் தென்படவில்லை.

"யாரைத் தேடுற சூரி?"



"ஆ... ஆதவனைப் பார்த்தியா?"

"இல்லையே! நீ மட்டும்தானே வந்தே? ஏன் மாடிக்கு அவர் வரலையா?" - துளசி வியப்பாய்க் கேட்க... ஏமாற்றமும் இயலாமையுமாய் மொட்டை மாடியை வெறித்தாள்.

'அப்படி யென்றால் இத்தனை நேரமாய் மாடியில்தான் பதுங்கியிருந்தானா? சுடலை தன்னை மிரட்டியதை யெல்லாம் கேட்டுக் கொண்டு சும்மாதான் நின்றானா? வெளியே வந்தால் மாட்டிக் கொள்வோம் என்ற பயமா? பெரிய வீரன் போல் பேசினானே... எல்லாம் வெறும் வாய் வார்த்தைகள்தானா?

இவனது துணிச்சல் எங்கே போயிற்று? இந்தச் சுடலைக்கே பயந்து ஒளிந்து கொள்பவன் நாளை ஒட்டுமொத்தக் குடும்பமும் சேர்ந்து மிரட்டினால் தன்னை எளிதாய் ஒதுக்கிவிட மாட்டானா? அவன் பேசிய மாயப் பேச்சைக் கேட்டு மதிமயங்கிப் போனேனே...

ஐயோ! சுடலை சொன்னது போல் ஏதேனும் நடந்து விட்டால்... அப்போதும்கூட இவனால் என்ன செய்ய முடியும்? கையைக் கட்டிக் கொண்டு அமைதியாய்த்தானே நிற்பான். இவனையா நம்பினேன்? நான் ஏமாந்து விட்டேனே...!

"சூரி! உன்கிட்டதானே கேட்கிறேன். என்னடி ஆச்சு?"

"து...ள...சி! நான்... நான் ஏமாந்திட்டேன் துளசி!"

"என்ன?"

"துளசி! யாரையுமே நம்ப முடியலை துளசி எனக்கு... யாரையுமே... துளசி! வா... வீட்டுக்குப் போயிடலாம்."

"ஏய்! என்னடி... விளையாடுறியா? பாதி நேரம்தான் வேலை நடந்திருக்கு. நீபாட்டுக்கு வீட்டுக்குக் கூப்பிடுற?"

"எனக்கு... இங்கே இருக்க முடியலை. நான்... போறேன்."

"ஏய்! எப்படிப் போவ?"

"நடந்தே போயிடுறேன்..." - என நடக்க ஆரம்பித்தவளை ஓடிச் சென்று தடுத்தாள் துளசி.

"பைத்தியக்காரி மாதிரி பேசாதே. எவ்வளவு தூரம் நடப்ப? முதல்ல இங்கே வா. இப்படி உட்காரு. என்ன நடந்ததுன்னு சொல்லு!" - என மரத்தடியில் அவளை அமர வைத்து, தானும் அமர்ந்து கொள்ள...

சூரியகாந்தி விம்மியழ ஆரம்பித்தாள்.

தேம்பித் தேம்பி அழ ஆரம்பித்தாள்.

அவளது அழுகையில் துளசி மட்டுமல்ல... அப்போதுதான் சாப்பிட்டு விட்டுக் கை அலம்ப வந்த ஆதவனும் திடுக்கிட்டுப் போனான்.

மாடியில் இருந்து இவை அனைத்தையும் பார்த்துக் கொண்டிருந்த சுடலை மர்மமாய்ப் புன்னகைத்தான்.



# 9



ஒரு துளிக் கண்ணீரைத்
துடைப்பதல்ல அன்பு!
மறு துளி வராமல் தடுப்பதே
உண்மையான அன்பு!

தொடர்ச்சியாய் இரண்டு நாட்கள் சூரியகாந்தி வராமல் போகவே... தவித்துப் போனான் ஆதவன். காரணமும் புரியவில்லை.

விடை தெரியாமல் குழம்பித் தவித்தான்.

'நன்றாகத்தானே பேசினாள். சந்தோஷமாகத்தானே சென்றாள். பிறகேன் அப்படி அழுதாள்? மாலை வேலை முடிந்து போகும் வரை அழுது கொண்டுதான் இருந்தாள். வீட்டிற்குப் போகும்போது வழக்கமாய்ப் பார்க்கும் நேசப் பார்வை இல்லை. வெட்கப் புன்னகை பூக்கவில்லை.

என்ன ஆயிற்று சூர்யா? எதற்காக அழுதாய்? நான் உன்னிடம் எதுவும் தவறாகப் பேசி விட்டேனோ! என் பேச்சில் உனக்கு நம்பிக்கை வரவில்லையா? இல்லையென்றால் என் மீதே உனக்கு நம்பிக்கை இல்லையா?' - பலவித எண்ணங்களோடு தரையில் டைல்ஸ் பதித்துக் கொண்டிருக்கையில் தன் முன் இரண்டு பாதங்கள் வந்து நிற்க... நிமிர்ந்து பார்த்தான்.

"மாப்பிள்ளை! மணி பன்னிரண்டாச்சு. வீட்டில போய்ச் சாப்பாடு எடுத்திட்டு வரவா?" - என்றவாறு சுடலை நின்று கொண்டிருந்தான்.

"நீ போய்ச் சாப்பிட்டு வா. எனக்குச் சாப்பாடு வேண்டாம்."

"ஏன் மாப்பிள்ளை? காலையில இருந்து உழைக்கிற. எப்படிப் பசிக்காம இருக்கும்?"

"உனக்குப் பசிச்சா போய்ச் சாப்பிடு. எனக்கு வேலை யிருக்கு... போ."

"நான் மட்டும் சாப்பிட்டுட்டு உனக்குக் கொண்டு வரலைன்னா மாரி என்னைக் கொன்னே போட்டுடுவா."

"சுடலை!"

"கோபப்படாதே மாப்பிள்ளை. இன்னிக்குப் புதன்கிழமை. மீன் குழம்பு வெச்சிருப்பாங்க. வயித்தைக் காயப் போட நினைக்காதே. எனக்கு இப்ப பஸ் வந்திடும். போயிட்டு மீன் குழம்புச் சாப்பாடோட வர்றேன். வரட்டுமா?"

"திரும்பி வர்ற பஸ்ல வந்திடு. லேட்டானா சூப்பர்வைஸர் கத்துவார்."

"அவரை நான் பார்த்துக்குவேன். ஒரு பத்து ரூபா குடு மாப்பிள்ளை!"

"எதுக்கு?"

"பஸ்ல போகக் காசு வேணாமா?"



"சட்டையில இருக்கும். எடுத்திட்டுப் போ. நாளையில இருந்து காலையிலேயே சாப்பாட்டை எடுத்திட்டு வந்திடணும். அலைச்சலும் செலவும் மிச்சமாகும்."

"மாப்பிள்ளை! இந்தப் பத்து ரூபாயை மிச்சப்படுத்தி நீ என்ன கோட்டையா கட்டப் போற? சுடச்சுடச் சாப்பிட இந்தப் பத்து ரூபா என்ன... அம்பது ரூபா கூட செலவழிக்கலாம். ஆறிக் குளிர்ந்து போன சாப்பாட்டைச் சாப்பிட்டுப் பழக்கமில்ல மாப்பிள்ளை!"

"அப்ப நாளையில இருந்து வீட்லயே இருந்துக்கோ. மூணு வேளையும் சூடா சாப்பிட்டுட்டே இருக்கலாமில்ல?"

"எனக்கும் ஆசைதான். ஆனா என் அம்மாதான் ஓட ஓட விரட்டுறாளே. நானும் உன்னை மாதிரி வேலை செய்தாதான் எனக்கு எவனும் பொண்ணு தருவானாம்..."

"நீ இப்படியே பேசிட்டு நில்லு. பஸ் போகட்டும்."

"அச்சோ! இந்தப் பஸ்ஸை விட்டா அடுத்த பஸ்ஸுக்கு ஒரு மணி நேரம் காத்துக் கிடக்கணுமே..." - என்றவன் வேகமாய் நகர்ந்து ஜன்னல் ஓரமாய் மடித்து வைக்கப்பட்டிருந்த ஆதவனின் சட்டைப் பையில் கையை நுழைத்துத் தட்டுப்பட்ட ரூபாய் நோட்டை எடுத்துக் கொண்டு ஓடினான்.

சுடலை போவதற்காகவே காத்து நின்ற துளசி... அவன் போய் விட்டான் என்று உறுதி செய்து கொண்டு மெல்ல சுப்புலக்ஷ்மியை அழைத்தாள்.

"சுப்பக்கா!"

"என்ன புள்ள?"

"எனக்கு வயித்துக்குள்ள பிசையுற மாதிரி இருக்கு. நான் கொஞ்சம் காட்டுப் பக்கமா ஒதுங்கிட்டு வரவா?"

"தனியாவா போற? இரு. நானும் வர்றேன்."

"ஐயோ! வேண்டாம். ரெண்டு பேர் குறைஞ்சா மேஸ்திரி தேடுவார். பகல் நேரம்தானே... நான் போயிட்டு வந்திடுறேன். ஒருவேளை யாரும் தேடினா நீ சமாளிச்சிடு."

"சரி... சரி. பார்த்துப் போயிட்டு வா."

"சரிக்கா!"

"ஏய்! காட்டுக்கு இந்தப் பக்கமால்ல போகணும்?"

"ஆமாக்கா. என் செருப்பு மாடிப் படிக்கட்டுக்குக் கீழே கிடக்கு. அதைப் போட்டுக்கப் போறேன்."

"சரி... போயிட்டு வா!" - என்றவாறு ஜல்லிக் கற்களைச் சுப்புலக்ஷ்மி அள்ளத் துவங்க... துளசி நடந்து கொண்டே, ஓரக் கண்ணால் அனைவரையும் அளவெடுத்தாள்.

தன் சக பணியாளர்கள் அனைவரும் வெளிப்பக்கச் சுவரின் பூச்சு வேலையில் ஈடுபட்டிருக்க... மேலத் தெருக்காரர்களில் பாதிப் பேர், புதிதாய் வந்து இறங்கிய சிமெண்ட் மூட்டைகளையும் செங்கலையும் இறக்கி அடுக்கிக் கொண்டிருந்தனர்.

மீதமுள்ளவர்கள் சாரங்களின் மீதேறி வெளிப்பக்கச் சுவர்களில் மீதமிருந்த வேலையில் ஆழ்ந்திருக்க... யாரையும் கவனியாதது போல் படிக்கட்டை அடைந்தாள்.



ஆதவன் மட்டும் முதல் தளத்தில் இருக்கிறான் என உறுதி செய்து கொண்டு மளமளவென ஏறினாள்.

கையருகே இருந்த சலவைக் கற்கள் தீர்ந்து போய்விட, அடுத்த பெட்டியை எடுக்க எழுந்த ஆதவன்... வாசலருகே தயங்கியவாறே வந்து நின்றவளைக் கண்டதும் முகம் மலர்ந்தான்.

"துளசி! நீ எங்கே இங்கே?"

"வந்து... உ.... உன்னைப் பார்க்கத்தான்!" - மிக மெல்லிய குரலில் பேசியபோதும், அவளது குரல் கணீரென எதிரொலிக்க... பயமாய் வெளியே திரும்பிப் பார்த்தாள்.

"என்னையா?" - ஆதவனின் முகம் ஆச்சரியமாய் மலர்ந்தது.

"ஆமாம். இப்ப... யாராவது மேலே வருவாங்களா?"

"இல்லை. மதியம் வரை எல்லாருக்கும் வெளியே தான் வேலை. நீ பயப்பட வேண்டாம். சொல்லு... என்ன விஷயம்?"

துளசியின் முகம் ஏளனமாய்ச் சுருங்கியது. "அப்படியே யாரும் வந்திட்டாலும் உனக்குப் பதுங்க இடம் இருக்கே..."

ஆதவனின் முகம் மாறியது. "துளசி!"

"ஏன்யா! பெரிய வீரனாட்டம் பேசினியாமே. மலையைச் சாய்ச்சிடுவேன்.... கடலைக் குடிச்சிடுவேன்னு... உன் அத்தை மகனைக் கண்டதும் உன்

வீரமெல்லாம் காத்தோட போயிடுச்சா...? நீயும் வெறும் வாய்ச்சொல் வீரன்தானா?" - துளசி படபடவெனப் பொரிய... புரியாமல் விழித்தான்.

"என்ன சொல்ற துளசி?"

"ரெண்டு நாள் முன்னால நடந்த கூத்தைத்தான் சொல்றேன். அது எப்படிய்யா உன்னால மட்டும் எதுவுமே நடக்காத மாதிரி வேலை செய்ய முடியுது? அங்கே அந்தப் பைத்தியக்காரி என்னன்னா சாப்பிடாம... தூங்காம... அழுதிட்டு இருக்கா."

"யா...ரு? சூர்யாவா?"

"ஏன்? வேற எவளும் இருக்காளா?"

"துளசி! இப்ப எதுக்காக என் மேல கோபப்படுற? நான் என்ன தப்பு பண்ணினேன்?"

"அப்போ நீ செய்தது சரிங்கிறியா? அந்தச் சுடலைப் பய பேசினதைக் கேட்டு உன் நரம்பு முறுக்கேறலை? உன் இரத்தம் கொதிக்கலை?"

"சுடலையா? அவன் என்ன பேசினான்? உன்கிட்ட எதுவும் வம்பு பண்ணினானா? இல்ல... சூர்யாகிட்ட ஏதாவது ஏடாகூடமாப் பேசுறானா? அப்படி எதுவும்னா சொல்லு... அவனை வகுந்திடுறேன்!" - ஆதவன் கடினமாய்க் கூற... இப்போது துளசியின் முகம் மாறியது.

"சொல்லு துளசி! சுடலை என்ன பண்ணினான்?"

"அப்போ... உனக்கு எதுவுமே தெரியாதா?" - குழப்பமாய்க் கேட்டாள்.



"என்ன விஷயம்? நீ எதைக் கேட்கிற?"

"அன்னிக்கு மத்தியானம் மொட்டை மாடியில ரெண்டு பேரும் பேசினீங்கள்ல?"

"ஆமா."

"சூரி இறங்கின பிறகுதானே நீ இறங்கின? அது வரை மொட்டை மாடியிலதானே இருந்தே?"

"இல்லை துளசி! ரெண்டு பேரும் ஒரே வழியா இறங்கினா யார் கண்லயாவது பட்டுடுவோம்னு அவளைப் படிக்கட்டு வழியா அனுப்பிட்டு... நான் பின் பக்கமா கட்டியிருந்த சாரம் வழியா இறங்கிட்டேன். ஏன் கேட்கிற?" - எந்தவிதத் தயக்கமோ தடுமாற்றமோ இன்றித் தெளிவாய் அவன் அளித்த பதிலில்... சோர்வாய்க் கண்களை மூடிக் கொண்டாள் துளசி.

"என்ன துளசி! என்ன பிரச்சனை?"

"ஐயோ! அதை என்னன்னு சொல்வேன்? உன்கிட்ட பேசிட்டுக் கீழே இறங்கி வரும்போது சுடலை எதிர்ல வந்தானாம்."

"எ...ன்...ன?"

"சூரிகிட்ட ரொம்ப ஒரு மாதிரிப் பேசியிருக்கான். கையைப் பிடிச்சி இழுத்திருக்கான். அசிங்கமாய்ப் பேசியிருக்கான்..." - துளசி படபடப்பாய்ச் சொல்ல...

ஆதவனின் நெற்றி புடைத்தது. கண்கள் சிவக்க... ஆத்திரமாய் நிமிர்ந்தான். "என்ன சொல்ற?"

"ஆமாய்யா! சூரி அவனைத்தான் கட்டிக்கணுமாம். உன்னை மயக்கிடலாம்னு உன்கிட்ட பேசினாலோ பார்த்தாலோ சீரழிச்சிடுவேன்னு மிரட்டியிருக்கான்."

"பரதேசிப் பயலுக்கு எங்கிருந்து இவ்வளவு தைரியம் வந்தது? இவன் பேசினதைக் கேட்டுட்டு அவள் ஏன் சும்மா இருந்தா? என்னைக் கூப்பிட்டிருக்கலாமில்ல? பேசின வாயை அப்பவே உடைச்சிருப்பேனே?" - ஆதவனின் கோபம் துளசிக்குள் நிம்மதியை உண்டாக்கியது.

"நீ மாடியிலதான் உட்கார்ந்திருக்கன்னு நினைச்சி... நீ எப்படியும் வந்திடுவன்னு தவிச்சிருக்கா. நீ வரவே இல்லைன்னதும்... பயந்து பதுங்கிட்டன்னு நினைச்சித் தான் அன்னிக்கு அப்படி அழுதிருக்கா."

"பயமா? எனக்கா? அதுவும் சுடலையைப் பார்த்தா? போய் அவகிட்ட சொல்லு. இந்த ஊரே எதிர்த்தாலும் ஆதவன் பயப்பட மாட்டான். எப்படியும் அவ கழுத்திலதான் தாலி கட்டுவான்னு சொல்லு."

"மன்னிச்சிடுய்யா. அவ அழுததைக் கண்டு நான்கூட உன்னைத் தப்பா நினைச்சிட்டேன். சூரி உன்னை மட்டும்தான் நம்பிட்டு இருக்கா. அவ நம்பிக்கையைப் பொய்யாக்கிடாதய்யா!"

"துளசி! நான் சூர்யாவைப் பார்க்கணுமே!"

"அவ உன் மேல ரொம்ப வருத்தத்தில இருக்கா. உன்னைப் பார்க்கவே கூடாதுன்னு வேலைக்குக் கூட வராம இருக்கா."



"துளசி! தயவுசெய்து எனக்காக... அவளை நான் பார்க்க ஏற்பாடு செய்யேன்."

"வேலை முடிஞ்சதும் போய் நடந்த விஷயத்தைச் சொல்லி நாளைக்கு அவளை வேலைக்குக் கூட்டிட்டு வர்றேன். சரியா!"

"இல்ல... நான் இன்னிக்கே பார்க்கணும். அவகிட்ட பேசணும்."

"இன்னிக்கா? அது எப்படி முடியும்?"

"முடியும் துளசி! நீ நினைச்சா முடியும்."

"எ...ப்படி?"

"வேலை முடிஞ்சதும் வீட்டுக்குப் போய் சூர்யாவைக் கூட்டிட்டு நம்ம ஊர் ஓடைக் கரைக்கு வந்திடு. நான் அங்கே காத்திருக்கேன்."

"ஓடைக்கா? மழை வந்ததுல ஓடையில வெள்ளம் ஓடுதே. நிறைய சனம் குளிக்க... துவைக்கன்னு கூடிக் கிடக்குமே. யாராவது பார்த்திட்டா?"

"சாயங்காலம் இந்தக் குளிர்ல யாரு வந்து குளிப்பாங்க? அப்படியே யாரும் இருந்தாலும் நாம ஏதாவது மறைவில நின்னு பேசலாம். நீ மட்டும் ஏதாவது காரணம் சொல்லி அவளைக் கூட்டிட்டு வந்திடு. உங்களுக்கு எந்தப் பிரச்சனையும் வந்திடாம... பத்திரமா திருப்பி அனுப்புறது என் பொறுப்பு. சரியா?"

சற்று நேர யோசிப்பிற்குப் பிறகு தயக்கமாய்த் தலையாட்டினாள் துளசி. "சரி. ஆனா... ரொம்ப நேரம்

எங்களைக் காக்க வைக்கக் கூடாது. அது மோசமான இடம்."

"எனக்குத் தெரியாதா? வேலை முடிஞ்சதும் நான் நேரே ஓடைக்குப் போயிடுறேன். நீங்க வரும்போது நான் அங்கே இருப்பேன்."

"சுடலை?"

"அவனை நான் பார்த்துக்கிறேன். நீங்க பயப்பட வேண்டாம்."

"சரி. அப்போ நான் போகட்டுமா?"

"ரொம்ப நன்றி துளசி!"

"எதுக்கு?"

"சூர்யாவோட மனநிலை புரியாம ரொம்பக் குழம்பிப் போயிட்டேன். நீ வந்து சொல்லலைன்னா எனக்கு எதுவுமே தெரிஞ்சிருக்காது."

"அவ அழுகையைக் காணச் சகிக்காமத்தான் வந்தேன். இனிமே அவளை அழ வைக்காதய்யா..."

"இனி அவ என் பொறுப்பு. அவளைக் கலங்க விடமாட்டேன். அதைப் பற்றிதான் அவகிட்ட பேசணும். மறக்காம கூட்டிட்டு வந்திடுவியா?"

"சரி. கூட்டிட்டு வர்றேன். நான் கீழே போகட்டுமா?"

"ம்... ஜாக்கிரதை!" - என வழியனுப்பியவன் ஒரு எச்சரிக்கை உணர்வோடு... அவள் கீழே சென்று தன் ஆட்களோடு சேரும்வரை மேலே நின்று கண்காணித்துக் கொண்டே இருந்தான்.



மாலை நேரத் தென்றல் ஓடை நீரின் குளுமையையும் சேர்த்துக் கொண்டு சிலுசிலுவென உடலை வருட ஆதவன் சிலிர்த்தான். சூரியன் மேற்குத் திசையை நோக்கிக் கீழே இறங்கிக் கொண்டிருக்க... மேகம் முழுக்கச் செந்நிறமாய்க் காட்சியளித்தது. வேலியோரமாய் அடர்ந்து வளர்ந்திருந்த கருவேல மரங்களில் கூடு கட்டியிருக்கும் பறவையினங்கள் தங்கள் இருப்பிடத்திற்குத் திரும்பி விட்டதாய் ஒருவருக்கொருவர் தெரிவிக்க...

ஓடைக் கரை யெங்கும் புள்ளினங்களின் கலவையான ஒலி எதிரொலித்தது. மற்றச் சமயங்களில் சிறிய நீரோடையாய் அமைதியாய் ஓடிக் கொண்டிருக்கும் ஓடை மழைநீர் வெள்ளத்தால் சலசலவென ஆர்ப்பரித்து ஓடிக் கொண்டிருந்தது.

வேலியோரமாய் மாடுகளை மேய்த்துக் கொண்டிருந்த ஒரு சிலரும் மாடு கன்றுகளை ஓட்டிக் கொண்டு கிளம்பிவிட... அமர்ந்திருந்த கல்லை விட்டு எழுந்தான் ஆதவன்.

சூரியகாந்தி வரும் வழியை ஆவலாய்த் தேடுவதும்... ஏமாற்றமாய்த் திரும்புவதுமாய் அரை மணி நேரம் கடந்து போயிற்று.

'என்ன ஆயிற்று? ஏன் இன்னும் வரவில்லை? சூர்யாவின் வீட்டில் வெளியே அனுப்பவில்லையோ! முருகேசன் வேலையில் இருந்து வீடு திரும்பி யிருப்பானோ?'

"யாரது? இங்கன நிற்கிறது?" - என்ற சற்று வயதான குரலில் சட்டெனத் திரும்பினான். தலையில்

விறகுக் கட்டோடு கனகம் நின்று கொண்டிருந்தாள். அவளுக்குச் சற்றுத் தள்ளி ஓரமாய் நின்ற கருவேல மரத்தின் பின்னே துளசியும் சூரியகாந்தியும் நிற்பது தெரிந்தது.

உற்சாகமும் லேசான பதட்டமுமாய்க் கனகத்தைப் பார்த்துப் புன்னகைத்தான்.

"அத்தே! நல்லா இருக்கீங்களா, அத்தே?"

"அத்தையா! ஆருப்பா நீ?" - கனகம் பார்வையைக் கூர்மையாக்கினாள்.

"நான்தான் அத்தே! ஆதி... ஆதவன்."

"எ...ன்ன? ஆதியா?" - அவசரமாய்த் தலைச் சுமையைக் கீழே போட்டு விட்டுச் சுற்றுமுற்றும் பார்த்து விட்டு... மீண்டும் அவனிடமே திரும்பினாள்.

"எய்யா! எம்புட்டு நாளாச்சு உன்னைப் பார்த்து? எப்படிய்யா இருக்க? வீட்டில அண்ணன், மதினி எல்லாரும் சுகமா இருக்காகளா?"

"எல்லாரும் நல்லா இருக்கோம் அத்தே! நீங்க எப்படி இருக்கீங்க?"

"எனக்கென்னய்யா! எப்பவும் போல இருக்கேன். ஆமா! ஏது இம்புட்டுத் தூரம்? அதுவும் இந்த இருட்டு வேளையில?"

"இல்லத்தே! சும்மாதான்... ஓடையில தண்ணி நிறைய ஓடுதுன்னு சொன்னாங்க. அதான் பார்த்திட்டுப் போலாம்னு வந்தேன்."



"அதுக்கு இப்படி முகம் கறுக்குற நேரமா வர்றது? காலையில வந்து பாருய்யா. நேரம் கெட்ட நேரம் இப்படி வராதே."

"சரிங்க... அத்தே!"

"சரி. நான் வூட்டுக்குப் போறேன். நீயும் கிளம்புய்யா. ஊர்க்காரவுக கண்ணில பட்டா கண்ட பேச்சும் பேசுவாக."

"நான் கிளம்புறேன் அத்தே! நீங்க பார்த்துப் போங்க. இருங்க... நான் தூக்கி விடுறேன்!" - என்றவாறு விறகுக் கட்டைக் கனகத்தின் தலையில் ஏற்றிவிட... நன்றியோடு அவனைப் பார்த்துப் புன்னகைத்தாள்.

"ஆதி! நீ மாறவே இல்லய்யா!"

"எப்பவும் மாற மாட்டேன் அத்தே! என்னிக்கும் நான் உங்க மருமகன்தான்! என்னை ஆசிர்வாதம் பண்ணுங்க அத்தே!" - என்றவாறு காலைத் தொட்டு வணங்கியவனைக் கண்டு பதறினாள் கனகம்.

"அடி ஆத்தே! என்னய்யா இதெல்லாம்?"

"அத்தே! காலச் சூழல்ல ஊர் ரெண்டு பட்டுக் கிடக்கு. ஆனா இந்த ஆதி எப்பவோ உங்க மருமகன்னு முடிவானவன். எத்தனை காலம் போனாலும் அது மாறாது. அத்தே! நீங்க என் அம்மா மாதிரி. என் மனசு உங்களுக்குப் புரியுதா?" - உருக்கமாய்க் கேட்டவனிடம் தடுமாறினாள்.

"எய்யா! என்னய்யா? இது... இதெல்லாம்?"

"அத்தே! எது எப்படி மாறினாலும் என் மனசு மட்டும் ஒரு நாளும் மாறாது அத்தே! எனக்குக் கல்யாணம்னு

ஒன்னு நடந்தா... நிச்சயமா அது உங்க பொண்ணு கூடத்தான். அதுக்கு உங்க ஆசியும் உதவியும் வேணும்."

"எப்பா! உனக்குப் பொண்ணைத் தரக் கசக்குமாய்யா? ஆனா ஊர் ரெண்டாப் போச்சே. நான் என்ன பண்ணுவேன்?"

"இந்த நிலைமை மாறும் அத்தே! அதுவரை சூர்யாவை எனக்காக வீட்டில வெச்சிருங்க. அவசரப்பட்டு யாருக்கும் கொடுத்திடாதீங்க!" - என்றவனின் குரலில் மரத்தின் பின்னாலிருந்த சூரியகாந்தியின் கண்கள் கலங்கின.

"என்னவோப்பா! நீ சொல்ற மாதிரி நடந்தா எனக்கும் சந்தோஷம்தான். பொழுதாகிப் போச்சு. நான் புறப்படுறேன்."

"சரிங்க அத்தே!" - கனகம் விறகுச் சுமையோடு வடக்கே நோக்கிச் செல்ல.... ஆதவன் கருவேலமரத்தை நெருங்கினான். அவனது வரவை உணர்ந்து வேகமாய் அவனை நெருங்கி வந்து இறுகக் கட்டிக் கொண்டாள் சூரியகாந்தி.

"மாமா! உன்னைப் போய்த் தப்பா நினைச்சிட்டேனே! இத்தினி வருஷமாப் பழகியும் உன்னைப் புரிஞ்சுக்காம இருந்திருக்கேனே! என்னை மன்னிச்சிடு மாமா. மன்னிச்சிடு மாமா!" - எனக் கதறியவளை நெஞ்சோடு சேர்த்துக் கொண்டான் ஆதவன்.

"அழக் கூடாது. அதான் நான் இருக்கேனில்ல?"

"மன்னிச்சிடு மாமா. உன்னை நான் தப்பா...."



"சரி... சரி. முதல்ல அழறதை நிறுத்து. நான்தான் அன்னிக்கே சொன்னேனில்ல? யார் என்ன சொன்னாலும் நம்பிடாதே. என்னை மட்டும் நம்புன்னு."

"நம்பி யிருக்கணும் மாமா! ஆனா... அவன் பேசினதைக் கேட்டும் நீ வரலைன்னதும் என் மனசு என்னவெல்லாமோ நினைச்சுப் பயந்து போச்சு. இனிமே பயப்பட மாட்டேன் மாமா! எதுக்கும் பயப்பட மாட்டேன்."

"ம்... இதே நம்பிக்கையோட இருக்கணும். அத்தை கிட்ட நான் பேசினதையெல்லாம் கேட்டியா?"

"கேட்டேன்."

"அத்தைகிட்ட ஒரு வார்த்தை சொல்லி வைக்கணும்னு தோணிச்சி. அதான் சொன்னேன். இப்ப அவங்க மனசுல என்ன இருக்குன்னு புரிஞ்சு போச்சு. இனிமே என் அப்பாவைத்தான் சமாளிக்கணும். அது என் வேலை. நேரம் காலம் பார்த்து நான் பேசுறேன்.

"நீ அதுக்குள்ள அவசரப்பட்டு இந்த மாதிரி எதையும் நம்பிடாதே. சுடலையைப் பற்றி இனி பயப்படாதே. இனி அவன் உன் வழியில குறுக்கிட மாட்டான். அப்படியே வந்து பேசினாலும் சும்மா தைரியமாச் சொல்லு.

" 'ஆதவன் என் கழுத்திலதான் தாலி கட்டுவான். நான்தான் அவன் பெண்டாட்டின்னு எப்பவோ முடிவு பண்ணியாச்சு!'ன்னு அடிச்சுப் பேசு. நீ ஏன் அவனுக்கெல்லாம் பயப்படுற? அதனாலதான் அந்த நாய் உன்னை மிரட்டியிருக்கான். அன்னிக்கே என்கிட்ட சொல்லியிருக்கலாமில்ல?

"அவனை உண்டு இல்லைன்னு பண்ணி யிருப்பேனே! இனிமே எது நடந்தாலும் உடனே என்கிட்ட சொல்லிடணும்... என்ன? புரியுதா?" - சற்று மிரட்டும் தொனியிலே அவன் கேட்க... கண்ணீரை மறந்து புன்னகையோடு தலையசைத்தாள் சூரியகாந்தி.

# 10



எல்லோரின் இதயத்திலும்
காயங்கள் உண்டு! - அதை
வெளிப்படுத்தும் விதம்தான்
வித்தியாசம்! உரிமை உள்ள
இதயத்திடம் கண்ணீராக...
மற்றவர்களிடம் புன்னகையாக...!

**சி**மெண்ட்டையும் ஆற்று மணலையும் பக்குவமாய்க் கலந்து அதை பாண்ட்டில் கோதி எடுத்துக் கொண்டு நிமிர்ந்த ஆதவனை வழி மறித்தாள் மரிக்கொழுந்து.

"மாமோய்! இப்படித் தனியே கிடந்து கஷ்டப் படுறியே? வேலைக்கு ஏதாவது ஆள் வெச்சிகிட்டா வேலை சுளுவா முடியுமில்ல?"

"யாரோட உதவியும் இல்லாம நானே கட்டணும்னு தானே இப்படித் தனியே வேலை செய்திட்டு இருக்கேன். நீ ஏன் இடைஞ்சல் பண்ற? போ."



"ஏன் மாமா... நான் வந்தாலே போ... போன்னு விரட்டுற?"

"இது என் மனைவிக்காக நான் கட்டுற வீடு. இது முடியுற வரைக்கும் யாரும் உள்ளே வரக் கூடாது."

"நான் கூடவா?"

"குறிப்பா... நீ மட்டும் வரவே கூடாது."

"ஏன்? ஏன் வரக் கூடாது?"

"கூடாதுன்னா கூடாது. வழியை விடு!" - அவளை நகர்த்தி விட்டு உள்ளே செல்ல... புன்னகையோடு வாசலருகே நின்று கொண்டாள் மரிக்கொழுந்து.

"எனக்குப் புரிஞ்சு போச்சு மாமோய்!"

"என்ன புரிஞ்சுது?"

"நான் வந்து வாழப் போற வீடு. அரைகுறை வேலையோட இருக்கும்போது வர வேண்டாம். வீடு கட்டி முடிஞ்சி எனக்குத் தாலி கட்டிட்டு இந்த வீட்டுக்குள்ள நீயே கூட்டிட்டு வரணும்னுதானே இப்ப வர வேணாம்னு சொல்ற?"

"வர வர... உனக்குக் கற்பனை வளம் அதிகமாப் போச்சி. கண்டதையும் நினைச்சி மனசைக் கெடுத்துக்காம போ... போய் வேலையைப் பாரு."

"நான் என் வேலையைப் பார்த்திட்டுத்தான் இருக்கேன். நீ உன் வேலையைக் கவனி!" - என்றவாறே வாசலருகே இருந்த ஆற்று மண் குவியலில் அமர்ந்து கொண்டாள்.

ஆதவன் வரிசையாய் அடுக்கி வைத்திருந்த செங்கலில் ஒன்றை உருவினான். அதை ரசனையாய் ஒரு கணம் நோக்கி விட்டு அதற்கு மெல்லிய முத்தம் ஒன்றை பதித்துவிட்டுச் சுவருக்கு வைத்து சிமெண்ட் கலவையைக் குழைத்து எடுத்துப் பூச ஆரம்பித்தான்.

அடுத்தடுத்த செங்கலுக்கும் அவன் முத்தம் தரவே, கேலியாய்ச் சிரித்தாள் மரிக்கொழுந்து.

"மாமோய்! இது உனக்கே ஓவராத் தெரியலை?"

"எது?"

"இப்படிக் கல்லு கட்டிக்கெல்லாம் முத்தம் கொடுக்கிறது?"

"போடி! உனக்கு என்ன தெரியும்? இது ஒவ்வொன்னும் கல்லு இல்லடி. என் மனசு. என் பொஞ்சாதி மேல நான் வெச்சிருக்கிற பிரியம். என்னோட உசிரு. இந்தக் கலவை என்னோட இரத்தம்."

"ஐய்யே... உவ்வே!"

"இந்த உடலும் உயிரும் உதிரமும் கலந்ததுதான் இந்த இல்லம். இதைப் பற்றி யெல்லாம் சொன்னா உனக்குப் புரியாது."

"புரியுது மாமா. நீ என் மேல பைத்தியமா இருக்கேன்னு புரியுது. ஆனா அதை நேரடியாச் சொல்லாம ஏன் இப்படிக் கல்லுகிட்ட எல்லாம் முத்தம் கொடுக்கிற? நான் உன் பக்கத்திலதானே இருக்கேன். எனக்குக் கொடேன்."



"அடிச்சேன்னா பல்லு எகிறிடும். என்னடி பேச்சு இது?"

"ஏன் மாமா?"

"சின்னப் புள்ளையா லட்சணமா இல்லாம என்ன பெரிய பேச்செல்லாம் பேசுற?"

"ஏன்? இப்ப என்ன தப்பாக் கேட்டுப்புட்டேன்?"

"இதோ பாரு! உன் நினைப்பு, பேச்சு எல்லாமே தப்புதான். ஏற்கெனவே சொன்னேனே... கண்டதையும் நினைச்சுக் கற்பனை பண்ணிக்காதேன்னு..."

"இதுக்கு என்ன அர்த்தம்?"

"இங்கிருந்து எந்திரிச்சிப் போன்னு அர்த்தம்!" - சொல்லிவிட்டுத் தன் வேலையில் இறங்கியவனைக் கோபமாய்ப் பார்த்தாள்.

"சரியான சிடுமூஞ்சி மாமா... நீ! உன்னைக் கட்டிக்கிட்டு என்ன பாடுபடப் போறேனோ?"

"அந்தக் கவலை உனக்கு வேண்டாம். உனக்கு எப்படிப்பட்ட மாப்பிள்ளை வேணும்னு அப்பாகிட்ட சொல்லு. உடனே பார்த்திடுவாங்க."

"விளையாடாதே மாமா!"

"ஏய்! உன்கிட்ட எனக்கென்னடி விளையாட்டு? சும்மா இங்க நின்னு என் வேலையைக் கெடுக்காதே. இன்னிக்கு ஒரு நாள்தான் லீவு. அதுலயாவது வேலையைச் செய்ய விடு!" - என்றான் சுள்ளென.

"மாமா! வர வர... உன் பேச்சே புரிய மாட்டேங்குது. நீ ஏதோ திருட்டு வேலை செய்யுறன்னு நினைக்கிறேன்."

"என்னடி உளர்ற?"

"ஆமா! இது நாம வாழப் போற வீடு. என்னை இந்த வீட்டில காலடி எடுத்து வைக்க விட மாட்டேங்கிற. இதுக்கு என்ன அர்த்தம்?"

"நீ மட்டுமில்ல. வேற யாருமே உள்ளே வரக் கூடாது."

"ஏன்?"

"மொத மொதல்ல நானும் என் பொஞ்சாதியும் சேர்ந்துதான் இங்கே நுழையணும். அதுக்கப்புறம்தான் மத்தவங்கள்லாம்..."

"ஏன் மாமா! நான் இங்கேதானே நிற்கிறேன். நீயும் நானும்னு சொல்ல வேண்டியதுதானே? அதென்ன என் பொஞ்சாதி என் பொஞ்சாதின்னு வார்த்தைக்கு வார்த்தை சொல்றியே?"

"மரி! நீ சின்னப் பொண்ணு. இன்னும் கொஞ்சம் வளரு. அதுக்கப்புறம் எல்லாத்தையும் உன்கிட்ட சொல்றேன்."

"ஏன்? இப்பவே சொன்னா என்னவாம்?"

"சொல்லலாம். ஆனா நான் சொல்றதைக் கேட்கிற பக்குவம் உனக்கு இல்லையே!"

"உன்னைக் கல்யாணம் பண்ணிக் குடும்பம் நடத்துற அளவுக்கு எம் பொண்ணுக்குப் பக்குவம்



இருக்குப்பா. நீ ஒன்னும் பயப்படாதே. நான் எல்லாம் சொல்லிக் கொடுத்துதான் அவளை வளர்த்திருக்கேன்!" - என்றவாறே வந்த முத்தரசியைக் கண்டதும் வாயை மூடிக் கொண்டு வேலையில் கவனத்தைச் செலுத்தினான் ஆதவன்.

அத்தையிடம் பேசுவதைக் காட்டிலும் வாயைத் திறக்காமல் இருப்பதே நல்லது. வாயைக் கிளறி ஏதேனும் பிரச்சனையை உண்டு பண்ணிப் பஞ்சாயத்துப் பண்ணத் தமையனை அழைத்துக் கொண்டு வந்து விடுவாள். எதற்கு வம்பு?

பதில் ஏதும் பேசாமல் அவன் வேலை செய்து கொண்டிருக்க... மரிக்கொழுந்து சலிப்பாய்த் தன் அன்னையை ஏறிட்டாள்.

"யம்மா! நீ எதுக்கு இங்கே வந்தே?"

"ஏன்டி?"

"இவ்வளவு நேரமா நானும் மாமனும் ஜாலியாப் பேசிட்டு இருந்தோம். நீ வந்ததும் மாமனோட முகமே மாறிப் போச்சு. திரும்பவும் உர்ருன்னு ஆயிடுச்சு."

"ஏன் ஆகாது? மாமியார் மேல இந்தப் பயமாவது இருக்கணும்..."

"நீ போம்மா. ஏதாவது வேலை இருந்தா செய்."

"ஆதவா! உனக்குக் குடிக்க ஏதாவது கொண்டு வரட்டுமா?"

"எனக்கு எதுவும் வேணாம். முதல்ல இவளைக் கூட்டிட்டுப் போங்க. இங்கே உட்கார்ந்து என் வேலையைக் கெடுத்திட்டு இருக்கா."

"ஏன் மாமா! நான் சும்மாதானே பேசிட்டு இருக்கேன்."

"என்னடா! வேலையைத் தொடங்கிட்டியா? ஆமா! எத்தனை வருஷமா இதைக் கட்டிட்டு இருப்ப?" - என்றவாறு கையில் சிகரெட்டோடு வந்தான் சந்திரன்.

"இன்னும் கொஞ்ச நாள்ல முடிஞ்சிடும்ணா!"

"சீக்கிரம்டா. இந்த வருஷமே உன் கல்யாணத்தை முடிச்சிடணும்னு அப்பா சொல்றாங்க. கூட நாலு பேரைப் போட்டுச் சட்டுப்புட்டுன்னு வேலையை முடி."

"இதையேதான் மாமா நானும் சொல்றேன். மாமன்தான் ரொம்பப் பிடிவாதம் பண்ணுது."

"இன்னும் எவ்வளவு நாளைக்குப் பிடிவாதம் பிடிப்பான்? கல்யாணமாகிட்டா... உன் கால்ல விழுந்து கிடப்பான் பாரு!"

"போங்க மாமா! எனக்கு வெட்கமா இருக்கு..." - மரிக்கொழுந்து முகத்தை மூடிக் கொள்ள... சந்திரன் முத்தரசியை ஏறிட்டான்.

"அத்தே! சும்மா சொல்லக் கூடாது. மரி நல்லாவே வெட்கப்படுறா."

"அவ நான் பெத்த பொண்ணாச்சே!" - முத்தரசி பெருமையாய்ச் சொல்ல... சந்திரன் சிரிக்காமல் சொன்னான்.



"அதான் அத்தை ஆச்சரியமா இருக்கு! நீங்க கல்யாணத்தன்னிக்குக்கூட வெட்கப்படலையாமே?"

"ஏலேய்! சின்னவனை விட உனக்குக் குசும்பு அதிகம்தான்!" - முத்தரசியும் சிரித்தவாறே சொல்ல... மூவரும் சேர்ந்து நகைக்க... இவர்களது பேச்சைக் காதில் வாங்காமல் தனது வேலையில் மூழ்கியிருந்தான் ஆதவன்.

அவனது மனம் சூரியகாந்தியின் நினைவில் நீந்திக் கொண்டிருந்தது.

'இந்த இடத்தில் ஆளுயரக் கண்ணாடி வாங்கி வைக்க வேண்டும். கையோடு சற்றுப் பெரியதாய் நல்ல வேலைப்பாடுடன் கூடிய மரக் கட்டில் வாங்கிப் போட வேண்டும். பாவம் சூர்யா! இதுவரை தரையில்தான் படுத்திருப்பாள்.

இனி அவளைத் தரையில் படுக்க வைக்கக் கூடாது. கட்டிலுடன் சேர்த்து இலவம் பஞ்சு மெத்தை ஒன்றும் வாங்கி விட வேண்டும். திருமணமான பிறகு அவளை வேலைக்கு அனுப்பக் கூடாது. இதுவரை அவள் உழைத்தது போதும். இனியாவது நிம்மதியாய் நிழலில் வாழட்டும்.'

"ஆதி... என்னடா! நான் கேட்டது காதுல விழலையா?"

"ம்... என்ன அண்ணா?"

"உன் வண்டியை எங்கேன்னு கேட்டேன்."

"ஓ! உனக்கு விஷயமே தெரியாதா? ஆமா... வீட்டில இருந்தாத்தானே தெரியும். நீ எப்போ வீட்டில இருந்திருக்க?"

"என் வேலை அப்படிடா. சரி. வண்டி என்ன ஆச்சு?"

"நான் சொல்றேன் மச்சான். வண்டி ஒர்க் ஷாப்ல இருக்கு!" - என்ற சுடலையைக் குழப்பமாய்ப் பார்த்தான் சந்திரன்.

"ஒர்க் ஷாப்லயா? ஏன்?"

"அது... ஒரு சின்ன ரிப்பேர்."

"ரிப்பேரா? டேய்! அது புது வண்டிடா. ஆதி வண்டியை எடுத்து இன்னும் ஒரு வருஷம்கூட ஆகலையே... என்ன ரிப்பேர்?"

"அதையும் அவன்கிட்டயே கேளு."

"என்ன சுடலை? நீதான் ஏதாவது பண்ணினாயா?"

"இல்ல மச்சான். போன வாரத்திற்கு முந்தின ஞாயிற்றுக் கிழமை சும்மா... நம்ம பசங்களோட தியேட்டருக்குப் போனேனா..."

"ம்ப்ச்! நான் வண்டியைப் பத்திக் கேட்கிறேன். நீ ஏன் கண்டதை எல்லாம் சொல்லிட்டு இருக்க?"

"நானும் வண்டியைப் பத்திதான் சொல்றேன் மச்சான். தியேட்டருக்குப் போற வழியில ஒரு சின்னப் பிரச்சனை!"

"என்ன?"



"நான் கொஞ்சம் வேகமாப் போனேன். மழை பெய்ததால ரோடு முழுக்க குண்டும் குழியுமா சகதியா வேற இருந்திச்சா! வண்டி பல்டி அடிச்சிருச்சு. அடி கொஞ்சம் பலம்தான். எனக்கு இல்ல... வண்டிக்கு!"

"நீ ஏன்டா வண்டியை எடுத்திட்டுப் போனே? ஊர் சுத்துறதுக்குத்தான் வண்டி வாங்கி வெச்சிருக்கோமா?"

"ஏம்பா! உங்க வீட்டு வண்டியை எம்புள்ள ஓட்டக் கூடாதா? அதுக்கு அவனுக்கு உரிமை இல்லையா?" - கடுத்த முகமாய்க் கேட்ட முத்தரசியிடம் மறுப்பாய்த் தலையசைத்தான்.

"உரிமையைப் பத்திப் பேசுற அளவுக்கு இப்ப என்ன அத்தை கேட்டுட்டேன்? ஆதி வேலைக்குப் போறதுக்காக வாங்கின வண்டி அது. அதைக் கொண்டு போய் உடைச்சிட்டு வந்திருக்கான் இவன். ஆதி எப்படி வேலைக்குப் போவான்?"

"அதெல்லாம் போயிட்டு வந்திட்டுத்தான் இருக்கான்."

"என்ன? எப்படி?"

"இவன் மட்டுமா வேலைக்குப் போறான்? நம்ம ஊருக்காரவுக போற டெம்போ வண்டியிலதான் இவனும் போறான். பெட்ரோல் செலவு மிச்சம்தானே."

"ஆதி! என்னடா இதெல்லாம்?"

"விடுண்ணே! இன்னும் ஒரு வாரத்தில வண்டி ரெடியாகிடும். அதுவரை சமாளிச்சுக்கிறேன்."

"வண்டியில என்ன பிரச்சனையாம்?"

"ஏகப்பட்ட டேமேஜ் ஆகியிருக்குதாம். சில பொருட்களை மாத்தணுமாம். எப்படியும் அஞ்சு ரூபா ஆயிடும். பணத்தைப் பொரட்டிட்டுத்தான் வண்டியை எடுக்கப் போகணும்."

"மாப்பிள்ளை! வெறும் அஞ்சு ரூபாதானா? அதை ரெடி பண்ணவா இவ்வளவு யோசிக்கிற?"

"முட்டாப் பயலே! ஐயாயிரம்டா..."

"ஐயோ! அஞ்சு ஆயிரமா?" - வாயைப் பிளந்தான் சுடலை.

மரிக்கொழுந்து எழுந்து வந்து அண்ணனின் முகத்தில் இடித்தாள். "வாயைப் பிளக்காதே. இதெல்லாம் வண்டியைத் தொடுறதுக்கு முன்னால யோசிச்சிருக்கணும். நீ கை வைக்கிறதெல்லாம் இப்படித்தானே போகுது. என் மாமன் கஷ்டப்படுற பணமெல்லாம் உன்னால கரியாகுது."

"ஏய்! நான் உன் அண்ணன்... மரி!"

"அண்ணனா இருந்தா என்ன? இனிமே மாமன் வண்டியைத் தொட்ட நானே கையை ஒடிச்சிப்புடுவேன்... பார்த்துக்கோ!"

"என்ன மரி! இப்பவே புகுந்த வீட்டுப் பக்கம் சாய்ஞ்சிட்ட? நான் மட்டும் வண்டியில பந்தாவா போகணும்னு ஆசைப்படக் கூடாதா?"

"ஆசைப்படலாம். சொந்தமா உழைச்சி உன் கைக்காசைப் போட்டு வண்டியை வாங்கி அதுல நாள் பூரா சுத்து. யார் வேணாம்னு சொல்வாங்க?"



"யம்மா! மரியப் பாரேன்... என்னை எப்படி மட்டம் தட்டுறா?"

"விடுடா. அவ சொல்றதும் நியாயம்தானே. ஆதி சேர்க்கிற பணத்தையெல்லாம் நீ இப்படி வீணாக்கினா... அவ கல்யாணம்தானே தள்ளிப் போகுது... இதையெல்லாம் யோசிக்க மாட்டியா? உனக்குப் பொறுப்பு வரணும்னுதானே வேலைக்கு அனுப்புறேன்.

"நீ நாலு காசு சம்பாதிச்சாத்தானே உன் தங்கச்சியைக் கவுரதையா கட்டிக் கொடுக்க முடியும்? என்னதான் அண்ணன் மகன்னாலும் பொண்ணை அப்படியே சும்மா அனுப்ப முடியுமா?" - அத்தையின் பேச்சு எங்கு சுற்றினாலும் கடைசியில் கல்யாணத்தில் வந்துதான் நிற்கும் என்பதை நன்கு உணர்ந்திருந்த ஆதவன்... சட்டெனப் பேச்சை மாற்றினான்.

"அண்ணே! நீ என்ன வண்டியைக் கேட்கிற? வெளியே எங்கேனும் போறியா?"

"ஆமாம் ஆதி! குருவிக்குளம் வரைக்கும் போகணும்."

"அங்கே என்ன வேலை?"

"உன் மதினிக்குக் கொஞ்சம் மேலுக்குச் சுகமில்ல. அதான் ஆஸ்பத்திரிக்குப் போயிட்டு வரலாம்னு..." - சந்திரன் சொல்ல... ஆதவனின் வேலை தடைப்பட்டது. கையில் இருந்த கலவைக் கரண்டியை வைத்து விட்டு வெளியே வந்தான்.

"ஏன்? மதினிக்கு உடம்புக்கு என்ன?"

"அது... என்னன்னு தெரியலைடா. அம்மாதான் டாக்டர்கிட்ட கூட்டிட்டுப் போய் ஏதோ டெஸ்ட் பண்ணணும்னு சொல்லிச்சு. அடிக்கடி வாந்தி பண்ணுறா. எதுவும் சாப்பிட மாட்டேங்கிறாளாம்."

"நான்தான் நேத்தே சொன்னேனே மசக்கையின்னு... பொறவு எதுக்கு ஆஸ்பத்திரிக்குப் போகணும்?"

"அண்ணே! அட... நீ அப்பா ஆகப் போறியா?" - உற்சாகமாய் அண்ணனின் கையைப் பற்றிக் குலுக்கினான் ஆதவன்.

"சும்மா இருடா. டாக்டர் சொன்ன பிறகுதான் தெரியும்."

"நம்ம அத்தையை விடப் பெரிய ஆளா டாக்டர். சரி. நீ ஒன்னு பண்ணு. பேசாம ஒரு கார் பிடிச்சி மதினியைக் கூட்டிட்டுப் போ. பத்திரம்!"

"காரா? அது எதுக்குடா ஆடம்பரம்?"

"இது ஆடம்பரம் இல்லண்ணே! அத்தியாவசியம். நம்ம ஊர் பஸ்ல ஏறிடாதே. ரோடு முழுக்கப் பள்ளமாக் கிடக்கு. பஸ் ரொம்ப குலுக்கும். மதினிக்கு எதுவும் ஆகிடக் கூடாது. கார்லயே போயிட்டு வந்திடு."

"கார் மட்டும் ஆகாசத்திலேயா பறக்கும்? அதுவும் இதே ரோட்ல தானே போகப் போறது?" - முத்தரசி நீட்டி முழக்கினாள்.

"அத்தே! டிரைவர்கிட்ட சொன்னா அலுங்காம... குலுங்காம கூட்டிட்டுப் போவார். பஸ்ல அப்படிச் சொல்ல



முடியுமா? அண்ணே! நீ கிளம்பு. துட்டு வேணும்னா என் சட்டைப் பையில இருக்கும். எடுத்திட்டுப் போ."

"சரிடா. அப்ப நான் போயிட்டு வந்திடுறேன்."

"ம்... பத்திரம். வரும்போது நல்ல சேதியோட வா!" - என அண்ணனை வழியனுப்பி விட்டுத் தன் வேலையைத் தொடர முயன்றவனைத் தடுத்தாள் முத்தரசி.

"ஆதவா! இப்படி ஏமாளியா இருக்காதய்யா!"

"என்ன அத்தே சொல்றீங்க?"

"அவன் பொஞ்சாதியை ஆஸ்பத்திரிக்குக் கூட்டிட்டுப் போக நீ ஏன் பணம் கொடுக்கிற? ஏன் அவன் செலவு செய்தா என்னவாம்?"

"அத்தே! என்ன பேசுறீங்க? அவன் என் அண்ணன்!"

"தாயும் பிள்ளையுமா இருந்தாலும் வாயும் வயிறும் வேறுதானே. நீ சம்பாதிக்கிற பணத்தையெல்லாம் இப்படி அண்ணன் தம்பிக்கே கொடுத்திட்டு இருந்தா... நடுத் தெருவுலதான் நிற்கணும்...."

"அதைப் பற்றி நீங்க ஒன்னும் கவலைப்பட வேண்டாம்!" - சுள்ளென எரிந்து விழுந்தான் ஆதவன்.

"அதெப்படிய்யா நான் கவலைப்படாம இருக்க முடியும்? உன் கூடச் சேர்ந்து என் மகளுமில்ல... தெருவில நிற்கணும்."

"ஏன்?"

"என்னப்பா விபரமில்லாமப் பேசுற? கட்டின புருஷன் தெருவில நிற்கும்போது பெண்டாட்டி எங்கே நிற்பாள்?"

"உங்க பொண்ணை உங்க வசதிப்படி பணக்காரனா பார்த்துக் கட்டி வையுங்க. ஒரு குறையும் வராது அவளுக்கு."

"ஆதவா!"

"மரி எனக்கு அத்தை மகள்னா தாமரை மதினி என் மாமன் மகள். என் அண்ணன் மனைவி. எங்க வீட்டின் மூத்த மருமகள். அவங்களுக்குச் செலவு பண்ணுறது என் கடமை. உங்க கணக்கு வழக்கையெல்லாம் என்கிட்ட காட்டாதீங்க. கிளம்புங்க."

"மாமா! அம்மா பேசினது தப்புன்னா நீ அம்மாவைத்தானே திட்டணும். எதுக்காக என்னைப் பந்தாடுற?" - கோபமாய்க் கேட்டவளை முறைத்தான் ஆதவன்.

"இதோ பார் மரி! நான் ஒன்னும் கோபத்திலேயோ விளையாட்டுக்கோ சொல்லலை. உண்மையைத்தான் சொல்றேன். உங்கம்மா சொல்றதுக்கெல்லாம் தலையாட்ட நான் ஒன்னும் பொம்மையில்லை. உங்கம்மாதான் உன் மனசைக் கெடுத்து வெச்சிருக்காங்க.

"உன் நல்லதுக்குத்தான் சொல்றேன். மனசில கண்ட நினைப்பையும் வெச்சிட்டுத் திரியாதே. நான் இன்னும் உன்னைக் குழந்தையாத்தான் நினைச்சிட்டு இருக்கேன். போ... போய் வேற வேலை இருந்தா பார். உங்களையும் சேர்த்துத்தான் சொல்றேன்!" - என்றவாறு



விடுவிடுவென அவன் உள்ளே போய்விட... முத்தரசியின் முகம் அவமானத்தால் கறுத்துப் போனது.

கண்களில் துளிர்த்த நீரோடு உறைந்து போய் நின்ற மகளைக் கண்டதும்... அவளது இரத்தம் கொதிக்கத் துவங்கியது.

# 11



ஒரு உண்மையான அன்பை
நீ எவ்வளவு காயப்படுத்தினாலும்
அது உன்னையே மீண்டும்
நேசிக்கும்! - ஏனென்றால் நேசம்
என்பது கானல் நீரல்ல, மறைவதற்கு!

விடாமல் இருமிக் கொண்டே இருந்தவளைச் சற்றுப் பயமாய்ப் பார்த்தாள் சூரியகாந்தி. தொடர்ச்சியாய் இருமியதில் தாயின் தேகம் இளைத்தது.

"அம்மா! எத்தனை நாள்தான் இருமிட்டே இருப்பே. வாம்மா! ஆஸ்பத்திரிக்குப் போகலாம்."

"வேணாம்மா. சுக்குக் கஷாயம் வெச்சிக் குடிச்சா சரியாப் போயிடும்."

"அதான் நாலு நாளா குடிக்கிறியே. இருமல் நிக்கவே இல்லையே... வாம்மா! ஆஸ்பத்திரிக்குப் போயிட்டு வந்திடலாம்."

"சொன்னாக் கேளு ஆத்தா! உடம்பெல்லாம் சுரம் கண்ட மாதிரி நோவுது. என்னால அம்புட்டுத் தூரம் நடக்க முடியாது."

"நடக்க வேணாம்மா. மினி பஸ்ல போயிட்டு வந்திடலாம். அஞ்சு ரூபாதான் டிக்கெட். எழுந்திரும்மா. போயிட்டு வந்திடலாம்."

"இன்னும் சோறு ஆக்கலையே!"

"அதெல்லாம் வந்து ஆக்கிக்கலாம். இன்னிக்கு லீவுதானே. அண்ணன் லேட்டாத்தான் சாப்பிடும். நீ சேலையை ஒழுங்காக் கட்டு. நான் போய் அண்ணன்கிட்ட காசு வாங்கிட்டு வர்றேன்."

"ம்..."

"அம்மா! ஒன்பதரை பஸ்ஸை விட்டா... அப்புறம் பதினொரு மணிக்குத்தான் அடுத்த பஸ். சீக்கிரமாக் கிளம்பு. டாக்டர் போயிடப் போறார்..." - என்றவாறே கொல்லைப்புறத்தில் நின்று பல் துலக்கிக் கொண்டிருந்த முருகேசனை நெருங்கினாள்.

"அண்ணே!"

"ம்..." - வாயில் நுரையோடு திரும்பினான்.

"அம்மாவுக்கு உடம்பு சுகமில்ல. ஆஸ்பத்திரிக்குப் போகணும். காசு இருந்தா ஒரு இருபது ரூபா கொடுண்ணே!" - சூரியகாந்தி தயக்கமாய்க் கேட்க... வாயிலிருந்து நுரையைத் துப்பிவிட்டு நிமிர்ந்தான்.

"காசா? எதுக்கு?"



"ஆ...ஸ்...பத்திரிக்குப் போறதுக்கு..."

"ஏன்? கவர்மெண்ட் ஆஸ்பத்திரிக்குப் போனா நம்ம கவுரவம் குறைஞ்சிருமோ?"

"கவர்மெண்ட் டாக்டர்கிட்டதான்னே போறோம்."

"பிறகெதுக்கு காசு?"

"அம்மாவுக்கு நடக்க முடியலையாம். அதான் பஸ்ல போயிடலாம்னு..."

"அதுக்குக்கூட கையில காசில்லாமலா இருக்கீங்க? ரெண்டு பேரும் சம்பாதிக்கிறதை என்ன பண்றீங்க?"

"நான் இந்த வாரம் சரியா வேலைக்குப் போகலை. அடுத்த வாரம்தான் சம்பளத்தைச் சேர்த்து வாங்கணும். அம்மா சம்பளம் வட்டி கட்டியாச்சு. ஒரு இருபது ரூபா மட்டும் கொடுண்ணே. டிக்கெட்டுக்கு மட்டும் தந்தாப் போதும்."

"ச்சே! எப்பப் பாரு... ஒரே புலம்பல்தான். இல்ல... இல்லன்னு சொல்லியே இந்த வீட்டில பத்துப் பைசாகூட தங்க மாட்டேங்குது. நான் என்ன பனங்காய்ச்சி மரமா? கேட்கிறப்பெல்லாம் கொடுக்கிறதுக்கு?" - முருகேசன் சுள்ளென விழுந்து விட்டு வாயைக் கொப்புளிக்கத் துவங்க... சூரியகாந்தி பொறுமையாய் நின்றாள்.

"நீ என்றைக்கு இந்த வீட்டிற்காக ஒத்தை ரூபா செலவழித்தாய்? நாங்கள் உன்னிடம் எப்போது காசு கேட்டிருக்கிறோம். ரெண்டு பொட்டச்சிங்க உடம்பு நோக உழைக்கும் பணத்தில் நீ வக்கணையாய்ச் சாப்பிட்டுக்

கொண்டு உன் பணத்தைச் சேமித்துக் கொண்டிருக் கிறாய்.'பெற்றவளுக்காக ஒரு இருபது ரூபாய் கூட செலவழிக்க மாட்டாயா? நீ எப்படி இறுதிக் காலத்தில் கஞ்சி ஊத்துவாய்? இந்த அப்பா எந்த நம்பிக்கையில் ஊரெல்லாம் கடன் வாங்கி உன்னைப் படிக்க வைத்தார்? நீயா இந்தக் குடும்பத்தைக் காப்பாற்றப் போகிறாய்?' - மனக் குமுறலை வெளிக்காட்ட முடியாமல் பற்களைக் கடித்துக் கொண்டு நின்றாள்.

'இதில் ஒரு வார்த்தையைக் கேட்டாலும் போதும். இன்று முழுக்கக் கூத்தித்துக் கொண்டிருப்பான். இது கோபத்தை வெளிக்காட்டும் நேரமல்ல. அம்மாவின் வைத்தியம்தான் முக்கியம். ச்சே! ஒழுங்காய் வேலைக்குப் போயிருந்தால் இப்படி இவன் முன் கையேந்தி நின்றிருக்க வேண்டாம்.

'எல்லாம் என்னால் வந்தது. அரைகுறையாய்ப் புரிந்து கொண்டு ஆதவன் மேலுள்ள கோபத்தை வேலையில் காட்டினேனே...' - தன்னையே நொந்து கொண்டாள்.

முகம் கை கால் கழுவி டவலால் துடைத்தபடி திரும்பியவன்... இன்னும் நின்று கொண்டிருந்த தங்கையைக் கண்டதும் குரலை உயர்த்தினான்.

"என்ன? நீ போகலையா?"

"நீ இன்னும் காசு தரலையே!"

"காசா? மாசக் கடைசியில என்கிட்ட ஏது காசு? நானே திணறிட்டு இருக்கேன். சும்மா நடந்தே போங்க."



"அம்மாவுக்கு நடக்க முடியாதுண்ணே!"

"உனக்கு முடியும்ல? நீ மட்டும் போய் டாக்டர்கிட்ட அம்மாவுக்கு இப்படி இருக்குன்னு சொல்லு. மருந்து தருவார். போ!" - என்றவனை வெறுப்பாய் நோக்கிவிட்டு, வீட்டிற்குள் நுழைந்தாள்.

கசங்கியிருந்த புடவையை லேசாய் நீவிவிட்டுத் தலையைக் கொண்டையாக்கிக் கொண்டிருந்தாள் கனகம்.

"சூரி! அண்ணன் காசு தந்தானா? போலாமா?" - என்ற தாயைக் காண்கையில் கண்கள் கரித்தன. உழைத்து உழைத்து ஓடாய்த் தேய்ந்தவள்... இன்று உடம்பு முடியாதபோது வைத்தியம் செய்யக்கூட வக்கில்லாமல் போயிற்று.

அதோடு மகன் சொன்னது தெரிந்தால் இன்னும் வருந்துவாள். ஒரு நீண்ட பெருமூச்சோடு தாயைப் பார்த்தாள்.

"ம்... காசு தந்திச்சிம்மா. ஆனா நீ வர வேண்டாம். நான் மட்டும் போயிட்டு வந்திடுறேன்."

"என்னடி சொல்ற?"

"உனக்கு ரொம்ப மூச்சு வாங்குது. அதனால உன்னை அலைய வைக்க வேண்டாம்னு அண்ணன் சொல்லுது. வழக்கமா போற ஆஸ்பத்திரிதானே! தெரிஞ்ச டாக்டர்தான். நானே போய் வாங்கிட்டு வந்திடுறேன்."

"அப்ப சரி. என்னால நிற்கவே முடியலை!" -என்றவாறு தரையில் அமர்ந்த தாயைப் பரிவோடு தலை வருடினாள் சூரியகாந்தி.

"அம்மா! நீ பேசாம படுத்துக்கோ. நான் மருந்து வாங்கிட்டு வந்து சோறு ஆக்குகிறேன். நீ படு. வேலை எதையும் செய்து இன்னும் அதிகமாகிடாம. படும்மா..."

"சரி. சீக்கிரம் வந்திடு சூரி. டாக்டர்கிட்ட உடம்பு நோவு தலைப் பாரம் எல்லாம் சொல்லு."

"சரிம்மா."

"கஞ்சித் தண்ணி குடிச்சிட்டுப் போத்தா."

"வேணாம்மா. நேரமாகிப் போச்சு. நான் போயிட்டு வர்றேன்!" - என்றவள் காலில் செருப்பை மாட்டிக் கொண்டு வெளியேறினாள்.

காலை வெயில் இப்போதே சுரீரென்றது.

'இன்னும் நான்கு கிலோ மீட்டர் நடக்க வேண்டும். நடையை எட்டிப் போட்டால் அரை மணி நேரத்தில் மருத்துவ மனையை அடைந்து விடலாம். கூட்டம் எப்படியிருக்குமோ? சீக்கிரம் வந்தால்தான் சமைக்க முடியும்' - என்ற எண்ணத்தோடு நடையில் வேகத்தைக் கூட்டினாள்.

தொடர்ந்து பெய்த மழையால் சாலையோரமாய் வெட்டி விடப்பட்டிருந்த வாய்க்காலில் நீர் சலசலத்து ஓடிக் கொண்டிருந்தது. பூமியெங்கும் பசுமையாய் கண்ணுக்குக் குளுமையாய்க் காட்சியளித்தது.

'நடக்கும்போது வெறுமனே பாதையை மட்டும் பார்த்தா அலுப்பாத்தான் இருக்கும். தொலைவும் அதிகமாகத் தெரியும். அதனால பாதையில கவனமா



இருந்தாலும் அக்கம் பக்கம் உள்ள மரம், மட்டையைப் பார்த்திட்டே நடந்தா கால் நோவாது. நடந்த மாதிரியும் இருக்கும். இயற்கைக் காட்சிகளை ரசித்தது மாதிரியும் இருக்கும்!" - என்பார் அப்பா.

சூரியகாந்தியின் பத்தாவது வயதில் அவளையும் ஒரு சித்தாளாகக் களத்தில் இறக்கி விட்டிருந்தார் அப்பா. அவளால் இயன்ற வேலைகளைச் செய்ய வேண்டும். இரண்டு இரண்டு செங்கல்களாகத் தலையில் சுமந்து செல்வாள்.

இடைவேளையின்போது காபி வாங்கி வருவதும், வெற்றிலை, பாக்கு, பீடி, புகையிலை என வாங்குவதுமாய் முழு நேர வேலை இருக்கும். அப்போது சித்தாள்களுக்கு நாற்பது ரூபாய் சம்பளம்.

சூரியகாந்தி சிறுமி என்பதால் இருபத்தைந்து ரூபாய் கிடைக்கும். அதையும் அப்பா சற்றும் தயங்காமல் வாங்கி இடுப்பில் செருகிக் கொள்வார். அன்று தொடங்கிய உழைப்பு இன்று வரை ஓய்ந்தபாடில்லை.

அப்போதெல்லாம் வேன் கிடையாது. சாலை வசதிகள் கூட கிடையாது. ஒற்றையடிப் பாதையில் தலைச் சுமையோடு இடுப்பில் தங்கையையும் சுமந்து கொண்டு நடக்க வேண்டும். அம்மாவின் இடுப்பிலும் முதுகிலுமாய் இரு தம்பிகள்.

வெயிலும் மழையும் பாராது நடந்ததில் மூத்த தம்பி திடீரென நோய்வாய்ப்பட்டு அது என்ன நோய் என உணரும் முன்பே மரித்துப் போனான். அதன் பிறகு

தம்பியையும் தங்கையையும் வேலை செய்யும் இடத்திற்கு எடுத்துச் செல்லச் சூரியகாந்தி சம்மதிக்கவில்லை.

அப்போதுதான் நடக்கப் பழகியிருந்த செண்பகத்தையும், கதிரேசனையும் பாலர் பள்ளியில் கொண்டு போய் விட்டுவிட்டு வேலைக்குச் செல்வாள். பிறகு அவர்கள் வளர வளரத் தானே சென்று பள்ளியில் சேர்த்தாள்.

இந்த உழைப்பும் வெயிலும் தங்களோடு போகட்டும். தம்பியும் தங்கையுமாவது நிழலில் உட்கார்ந்து படித்து வேளைக்குச் சாப்பிடட்டும் என்று தந்தையின் வாயை அடைத்து விட்டாள்.

இதில் எந்தக் கஷ்டமும் தெரியாமல் சொகுசாய் வளர்ந்தவன் முருகேசன்தான். பள்ளிப் படிப்பு, மேல் படிப்பு என உறவினர் வீட்டிலும், பணம் கட்டிச் சேர்க்கும் விடுதியிலும் சேர்த்துப் படித்து இதோ இப்போது காற்றாடியின் கீழ் அமர்ந்து கணக்கெழுதுகிறான்.

பஸ்ஸுக்கு ஒரு பத்து ரூபாய்கூடத் தராமல் வயதுப் பெண்ணை வேகாத வெயிலில் தனியே போகச் சொல்லி அனுப்பியிருக்கிறான். இவன் நெஞ்சில் மட்டும் ஏன் ஈரமே இல்லாமல் போனது? நான் பிறந்த வயிற்றில்தானே இவனும் பிறந்தான்?

பிறகெப்படி எந்த ஒட்டுதலும் இல்லாமல் இவனால் விலகி நிற்க முடிகிறது? பெற்றவள் உடல் முடியாமல் கிடக்கும்போது சைக்கிளில் வைத்து மருத்துவமனைக்குக் கூட்டிச் சென்றிருக்க வேண்டாமா? இவனுக்கு ஏன் அது தோன்றவில்லை?



தன் நினைப்போடு உழன்று கொண்டிருந்தவளை உரசிக் கொண்டு போனது ஒரு வெள்ளை நிற அம்பாஸிடர். சட்டெனப் பதறி விலகி நின்றவள்... 'எவன்? இப்படிப் போறது?' - எனப் பார்த்தாள்.

அதற்குள் இவளுக்கு முன் சற்றுத் தூரம் போய் விட்ட காரைப் பார்த்து முகம் சுருங்கினாள் சூரியகாந்தி.

கார் நேராய்ச் செல்லாமல் வளைந்து நெளிந்து தாறுமாறாய்ப் போய்க் கொண்டிருந்தது.

"சரிதான்! காலையிலேயே தண்ணியடிச்சிட்டு காரை எடுத்திட்டு வந்திட்டான் போலிருக்கு. இப்படியே காரைக் கொண்டு போய் எத்தனை உசுரைக் கொல்லப் போறானோ?" - சத்தமாகவே முணுமுணுத்துவிட்டுச் சாலையை விட்டு இறங்கி, மணல் பாதையில் நடக்கத் துவங்கினாள்.

நான்கைந்து அடிகள் கூட நடந்திருக்க மாட்டாள். திடும்மென ஏதோ சத்தம் கேட்க... பதட்டமாய் நிமிர்ந்து பார்த்தவள்... பதறி நெஞ்சில் கை வைத்து அதிர்ந்தாள்.

முன்னே சென்று கொண்டிருந்த கார் நிலை தடுமாறிச் சரிந்து சாலையைத் தேய்த்துக் கொண்டே போக... காரிலிருந்து புகை எழுந்தது.

'ஐயோ! உள்ளே டிரைவர் இருப்பானே?' - என்றவாறு காரை நோக்கி ஓட ஆரம்பித்தாள். ஆள் அரவமற்ற சாலையில் வேறு எந்தப் போக்குவரத்தும் இல்லாமல் ஆழ்ந்த அமைதியாய் இருக்க... அக்கம் பக்கம் இருந்த வயல்காட்டைப் பார்த்துக் கத்திக் கொண்டே ஓடினாள் சூரியகாந்தி.

"யாராவது ஓடி வாங்களேன்... கார் உருண்டு கிடக்கு. யாராவது வாங்களேன்..."

மூச்சிரைக்க ஓடியவாறே காரை நெருங்கியவள் இன்னும் மிரண்டாள். காருக்குள்ளிருந்து கூக்குரல்கள் கேட்டுக் கொண்டிருந்தன. ஆணும் பெண்ணுமாய்க் குரல் கொடுக்க... வேகமாய் ஓடிக் காரை அடைந்தாள்.

காரின் கண்ணாடிகள் உடைந்து சிதறிக் கிடக்க... கார் பக்கவாட்டில் சரிந்து நசுங்கிப் போயிருந்தது. அதன் சக்கரங்கள் இன்னும் சுற்றிக் கொண்டே இருக்க, செய்வதறியாது திகைத்து... காரைச் சுற்றிச் சுற்றி வந்தாள் சூரியகாந்தி.

"ஐயோ! கதவை எப்படித் தொறக்கிறதுன்னு தெரியலையே! உள்ளே யார் இருக்கீங்க? நான் பேசுறது கேட்குதா?" - அவளது கத்தலில் நெற்றியில் வழிந்த இரத்தத்தோடு கண்களைத் திறந்தான் சந்திரன். தன் அருகே அமர்ந்திருந்த தாமரை ரத்தமாய் மயங்கிச் சரிந்திருக்க... பதட்டமாய் அவளது நாசியருகே கை வைத்தான்.

சூடான மூச்சுக் காற்று வந்து கொண்டிருக்க... நிம்மதியோடு வெளியே நோக்கிக் குரல் கொடுத்தான்.

"காப்பாத்துங்க! காருக்குள்ளே நாங்க மூணு பேரு மாட்டிட்டு இருக்கோம். காப்பாத்துங்க."

பதில் குரல் வந்ததும் பரபரப்பானாள் சூரியகாந்தி. சுற்றுமுற்றும் பார்த்தாள். ஒருவர் கூடக் கண்ணில்



படவில்லை. கூப்பிடு தூரத்தில் மயான பூமி மட்டுமே இருந்தது. இங்கு எவரையும் எதிர்பார்க்க முடியாது.

இப்போது எப்படிக் காப்பாற்றுவது? உடல் முழுக்க வியர்வை பெருக... பார்வையைச் சுழற்றியவளின் கண்களில் காரின் பின்புறம் பட திடுக்கிட்டுப் போனாள். புகையோடு இருந்த கார் இப்போது மெல்லத் தீப்பற்றியிருந்தது.

"ஐயோ! கார் பத்திகிச்சே... நான் எப்படிக் காப்பாத்தப் போறேன்?" - வீறிட்டாள்.

சந்திரன் பலமாய் அதிர்ந்தான்.

"என்ன? தீயா? ஐயோ! என் பொண்டாட்டி முழுகாம இருக்காம்மா. அவளை மட்டுமாவது வெளியே எடுத்திடும்மா. என் வம்சத்தோட முதல் வாரிசு இப்படி வயித்திலேயே சமாதியாயிடக் கூடாது. உனக்குப் புண்ணியமாப் போகும். என் பொண்டாட்டியைக் காப்பாத்தும்மா..."

சந்திரனின் குரல் நடுக்கமாய் ஒலிக்க... அவசரமாய்ப் பார்வையைச் சுழற்றினாள். அவள் கண்ணில் தூரமாய் அந்தப் பொருள் பட... சத்தமாய்க் குரல் கொடுத்தாள்.

"பயப்படாதீங்கய்யா! இதோ இப்ப தீயை அணைச்சிடுறேன். அணைச்ச பிறகு உங்களை வெளியே எடுக்கிறேன்!" - என்றவள் ஒரே ஓட்டமாய் ஓடி மயான பூமியை அடைந்தாள்.

ஓடி ஆடிக் களைத்தவர்களும், ஆட்டம் போட்டு ஓய்ந்தவர்களும் பூமிக்குள் அமைதியாய் .உறங்கிக்

கொண்டிருக்க... நடுங்கிய உடலைத் திடப்படுத்திக் கொண்டு உள்ளே நுழைந்தாள்.

மண்மேடுகளும் சாம்பல் குவியலுமாய் இருந்த இடத்திற்கு அருகே காய்ந்த பூக்களோடும் கிழிந்த பாய் தலையணைகளோடும் சிறுசிறு மண் குடுவைகள் கிடக்க... சற்றும் தாமதியாமல் அவற்றில் இரண்டை எடுத்துக் கொண்டு ஓடி வந்தாள்.

சாலையோரம் ஓடிக் கொண்டிருந்த வாய்க்காலில் நீரைக் குடுவையில் எடுத்து மளமளவெனக் காரின் மீது ஊற்ற... பற்றியெரியத் துவங்கிய நெருப்பு, "ஸ்ஸ்..." என அணையத் துவங்கியது. மேலும் நான்கைந்து குடுவை நீரை ஊற்றி நெருப்பு சுத்தமாய் அணைந்து விட்டது என்பதை உறுதி செய்து விட்டு காரின் முன் பக்கம் வந்து நின்று குரல் கொடுத்தாள்.

"ஐயா! உள்ளே எந்தப் பக்கம் இருக்கீங்க?"

"டிரைவர் தலை யெல்லாம் நசுங்கிப் போய் முன்னாடி இருக்காரும்மா. நானும் என் பொஞ்சாதியும் பின் சீட்டில இருக்கோம். எங்களால நிமிரக் கூட முடியலை..." - சந்திரனின் குரல் தழுதழுத்தது.

"பயப்படாதீங்க! இப்ப பின்னால உள்ள கண்ணாடியை உடைச்சா நீங்க வெளியே வந்திட முடியுமா?"

"முடியும். நான் வெளியே வந்திட்டாப் போதும். இவளை நான் தூக்கிடுவேன்."



"ஒரே நிமிஷங்க. நான் கண்ணாடியை உடைக்கிறேன். நீங்க கண்ணாடித் தூள் மேல படாம மறைஞ்சிக்கங்க."

"சரி... சரி!" - என்றவாறு மடியில் கிடந்த தாமரையைத் தன் முதுகால் மறைத்துக் கொண்டு சந்திரன் சீட்டின் முன்பாய்க் குனிந்து கொள்ள... சூரியகாந்தி சாலையோரமாய்க் கிடந்த கருங்கல்லை இரு கரங்களால் தூக்கி வந்து கண்ணாடியை ஓங்கி உடைத்தாள்.

"ச்சிலீர்!" என்று ஓசையோடு கண்ணாடி சிதறி ஒன்றிரண்டு அவளது மேனியைப் பதம் பார்க்க... இரத்தம் கொப்புளித்தது. அதைப் பற்றி யோசிக்காமல் மீண்டும் மீண்டும் கண்ணாடியை அடித்து நொறுக்க... இப்போது கண்ணாடியை உதிர்த்து விட்டுப் பாதை தயாரானது.

"கண்ணாடியை எல்லாம் உடைச்சாச்சு. இப்ப வாங்க. இந்தப் பக்கமா!" எனக் குரல் கொடுத்துக் கொண்டே தன் கையை உள்ளே நீட்டினாள்.

அந்தக் கையைப் பற்றிக் கொண்டு மெல்லத் தலையை வெளியே எடுத்தவனைக் கண்டதும் திகைப்பாய் விழிகளை விரித்தாள்.

இவனா? இவன் ஆதவனின் சகோதரனல்லவா? சந்திரன் மாமா தன்னை அடையாளம் கண்டு கொண்டால்... இவள் உதவியால் பிழைப்பதை விட இறப்பதே மேல் என்பானே! ஆண்டவா! மாமா என்னை அடையாளம் கண்டு கொள்ளக் கூடாது.

மனம் திக்திக்கென்று அடித்துக் கொள்ள... சற்றுப் பயத்தோடு அவனைப் பற்றி வெளியே இழுக்க

உதவினாள். தட்டுத் தடுமாறி உடல் முழுக்கக் காயங்களோடு வெளியே வந்த சந்திரனின் கவனம் முழுக்க உள்ளே மயங்கிக் கிடந்த தன் மனைவியின் மீதே இருந்ததால் சூரியகாந்தியை அவன் உற்றுக் கவனிக்க வில்லை.

கால் வலி உயிரே போனது போல் இருக்க... காலை ஊன்ற முடியாமல் தரையோடு அமர்ந்து பாதி உடலை உள்ளே நுழைத்துத் தாமரையைப் பூப்போல் தூக்கினான். உடல் முழுக்கக் காயத்தோடு இருந்தவளைக் கண்டு பதறினாள் சூரியகாந்தி.

"ஐயோ! முழுகாம இருக்காங்கன்னு சொன் னீங்களே? இவ்ளோ காயம் பட்டிருக்கே!"

"ஆமாம்மா. டாக்டர்கிட்டதான் போயிட்டு இருந்தோம். இந்த டிரைவர் பய குடிச்சிருந்தான் போல. நான் கவனிக்காம..."

"டிரைவருக்கு உசிரு இருக்கா?"

"இல்லைன்னு நினைக்கிறேம்மா. மூச்சு வரலை."

"ஐயோ!"

"அம்மா! நீ யாரோ எவரோ... எங்க உசிரைக் காப்பாத்தியிருக்க. இந்த உதவியை என் உசிரு இருக்கிற வரைக்கும் மறக்க மாட்டேன்ம்மா... ஆமா! நீ இந்த ஊர்தானா?"

சட்டென உஷாரானாள். "என்னங்க இது? இதுவா முக்கியம்? மொதல்ல இவங்களை ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போகணுமே!"



"அதான் யோசிக்கிறேன். எப்படிக் கொண்டு போறது? என் கால்ல எலும்பு உடைஞ்சி போச்சு போலிருக்கு. காலை ஊன்ற முடியலையே!" - வலியோடு அவன் முனக...

"நீங்க இங்கேயே இருங்க. நான் ஊருக்குள்ளே போயி ஏதாவது வண்டி கிடைச்சா கூட்டியாரேன்..." - எனக் காற்றைப் போல் பறந்தோடினாள்.

# 12



நினைவில் இருக்க
விரும்பவில்லை! - என்றும்
நிலைத்திருக்க வேண்டும்
என்று விரும்புகிறேன்,
உன் இதயத்தில்!

தலையில், கை கால்களில் பாண்டேஜ் கட்டுகளோடு சந்திரன் மருத்துவமனைப் படுக்கையில் அமர்ந்திருக்க... அவனுக்கு அடுத்த படுக்கையில் படுக்க வைக்கப்பட்டிருந்தாள் தாமரை. டியூப் வழியாக ஒரு கையில் டிரிப்ஸும் மற்றொரு கையில் இரத்தமும் ஏறிக் கொண்டிருக்க... மயக்க நிலையில் இருந்தவளைக் கண்களில் நிறைந்த நீரோடு பார்த்துக் கொண்டிருந்தான் சந்திரன்.

சற்று முன்தான் மருத்துவர் சொல்லிவிட்டுப் போயிருந்தார். "ஸாரி மிஸ்டர் சந்திரன்! உங்க வொய்ஃப்க்கு பலமா அடி பட்டிருக்கு. அதோட விபத்து நடந்த அதிர்ச்சியில அவங்களுக்கு கருச் சிதைவு ஆகியிருக்கு. உடனடியா இங்கே கொண்டு வந்ததால உங்க மனைவியைக் காப்பாத்திட்டோம்.

"பட்! அறுபது நாளான சிசு கரைஞ்சி போயிடுச்சி. நிறைய ப்ளட் லாஸாகிட்டதால இன்ஸ்டன்ட்டா அவங்களுக்கு ப்ளட் ஏத்தணும். ப்ளட் பேங்குக்கு சொல்லியிருக்கோம். இப்ப வந்திடும்.

"நீங்க உங்க ஃபேமிலியில உள்ளவங்களுக்குச் சொல்லிட்டீங்களா? சீக்கிரம் சொல்லி அனுப்பிடுங்க. உங்களுக்குக் கால்ல எலும்பு முறிஞ்சிருக்கு. நீங்க காலை அசைக்கக் கூடாது. உங்களை அட்மிட் பண்ணினாளே ஒரு பொண்ணு... அவளை அனுப்பித் தகவல் கொடுங்களேன்..."

மருத்துவர் பேசிய எந்த வார்த்தைக்கும் அவனால் பதில் பேச முடியவில்லை. கண்ணுக்குத் தெரியாத ஒரு உயிர் அநியாயமாய்க் கரைந்து போனதை எண்ணி அவன் நெஞ்சம் துடித்தது.

'தான் மிகவும் விரும்பிய மனைவி குற்றுயிரும் குலையுயிருமாய்க் கிடப்பதை அவனால் கண் கொண்டு பார்க்க முடியவில்லை. எப்படியோ உயிர் பிழைத்து விட்டாளே என நிம்மதியாய் மூச்சுவிட முடியவில்லை.

கண் விழித்ததும் தனக்கு நேர்ந்த துயரம் தெரிந்தால் தாங்கிக் கொள்வாளா தாமரை? எத்தனை



ஆசையாய் மருத்துவ மனைக்குக் கிளம்பினாள்? திருமணமாகி நான்கு வருடங்களுக்குப் பிறகு உண்டான முதல் குழந்தை அல்லவா?

இப்படி உதயமாகும் முன்பே அஸ்தமித்து விட்டதே! தாமரையை எப்படித் தேற்றுவேன்? கதறித் துடிப்பாளே! அவளது கண்ணீரைக் காணும் சக்தி எனக்கில்லையே! என்ன செய்வேன்? ஆண்டவா! என்ன செய்யப் போகிறேன் நான்?'

கண்களில் நிறைந்திருந்த நீர் கன்னங்களில் வழிய, "அடடா! அழறீங்களா? எதுக்கு இப்ப அழறீங்க?" - என்றவாறு அவனருகே வந்தாள் சூரியகாந்தி.

அவளது கைகளிலும் முகத்திலும் ஆங்காங்கே சின்னச் சின்ன பிளாஸ்திரி ஒட்டப்பட்டிருந்தது. கண்ணீரைத் துடைத்துக் கொண்டே அவளை ஏறிட்டான் சந்திரன்.

"ஏம்மா! உனக்கும் அடிபட்டிருச்சா? எப்போ பட்டது?"

"இதுவா? இது சும்மா லேசான காயம்தான் சார்! டாக்டர்தான் மருந்தை வெச்சி இப்படி ஒட்டுப் போட்டுப் பெரிசாக்கிட்டார். கண்ணாடித் தூள் பட்டிருக்கும் போல..."

"என்ன? கண்ணாடித் துண்டா?"

"அதாங்க! காரோட கண்ணாடியை உடைச்சேனில்ல? அப்ப தெறிச்சிடுச்சி!"

"ஏம்மா! இந்தக் காயத்தோடவா ஊருக்குள்ள போய் அந்த ஊர் சனங்களைக் கூட்டியாந்த?" - வியப்பும்

நெகிழ்ச்சியுமாய்க் கேட்டவனைப் பார்த்துப் புன்னகைத்தாள்.

"இந்தக் காயத்துக்குப் பயந்தா... உங்க ரெண்டு பேர் உசிரையும் காப்பாத்தியிருக்க முடியுமா?"

சந்திரனின் கண்கள் மீண்டும் கலங்கின. "உண்மைதான். நீ மட்டும் பம்பரமாய்ச் சுழன்று எங்களை இங்கு வந்து சேர்த்திருக்கவில்லையென்றால் நான் என் தாமரையை இழந்திருப்பேன்."

"அப்படியெல்லாம் எதுவும் ஆகாது. மாரியாத்தா நம்ம கூடவே இருப்பா."

"அந்த மாரியாத்தா எங்க வாரிசைக் காப்பாத்தலையே!"

"ஆனா உங்க ரெண்டு பேரையும் காப்பாத்திட்டாளே. உடம்பு குணமான பிறகு நீங்க எத்தனை குழந்தை வேணாப் பெத்துக்கலாமே! சுவர் இருந்தாத்தானே சித்திரம் வரைய முடியும்?"

"இருந்தாலும்..."

"இதோ பாருங்க! எது எப்படி நடக்கணுமோ அப்படித்தான் நடக்கும். நம்ம கையில ஒன்னுமே இல்லை. ஆண்டவன் மேல பாரத்தைப் போட்டுட்டு மனசை அமைதியா வெச்சுக்குங்க.

"உங்க சம்சாரம் கண் விழிச்சதும் நீங்கதான் அவங்களைச் சமாதானம் செய்யணும். இது போனா என்ன, இன்னும் பத்துப் புள்ள பெத்துக்கலாம். நீ பிழைச்சதே போதும் தாமரைன்னு சொல்லுங்க.



கிளைதான் உடைஞ்சு போச்சு. மரம் இருக்கில்ல. எத்தனை கிளை வேணாலும் தழைக்கும்.

"ஆம்பளை நீங்க. நீங்களே இப்படி விரக்தியாப் பேசினா அவங்க இன்னும் வேதனைப்பட்டு அழ மாட்டாங்களா? நீங்கதான் அவங்களைத் தேற்றி எழ வைக்கணும்!" - சூரியகாந்தி சொல்ல... ஆமோதிப்பாய்த் தலையாட்டினான்.

"ரொம்ப நன்றிம்மா! பார்த்தா சின்னப் பொண்ணா இருக்க. எவ்வளவு ஆக்கபூர்வமா பேசுற? உனக்குத்தான் நான் கடமைப்பட்டிருக்கேன்."

"அய்ய! என்ன இது?"

"இல்லம்மா! ஆள் அரவமில்லாத இடத்தில விழுந்து கிடந்தோம். நீ மட்டும் அந்தச் சமயத்தில அங்க வரலைன்னா... நாங்களும்... அந்த டிரைவர் மாதிரியே பொணமாகி இருப்போம்."

"அந்த மாதிரி யெல்லாம் பேசாதீங்க. மனுஷங்களுக்குள்ளே இது கூடச் செய்யலைன்னா எப்படி? இது ரொம்பச் சாதாரண உதவி. இதை ஏன் பெரிசு படுத்துறீங்க? அமைதியாப் படுங்க. நான் என் அம்மாவுக்கு மருந்து வாங்க வந்தேன். இப்பவே ரொம்ப தாமதமாகிப் போச்சு. நான் போயிட்டு வரட்டுமா?"

"ஏம்மா! நீ யாருன்னு சொல்லவே இல்லையே?"

"அது... நான்..." - சூரியகாந்தி தடுமாறிக் கொண்டிருக்கும் போது, நர்ஸ் கையில் மருந்தோடு வந்தாள்.

"ஏம்மா சூரியகாந்தி! மருந்தை வெச்சிட்டு வந்திட்டியே?"

"இதோ வந்திட்டேன் நர்சம்மா... சரிங்க! நான் போயிட்டு வர்றேன். உங்க வூட்டுக்குத் தகவல் சொல்லி அனுப்பிட்டேன். இப்ப வந்திடுவாங்க!" – என்றவாறே நர்சை நெருங்கி மருந்தை வாங்கிக் கொண்டு புறப்பட்டாள்.

சந்திரன் வியப்பாய்க் கேட்டான். "என்ன? எங்க வீட்டுக்குச் சொல்லிட்டியா? எங்க ஊரு எதுன்னு தெரியுமா உனக்கு?"

"என்னங்க இது? உங்களைக் கூடத் தெரியாம இருக்குமா? நிறையத் தடவை உங்களைப் பார்த்திருக்கேன். அதோ! உங்க வீட்டாளுக வந்தாச்சு. நான் போறேன்!" – என்றவாறு மறுபக்க வழியாக நடந்தாள்.

சந்திரன் இன்னும் நம்ப முடியாத பார்வையோடு பார்த்துக் கொண்டிருக்க... ஆர்ப்பாட்டமான அழுகுரலோடு சாமிக்கண்ணுவின் குடும்பம் வந்து அவனை மொய்த்துக் கொண்டது.

இடப்பக்க நுழைவுவாயில் வழியாக வெளியேறிய சூரியகாந்தி, சுவரோரமாய்க் கைகளைக் கட்டிக் கொண்டு நின்ற ரங்கசாமியைக் கண்டதும் புன்னகைத்தாள்.

"ரொம்ப நன்றி ரங்கா!"

"எதுக்கு?"

"வந்து... சந்திரன் வீட்டுக்குத் தகவல் சொன்னதுக்கு..."



"இதோ பார் சூரி! நான் உனக்காகத்தான் இந்த உதவியைச் செய்தேன். அதுவும் உசிரு சம்பந்தப்பட்ட விஷயம்ன்றதாலதான் பண்ணினேன். இது இதோட நிற்கட்டும்."

"என்ன ரங்கா நீ? நமக்கும் இவங்களுக்கும் என்ன சம்பந்தம்? பாவம்! ரோட்ல அநாதையா அடிபட்டுக் கிடந்தாங்க. அப்படியே விட்டுட்டு வர மனசு இல்ல. நம்ம தெருக்காரவுகெல்லாம் ஈரமான மனசுக்காரங்களாச்சே. அதான் காப்பாத்தினேன்."

"காப்பாத்தினது நல்ல விஷயம்தான். ஆனா சந்திரன் ஒரு முரடன். நீதான் காப்பாத்தினேன்னு தெரிஞ்சா அதையும் ஊர்ப் பிரச்சனையாக்கிடுவான். பிறகு நம்ம ஆட்களைவிட உன் அண்ணன் ஒருத்தனே போதும். பெரிய ரகளையே பண்ணிடுவான்."

"ரங்கா! இந்த விஷயம் நம்மோடயே இருக்கட்டும். தயவு செய்து யார்கிட்டயும் சொல்லிடாதே."

"நான் ஏன் சொல்லப் போறேன்? நீ மாட்டிக்காதே. காப்பாத்தினதோட விட்டுடு. மனசு கேட்கலை. அது இதுன்னு சொல்லிகிட்டுத் திரும்ப இந்தப் பக்கம் வந்திடாதே."

"சேச்சே! நான் ஏன் வரப் போறேன்?"

"சரி! நீ கிளம்பு. பஸ்லதானே போற?"

"இல்ல ரங்கா! நான் இப்படியே பொடி நடையா நடந்து போயிடுறேன்."

"அறிவிருக்கா உனக்கு? இந்த மத்தியான வெயில்ல அந்த அனாமத்து ரோட்டில எப்படித் தனியாப் போவே? அதுவும் ரெண்டு சுடுகாடு தாண்டி?"

"இதுல என்ன இருக்கு ரங்கா! எப்பவும் போற வழிதானே?"

"சொன்னாக் கேளு சூரி! இப்பத்தான் ரோட்டில ஒரு சாவு விழுந்திருக்கு. திரும்பவும் நீ அந்த வழியாப் போக வேண்டாம். இரண்டு மணி பஸ்ல போயிடு. வா... நானே பஸ் ஏத்தி விட்டுடுறேன்."

"இல்ல... வேண்டாம்."

"ஏன்?"

"வந்து... நடந்துதானே போறோம்னு நான் துட்டு எதுவும் எடுத்திட்டு வரலை. அதான்..."

"என்ன புள்ள நீ? வெளியே வந்தா கையில ஒரு பத்து ரூபா கூட வெச்சுக்க மாட்டியா? சரி வா! நானே டிக்கெட் எடுத்திடுறேன். ரொம்ப நேரம் இங்கே நிற்க வேண்டாம்!" - என்றவாறு ரங்கசாமி முன்னே நடக்க... அவனைப் பின்தொடர்ந்தாள் சூரியகாந்தி.

மருத்துவ மனையை விட்டு விலகும் முன் தாமரையின் உறவினர்களை அழைத்துக் கொண்டு எதிரே வந்து கொண்டிருந்தான் ஆதவன். உறவினர்கள் கண்ணீரோடு புலம்பிக் கொண்டே முன்னே செல்ல... பின்னே வந்தவனிடம் பார்வையால் விடை பெற்றுக் கொண்டாள்.



பேருந்து நிறுத்தத்தை அடைந்ததும் கேட்டான் ரங்கசாமி.

"ஆமா! உன் முகத்தில உள்ள காயத்தைப் பார்த்திட்டு உங்க வீட்டில உள்ளவங்க கேட்டா என்ன சொல்வ சூரி?"

திடுக்கிட்டாள் சூரியகாந்தி. கைகள் அனிச்சையாய்ச் சென்று காயங்களைத் தொட்டுப் பார்த்தன. இதை எப்படி மறைக்க முடியும்? முகத்தில் மட்டுமே மூன்று இடத்தில் கண்ணாடித் துகள் பதிந்திருந்தன. அவற்றை நீக்கிவிட்டுச் சுத்தப்படுத்தி... மருந்து வைத்து விட்டிருந்தார் மருத்துவர்.

கையிலும் கழுத்திலுமாய் ஏழெட்டு அடையாளங்கள். நிச்சயம் இது அனைவரின் கண்ணிலும் படும். எப்படிச் சொல்லிச் சமாளிப்பது? விபத்து நடந்தது குருவி குளத்திற்கும் புன்னைவனத்திற்கும் இடையே உள்ள பகுதி.

அதனால் இதுபற்றித் தன் தெருவிற்குத் தெரிய வாய்ப்பில்லைதான். இருந்தாலும் இந்தக் காயங்களுக்கான காரணம் கேட்டால்... என்னவென்று சொல்வது?

தயக்கமும் பயமுமாய், வந்து நின்ற பேருந்தில் ஏறி, வீட்டை அடைந்தபோது சாப்பிட்ட தட்டில் கை கழுவிக் கொண்டிருந்தான் முருகேசன். மிரட்சியோடு வீட்டுக்குள் நுழைந்தவளைக் கடுப்பாய் ஏறிட்டவனின் முகம் மாறியது.

"ஏய்! என்ன இது? மூஞ்சு முகரையெல்லாம் காயம்? எங்கே போய் விழுந்த?" - தமையனின் கேள்வியிலேயே விடை இருக்க... படபடப்பாய்ச் சொன்னாள்.

"ஆ...மா...ண்ணே! போகும் போது... ரோட்ல தடுக்கி விழுந்துட்டேன். ரோட்ல கிடந்த கல்லு... குத்திடுச்சி..."

"கண்ணை என்ன பிடதியிலயா வெச்சிட்டுப் போனே? சும்மாவே பத்து நாளா ஒழுங்கா வேலைக்குப் போகலை... இதுல இவ்வளவு காயத்தை வாங்கிட்டு வந்திருக்க. இப்படியே ஏதாவது காரணத்தைச் சொல்லி லீவு போட்டுட்டே இரு. மேஸ்திரி நீ வேலைக்கு வர வேண்டாம்னு சொல்லப் போறான்!" - என்றவாறே எழுந்து ஏப்பம் விட்டவனை ஏளனமாய்ப் பார்த்தாள் சூரியகாந்தி.

'தங்கையின் காயத்தைக் கண்டு மனம் பதறவில்லை. எங்கே வேலைக்குப் போகாமல் வீட்டில் இருந்து விடுவேனோ என்றுதான் பதறுகிறான். என்ன ஒரு இரத்த பாசம்!'

பதிலேதும் பேசாமல் வீட்டிற்குள் நுழைந்தாள். அண்ணன் சாப்பிட்ட பாத்திரங்களைக் கழுவிக் கொண்டிருந்த செண்பகத்தை நெருங்கினாள்.

"செண்பகம்! அம்மா எங்கே?"

"வாக்கா! ஏன்க்கா உனக்கு இவ்வளவு நேரம்? ஐயோ! என்னக்கா... மூஞ்சியெல்லாம் காயம்?"

"அதை விடு. அம்மா எங்கே?"

"இப்பத்தான் பொன்னம்மா பாட்டி வந்து கூட்டிட்டுப் போச்சி."

"எதுக்காம்?"



"அது பேரனுக்கு உடம்பு சரியில்லையாம். பயந்து அழுறானாம். அதான் அம்மா போய்த் துண்ணூறு போட்டு விடப் போகுது."

"அம்மாவே நடக்க முடியாம இருந்ததே. நீ ஏன் அனுப்பின?"

"சூரி! வந்துட்டியா? ஏன் ஆத்தா இம்புட்டு நேரம்? ஆஸ்பத்திரியில ரொம்பக் கூட்டமா?" - என்றவாறே வந்த கனகம் மகளைக் கண்டதும் பதறினாள்.

"ஆத்தி! எம் புள்ள முகம் என்ன காயப்பட்டுப் போயிருக்கு? என்னம்மா ஆச்சி? ஐயோ! டாக்டர் போட்ட கட்டு மாதிரி தெரியுதே! ஏம்மா... சூரி! என்னம்மா இது? போகும்போது நல்லாத்தானே இருந்தே. இது எப்படி ஆச்சு?" - பதறிய தாயை அமைதிப்படுத்தித் தரையில் விரித்திருந்த பாயில் அமர வைத்தாள்.

"ஏம்மா! நான்தான் உன்னைப் படுக்கச் சொல்லி விட்டுத்தானே போனேன். நீ ஏன் இப்படி முடியாத உடம்பை வெச்சிட்டு வெளியே போற? இந்தா! மருந்தைப் பிடி. சாப்பாட்டுக்குப் பிறகு சாப்பிடணுமாம். மூனு வேளையும் சாப்பிடணும்!" - எனத் தாயிடம் மருந்து மாத்திரைகளைக் கொடுத்தாள். அதைத் தரையில் வைத்து விட்டு மகளின் கரத்தைப் பற்றினாள் கனகம்.

"நான் என்ன கேட்கிறேன்? நீ என்ன சொல்ற? இந்தக் காயம் எப்படி வந்தது? முதல்ல அதைச் சொல்லு."

"பதறாதேம்மா! செண்பகம்... அண்ணன் வெளியே நிக்குதான்னு பாரு."

செண்பகம் வாசல்வரை போய் விட்டு உதட்டைப் பிதுக்கினாள். "அண்ணனைக் காணோம்."

"சைக்கிள் இருக்கா?"

"ம்ஹூம். இல்லை."

"சரி... கதவைச் சாத்திட்டு வா!" - என்றவள் தாயிடம் திரும்பினாள்.

"அம்மா! இந்தச் சின்னக் காயத்துக்காக இப்படிப் பதறுறியே... நான் செய்த காரியத்தை மட்டும் சொன்னால் அப்படியே அசந்திடுவ!"

"அப்படியென்ன காரியம் செய்தாய்?"

"அம்மா! ஹாஸ்பிடல் போற வழியில ஒரு பெரிய விபத்து."

"என்ன?"

"ம்... அந்த விபத்தில மாட்டிக்கிட்ட ரெண்டு உசிரை நான் காப்பாத்தியிருக்கேன். அப்ப ஏற்பட்ட சின்ன விழுப்புண்தான் இது."

"என்னடி சொல்ற? எனக்கு ஒன்னுமே புரியலையே"

"புரியுற மாதிரியே சொல்றேன்..." - என்றவள் நடந்த சம்பவத்தை அப்படியே விவரிக்க...

தாயும் மகளும் பலமாய் அதிர்ந்தனர்.

கனகம் பரிவாய் மகளின் காயங்களைத் தொட்டாள்.



"ஏன் ஆத்தா! நீ செய்தது நல்ல காரியம்தான். அதுக்காக இப்படியா தன்னந்தனியா நின்னு செய்யுறது? துணைக்கு யாரையாவது ஆம்பிளைகளைக் கூட்டியாந் திருக்கலாமில்ல?"

"ஏம்மா! கார் விழுந்த இடத்தில ஒரு காக்கா குருவிகூட இல்லை. நான் ஆம்பிளை ஆட்கள் வரட்டும்னு நின்னுட்டு இருந்தா கார் முழுசா எரிஞ்சிருக்கும். அதோட உள்ளே இருந்தவங்களும் கருகியிருப்பாங்க."

"ஐயோ! வேணாம். சொல்லாதே. பாவம்! யார் பெத்த பிள்ளைகளோ?"

"எல்லாம் உன் உறவுக்காரங்க பெத்த பிள்ளைக தாம்மா."

"என்ன?"

"ஆமாம்மா! காரில இருந்தது சந்திரன் மாமாவும் அவரு சம்சாரமும்தான்!" - மெல்லிய குரலில் சொன்ன மகளைத் திடுக்கிட்டுப் பார்த்தாள் கனகம்.

"எ...ன்ன? ச...ந்..திரனா?"

"ஆமாம்மா! இந்த விஷயம் யாருக்கும் தெரிய வேண்டாம். குறிப்பா உன் மகனுக்குத் தெரியக் கூடாது. செண்பகம்! நீயும் வாயை விட்டுடாதே."

"சரிக்கா!"

"அம்மா! சாப்பிடுவோமா?"

"கூ...ரி!"

"என்னம்மா?"

"அவுக உசிருக்கு ஒன்னும் ஆபத்தில்லையே?"

"இல்லம்மா. இனிமே பயப்பட வேண்டிய தில்லைன்னு டாக்டரே சொல்லிட்டாரு. தாமரை அக்கா வுக்குத்தான் இரத்தம் ஏறிட்டு இருக்கு."

"ஐயோ! அந்தப் புள்ளைக்கா இந்தக் கொடுமை நடக்கணும்?"

"சத்தம் போடாதேம்மா. யார் காதுலயாவது விழுந்திப் போகுது."

"ஏன்க்கா! இப்படி முகமெல்லாம் புண்ணாக்கிட்டு வந்திருக்கிறியே... இந்தத் தடம் மறையுமா?"

"ஏன்டி?"

"உன்னைக் கட்டிக்கப் போற மாப்பிள்ளைக்கு உன் முகம் புடிக்கணுமே! இப்படி இருந்தா எப்படி பிடிக்கும்?"

"பிடிக்கும்டி. என் முகம் எப்படி இருந்தாலும் என் மாமனுக்குப் பிடிக்கும். அதுவும் இந்தக் காயம் அவுக குடும்பத்து உசிரைக் காப்பாத்தும் போது ஏற்பட்டது. அதனால மாமனுக்கு என்னை ரொம்ப ரொம்பப் பிடிக்கும்!"

கண்களில் கனவோடு சொன்ன மகளைப் பார்த்துக் கனகத்தின் வயிறு கலங்கத் துவங்கியது.

'இதெல்லாம் நடக்குமா?'



# 13



நீ தேடும்போது உன்
அருகில் நானில்லை! - ஆனால்
நீ நினைக்கும் நேரம் உன்
மனம் முழுக்க நிறைந்திருப்பேன்!

**மா**த்திரை அட்டையில் இருந்து இரண்டு மாத்திரைகளைப் பிரித்து டம்ளரில் நீரை எடுத்துக் கொண்டு அண்ணனை நெருங்கினான் ஆதவன். கால்களில் மாவுக் கட்டோடு படுக்கையில் சாய்ந்து அமர்ந்திருந்த சந்திரன் கண்களை மூடிக் கொண்டு தீவிரமான சிந்தனையில் இருந்தான்.

"அண்ணே!"

"ம்...." - கண்களைத் திறந்தான்.

"இந்தா, மாத்திரை சாப்பிடு."

"அதைத் தூக்கித் தூரப் போடு ஆதி! ஒரே நாத்தம்."

"இப்படி யெல்லாம் சொல்லக் கூடாது. இதைச் சாப்பிட்டாத்தான் உடம்பு சீக்கிரம் சரியாகும்."

"ம்ப்ச்! எனக்கு இங்க இருக்கவே பிடிக்கலை. எப்ப வீட்டுக்குப் போவோம்னு இருக்கு."

"போலாம். உடம்பு குணமானதும் போயிடலாம்."

"தாமரையை வேற தனியாக் கொண்டு போயிட்டாங்க. அவ எப்படி இருக்காளோ? ஒரு நடை

பார்த்திட்டு வரலாம்னா காலை அசைக்கவே முடியலை. இப்படி முடங்கிப் போயிட்டேனே ஆதி!" - வருத்தமாய்ச் சொன்னவனின் கரத்தை ஆறுதலாய்ப் பற்றி அழுத்தி விட்டு... மாத்திரையைப் போட வைத்தான்.

"அண்ணே! மதினி நல்லா இருக்காங்க. பெண்கள் வார்டுலதானே இருக்கணும்? அதான் அவங்களகூடவே அத்தையும் அம்மாவும் இருக்காங்களே..."

"ரொம்ப அழறாளா ஆதி?"

"ரெண்டு நாளா ஒரே அழுகைதான். இப்பத்தான் எல்லாரும் சேர்ந்து சமாதானப்படுத்தியிருக்கோம். இப்ப என்னன்னா உன்னைப் பார்க்கணும்னு ஒரே அடம்."

"அவளால நடக்க முடியுதா?"

"மதினிக்குக் கால்ல எந்த அடியும் இல்லை. ஆனா இன்னும் ட்ரிப்ஸ் ஏறுது. அதனால அவங்களைக் கட்டிலை விட்டு இறங்க விடலை."

"தாமரையை நான் பார்க்கணுமே ஆதி!"

"பார்க்கலாம். நான் டாக்டர்கிட்ட பேசிட்டு உன்னைக் கூட்டிட்டுப் போறேன். இப்ப நீ படுத்துக்கோ."

"ஆதி! நீ வேலைக்குப் போகலையா?"

"உன்னை இப்படி விட்டுட்டு எங்கே வேலைக்குப் போறது? லீவு போட்டுட்டேன்."

"ஏன்டா! நான் என்ன சின்னக் குழந்தையா?"



"சின்னக் குழந்தையோ பெரிய குழந்தையோ... இப்படி நடக்க முடியாம படுக்கையில கிடப்பவனைத் தனியா விட்டுட்டுப் போக முடியுமா?"

"அதுக்காக..."

"அண்ணே! முதல்ல மதினி எழுந்து நடமாடட்டும். பிறகு உன்னை அவங்க பொறுப்புல விட்டுட்டு நான் வேலைக்குப் போயிடுறேன். சரியா?"

"ம்... ஆமா... ஆதி! அந்தப் பொண்ணு யாருன்னு விசாரிச்சியா?"

"எந்தப் பொண்ணு?"

"அதான்டா. எங்களைக் காப்பாத்தினாளே ஒரு பொண்ணு..."

"ஆமா. பேரும் தெரியாது. ஊரும் தெரியாது. நான் எங்கே போயி விசாரிப்பது? பொட்டப் புள்ளைன்னு வேற சொல்ற? நான் போயி யார்கிட்டயாவது விசாரிக்கப் போயி என்னை மொத்தப் போறானுங்க..."

"இல்லடா. அந்தப் பொண்ணு மட்டும் எங்களைக் காப்பாத்தலைன்னா இன்னிக்கு நாங்க இல்லை. எத்தனை துணிச்சல்! என்ன ஒரு புத்திசாலித்தனம்! ஒத்தை ஆளா நின்னு காரோட கண்ணாடியை உடைச்சி என்னை வெளியே இழுத்தாடா.

"பாவம்! அந்தப் பொண்ணோட முகத்தில கையில எல்லாம் காயம். அதைப் பத்தி யெல்லாம்கூட கவலைப்படாம ஊருக்குள்ள போயி ஆட்களைக்

கூட்டியாந்து மாட்டு வண்டியில எங்களை ஏத்தி ஆஸ்பத்திரி வரைக்கும் கூடவே வந்தாளே... ரொம்ப தங்கமான பொண்ணுடா."

"நாம கும்பிடுற மாரியாத்தாதான் அந்தப் பொண்ணு உருவத்தில வந்ததோ என்னவோ?"

"இல்லை ஆதி! அந்தப் பொண்ணை நான் எங்கேயோ பார்த்திருக்கேன். எங்கேன்னுதான் நினைவில்லை. ரெண்டு நாளா யோசிக்கிறேன். ம்ப்ச்! அடையாளம் தெரியலையே!"

"சரி, விடு. எப்பவாவது நேர்ல பார்த்தா நன்றி சொல்லிக்கலாம்."

"நன்றி மட்டும் போதாது ஆதி. நம்மால முடிஞ்ச உதவி ஏதாவது செய்யணும்."

"செய்யலாம்... செய்யலாம். நீ படு."

"இருடா. அந்தப் பொண்ணோட பேரை நர்சம்மா சொன்னாங்கடா. என்னவோ ஒரு பூவோட பேரு!"

"பூவோட பேரா?"

"ம்... நர்சம்மா கூப்பிடும்போது கேட்டேனே!"

"ரோஜாவா?"

"இல்லை."

"தாமரையா?"

"இல்லைடா. ஏதோ மஞ்சக் கலர் பூவு."

"இது வேறயா? மஞ்சள் கலர் பூவுன்னா... செவ்வந்தியா? சாமந்தியா?"



"இல்லடா. வேற?"

"அரளிப் பூவா!"

"டேய்! அந்தப் பேரை யாராவது வெப்பாங்களா?"

"பின்னே...? பூவு... அதுவும் மஞ்சள் கலர் பூவுன்னா... நான் எப்படிக் கண்டுபிடிக்கிறதாம்?" - எனக் கேட்ட ஆதவனின் மனதிற்குள் சூரியகாந்தியின் பெயர் எழுந்தது. அட! ஒருவேளை அவளாய் இருக்குமோ?

அன்று மருத்துவமனையில் நுழைவதற்கு முன் தன்னைக் கடந்து போனாளே! முகத்தில கூட ஏதோ காயம். பிளாஸ்திரி போட்டு ஒட்டப்பட்டிருந்ததே... ஒருவேளை, சூர்யாதான் இவர்களைக் காப்பாற்றினாளா?

அப்படி எதுவும் நடந்திருந்தால் அண்ணன் பேயாட்டம் ஆடி விடுவானே! லேசாய்த் தொண்டையைச் செருமிக் கொண்டான் ஆதவன்.

"அண்ணே!"

"ம்..."

"ஒருவேளை அந்தப் பொண்ணு... நம்மூரு பொண்ணா இருக்குமோ?" - தயக்கமாய்க் கேட்டான்.

"ஏன்டா! நம்மூர் பொண்ணுன்னா எனக்குத் தெரியாதா?"

"இல்லை... ஒருவேளை கீழூர்ல உள்ள பொண்ணா?" - ஆதவன் முடிப்பதற்குள் விருட்டென நிமிர்ந்தான் சந்திரன்.

"வாயை மூடு. அந்தத் தெருக்காரியா இருந்தா என்னைப் பார்த்ததும் இவனா... செத்தா சாகட்டும்னு விட்டுட்டுப் போயிருப்பாளே தவிர... மெனக்கெட்டு நின்னு காப்பாத்தியிருக்க மாட்டாள்!" - என்றான் கடுப்பாய்.

"ஏன்ணே இப்படிச் சொல்ற?"

"பின்னே? நமக்கும் அவங்களுக்கும்தான் எந்த ஒட்டும் கிடையாது. உறவும் கிடையாதே! பிறகேன் நம்மைக் காப்பாற்றப் போறாங்க?"

"அண்ணே! ஒரு உசிருக்கு ஆபத்துன்னா... அது யாரு எவருன்னு யோசிக்காம... ஏன் விரோதியாவே இருந்தாலும் காப்பாற்றுவதுதானே மனிதாபிமானம்?"

"அதெல்லாம் அந்தக் கீழூர்க்காரப் பயல்களுக்குக் கிடையாதுடா!"

"அப்படின்னு பட்டுன்னு சொல்லிடாதண்ணே! எல்லார் மனசுலேயும் ஈரம் இருக்கு. உங்க வறட்டுப் பிடிவாதத்தால கல்லா மாத்திட்டீங்க."

"என்னடா சொல்ற?"

"ஆமா! இப்போ நானும் நீயும் ரோட்டில நடந்து போயிட்டு இருக்கோம்னு வை. கீழூர் ஆள் எவனோ இப்படி அடிபட்டுக் கிடந்தா ஓடிப் போய்க் காப்பாத்த மாட்டோமா?"

"நிச்சயமா மாட்டேன்!" - என்றான் அழுத்தமாய்.

தமையனின் பதிலில் திடுக்கிட்டுப் போனான் ஆதவன். "அ...ண்ணே?"



"நாம ஏன்டா அவனுங்களைக் காப்பாத்தணும்? அவனுங்களால நம்ம தெருவில எத்தனை பொணம் விழுந்திருக்குன்னு தெரியுமில்ல?"

"நம்ம ஆட்கள் மட்டும் என்ன கையைக் கட்டிக்கிட்டு சும்மாவா இருந்தாங்க? ஆரம்பிச்சு வெச்சதே இவனுங்க தானே!"

"என்னடா உளர்ற?"

"நம்ம வீட்டுப் பொண்ணை எவனோ வந்து தொட்டா சும்மா விடுவோமா? வெட்டிக் கொல்ல மாட்டோம்? அதைத்தானே, அவங்க பண்ணினாங்க! இது எப்படித் தப்பாகும்?"

"ஆதி!" - குரலை உயர்த்தினான் சந்திரன்.

"திருவிழாவுக்கு வந்த செல்லையா கையையும் வாயையும் சும்மா வெச்சிட்டு இல்லாம... அவங்க வீட்டுப் பெண்ணை இழுத்து வம்பு பண்ணியிருக்கான். அவனை வெட்டினது எப்படித் தப்பாகும்?

"ஒரே குடும்பமா வாழ்ந்தாலும் நாம என்னிக்காவது அந்தத் தெரு பெண்டு பிள்ளைகளை ஏறெடுத்துப் பார்த்திருப்போமா? கேலி கிண்டல் செய்திருப்போமா? செல்லையா மட்டும்தானே திமிரெடுத்துத் திரிஞ்சான். அவன் செய்த தப்புக்கு நாமளே அவனை வெட்டியிருக்கணும்...

"நாம அப்படிச் செய்திருந்தா நம்ம ஊர் இன்னும் ஒற்றுமையோடு நன்றி உணர்வோடு நெருங்கி வாழ்ந்திருக்கும். இப்பப் பாரு... கோவில், குளம்னு

எல்லாமே ரெண்டு பட்டுப் போச்சு. அதுவும் ஒரு பொறம்போக்குப் பயலால...!" - பற்களைக் கடித்தான் ஆதவன்.

"ஏலேய்! அவன் நம்ம பெரியப்பா மகன்."

"இருக்கட்டுமே... அதனால அவன் செய்தது தப்பு இல்லைன்னு ஆயிடுமா? நீயே மனச் சாட்சிக்குப் பயந்து சொல்லுண்ணா. செல்லையா செய்தது சரியா?" - ஆதியின் நேரடியான கேள்வியில் சற்றுத் தடுமாறினான் சந்திரன்.

செல்லையா செய்தது முழுக்க முழுக்கத் தவறுதான். அது அனைவருக்கும் தெரியும். ஆனாலும் அப்போதிருந்த பெரியவர்கள் நியாய அநியாயங்களைப் பற்றிப் பேசி முடிவெடுக்கப் பொறுமையின்றி அரிவாளைக் கையில் எடுத்ததால் எல்லாம் மாறிப் போயிற்று.

அதன் பிறகு சரியா தவறா... என யாரும் யோசிக்கவில்லை. அவன் ரெண்டு பேரை வெட்டினால் நீ நாலு பேரை வெட்டு எனத் தூண்டும் அளவிற்கு வெறி ஆட்கொண்டது. அதே எண்ணமே வளரும் தலை முறையின் மனதிலும் பதிய வைக்கப்பட்டது.

அதிலேயே ஊறிய சந்திரனால் இதற்கு என்ன பதில் கூற இயலும்? மனதிற்கு நியாயம் எனப்பட்டதை நாக்கு ஏற்றுக் கொள்ள மறுத்தது. அதனால் தம்பியை முறைத்தான்.

"நீ பேசுறதைப் பார்த்தா எனக்குச் சந்தேகமா இருக்கு..."



"என்ன?"

"என்னைக் காப்பாத்தினது யாருன்னு உனக்குத் தெரியும்?" - என உறுதியாய்க் கூற... பதறினான் ஆதவன்.

"அட! எனக்கு எப்படித் தெரியும்? ஊர் பேர் தெரியாதுன்ற? நீ மட்டும்தான் அந்தப் பொண்ணைப் பார்த்திருக்க. பிறகு எனக்கு எப்படித் தெரியும்?"

"பிறகெதுக்குடா நீ தேவையில்லாம பழைய கதையை எல்லாம் இழுக்கிற? அப்போ என்னைக் காப்பாத்தினது கீழூர்க்காரிதான்றியா? அதுக்காகத்தான் இப்படிச் சுத்தி வளைச்சுப் பேசுறியா?"

"யப்பா சாமி! எனக்கெதுக்கு வம்பு? உன்னைக் காப்பாற்றினது யாரா வேணா இருந்திட்டுப் போகட்டும். நீ எழுந்து நடக்க ஆரம்பிச்ச பிறகு நீயே தேடிப் பிடிச்சு நன்றி சொல்லிக்க. என்னை விட்டுடு."

"டேய் ஆதி! நான்..."

"வேண்டாம் சகோதரா! நான் என் மனசில பட்டதைச் சொல்வேன். அதுவும் நியாயத்தை மட்டுமே சொல்வேன். ஏன்னா நான் அம்மா பிள்ளை. நீ அப்பா வளர்த்த பிள்ளை. அதனால நியாயம்னு தெரிஞ்சாலும் அதை ஏற்றுக் கொள்ள மாட்டாய். எப்படியோ போ. என்னை விட்டுடு..."

"சரிடா. கோவிச்சுக்காதே! நீ சும்மா அவனுங்க பக்கமே பேசினியா... அதான் அப்படிக் கேட்டேன்."

"நான் யார் பக்கமும் பேசலை. நியாயத்துப் பக்கம்தான் பேசுறேன்!" - ஆதவன் சொல்லிக் கொண்டிருக்கும்போதே கையில் சாப்பாடு பாத்திரத்துடன் முத்தரசியும் சாமிக்கண்ணுவும் உள்ளே வந்தனர்.

"என்னடா! நியாயம், அநியாயம்னு பேச்சு அடிபடுது!" - எனக் கேட்ட தந்தையிடம் அவசரமாய்த் தலையாட்டி மறுத்தான் ஆதவன்.

"இல்லையேப்பா! சும்மா... நாட்டு நடப்பைப் பத்தி பேசிட்டு இருந்தோம்."

"அப்படியா? எப்பா சந்திரா! வலி குறைஞ்சிருக்கா?"

"ம்... இப்ப பரவாயில்லைப்பா. அம்மா வரலையாப்பா?"

"வருவாய்யா... சாப்பாடு கொடுத்தனுப்பினா. வீட்டில மரிக்கொழுந்து தனியா இருக்காளே... அதனால நாங்க போனதும் அம்மா வருவா."

"சரிப்பா."

"ஆதவா!"

"அப்பா!"

"உன் வண்டி ரெடியாகிடுச்சாம்யா. அந்த மெக்கானிக் ரெண்டு தரம் ஆள் அனுப்பிட்டான். போய் எடுத்திட்டு வந்திரு."

"சரிப்பா."

"காசு இருக்கா? வேணுமா?"



"இருக்குப்பா."

"சரி! நானும் அத்தையும் இங்கே இருக்கோம். நீ வண்டியை எடுத்திட்டு வீட்டில போய்க் குளிச்சிட்டுச் சாப்பிட்டு வா. போ..."

"சரிப்பா! அண்ணே! நான் போயிட்டு வரட்டுமா?"

"ம்... வண்டியை நல்லா செக் பண்ணிட்டு வாங்கு. இனிமே எவன்கிட்டயும் வண்டியைக் கொடுக்காதே."

"சரிண்ணே! அப்பா, வர்றேம்ப்பா!" - என்றவாறு வெளியேறினான் ஆதவன். நேராய் மெக்கானிக்கிடம் சென்று பணத்தைச் செலுத்தி வண்டியை வாங்கினான்.

"எல்லாம் சரி பண்ணிட்டியா? எதுவும் மக்கர் பண்ணாதே?"

"அண்ணே! வண்டியை ஸ்டார்ட் பண்ணிப் பாருண்ணே. சும்மா ஏரோபிளேன் மாதிரி பறக்கும். உடைஞ்ச பார்ட்டையெல்லாம் கழற்றி வீசிட்டுப் புதுசு போட்டிருக்கேன். வாட்டர் வாஷ் பண்ணி சும்மா புது வண்டி மாதிரி மாத்திட்டேன்."

"சரி. வர்றேன்!" - என்றவாறு தனது சுசுகியை உசுப்பினான். மெக்கானிக் சொன்னது போல் காற்றாய்ப் பறந்தது. வீட்டிற்குச் செல்லாமல் பணிபுரியும் இடத்திற்கு வண்டியைச் செலுத்தினான்.

பதினைந்தே நிமிடத்தில் தண்டியூரை அடைந்து கட்டுமானப் பணி நடக்கும் கட்டடத்தின் முன் வந்து நிற்க... கலவையைத் தலையில் சுமந்து கொண்டு நடந்த

சூரியகாந்தி தயங்கி நின்றாள். கண்ணும் முகமும் மலர்ந்தன.

இன்னும் எத்தனை நாள் கழித்து வருவானோ என ஏங்கியவன் கண் முன்னே வந்து நின்றதும் ஒரு கணம் தன்னைச் சுற்றியிருப்பவர்கள் மறந்து போயினர். தான் செய்யும் வேலை மறந்து போனது. அந்த இடத்தில் அவர்கள் இருவர் மட்டுமே இருப்பதைப் போல் மெய்ம்மறந்து நின்றாள்.

அவளது முகத்தில் கழுத்தில் கையில் இருந்த காயங்களை ஆழமாய்ப் பார்த்தான் ஆதவன். "இது எப்படி ஆச்சு? அண்ணனைக் காப்பாற்றியது நீதானா?" - ஆதவன் பார்வையாலேயே கேட்க... சிறு புன்னகையைப் பதிலாய் அளித்தாள் சூரியகாந்தி.

"ஏ புள்ள சூரி! கலவையைத் தலையில வெச்சிக்கிட்டு என்ன பண்ணிட்டு இருக்க? வா புள்ள சீக்கிரம்!" - கொத்தனாரின் அதட்டலில் சட்டென உணர்வு பெற்றவளாய் ஆதியைச் சுற்றிக் கொண்டு நகர்ந்தாள்.

"எட்டணா வண்டியை அப்படி ஓரமா நிறுத்த வேண்டியதுதானே? பொண்டுக வேலை செய்யுற இடத்தில வந்து நிறுத்தினா எப்படி? பெரிய ஹீரோன்னு நினைப்பு!" - சுப்புலட்சுமி மெதுவாய் முணுமுணுக்க... லேசான புன்னகையோடு வண்டியை ஒதுக்கி நிறுத்திவிட்டு இறங்கினான் ஆதவன்.

"ஆதி! என்னப்பா என்கிட்ட லீவு சொல்லிட்டு இங்கே வந்து நிற்கிற? அண்ணனுக்கு எப்படி இருக்கு?" - உடம்பு



முழுக்க சிமெண்ட்டாய் வந்து நின்றவரிடம் சமாளிப்பாய்ச் சிரித்தான்.

"இப்ப பரவாயில்ல சித்தப்பா. எனக்குத்தான் வேலைக்கு வராம கஷ்டமா இருக்கு. அதான் அப்படியே வந்து வேலை எப்படி நடக்குதுன்னு பார்த்திட்டுப் போகலாம்னு வந்தேன்."

வேலையில் கவனமாய் இருந்தாலும் தனது செவியைத் தீட்டி வைத்திருந்த சூரியகாந்திக்கு அவனது பதிலில் உடல் முழுக்கச் சிலிர்த்தது. போதாக்குறைக்குச் செங்கல் சுமந்து வந்த துளசி தன் பங்குக்குச் சீண்டினாள்.

"கேட்டியாடி சூரி! பார்த்திட்டுப் போகலாம்னு வந்தாராம்."

"எனக்கும் கேட்குது. நீ வாயை மூடு."

"உனக்குக் கேட்கணும்னுதானே இவ்வளவு சத்தமா பேசுறாரு...."

"துளசி! நீ ஒருத்தி போதும். என் அப்பன் குதிருக்குள்ள இல்லைன்றதுக்கு. போடி!" - என்றவாறே சிமெண்ட் கலவையை இறக்கி வைத்துவிட்டு அடுத்த பாண்டை எடுத்துக் கொண்டு மெல்ல நடந்தாள்.

"என்னடா சோமா? இவ்வளவு அடிபட்டிருக்கு. என்கிட்ட ஒரு வார்த்தை சொல்லணும்னு தோணலையா உனக்கு? யாரோ சொல்லித்தான் எனக்குத் தெரியணுமா?" - பார்வை சூரியகாந்தியிடம் இருக்க... சிமெண்ட் மூட்டையைப் பிரித்துக் கொண்டிருந்தவனிடம் கேட்டான் ஆதவன்.

சோமநாதன் சர்வசாதாரணமாய்ப் பதிலளித்தான். "அட! என்ன ஆதி? இதெல்லாம் ஒரு காயமா? நேற்று மேற்குப் பக்கச் சுவரைக் கட்டும்போது சும்மா ஒரு துண்டு செங்கல்தான் விழுந்தது. நகம்தான் லேசா பிஞ்சிடுச்சி. மற்றப்படி பெரிய காயமில்ல."

"என்ன இருந்தாலும் எனக்கு மனசே கேட்கலைடா! முகத்தில பட்டது கண்ணில பட்டிருந்தா என்ன ஆகியிருக்கும்?"

"ஏய்! நகம் எங்கே இருக்கு? கண்ணு எங்கே இருக்கு? ஓ! நகக்கண்ணைச் சொல்றியா?"

"ம்... ம்..." - தலையாட்டினான் ஆதவன்.

ஓரக் கண்ணால் அவனைப் பார்த்த சூரியகாந்திக்குச் சிரிப்பு பீறிட்டது. உதட்டை மூடித் தன் சிரிப்பை அடக்கிக் கொண்டாள்.

"ரொம்ப வலிக்குதாடா? மருந்தெல்லாம் சரியாப் போடுறியா? அலட்சியமா விட்டுடாதே. அப்புறம் சீழ் வெச்சிடும். ரொம்ப வலிக்கும்."

"அடப் போடா! இதைவிடப் பெரிய காயம் எத்தனையோ பார்த்திருக்கேன். இது என்ன பெரிய வலி? சுண்ணாம்பு வெச்சுக் கட்டியிருக்கேன். ரெண்டு நாள்ல சரியாகிடும்."

"சோமா! நீ செய்த உதவிக்கு எப்படி நன்றி சொல்றதுன்னே தெரியலை. உன்னைப் பார்த்து நன்றி சொல்லிட்டுப் போகத்தான் வந்தேன். உன் இடத்துல யார்



இருந்தாலும் இப்படி ஒரு உதவியைச் செய்திருக்க மாட்டாங்க."

"என்னடா மாப்பிள்ளை! அப்படியென்ன பெரிய உதவி பண்ணிட்டேன் நான்?" - சோமநாதன் புரியாமல் விழிக்க... ஆதவனின் கேள்வியைப் புரிந்து கொண்ட சூரியகாந்தி கண்களால் பதில் அளித்தாள்.

"இது என் கடமை மாமா! உனக்காக என்ன வேணா செய்வேன்."

"இருந்தாலும் உனக்கு ஒன்னுன்னா என்னால... தாங்கிக்க முடியாது."

"என் கண்ணில உன் உருவமும் என் நெஞ்சில உன் நினைப்பும் இருக்கிற வரைக்கும் எனக்கு எதுவும் ஆகாது மாமா!"

"உடம்பைப் பார்த்துக்கோ. காயத்துக்கு மருந்து போடு."

"சரி மாமா! நீ எப்போ வேலைக்கு வருவே?"

"இன்னும் ரெண்டு நாள்ல வந்திடுவேன்."

"சந்திரன் மாமா, தாமரை அக்கா எப்படி இருக்காங்க?"

"ம்... இப்ப பரவாயில்லை. இந்தக் காயத்தோட ஏன் வேலைக்கு வந்தே? வலிக்குமே!" - அவர்களின் மௌன உரையாடல் புரியாமல் சிமெண்ட்டைக் கொட்டி, ஆற்று மணலைக் கலந்தவாறே குரல் கொடுத்தான் சோமநாதன்.

"என்ன ஆதி! அமைதியாயிட்ட?"

"உடம்பைப் பார்த்துக்கடா. மருந்தைத் தினமும் போடு. இவ்வளவு காயத்தோட ஏன்டா வேலைக்கு வந்தே? எதிலயாவது இடிச்சிட்டா என்ன பண்றது?"

"என்னாச்சு ஆதி உனக்கு? போன மாசம் சாரக்கட்டை விழுந்து என் கால் வீங்கினப்பக்கூட நீ இவ்வளவு விசாரிக்கலை. வருத்தப் படலை. இப்ப இத்துனூண்டு காயத்துக்கு இவ்வளவு வருத்தப்படுற?"

"உனக்கென்னடா? நீ ஈஸியா சொல்லிட்ட. என் மனசு படுற பாடு..."

"என்னது? மனசு... பாடுபடுதா?" - வியப்பாய் நிமிர்ந்த சோமநாதன்... ஆதியின் பார்வையும் கவனமும் வேறு புறம் இருக்க... தானும் திரும்பிப் பார்த்தான். அங்கே முகத்திலும் கையிலும் காயத்தோடு சூரியகாந்தி நின்று கொண்டிருக்க... கோபமும் வியப்புமாய் ஆதவனின் பக்கம் திரும்பினான்.

"அடப் பாவி! அப்போ இவ்வளவு நேரமா நீ என்கிட்ட பேசலையா?"

"உன்கிட்டயா? உன்கிட்ட பேச என்னடா இருக்கு?"

"அது சரி. என்னடா நம்ம மேல பயலுக்கு இவ்வளவு கரிசனைன்னு பார்த்தேன். இப்பத்தானே புரியுது. கரிசனம் யார் மேலன்னு?"

"புரியுதுல்ல. மூடிட்டு வேலையைச் செய்."



"பார்த்துடா. எனக்குப் புரியுற மாதிரி நம்ம ஊர்க்காரன் எவனுக்கும் புரிஞ்சிடப் போகுது. அடக்கி வாசி!" - என்றவாறு சோமநாதன் தன் வேலையைத் துவங்க... ஆதவனும் சூரியகாந்தியும் இன்னும் பேசிக் கொண்டே இருந்தனர்.

# 14



விண்ணில் உள்ள நிலவின்
பயணம் - விடியும்வரை!
என்னில் உள்ள உன் நினைவின்
பயணம் - நான் முடியும்வரை!

ஐம்பது ஏக்கர் பரப்பளவில் பரந்து விரிந்திருந்த அந்தத் தென்னந் தோப்பு தன்னுள் பசுமையையும் குளுமையையும் நிறைத்திருந்தது. இதமான காற்றின் அசைவிற்கேற்ப தனது இலைகளை ஆட விட்டுக் கொண்டிருந்த பருத்த தென்னை மரங்கள் வரிசையாய் நின்று கொண்டிருக்க... அவற்றிற்கு நீர் பாய்ச்சிக் கொண்டிருந்தாள் கனகம்.

சொட்டு நீர்ப் பாசனக் குழாயைப் பாத்திகளில் போட்டு நீரைத் திருப்பி விட்டு வரப்பின் ஓரமாய்க் குவிந்து கிடந்த காய்ந்த தென்னங் கீற்றுகளை நெருங்கினாள்.

தென்னை மரத்தில் இருந்து விழுந்திருந்த காய்ந்த கீற்றுகளை இரண்டாய் நீளவாக்கில் பிளந்து அவற்றில்

நீர் தெளித்துப் போட்டிருந்தாள். அவை பதமாக நனைந்திருக்க... மண் தரையில் அமர்ந்து ஒரு கீற்றை தன் மடியில் எடுத்துப் போட்டுக் கொண்டு ஓலைகளை பிரித்தவாறு தட்டிப் பின்னத் துவங்கினாள்.

வருடக் கணக்காய்த் தட்டிப் பின்னிப் பழகிய கைகள் மளமளவெனப் பின்ன... தென்னங்கீற்றுகள் ஓலைத் தட்டியாய் மாறிக் கொண்டிருந்தன. கணவன் இறந்த பிறகு நாட்டார் தோட்டத்தில் நீர் பாய்ச்சும் வேலை மட்டும் கிடைக்கா விட்டால் திண்டாடிப் போயிருப்பாள் கனகம்.

உடலின் முதுமையும் வறுமையும் அவளால் தொடர்ந்து கட்டட வேலைக்குச் செல்ல இயலாமல் போனது. அந்தச் சமயம் இந்த வேலை கிடைத்ததும் சந்தோஷமாகவே ஒப்புக் கொண்டாள்.

'ஒரு நாள் விட்டு ஒரு நாள் கரெக்ட்டா தண்ணி பாய்ச்சிடணும். காய்ந்த ஓலை விழுந்தா பாளை மட்டை எது விழுந்தாலும் நீயே எடுத்துக்க. தோட்டத்தில் குப்பையைச் சேர்க்காதே. பாம்பு நடமாட்டம் வந்திடக் கூடாது. சுத்தமா வெச்சிக்க.

"உன் தோட்டமா நினைச்சி இந்தத் தென்னம் பிள்ளையை உன் பிள்ளையா நினைச்சி... அதுகளைக் காயப் போடாம பார்த்துக்க. மாசம் ரெண்டாயிரம் சம்பளம்.

"அப்புறம் தேங்காய் பறிக்கும்போது உனக்குத் தேவையான காய்களைத் தந்திடுறேன். இவ்வளவுதான் என்னால செய்ய முடியும். உனக்குச் சம்மதம்னா



இன்னிக்கே வேலைக்கு வந்திடு!' - என்ற சுப்பிரமணியனிடம் உடனே சம்மதமாய்த் தலையசைத்தாள்.

அன்று முதல் இன்றுவரை அவர் ஒரு குறை சொல்லாத அளவிற்கு நடந்து கொண்டாள்.

வாரம் ஒரு முறை கிடைக்கும் காய்ந்த ஓலைகளைச் சேகரித்து அவற்றைத் தட்டியாய்ப் பின்னிக் கொண்டு போய்க் கடையில் விற்று விடுவாள்.

சொற்பத் தொகை என்றாலும் அவளுக்கு அது கூடுதல் வருமானம்.

விறகுக்கும் பஞ்சமில்லை. நிழலில் உழைப்பதால் அலுப்பும் தெரிவதில்லை.

இருபது தட்டிகளைப் பின்னிவிட்டு எழுந்தாள் கனகம். நீர் பாய்ந்து கொண்டிருந்த பாத்திகளை ஒரு தரம் பார்வையிட்டு விட்டு... மீண்டும் தன் இடத்திற்கு வந்தபோது சூரியகாந்தி அமர்ந்து தட்டியைப் பின்னிக் கொண்டிருந்தாள்.

"ஏத்தா சூரி! எப்பத்தா வந்தே?"

"நீ எழுந்து போகும்போதே வந்திட்டேம்மா."

"எழுந்திரு ஆத்தா! உனக்கேன் இந்த வேலையெல்லாம்? எழுந்துக்க. அம்மா பின்னிடுறேன்."

"உனக்குச் சோறு கொண்டாந்திருக்கேம்மா. நீ சாப்பிடு. அது வரைக்கும் நான் பின்னிட்டு இருக்கேன்..." - வாய் பேசிக் கொண்டிருக்க... கைகள் தானாய் வேலை செய்து கொண்டிருந்தன.

"நான் பிறகு சாப்பிட்டுக்கிறேன். நீ எழுந்திரு. நாள் பூரா உழைக்கிற. வாரத்தில ஒரு நாள்தான் லீவு. அன்னிக்காவது வீட்டில இருந்து ஓய்வெடுக்கலாமில்ல?"

"ஏம்மா! இத்தனை வயசாகியும் நீ இப்படி ஓய்வே இல்லாம உழைக்கிறியே! எனக்கென்ன ஓய்வு வேண்டிக் கிடக்கு?"

"என் கதை வேற ஆத்தா! நான் வாழ்ந்து முடிச்சவ. என் பிள்ளைகளுக்காக உழைச்சே ஆகணும். ஆனா நீ அப்படியா? இன்னொரு வீட்டுக்கு வாழப் போறவ. இப்பவே இப்படி ஓடாய்த் தேய்ஞ்சா இன்னும் மிச்சக் காலத்திற்கு உடம்புல தெம்பு வேணாமா?"

"அதையெல்லாம் பிறகு பார்க்கலாம். நீ முதல்ல சாப்பிடும்மா. மணி மூனாகுது..." - என்றவாறே அடுத்த ஓலையை எடுத்துப் பின்னத் துவங்கினாள்.

"சொன்னாக் கேட்கவா போற? சரி! நீ சாப்பிட்டியா? தம்பி, அண்ணன் எல்லாரும் சாப்பிட்டாகளா?"

"எல்லாரும் சாப்பிட்டுட்டோம். நீ சாப்பிடு."

"சரி! கை அலம்பிட்டு வர்றேன்..." - என்றவள் தண்ணீர்த் தொட்டியை நெருங்கிக் கை கால்களைக் கழுவிப் புடவைத் தலைப்பால் துடைத்தவாறே வந்தாள். சாப்பாட்டுத் தூக்கை எடுத்துக் கொண்டு அமர்ந்தாள்.

"என்ன, குழம்புதான வெச்சே?"

"குளத்து மீனு வந்ததும்மா. மலிவா இருந்தது. வாங்கிக் குழம்பு வெச்சிட்டு நாலு துண்டைப் பொரிச்சேன்.



சாப்பிடும்மா. புளி கொஞ்சம் தூக்கலா ஊத்தி நல்ல காரசாரமா வெச்சிருக்கேன்."

"சொல்லும்போதே நாக்கில் எச்சில் ஊறுதே. வாசனை தூக்குதே. சூரி! உன் கைமணமே தனிதான்!" - என்றவாறு கிண்ணத்தில் இருந்த குழம்பை ஊற்றிப் பிசைந்து சாப்பிடத் துவங்கினாள் கனகம்.

"என்ன! மீன் குழம்பு வாசம் தெருவரை மணக்குது. அத்தே! உங்க வீட்டு மீன் குழம்புக்கு மட்டும் தனி வாசனை வருதே... எப்படி?" - என்றவாறு வந்து நின்றவனைக் கண்டதும் பதறி எழுந்தாள் சூரியகாந்தி.

ஆதவன் புன்னகையோடு கண் சிமிட்ட... உடல் சிலிர்க்க... சற்றுப் பயமாய்த் தாயைப் பார்த்தாள். கனகம் புன்னகையோடு ஆதவனை அழைத்தாள்.

"வாய்யா! உட்காரு. ஒரு வாய் சாப்பிடு."

"இருக்கட்டும் அத்தே! நான் இப்பத்தான் சாப்பிட்டு வந்தேன். நீங்க சாப்பிடுங்க..." - என்றவாறு பின்னி வைத்திருந்த தட்டியில் ஒன்றை எடுத்துப் போட்டுக் கொண்டு அமர்ந்தான்.

சூரியகாந்திக்கு இன்னும் படபடப்பு அதிகரிக்க... தாயிடம் கிசுகிசுத்தாள். "அம்மா! என்ன இது? திடீர்னு நாட்டார் வந்து நின்னா என்ன பண்றது? போகச் சொல்லு."

"இப்ப யாரும் வர மாட்டாங்க. அவர் வெளியூர் போயிருக்கார். அதான் அத்தைகிட்ட ரெண்டு வார்த்தை பேசிட்டுப் போகலாம்னு வந்தேன்."

"உட்காருய்யா. கையைக் கழுவிட்டு வந்திடுறேன்..." - கனகம் சாப்பாட்டுப் பாத்திரத்தோடு தொட்டியை நோக்கிச் செல்ல... சூரியகாந்தியிடம் திரும்பினான் ஆதவன்.

"ஏன் நிற்கிற? இப்படி என்கிட்ட வந்து உட்காரு."

"என்ன?" - குரலை உயர்த்திக் கேட்டாள்.

"கட்டிக்கப் போறவன்தானே! தப்பு இல்லை."

"எப்ப இருந்து மாமா... உனக்கு இவ்வளவு தைரியம் வந்தது?"

"நான் எப்பவுமே வீரன்தான்டி. என் வீரத்தைக் காட்ட நமக்குச் சந்தர்ப்பம் அமையலை."

"சரி! என்ன இந்தப் பக்கம் காத்து வீசுது."

"நீ எங்கே போறியோ... அங்கதான் இந்தக் காத்து வீசும்."

"அட! சினிமா வசனமெல்லாம் பேசுறியே. பரவாயில்லை மாமா! நீ கூட தேறிட்ட. ஆமா! உனக்கு நிழலா ஒருத்தன் வருவானே... அவனை எங்கே?"

"யாரு? சுடலையா?"

"அவன்தான்."

"அவனை வீட்லயே கழற்றி விட்டுட்டேன். இறைச்சி சாப்பாடுன்னா அவ்வளவு சீக்கிரம் வீட்டை விட்டுக் கிளம்ப மாட்டான்."

"நீ சாப்பிட்டியா மாமா?"



"இன்னும் இல்லை. நீ இந்தப் பக்கமா வர்றதைப் பார்த்தேன். அதான் அப்படியே வந்திட்டேன்."

"இப்படியெல்லாம் வராதே மாமா! யார் கண்ணிலயும் பட்டுட்டா வம்பாகிடும். இதோ அம்மா வருது..."

"என்னய்யா ஆதி! வீட்டில எல்லாரும் சௌக்கியமா? சந்திரன் இப்ப எப்படி இருக்கான்?"

"கொஞ்சம் கொஞ்சம் நடக்கிறான் அத்தே! இன்னும் கொஞ்ச நாள் ஓய்வெடுத்தா சரியாகிடும்னு டாக்டர் சொல்லியிருக்கார்."

"உன் மதினி எப்படி இருக்கா?"

"அவங்க அம்மா வீட்டுல இருக்காங்க. உடம்பு நல்ல குணமான பிறகு வந்தாப் போதும்னு சொல்லியிருக்காங்க."

"சரி! வேற என்னய்யா விசேஷம்? திடுதிப்புன்னு இந்தப் பக்கம் வந்திருக்க?"

"அத்தே! வந்து... நான்... ஒரு விஷயம் கேள்விப்பட்டேன். அதை உங்ககிட்ட உண்மையான்னு கேட்டுட்டுப் போகலாம்னு வந்தேன்."

"என்னய்யா கேள்விப்பட்ட?"

ஆதவன் தயக்கமாய்ச் சூரியகாந்தியைப் பார்க்க... அவளும் கேள்விக் குறியாய் அவனை நோக்கினாள்.

"என்ன மாமா? ஏன் தயங்குற?"

"அத்தே! சூரிக்கு... ஏதாவது மாப்பிள்ளை பார்க்கிறீங்களா?" - தயக்கமாகவே அவன் கேட்க இருவரும் திகைத்தனர்.

"என்ன?"

"இல்லையேப்பா! ஏன் கேட்கிற?"

"ரெண்டு நாள் முன்னால சிவலூர் போயிருந்தேன். அங்க முருகேசனைப் பார்த்தேன்."

"என் மகனையா?"

"ஆமா அத்தே! அங்க உள்ள சொந்தக்காரங்ககிட்ட விசாரிச்சப்பதான் எனக்கு இந்த விஷயமே தெரிஞ்சது."

"எ...ன்ன விஷயம்?"

"மாப்பிள்ளை பார்க்கத்தான் அங்க போனானாம். ரெண்டு நாள்ல மாப்பிள்ளை வீட்டுக்காரங்க பெண் பார்க்க வர்றாங்களாம். அடுத்த மாசமே மாரியாத்தா கோவில்ல வெச்சு ரொம்ப எளிமையாக் கல்யாணத்தை வெச்சுக்கலாம்னு பேசிட்டு வந்திருக்கான்!"

ஆதவன் சொல்லச் சொல்ல... சூரியகாந்திக்குத் தலை சுற்றியது. கீழே விழுந்து விடாமல் இருக்க... அருகே நின்ற தென்னையைப் பற்றிக் கொண்டாள். கண்களில் நீர் முட்டியது.

கணவனாக நினைத்து வாழ்பவன் வாயால் கேட்கும் செய்தியா இது? இதை நேரில் கேட்டபோது இவன் மனம் எப்படித் தவித்திருக்கும்?



கண்ணீரோடு நிமிர்ந்து ஆதவனைப் பார்த்தாள். அவனோ கனகத்தின் கரங்களைப் பற்றிக் கொண்டு, மெல்லிய குரலில் தொண்டை அடைக்கப் பேசிக் கொண்டிருந்தான்.

"அத்தே! சூர்யாதான் என் பெஞ்சாதின்னு எப்பவோ முடிவு பண்ணிட்டேன். அவகூட வாழுறதுக்காகத்தான் என் சொந்த உழைப்பில தனியா வீடு கட்டிட்டு இருக்கேன். இன்னும் ரெண்டு மாசத்தில வீட்டைக் கட்டி முடிச்சிடுவேன்.

"அதுக்கப்புறமா வந்து பொண்ணு கேட்கலாம்னு இருந்தேன். அதுக்குள்ள முருகேசன் இப்படி மாப்பிள்ளை பார்க்கிறது தெரிஞ்சதும்... மனசுக்கு ரொம்ப சங்கடமாகிப் போச்சு அத்தே! ரெண்டு நாளா என்னால சாப்பிட முடியலை. தூங்க முடியலை."

"ஆ...தி...!"

"அத்தே! இந்த ஊருக்காக நான் பயப்படலை. சூரியாவை நான் கட்டிக்கிட்டு அவளுக்கு ஒரு குறையில்லாத வாழ்க்கையைக் கொடுக்கணும்னுதான் இவ்வளவு நாளா பாடுபடுறேன். நடுவில அண்ணனுக்கு விபத்தானதில கொஞ்சம் செலவாகிப் போச்சு.

"இல்லன்னா... வீடு வேலை முடிஞ்சிருக்கும். இப்ப எனக்கு என்ன பண்றதுன்னு தெரியலை. நீங்கதான் எனக்கு உதவணும். நான் உங்களைத்தான் நம்பி வந்திருக்கேன்."

"நானா? நான்... நான்... என்னய்யா செய்ய முடியும்?"

"உங்களுக்கு என் மேல நம்பிக்கை இருந்தா நீங்கதான் முருகேசன் கிட்ட பேசணும். ஒரே ஒரு மாசம் பொறுத்துக்கச் சொல்லுங்க. நான் அதுக்குள்ள எங்க வீட்ல பேசிச் சம்மதிக்க வெச்சிடுவேன்."

"ஆதி! இதெல்லாம்... நடக்குமா?"

"முயற்சி செய்யுறேன் அத்தே! அப்படி அவங்க ஒத்துக்கலைன்னா உங்க கண் முன்னால எங்க கல்யாணம் நடக்கட்டும். உங்களை விட வேற ஒரு தெய்வம் இருக்குதா என்ன?"

"ஆதி!"

"அத்தே! திருட்டுத்தனமா கல்யாணம் பண்ண எனக்கு எப்பவுமே விருப்பம் கிடையாது. அதனாலதான் நான் பொறுமையா இருந்தேன். ஆனா என் பொறுமையால சூர்யாவை இழந்திடுவேனோன்னு கொஞ்சம் பயம் வந்திடுச்சி."

சூரியகாந்தியின் கண்களில் கரகரவென நீர் வழிந்தது. துக்கம் தொண்டையை அடைக்க... அதை விழுங்கினாள்.

"அப்படி எதுவும் நடந்தா என் உடம்புல உசிர் இருக்காது மாமா!"

"வாயை மூடு சூர்யா. நீ உயிரை விடுறதுக்கா நானும் அத்தையும் இத்தனை பாடுபடுறோம்? என் மேல ஆணை. எந்தச் சூழ்நிலையிலும் நீ உன் உசிரை மாய்ச்சுக்கக் கூடாது."



"மாமா!"

"உன்னை யாருக்கும் தாரை வார்த்துக் கொடுத்திட மாட்டேன்டி. என்னை நம்பு. இந்த ஜென்மத்தில் நீதான் எனக்கு எல்லாமே."

"மா...மா...!" - குரல் தழுதழுக்க நின்ற மகளை அணைத்துக் கொண்டாள் கனகம்.

"அழாதடி கண்ணு. எனக்கு ஆதி மேல நம்பிக்கை இருக்கு. ஆதி! நீ தைரியமா போய்யா. போய் என் அண்ணன்கிட்ட பேசிச் சம்பந்தம் பேசக் கூட்டிட்டு வா. என் மக உனக்குத்தான்."

"அத்தே!"

"ஊர்க்காரனுங்களைப் பத்திக் கவலைப்படாதே. நீ என் அண்ணன் மகன். உனக்கு என் மகளைக் கொடுக்க நான் யாரைக் கேட்கணும்?"

"போதும் அத்தே! இது போதும். நான் இப்பவே போய் அப்பாகிட்ட பேசுறேன்."

"பேசய்யா... எது நடந்தாலும் சீக்கிரம் நடக்கட்டும். வீடு தேடி வந்து பொண்ணு பார்த்திட்டுப் போயிட்டா... வேறு எவனும் பெண் கேட்டு வர மாட்டான்."

"சரி அத்தே! அப்ப நான் கிளம்புறேன்.." - என்றவாறே எழுந்து கொண்டான்.

கண்ணீரோடு அவனை அழைத்தாள் சூரியகாந்தி. "மா...மா...!"

"என்னம்மா?"

"உங்க அப்பா சம்மதிச்சாலும்... வீட்ல இருக்கற உன் அத்தை விடுவாங்களா? அப்புறம் உன் அண்ணன்...?"

"யார் சம்மதிச்சாலும் சம்மதிக்காட்டியும் நம்ம கல்யாணம் நடக்கும்..." - என்றான் அழுத்தமாய்.

சூரியகாந்தி கண்ணீரோடு புன்னகைத்தாள். "நிசமாவா மாமா?"

"என் மேல உனக்கு நம்பிக்கை இருக்குல்ல?"

"இருக்கு மாமா. நிறைய இருக்கு."

"அதே நம்பிக்கையோட அழாம இரு. நான் நாளைக்கே பெண் கேட்டு வர்றேன். அத்தே! வர்றேன் அத்தே. சூர்யாவைப் பத்திரமா பார்த்துக்கங்க..."

"நான் பார்த்துக்கிறேன். போயிட்டு வாய்யா!"

"சரி அத்தே!" - என்றவாறு வெளியேறியவனைப் பார்த்துக் கொண்டே இருந்தாள் சூரியகாந்தி. மீண்டும் கண்களில் நீர் நிறைந்தது. அதைத் துடைத்தாள் கனகம்.

"அம்மா! எனக்குப் பயமா இருக்கும்மா!"

"ஏன் கண்ணு?"

"அண்ணனை நினைச்சா... எனக்கு..."

"உன் அண்ணனுக்கு இப்பத்தான் பொறுப்பு வந்திருக்கு சூரி. இத்தினி நாளா தட்டிக் கழிச்சவன் இப்ப அவனே மாப்பிள்ளை பார்த்திருக்கான்னா என்ன அர்த்தம்?"

"என்ன அர்த்தம்?"



"அவன் மனசிலயும் ஈரம் இருக்கு. தங்கச்சியை நல்லபடியா கல்யாணம் பண்ணிக் கொடுக்கணும்கிற எண்ணம் இருக்கு. நம்ம மேல பாசம் இருக்கு."

தாயின் வார்த்தையில் துளியும் நம்பிக்கை இல்லாமல் பார்த்தாள். இந்த மாதிரி எதுவுமே தன் தமையனுக்குக் கிடையாது என்பது அவளது எண்ணம். ஆனால் என்ன திடீரென்று மாப்பிள்ளை தேடுகிறான்? ஒருவேளை அம்மா சொல்வது போல் மனதிற்குள் அன்பை மறைத்து வைத்திருந்தானோ?

இதோ இந்த ஆதவன்கூட இத்தனை பிரியத்தை மனதிற்குள் ஒளித்து வைத்திருக்கிறானே! இப்போது சந்தர்ப்பம் வாய்த்த போதுதானே அதை வார்த்தையாய் வெளிப்படுத்துகிறான். அதே போல் அண்ணனுக்கும் அன்பு இருக்குதோ? அதை வெளிக்காட்டத் தெரியாமல் தான் சதா சர்வகாலமும் எரிந்து விழுகிறானோ?

"சூரி! என்னம்மா யோசனை?"

"இல்லம்மா! எனக்கு அண்ணன் மேல நம்பிக்கை இல்ல."

"ஏன்?"

"மாப்பிள்ளை பார்த்தவன் நம்மகிட்ட ஏம்மா ஒரு வார்த்தை கூட இதுவரைக்கும் சொல்லலை?" - மகளின் கேள்வியில் வாயடைத்துப் போனாள் கனகம்.

'அதானே! தங்கையிடம் சொல்லாவிட்டாலும் பெற்றவள் நான். என்னிடம் கூட ஒரு வார்த்தை

சொல்லவில்லையே. திடீரென்று அழைத்து வந்து நிற்பானோ?

திருமணத் தேதி வரை பேசியவன்... தன்னிடம் ஏன் எதையும் சொல்லவில்லை?'

தாயின் குழப்பமான முகத்தைக் கண்டு தானும் பயந்தாள் சூரியகாந்தி.

தாயின் தோளில் சாய்ந்து கொண்டாள்.

"நான் உன்னை மட்டும்தாம்மா நம்பிட்டு இருக்கேன். அண்ணன் கிட்ட நீதான் பேசணும். எனக்கு ஆதவன் மாமனைத் தவிர வேறு யாரும் மாப்பிள்ளையா வரக் கூடாதும்மா. மாமன்தான் என் உசிரு."

"கவலைப்படாதே. நான் இருக்கேன். என்னை மீறி எதுவும் நடக்காது. நடக்கவும் விட மாட்டேன்!" - தாயின் கண்களில் தெரிந்த தெளிவும், குரலில் தொனித்த உறுதியும் சூரியகாந்தியின் கண்ணீரை நிறுத்தியது. நம்பிக்கையை ஒளிரச் செய்தது.

# 15



உன் கண்ணீர்த் துளிகள்
விலை மதிப்பில்லாதவை! - அதை
விலை மதிப்பற்ற உறவுகளுக்காகத்
துளிகூடச் சிந்திவிடாதே!



இரவு வெகுநேரம் வரை காத்திருந்தும் முருகேசன் வரவில்லை. தூக்கம் கண்ணைத் தழுவ... கண்களைக் கசக்கி அதை விரட்டியவாறு பிடிவாதமாய் அமர்ந்திருந்தாள் சூரியகாந்தி.

பாயில் சுருண்டிருந்த கனகம் குரல் கொடுத்தாள். "சூரி! படு ஆத்தா."

"அண்ணன் இன்னும் வரலையேம்மா?"

"அவன் வரும்போது வரட்டும். நீ படுத்தா."

"இல்லம்மா! அண்ணன் கிட்ட பேசாம என்னால தூங்க முடியாது..." - சொல்லும்போதே வாசலுக்கு வெளியே சைக்கிள் நிறுத்தப்படும் ஓசை கேட்டது.

"அம்மா! அண்ணன் வந்திடுச்சு. எழுந்திரும்மா!"

விருட்டென எழுந்து அமர்ந்தாள் கனகம். "உள்ளே வரட்டும். நான் பொறுமையாக் கேட்கிறேன். நீ படுத்துக்க."

"ஏம்மா?"

"உன்னை உட்கார வெச்சிட்டு எல்லாத்தையும் பேச முடியாதுடி. நீ படு. நாங்க பேசுறது உனக்குக் கேட்கும். படு..." - கனகம் அவசரப்படுத்த மனமேயின்றிப் படுத்துக் கொண்டாள்.

தாயின் பழைய புடவையைப் போர்த்திக் கொண்டு, கண்களை மூடி, காதைத் திறந்து கொண்டு தூங்குவதாய்ப் பாவனை செய்து கொண்டிருந்தபோது... முருகேசனின் குரல் கேட்டது.

"என்னம்மா! இன்னும் தூங்கலையா நீ?"

"இல்லய்யா! உனக்குச் சாப்பாடு போடணுமே!"

"அடடா! இதுக்காகவா முழிச்சிட்டு இருந்தே. நான் வெளியே சாப்பிட்டேம்மா!"

"வெளியேவா?"

"ஆமாம்மா. என் ஃப்ரெண்ட் கூட வெளியே போயிருந்தேன். நேரமாகிப் போச்சே. அதனால ஹோட்டல்லேயே சாப்பிட்டு வந்திட்டேன்!" - என்றவாறே துணியை மாற்றினான். கட்டிலைத் தட்டிப் போட்டுக் கீழே பார்த்தான்.

தம்பி தங்கைகள் வரிசையாய்த் தூங்கிக் கொண்டிருக்க... தாயை நெருங்கினான். குரலைச் சற்றுத் தணித்தவாறே கேட்டான்.

"சூரி தூங்கிட்டாளாம்மா?"

"ஆமாய்யா!"

"சரி! நீ இப்படிக் கட்டிலுக்கு வாம்மா."

"ஏன்யா?"

"வா சொல்றேன்." - தாயை எழுப்பிச் சென்று வாசலோரமாய்க் கிடந்த நார்க் கட்டிலில் அமர வைக்க... படுத்திருந்த சூரியகாந்தியின் செவிகள் கூர்மையாயின.

தணிந்த குரலிலேயே பேசத் துவங்கினான் முருகேசன்.

"யம்மா! நாளைக்குச் சூரியை மத்தியானத்துக்கு மேல லீவு போடச் சொல்லி வீட்டுல இருக்க வை."



"எதுக்குய்யா?"

"சாயந்திரம் மூனு நாலு மணிக்கா மாப்பிள்ளை வீட்டுல இருந்து வர்றாங்க..."

சூரியகாந்தியின் உடல் ஒரு முறை அதிர்ந்து அடங்கியது. கனகம் தவிப்பாய்த் தன் மகளைப் பார்த்து விட்டு மகனை ஏறிட்டாள்.

"என்னய்யா சொல்ற?"

"ஆமாம்மா! சிவலூர்ல என் சிநேகிதன் சங்கரபாண்டி இருக்கானில்ல. அவனோட அண்ணனுக்கு நம்ம சூரியைக் கொடுக்கலாம்னு முடிவு பண்ணியிருக்கேன்."

இடியை நேரிடையாய்த் தலையில் வாங்கியதைப் போல் அதிர்ந்தாள் சூரியகாந்தி.

'சங்கரபாண்டியன் அண்ணன் என்றால்... அவனுக்கு ஏற்கெனவே திருமணமாகி விட்டதே!' - கனகமும் துடித்துத்தான் போனாள்.

"ஏன்யா! என்னய்யா சொல்ற?"

"ஏன்? தமிழ்லதானே சொன்னேன்."

"என்னய்யா இது? அந்தப் பயலுக்குத்தான் நாலஞ்சு வருஷம் முன்னாடியே கல்யாணம் ஆகிப் போச்சே!"

"ஆமா. அவன் பெண்டாட்டி இப்ப அவன்கூட இல்லை. அதனால..."

"என்ன?"

"ஆமா! அவ எவன்கூடவோ போயிட்டாளாம். இப்ப இவன் புள்ள குட்டியோட தனியாக் கிடந்து அல்லாடிட்டு இருக்கான். நம்ம சூரியைப் பத்திச் சொன்னேன். பத்துப் பைசா செலவில்லாம மாரியாத்தா கோவில்ல வெச்சுத் தாலியைக் கட்டிட்டுக் கூட்டிட்டுப் போறேன்னு சொல்றான்.

"இதைவிட வேற நல்ல சம்பந்தம் அமையுமா? அதான் சரின்னுட்டேன். நாளைக்கு வந்து நிச்சயம் பண்ணிட்டு அடுத்த மாசம் முதல் வெள்ளிக்கிழமையே கல்யாணம் பண்ணிடலாம்னு பேசியாச்சு."

'இந்தப் பாழும் உயிர் இப்போதே பிரிந்து விடாதா!' எனத் தோன்றியது. உடல் முழுக்க நெருப்பில் குளித்தது போல் தகித்தது. இதற்கு மேலும் தூங்குவதாய்ப் பாவனை செய்ய இயலாமல் எழுந்து அமர்ந்தாள் சூரியகாந்தி.

தன் முதுகிற்குப் பின்னே இருந்தவளைக் கவனியாமல் தன் எதிரே அமர்ந்திருந்த தாயை உசுப்பினான் முருகேசன்.

"என்னம்மா! ஒன்னுமே பேசாம உட்கார்ந்திருக்க?"

"ம்... என்ன பேச? அதான்... எல்லாத்தையும் நீ மட்டுமே பேசிட்டு வந்திட்டியே!" - தாயின் குரல் வித்தியாசமாய்த் தோன்ற, குரலை உயர்த்தினான்.

"என்னம்மா சொல்ற?"

"ஏன்டா! உனக்கென்ன வேற மாப்பிள்ளையா கிடைக்கலை? போயும் போயும் ஒரு அரைக் கிழவனை உன் தங்கைக்குப் பேசிட்டு வந்து நிற்கிறியே! இது உனக்கே அடுக்குமா?" - கொதித்துப் போனாள் கனகம்.



"என்ன? அரைக் கிழவனா! சங்கரபாண்டி என் வயசுக்காரன். அவன் அண்ணன் உனக்கு அரைக் கிழவனா?"

"அடேய்! சங்கரபாண்டிக்கு முன்னால மூனு பொட்டப் புள்ளைக பிறந்திருக்கு. ஒரு பிள்ளை செத்தே பிறந்தது. இதுக எல்லாத்துக்கும் மூத்தவன்தான் காத்தவராயன். நாற்பது வயசுக்கு மேலயே இருக்கும். நான் கல்யாணமாகி வரும்போதே அவன் பள்ளிக் கூடத்துக்குப் போயிட்டிருந்தான்."

"இப்ப என்ன? கூட ரெண்டு வயசுதான் இருக்கட்டுமே... அதுல என்ன கெட்டுப் போச்சு!"

"யப்பா! உன் தங்கச்சி சின்னப் புள்ளைய்யா. அதைக் கொண்டு போய் அவனுக்குக் கட்டி வெக்க உனக்கு எப்படிய்யா மனசு வந்தது?" - தாயின் கண்ணீரைக் கண்டு சூரியகாந்தியின் கண்களும் நீரை வார்த்தன.

ஆனால் தாயின் கண்ணீரைக் கண்டு சற்றும் அசராமல் சீறினான் மகன்.

"என்னது? சின்னப் புள்ளையா? பிறகெதுக்கு தங்கச்சிக்குக் கல்யாணம் பண்ணு... மாப்பிள்ளை பாருன்னு என் உசிரை வாங்குற?"

"கல்யாணம் பண்ணுன்னு சொன்னேன்தான். இப்படி பாழுங் கிணத்தில பிடிச்சித் தள்ளுன்னு சொல்லலையே!" - தாயின் ஆக்ரோஷமான கேள்வியில் உஷ்ணமானான்.

"அம்மா! இப்ப என்ன சொல்ல வர்ற?"

"நாலு பிள்ளைக்குத் தகப்பனானவனை நான் என் பிள்ளைக்குக் கட்டி வெக்க ஒரு நாளும் சம்மதிக்க மாட்டேன். நாளைக்கு எவனும் இங்கே வரக் கூடாது. அவனுங்கிட்ட போய்ச் சொல்லிடு."

"ஓஹோ! அவ்வளவு தூரத்துக்கு ஆகிப் போச்சா?"

"ஆமாண்டா! என் பிள்ளைக்கு எப்படிப்பட்ட மாப்பிள்ளை பார்க்கணும்னு எனக்குத் தெரியும். நீ உன் வேலையை மட்டும் பார்த்தால் போதும்."

"ஆமா! உன் பொண்ணு பெரிய ரதி. இவளுக்குப் பெரிய ராஜகுமாரன் வருவான். கனவு கண்டுட்டு இரு."

"ஏன்டா! என் மகளுக்கு என்ன குறை?"

"ஏன்? உன் மக மூஞ்சை நீ பார்த்ததே இல்லையா? ஏற்கெனவே மஞ்சத்துண்டு கலரு. இதுல மூஞ்செல்லாம் தழும்பை வாங்கிட்டு வந்திருக்கா. இவ முகரைக்கு வேற எந்த மாப்பிள்ளை கிடைப்பான்? ஒழுங்கா நான் பார்த்து வெச்சிருக்கிற..."

"டேய்! நிறுத்துடா. என் பிள்ளைக்கு உன்னை விட நீ பார்த்த மாப்பிள்ளையை விட... நூறு மடங்கு உசந்தவன் கிடைப்பான். வெறும் கலர் மட்டும் அழகு இல்லடா. மனசு... நல்ல மனசு இருக்கணும். என் பொண்ணுக்கு அது இருக்கு. அவ மனசுக்கு அமோகமா வாழுவா."

"ம்... இப்படியே சொல்லிட்டுத் திரி. காலம் பூரா அவ உன்கூடத்தான் இருக்க வேண்டியதிருக்கும். பாரு!"



"வாயை மூடுடா. நான் நினைச்சேன்னா நாளைக்கே என் மகளுக்குக் கல்யாணம் பண்ணி வைப்பேன்."

"வெப்பே! எப்படி? கற்பனையிலேயே பண்ணுவியா?"

"முருகேசா!"

"ஏம்மா கத்துற? உன் பொண்ணுக்கு மாப்பிள்ளை கிடைக்கிறதே பெரிய விஷயம். இதுல பத்துப் பைசா செலவில்லாம கல்யாணம் பண்ணிக்கிறேன்னு சொல்றவனை வேண்டாம்னு சொல்றியே! பைத்தியமா நீ?"

"ஏன்டா! செலவில்லாம கல்யாணம் பண்ண ரெண்டாந் தாரமா என் பொண்ணைக் கொடுக்கச் சொல்றியா? அவளுக்கு அண்ணனா நீ?"

"ஏன்? ரெண்டாந்தாரமாக் கொடுத்தா என்ன?"

"நீ கட்டுவியாண்ணே?" - நிதானமாய் வந்த குரலில் சடாரெனத் திரும்பினான்.

அமர்ந்த நிலையிலேயே இறுகிய குரலில் கேட்டாள் சூரியகாந்தி. "வாயைத் திறந்து பதில் சொல்லுண்ணே! நாலு குழந்தைகளுக்குத் தாயான ஒரு அபலைப் பெண்ணை நீ மறு தாரமா ஏத்துப்பியா?"

"ஏன்? எனக்கென்ன தலையெழுத்து!" - சீறினான்.

"அப்போ எனக்கு மட்டும் என்ன அவசியம் வந்தது?"

"உன் முகத்தை நீ கண்ணாடியில் பார்த்ததே இல்லையா?"

"என் முகத்தைப் பற்றியோ கலரைப் பற்றியோ உன்னிடம் அபிப்ராயம் கேட்கவில்லையே... அதைப் பற்றி நீ ஏன் கவலைப்படுகிறாய்?"

"ம்... ஆத்தாளும் மகளும் இப்படியே பேசிட்டு இருக்கத்தான் லாயக்கு. தலைக்கு மேல வளர்ந்த புள்ள வீட்டுல இருக்கானே... அவனுக்குக் காலாகாலத்தில ஒரு கல்யாணம் பண்ணி வெக்கணும்னு தோணுதா?"

"உனக்கு அவசரம்னா நீ பண்ணிக்க. என்னை ஏன் பலிகடா ஆக்குற?"

"உன்னைக் குத்துக்கல்லு மாதிரி வீட்ல வெச்சிட்டு நான் எப்படிக் கல்யாணம் பண்ண முடியும்? நாலு பேர் காறித் துப்ப மாட்டான்?"

"அவ்வளவு பேசுறவன்... இப்படியா மாப்பிள்ளை பார்த்திட்டு வருவ? ஊர்ல உலகத்தில வேற மாப்பிள்ளையா கிடைக்கலை உனக்கு?" - கனகம் கோபமாய்க் கேட்க... வறட்சியாய்ப் புன்னகைத்தாள் சூரியகாந்தி.

"மாப்பிள்ளை கிடைப்பாம்மா. ஆனா செலவில்லாம கல்யாணம் பண்றதுக்கு எந்த மாப்பிள்ளையும் கிடைக்க மாட்டானே. உன் மகன் பத்துப் பைசா செலவில்லாம வேலையை முடிக்கலாம்னு பார்த்திருப்பான்."

"என்னடி நக்கலா?"



"உண்மை அதுதானே!"

"இதோ பாருடி. உன் அப்பன் ஒன்னும் சொத்து சேர்த்து வெச்சிட்டுப் போகலை. அதை வித்து உன்னைக் கல்யாணம் பண்ணி அனுப்ப..."

"ஆமா. உண்மைதான். ஆனா உயிரற்ற அந்தச் சொத்து மேல வெக்காத நம்பிக்கையை உன் மேல வெச்சாரே... உனக்காகத்தானே ஊரெல்லாம் கடன் வாங்கிப் படிக்க வெச்சாரு..."

"அது பெத்தவங்களோட கடமை."

"அப்ப உன் கடமை என்னப்பா?" - கேட்ட தாயிடம் பதில் பேச முடியாமல் தடுமாறினான்.

"சொல்லுப்பா. உன் கடமை என்ன? பெத்தவளுக்கு... கூடப் பொறந்தவளுக்கு ஒரு பிடி சோறு கூடப் போட மாட்டியே. நீ எப்படிச் செலவு பண்ணிக் கல்யாணம் பண்ணுவ?"

"நான் ஏன் செலவு பண்ணணும்? நான் கஷ்டப்பட்டுச் சம்பாதிச்சி உங்களுக்குச் செலவழிக்கணுமா? நான் நாலு காசு சேர்க்க வேண்டாமா?"

"இதையே நாங்க நினைச்சிருந்தா நீ இப்படி வெள்ளையும் சொள்ளையுமா வேலைக்குப் போயிருக்க மாட்ட. எங்ககூட சாந்துதான் குழைச்சிருக்கணும்..."

"இப்படி வெட்டித்தனமாப் பேசிட்டு இருக்க எனக்கு நேரமில்லை. ரெண்டுல ஒன்னு தெரிஞ்சாகணும். உங்க முடிவு என்ன?"

"என் முடிவைத்தான் எப்பவோ சொல்லிட்டேனே... நான் பெத்த மகளுக்கு நானே மாப்பிள்ளை பார்த்துக்கிறேன். நீ பார்த்துக் கிழித்தது போதும். எவனும் இந்த வீட்டுப் படியை மிதிச்சிப் பெண் கேட்டு வரக் கூடாது..." - குரலை உயர்த்தித் தீர்மானமாய்ச் சொன்னாள் கனகம்.

"அம்மா! அவசரப்பட்டு வார்த்தையை விடாதே. வாய்க்கும் வயித்துக்குமே இல்லாம போராடிட்டு இருக்க. இந்த லட்சணத்தில எங்கே போயி மாப்பிள்ளை பார்த்து எப்படிக் கல்யாணம் பண்ணுவ?"

"உனக்கேம்ப்பா அதைப் பத்தின கவலை? எம்பொண்ணுக்கு நடக்க வேண்டியது தானா நடக்கும்."

"அதெப்படிம்மா... இவ்வளவு உறுதியாச் சொல்ற? ஏய் சூரி! எவனையாச்சும் பார்த்து வெச்சிருக்கிறியா?"

"வாயைக் கழுவுடா. அவ ஏன்டா தேடிப் பிடிக்கணும்? அவளுக்குன்னு எப்பவோ நிச்சயம் பண்ணினவன் இருக்கும்போது..."

முருகேசனின் முகம் மாறியது. "என்னம்மா உளர்ற? யாரைச் சொல்ற நீ?"

"என் அண்ணன் மகனைத்தான் சொல்றேன்..." - கனகமும் மிடுக்காகவே பதில் சொல்ல... உக்கிரமானான்.

"என்ன? யாரு, அந்த மேலத்தெருக்காரப் பயலையா சொல்ற?"

"ஆமா."



"ஏம்மா! உனக்கென்ன புத்தி கித்தி கெட்டுப் போச்சா? சுய நினைவோடதான் பேசுறியா?"

"ஏன்டா?"

"ரெண்டு தெருக்காரங்களும் வெட்டிகிட்டு குத்திகிட்டு கிடக்கிறானுங்க. இதுல நீங்க போய் உறவைப் புதுப்பிக்கப் போறீங்களா? செருப்படி வாங்கிட்டு திரும்பப் போறீங்க."

"நாங்க ஏன்டா அங்கே போகணும்? ஆதியே எல்லாரையும் கூட்டிட்டு வந்து பெண் கேட்பான்."

"அப்படி எவனும் வந்தா நானே வெட்டிப் போடுவேன். குடும்பப் பிரச்சனையை வீணா ஊர்ப் பிரச்சனை ஆக்கிடாதீங்க."

"எந்தப் பிரச்சனையும் ஆகாம நான் பார்த்துக்கிறேன். நீ ஒன்னும் கவலைப்படாதே."

"அம்மா! என் பொறுமையை ரொம்பச் சோதிக்கிற நீ! தாயும் மகளுமாச் சேர்ந்து இருக்கிறதை விட்டுட்டு பறக்கிறதுக்கு ஆசைப்படாதீங்க."

"அண்ணே! இது இன்னிக்கு நேத்து உண்டான ஆசை இல்லண்ணே! எனக்குச் சீர் செய்தப்பவே இவன்தான் உன்னைக் கட்டிக்கப் போறவன்னு ஊரே கூடிச் சொல்லிச்சே. அப்ப இருந்தே மாமன்தான் என் புருஷன்னு நினைச்சிட்டு இருக்கேன்."

"நீ நினைச்சாப் போதுமா? அந்த ஆதிப் பயலை விடு. அவன் அண்ணனும் அப்பனும்... அந்த வீட்டுல அட்டை மாதிரி ஒட்டிட்டு இருக்காளே முத்தரசி, இந்தக் கூட்டமெல்லாம் உன்னை வாழ விட்டுடுமா?"

"ஆதி மாமா எல்லார்கிட்டயும் பேசிச் சம்மதம் வாங்குறேன்னு சொல்லியிருக்கு அண்ணா!"

"அந்தப் பய சொன்ன வார்த்தையை நம்பி இந்த வரனை வேண்டாம்னு சொல்றியா? அவன் அப்பன் சொன்னா அடுத்த நிமிஷமே அவ அத்தை மக கழுத்தில தாலியைக் கட்டிடுவான். நீ காலம் பூரா இப்படியே இருந்திடுவியா?" - முருகேசன் கோபமாகவே கேட்க... சூரியகாந்தி உறுதியாய்ப் பதிலளித்தாள்.

"இருந்திடுவேன்."

"என்ன?"

"நீ சொல்ற மாதிரி எதுவும் நடக்காது. எனக்கு என் மாமன் மேல அசைக்க முடியாத நம்பிக்கை இருக்கு. அவரையும் மீறி ஏதாவது நடந்திடுச்சின்னா காலம் பூரா நான் இப்படியே இருந்திடுவேன்!" - அழுத்தம் திருத்தமாய்ச் சொன்னவளைக் கண்டு இருவரும் திகைத்துப் போயினர்.

"சூ...ரி?"

"ஆமா! மாமனை நினைச்ச மனசால இன்னொரு ஆம்பிளையை நினைக்க மாட்டேன். இன்னொருத்தன் கையால தாலியும் வாங்க மாட்டேன்."

"சூரி!"

"என் கழுத்தில தாலி விழுந்தாலும் சரி... கடைசி மாலை விழுந்தாலும் சரி. அது என் மாமன் கையாலதான் விழணும். "



"பைத்தியக்காரி மாதிரி பேசாதே சூரி! நான் சொல்றதை..."

"அண்ணே! என் பேச்சை மீறி நீ எவனையாவது மாப்பிள்ளைன்னு கூட்டிட்டு வந்தா... வர்றவன் என் பொணத்தைத்தான் பார்ப்பான்."

"ஐயோ சூரி! என்ன ஆத்தா இப்படிப் பொசுக்குன்னு பெரிய வார்த்தை யெல்லாம் சொல்லிட்ட?" - கனகம் பதறினாள்.

"நடக்கப் போறதைத்தான் சொல்றேம்மா. இந்த ஜென்மத்துல எனக்குக் கல்யாணம்னு ஒன்னு நடந்தா... அது என் மாமனோடதான். இல்லன்னா... கடைசி வரைக்கும் உன் மகளாகவே இருந்திடுவேன். சத்தியமா இன்னொருத்தனுக்குப் பொஞ்சாதியா வாழ மாட்டேன்."

"கேட்டியாடா! உன் தங்கை சொல்றதைக் கேட்டியா? இதுக்கு மேலயும் நீ வேற மாப்பிள்ளை பார்க்கலாமா?"

முருகேசன் அசையாமல் நின்றான். அவனது மூளை வேகமாய்ச் சிந்தித்தது.

'சூரி இத்தனை உறுதியாய் இருக்கிறாள் என்றால் தனக்குத் தெரியாமல் ஆதவனிடம் பேச்சு வார்த்தை நடந்து கொண்டிருக்கிறது என்றுதானே அர்த்தம்!

'எப்படிக் கவனியாமல் விட்டேன்? அது எப்படி நடக்கும்? ஊரும் உறவும் அடித்துக் கொண்டிருக்கும் வேளையில் அவன் எப்படிப் பெண் கேட்டு வருவான்? இது நிச்சயம் நடக்காது. இது வெறும் பகல் கனவு.

'இப்போதைக்கு இவர்களது கனவைக் கலைக்க வேண்டாம். இவர்கள் போக்கில் விட்டுப் பிடிக்கலாம். காத்தவராயனிடம் ஒரு பத்து நாட்கள் பொறுத்திருக்கச் சொல்லலாம். இந்தப் பிரச்சனை எந்த ரூபத்தில் வெடிக்கிறது என்பதைப் பார்த்து விட்டு முடிவெடுக்கலாம்.

'அதுவரை அமைதியாய் இருப்பதுதான் சரி. எப்படியும் நாளை பிரச்சனை வெடிக்கும். இப்போது இவளிடம் தன் எதிர்ப்பைக் காட்டுவது சரியல்ல. ஊர்ப் பிரச்சனை என்று வரும்போது ஊராரோடு சேர்ந்து அவனது கதையை முடித்து விட வேண்டும்.

'கொஞ்ச நாள் அழுவாள். பிறகு மனதைத் தேற்றிக் கொண்டு அடுத்த வாழ்க்கைக்குத் தயாராகி விடுவாள். அதுவரை பொறுமையாய் இருக்கலாம்!' – மனதிற்குள் தீர்மானம் செய்து கொண்டவனாய்த் தங்கையை நோக்கினான்.

"நீ சொல்றது எல்லாம் நிசம்தானா? ஆதி பெண் கேட்டு வருவானா?"

"நாளைக்கே வர்றேன்னு சொன்னாருண்ணா!"

"அவனை நம்பலாமா?"

"கண்டிப்பா வருவாருண்ணா!"

"நீ சொல்றது உண்மையா இருந்து அவன் பெத்தவங்களோட வந்து பொண்ணு கேட்டா உன்னைக் கட்டிக் கொடுப்பதில் எனக்கு ஒன்னும் பிரச்சனை இல்லை."

"அண்ணே!" – சூரியகாந்தியின் முகம் மலர்ந்தது.



"ஆனா ஒன்னு! ஒருவேளை அவன் வரலைன்னா..."

"நிச்சயமா வருவாருண்ணே!"

"அப்படி வரலைன்னா நான் பார்க்கிற மாப்பிள்ளைக்கு நீ கழுத்தை நீட்டணும். சம்மதமா?" – மலர்ந்த முகம் சட்டென வாடியது.

"அண்ணே!"

"இதோ பாரு. கூடப் பொறந்தவளாச்சேன்னு ஊர்ப் பகையை மறந்து நான் இவ்வளவு தூரம் இறங்கி வந்திருக்கேன். நீ சும்மா உச்சாணிக் கொம்புலயே நின்னா எப்படி? அவன் வந்தால் சந்தோஷம்தான். ஒருவேளை வராம அவன் அத்தை மகளையே கட்டிக்கிட்டா... "

"இல்ல. அப்படியெல்லாம் எதுவும் நடக்காது!" – அவசரமாய்ப் பதறி மறுத்தாள்.

"நடந்தால்... நீ நான் சொன்ன மாதிரி கேட்பியா?" – தமையன் விடாப்பிடியாய்க் கேட்க... கலக்கமாய் அன்னையை ஏறிட்டாள். மகளின் குறிப்பறிந்து பார்வையால் பதிலளித்தாள் கனகம்.

"சரின்னு சொல்லு. பிறகு பார்த்துக்கலாம்."

அரை மனதாய்த் தலையாட்டினாள் சூரியகாந்தி.

"சரிண்ணே!"

"பேச்சு மாற மாட்டியே?"

"நான் சொன்னா சொன்னதுதான். கடைசிவரை மாறவே மாட்டேன்!" – பொருள் பொதிந்த பார்வையோடு

அவள் சொல்ல... திருப்தியாய்த் தலையாட்டினான் முருகேசன்.

"சரி... போய்ப் படு. நாளைக்கு நடக்கிறதை நாளைக்குப் பார்க்கலாம். அம்மா! இந்த விஷயம் நம்மோட இருக்கட்டும். அவங்களா பெண் கேட்டு வர்ற மாதிரி இருக்கட்டும். நாம யார்கிட்டயும் சொல்ல வேண்டாம்."

"சரிப்பா..."

"சூரி! உனக்கும் சேர்த்துத்தான் சொல்றேன். அவசரப்பட்டுத் துளசிகிட்ட கூட சொல்லிடாதே. விஷயம் ரகசியமா இருக்கட்டும்."

"சரிண்ணே!"

"போய்ப் படுங்க..." - என்றவாறு கட்டிலில் முருகேசன் படுத்துக் கொள்ள...

விளக்கை அணைத்து விட்டுத் தாயும் மகளும் படுத்துக் கொண்டனர்.

மூவரின் மனதிலும் வேறு வேறு விதமான எண்ணங்கள் அலை மோத, ஒருவருமே கண் மூட வில்லை.

நாளையப் பொழுதை எதிர்பார்த்து விழித்திருந்தனர்.

மறுநாள் பொழுது எத்தனை மோசமான விளைவு களை ஏற்படுத்தப் போகிறது என்பதை உணராமல் சூரியகாந்தி கனவில் மிதந்தாள்.



# 16



விடியும்வரை தெரியாது,
காண்பது கனவென்று! - அதுபோல்
பிரியும்வரை தெரியாது, இந்த
அன்பு எத்தனை ஆழமானது என்று!

**கா**லையில் எழுந்ததும் முதல் வேலையாக முருகேசன் மூலம் சாமிக்கண்ணுவின் காதிற்குப் போன செய்தியில் ஆதவன் வீடு களேபரமாகிப் போனது. அன்னையைத் தவிர, மற்ற அனைவரும் அவனைச் சூழ்ந்து சரமாரியாகக் கேள்விக்கணைகளை விடுப்பதும், ஆத்திரமாய்க் கைஓங்குவதுமாய் இருக்க, முத்தரசி வாயில் வந்ததெல்லாம் வசைமாரி பொழிய, மரிக்கொழுந்து தன் பங்குக்குக் கண்ணீரும் கம்பலையுமாய் ஆதவனின் சட்டையைப் பற்றி உலுக்க...

இவை எதற்கும் சற்றும் அசராமல் திடமாகவே நெஞ்சை நிமிர்த்திக் கொண்டு நின்றான் ஆதவன். தங்களது கோபம் இவனைத் துளியும் அசைக்கவில்லை எனத் தெரிந்ததும் சாமிக்கண்ணு ஆவேசமாய் மேற்கூரையில் செருகியிருந்த அரிவாளை உருவினார்.

அருகே நின்ற சந்திரனும், அவரது மனைவியும் அவரைப் பிடித்துக் கொண்டனர். செல்லாத்தா கண்ணீர் மல்க, கணவனிடம் மன்றாடினாள்.

"என்ன காரியம் பண்றீங்க? அவன் நம்ம புள்ளைங்க."

"விடுடி என்னை. இவன் என் புள்ளையே இல்ல. இந்தக் குடும்பத்தைக் கெடுக்க வந்த குடிகேடி."

"அப்படி என்னங்க அவன் பெரிய தப்பு பண்ணிட்டான். சூரியும் அவனுக்கு முறைப் பொண்ணு தானே. அத்தை மக மேலதானே ஆசைப்பட்டிருக்கான். பேசாம அவன் ஆசைப்பட்ட பொண்ணையே கட்டி வெச்சிடலாங்க." - கண்ணீரோடு கெஞ்சிய மனைவியை உதறித் தள்ளினார் சாமிக்கண்ணு.

"என்னடி பேசுற? இங்க என் தங்கச்சி மக வீட்டோடு காத்து நிக்கா... இவனுக்குக் கவனம் கீழத் தெருவுக்கு எப்படிப் போகலாம். விடுடா சந்திரா... இவனைக் கூறு போட்டாத்தான் என் ஆத்திரம் அடங்கும்."

"அப்பா! முதல்ல அரிவாளைக் கீழே போடுங்க. நம்ம தம்பி மேல எந்தத் தப்பும் இருக்காது. எல்லாம் அவ... அந்தக் கனகத்தின் மக செய்த மாயமாத்தான் இருக்கும். முதல்ல அவ குடும்பத்த வேரோடு அறுக்கணும். வாங்கப்பா," - எனத் தந்தையோடு புறப்பட்டவனை ஆத்திரமாய்க் கைநீட்டித் தடுத்தான் ஆதவன்.

"அண்ணா! இது முழுக்க முழுக்க என்னோட விருப்பம்தான். உங்களுக்குக் கோபம்னா என்னை வெட்டுங்க. அதை விட்டுட்டு சூர்யா மேல எவனாவது கை வெச்சீங்க..."



"என்னடா? என்னடா பண்ணுவ?"

"கை வெச்சவன் உடம்புல தலை இருக்காது. அது அப்பனா இருந்தாலும் சரி, கூடப் பொறந்தவனா இருந்தாலும் சரி..." - இறுகிய குரலில் சொன்னவனை நம்ப முடியாமல் பார்த்தான் சந்திரன்.

"ஆதி...? நீ... நீயா... இப்படியெல்லாம் பேசுற?"

"உங்ககிட்ட வேற எப்படிப் பேசுறது? நான் எவ்வளவு பொறுமையாப் பேசிட்டு இருக்கேன். விருப்பம்னா சம்மதம்னு சொல்லணும். இல்லேன்னா வேண்டாம்னு சொல்லணும். அதை விட்டுட்டு அரிவாளைத் தூக்கினா இப்படித்தான் பேச முடியும்."

"வேண்டாம்னா விட்டுடுவியா?"

"விட்டுடுவேன். ஆனா கடைசி வரைக்கும் இப்படியே இருந்திடுவேன்."

"அப்போ மரிக்கொழுந்து?"

"அவளுக்கு நல்ல மாப்பிள்ளையா பாருங்க. கல்யாணச் செலவை நானே செய்யுறேன்."

"அதுக்குப் பதிலா எனக்குக் கருமாதி பண்ணிடு மாமா!" - கத்தினாள் மரிக்கொழுந்து.

"இதோ பார் மரி. ஏற்கெனவே சொல்லியிருக்கேன். என்னைப் பத்திக் கனவு காணாதேன்னு. நீயா ஆசையை வளர்த்துக்கிட்டா நான் என்ன பண்ண முடியும்?"

"அடேய்! எம் மவ குத்த வெச்ச நாள்ல இருந்து நீதான் புருஷன்னு கனாக் கண்டுட்டு இருக்காடா. அவளை ஏமாத்த உனக்கு எப்படிடா மனசு வந்தது?"

"அத்தே! நான் ஒன்னும் உங்க பொண்ணுக் ஆசை காட்டி மோசம் பண்ணல. அவ மனசை நீங்கதா கெடுத்து வெச்சிட்டீங்க. சும்மா இருந்த பச்சைப்புள்ள கி என்னைப் பத்தி பேசிப் பேசி அவ மனசைப் பாழா கிட்டீங்க!"

"நானா ஒன்னும் சொல்லலடா. நான் தா அறுத்திட்டு வந்து நின்னப்பவே என் அண்ணன்... அதா உன் அப்பன், உன் மக இனிமே இந்த வீட்டு மருமக எனக்கு வாக்குக் கொடுத்திட்டாருடா. உண்டா இல்லை யான்னு கேளு."

"நான் வாக்குக் கொடுக்கலையே!"

"பேசுவடா... நீ வளர்ந்திட்ட... தானா ஒ பொட்டச்சியத் தேடுற அளவுக்கு வளர்ந்திட்ட. அதனா இதுவும் பேசுவ, இன்னமும் பேசுவ. அண்ணே பார்த்தியா? உன் பிள்ளை எங்க தலையில கல்லை தூக்கிப் போட்டுட்டு எவ்வளவு இளக்காரமா பேசுறான் பார்த்தியா?"

தங்கையின் கண்ணீரைக் கண்டதும் கொதி தெழுந்தார் சாமிக்கண்ணு.

"நீ அழாத தாயீ! இன்னிக்கே உம் மவளுக்கும் எ மவனுக்கும் கல்யாணம்."

"அப்பா!"

"அது நடக்கலன்னா இந்த வீட்டுல ஒரு பொண விழும்."



"என்னங்க! என்ன பேசுறீங்க?"

"நீ போடி உள்ள. பிள்ளை வளர்த்திருக்கா பாரு. முதல்ல உன்னைக் கொல்லணும்." - பற்களைக் கடித்துக் கொண்டு மனைவியை அடிக்கப் பாய்ந்தவரைத் தடுத்தான் ஆதவன்.

"அம்மா மேல கை வைக்கிற வேலை வெச்சுக்காதீங்க. பிறகு அப்பான்னுகூடப் பார்க்க மாட்டேன்."

"பார்த்தியாடி... எம் மேலயே கைவெக்கிற அளவுக்குப் பெரிய ரெளடியா ஆக்கி வெச்சிருக்கே. நீதான் இதெல்லாம் சொல்லிக் கொடுக்கிறியா?"

"அய்யோ! ஏங்க இப்படிப் பேசுறீங்க? நான்..."

"பேசாதடி! நீதான்... நீதான் இவனை எனக்கெதிராத் தூண்டி விட்டிருக்க. நீ கொடுத்த தைரியத்திலதான் இவன் அந்தப் பொண்ணுதான் வேணும்னு எங்கிட்டயே எதிர் வாதம் பண்றான்."

"அப்பா! இது நான் விரும்புற வாழ்க்கை. இதுல ஏன் அம்மாவை இழுக்குறீங்க? அம்மாவுக்கு எதுவும் தெரியாது."

"இதை நான் நம்பணுமாக்கும். இப்பத்தானே உன் அம்மா சொன்னா... அவன் ஆசைப்பட்ட பொண்ணையே கட்டி வெச்சிடலாம்னு."

"என்னங்க! வாழப் போறது அவன். அவன் மனசு போல வாழ்க்கை அமைஞ்சாத்தான் அவன் சந்தோஷமா வாழுவான். அதனாலதான் சொன்னேன்."

"அப்போ... என்னைக் கட்டிக்கிட்டா உம் பையன் சந்தோஷமா வாழமாட்டாருன்னு சொல்றீங்களா அத்தே?"

"ஐயோ! நான் அப்படிச் சொல்லலம்மா. அவன் விருப்பம் முக்கியமில்லையா?"

"ஆமா! இவ புள்ள விருப்பம்தான் முக்கியம். எம் புள்ள விருப்பத்தை யார் மதிக்கப் போறாங்க? நாங்க வக்கத்துப் போனவங்க. ஒண்டிப் பிழைக்கிறவங்க. எம் மகளை உம் மருமகளா ஏத்துக்க உனக்கு மனசு இருக்காது. இல்ல மதினி?'' - முத்தரசி கண்ணீரும் கோபமுமாய்க் கேட்க, திண்டாடிப் போனாள் செல்லாத்தா.

முத்தரசி காரியவாதி. அதோடு சாமர்த்தியசாலி. எந்தச் சூழலையும் தனக்குச் சாதகமாய் மாற்றிவிடுபவள். அவளது ஆயுதம் கண்ணீர். அந்த ஆயுதத்தைக் காட்டியே தமையனை வீழ்த்தி விடுவாள்.

திருமணமாகி வந்த நாள் முதலாய்க் கண்கூடாய்க் கண்ட உண்மை இது. இன்று இந்தப் பிரச்சினையின் முடிவை நிச்சயமாய்த் தனக்குச் சாதகமாக்கி விடுவாள். அதற்காகத்தான் - தன் கணவனை உசுப்பேற்றிவிடத்தான் இந்தக் கண்ணீர் நாடகம்.

இவளை எப்படிச் சமாளிக்கப் போகிறேன்? சற்றுப் பயமாய்க் கணவரை ஏறிட்டாள். அவர் கண்கள் சிவக்க, நெற்றி புடைக்க நின்ற கோலம் பயமுறுத்தியது. நிலைமையைச் சமாளிக்க முயன்றவளாய் முத்தரசியை நெருங்கினாள்.

"முத்தரசி! நீ என்னை எப்படி நினைக்கிறியோ தெரியாது. ஆனா நான் உன்னை என் சொந்தச்



சகோதரியாய், உன் மகளை என் மகளாய்த்தான் பார்க்கிறேன்," - என்றாள் மென்மையான குரலில்.

"மகளாய்ப் பார்க்க வேண்டாம்... மருமகளாய் நினைத்தால் போதும்."

"அதுக்கும் நான் மறுப்புச் சொல்லவில்லை. மரிக்கொழுந்து எனக்கு மருமகளாய் வந்தால் சந்தோஷம்தான்."

"அத்தே!"

"ஆனால் எம்மருமகள் சந்தோஷமா வாழணுமே. பிடிக்காத ஒருத்தியைக் கட்டிக்கிட்டு எம் புள்ளை அழுதான்னா எம் மருமக வாழ்க்கையும் வீணாய்ப் போயிடுமே. அதை யோசி முத்தரசி."

"நல்லா இருக்கு மதினி உங்க நியாயம். புள்ளையைத் தூண்டிவிட்டுட்டு இப்ப எங்கிட்ட வந்து பசப்புறீங்களாக்கும். அண்ணே! உன் பொண்டாட்டிய அப்பிராணின்னு நினைச்சியே... பாரு! எவ்வளவு பெரிய வேலையெல்லாம் செய்யுறான்னு!"

"அத்தே! இப்ப எதுக்கு அம்மாவைப் பந்தாடுறீங்க? இப்ப உள்ள பிரச்சனையைப் பத்திப் பேசுங்க. அம்மா! நீ உள்ளே போம்மா." - என்றான் சந்திரன்.

"சந்திரா! தம்பிய நீயும் விட்டுடாதய்யா. அவன் மனசைக் கொன்னுடாதீங்கய்யா. எம்புள்ள பாவம்யா. அது விருப்பப்படி வாழட்டும்யா!"

"அதெல்லாம் நாங்க பேசிக்கிறோம்மா. நீ உள்ளே போ."

"அம்மா! நீ ஏம்மா அழற? யார் என்ன சொன்னாலும் எம்மனசை மாத்திக்க மாட்டேன். நீ போய்ச் சோறு ஆக்கும்மா. ரொம்பப் பசிக்குது."

"இதோ... இப்ப வடிச்சிடுறேன்யா. அப்பாகிட்ட கோபப்படாதேய்யா. அம்மா சோறு ஆக்கிட்டு வர்றேன்," - எனச் செல்லாத்தா பின்கட்டிற்குச் செல்ல, ஆத்திரமாய் மகனின் தோளைப் பற்றித் திருப்பினார் சாமிக்கண்ணு.

"ஏன்டா! நான் இவ்வளவு தூரம் பேசிட்டு இருக்கேன்... நீ எதையும் மதிக்காம சொன்னதையே சொல்லிட்டு இருக்கியா?"

"அப்பா! உங்களையோ அண்ணனையோ எதிர்க்கணும்னோ மரியாதை இல்லாமல் பேசவோ எனக்கு விருப்பம் இல்லப்பா. எனக்கு என்னோட சூர்யா வேணும். அவதான் என் மனைவி. நீங்க சம்மதிச்சா..."

"நான் உயிரோட இருக்கிற வரைக்கும் அது நடக்காது."

"அப்போ நீங்க நினைக்கிறதும் நடக்காது," - என்றான் உறுதியாய்.

"என்னடா நடக்காது?"

"என் உயிரே போனாலும் மரிக்கொழுந்து கழுத்தில தாலி கட்ட மாட்டேன்." - ஆதவனின் திடமான முடிவால் அதிர்ந்து நிமிர்ந்தாள் மரிக்கொழுந்து.

"மா... மா..."

"மன்னிச்சிடு மரி. சூர்யாவை நினைச்ச மனசில உன்னை நினைக்க முடியாது."



"மா... மா..."

"அப்படியே என்னை மிரட்டி உனக்குக் கட்டி வெச்சாலும் அடுத்த நிமிஷமே நீ தாலிய அறுக்க வேண்டியிருக்கும்."

"மாமா!" - மரிக்கொழுந்தின் கண்கள் குளமாகின.

"சும்மா சொல்லல. உன் கண்ணு முன்னாடியே பொணமாகிடுவேன். அதுதான் உன் ஆசைன்னா சொல்லு. இப்பவே உன் கழுத்தில தாலி கட்டுறேன்."

"வேணாம் மாமா. என் கூட வாழப் பிடிக்காம நீ பொணமாக வேண்டாம். உன் மனசில இன்னொருத்தி இருக்கான்னு தெரியாம உன் மேல ஆசைப்பட்டது என் தப்பு. நான்தான் சாகணும்."

"மரி...! நான் சொல்றதக் கேளு."

"இல்ல மாமா! நான் செய்தது தப்பு. உனக்கு எம் மேல ஒரு நாளும் ஆசை வராது. நீ... நீ கட்டிக்க மாமா... அவளையே கட்டிக்க. நான்... நான் குறுக்கே நிற்க மாட்டேன்..." - கண்ணீரோடு தலையாட்டிய மகளை இடித்தாள் முத்தரசி.

"அடியேய் கூறுகெட்டவளே! உனக்கென்ன புத்தி பிசகிப் போச்சா?"

"வேண்டாம்மா... எனக்காக மாமா சாகக்கூடாது. அவளுக்கும் இல்லாம, எனக்கும் இல்லாம மாமன் போயிடக் கூடாது. அவளே கட்டிக்கட்டும்."

"அடியேய்! பைத்தியக்காரி! அவன்தான் சும்மா உளறுறான்னா... நீயும் நம்பிட்டியா? நீ பச்சை மண்ணு. உனக்கு விபரம் பத்தாது. அவன் சொல்றதெல்லாம் சும்மா... உன்னைப் பயமுறுத்த..."

"வேண்டாம்மா... மாமாவுக்கு என்னைப் பிடிக்கலே. நான் வேண்டாம்... நான் வேண்டாம்..." - என்றவாறு தன் அறைக்குள் போனாள் மரிக்கொழுந்து.

"மரி! நான் சொல்றதைக் கேளுடி..." - என்றவாறே முத்தரசியும் அவள் பின்னே ஓட... சந்திரன் பொறுமையின்றிக் கத்தினான்.

"ஆதி! ஏன்டா இப்படிப் பண்ற? பாரு! அந்தப் பொண்ணு எப்படி கண்ணீர் விட்டுட்டுப் போறான்னு!"

"ரெண்டு நாள் அழுதிட்டு என்னை மறந்திடுவா அண்ணா. என்னைக் கல்யாணம் பண்ணினா காலம் பூரா அழ வேண்டியிருக்கும்."

"ஆதி..."

"அண்ணே! மரிக்கொழுந்து கூட என்னைப் புரிஞ்சிகிட்டா. நீ என் உடன்பிறந்தவன். என் மனசைப் புரிஞ்சுக்க மாட்டியா? நான் என்ன யாரோ ஊர் பேர் தெரியாதவளையா விரும்புகிறேன்? சூர்யாவும் நம்ம அத்தை பொண்ணுதானே அண்ணா?"

"சூர்யா... சூர்யா... யாருடா அந்தச் சூர்யா? ஊர்ல உலகத்தில இல்லாத பேரழகியா?"

"ஆமாண்ணே! எனக்கு அவ பேரழகிதான்!"



"டேய்..."

"அண்ணே! அவ அழகி மட்டுமில்ல... பெண் தெய்வம்... நடமாடும் தெய்வம். அந்தத் தெய்வத்தாலதான் நீ இப்போ உயிரோட நடமாடுற."

"என்ன?"

"சூர்யா யாருன்னு தெரியுமா அண்ணா?"

"அதான் இவ்வளவு நேரமா சொல்லிட்டு இருக்கியே!"

"நான் சொல்லாததும் இருக்குண்ணா! அன்னிக்கு கார் விபத்துல நீயும் மதினியும் சிக்கினப்போ உன்னைக் காப்பாத்தினது யாரு?"

"ஆ...தி...?"

"அந்த மஞ்சக் கலர் பூவு... சூர்யகாந்திதான் அண்ணே!" - நிதானமாய்ச் சொன்னவனைத் தகப்பனும் தமையனும் விழிகளை விரித்துப் பார்த்தனர்.

"எ...ன்...ன...?"

"ஆமாண்ணே! உன்னைக் காப்பாத்துறதுக்காகத் தன்னையே புண்ணாக்கினாளே! அவ தெய்வம் இல்லையா? நீ என் அண்ணன் மேலத் தெருக்காரன்னு தெரிஞ்சுதான் உன்னை அவ காப்பாத்தினா. அவ கண்ணுக்கு உன் உசிருதான் முக்கியமாப் பட்டிருக்கு. நம்ம பகை தெரியல."

"ஆதி...!"

"எவனோ ஒருத்தன் தப்பு பண்ணினான். அவனைப் பாதிக்கப்பட்டவன் வெட்டினான். அது ஒரு சாதாரண

விபத்து. அதை ஊதி ஊதிப் பெரிசாக்கி ஊர்ப் பிரச்சினையாக்கி இன்னும் அதுக்குத் தீ மூட்டுறது எவ்வளவு பெரிய மடத்தனம்!

"எப்பவோ தொடங்கின பிரச்சினையால ரெண்டுபட்ட ஊரு என்னால ஒன்னு சேரணும்னுதான் நான் இவ்வளவு பிடிவாதமா இருக்கேம்பா. அப்பா! தயவு செய்து உங்க வறட்டுக் கௌரவத்தை விட்டுட்டு கனகம் அத்தை வீட்டுல வந்து பொண்ணு கேளுங்கப்பா!"

"டேய்! அந்தப் பொண்ணு நல்லவளாகவே இருக்கட்டும். அதுக்காக நம்ம மானம் மரியாதையை எல்லாம் விட்டுட்டு என்னைத் தட்டைத் தூக்கிட்டுப் போகச் சொல்றியா?"

"எதுப்பா மானம் மரியாதை? காரணமே இல்லாம வெட்டு குத்துன்னு சண்டை போடுறதா? விட்டுக் கொடுங்கப்பா... உறவுகளுக்குள்ள என்ன மானம் மரியாதை? இதையெல்லாத்தையும்விட உசந்தது அன்பு தானேப்பா!

"அந்த அன்பு சூர்யா மனசில இருந்ததாலதானே தன்னோட உசிரைப் பத்தி கவலைப்படாம உங்க வாரிசையும் அவன் உசிரா விரும்புற மனைவியையும் அவ மீட்டுத் தந்தாள். இந்த மாதிரி மானம் மரியாதைன்னு நினைச்சி விலகிப் போயிருந்தான்னா உங்க பிள்ளை உங்களுக்குக் கிடைச்சிருப்பானா? சொல்லுங்கப்பா!"

சாமிக்கண்ணு உறைந்து போய் நிற்க, தந்தையைத் தொட்டான் சந்திரன்.



"அப்பா! ஆதி சொல்றதுலயும் நியாயம் இருக்குப்பா!"

"ச...ந்திரா!"

"நமக்கோ கனகம் அத்தை குடும்பத்துக்கோ தனிப்பட்ட முறையில எந்த விரோதமும் இல்லையே! பெண் கேட்டுப் போனா என்னப்பா?"

"நீயும் உன் தம்பி மாதிரியே பேசுறியே சந்திரா. இது ஒன்னும் நம்ம குடும்பப் பிரச்சினை இல்லடா... ஊர்ப் பிரச்சினை. ஊர் ரெண்டு பட்டு இருக்கும்போது நாம போய்ச் சம்பந்தம் பேசினா என்ன ஆகும்?"

"ஒன்னும் ஆகாதுப்பா. நம்ம ஊரு பெரியவங்கதான் இன்னும் பழைய பகையை மனசில வெச்சிட்டு இருக்காங்க. எங்களை மாதிரிப் பசங்க எல்லாம் ஊர் ஒன்னாச் சேரணும்னுதான் ஆசைப்படுறோம்."

"ஆதி! நீ சின்னப் பையன். அதான் விபரம் புரியாமப் பேசுற!"

"இல்லப்பா! நான் எல்லாம் புரிஞ்சிதான் பேசுறேன். நீங்க தைரியமா பெண் கேட்கப் போறோம்னு சொல்லுங்கப்பா. நம்ம பக்கம் நாலு பேராவது வராமலா இருப்பான்? நிச்சயமா வருவான்."

"சரிப்பா! நீ சொல்ற மாதிரியே போறோம்னு வை... கீழூர்க்காரப் பயகளும் நம்மள சும்மா விடுவானுங்களா? அருவா கம்போட வந்தா திரும்பவும் ஊர்ப் பிரச்சினை பெரிசாகிடுமே!"

"அப்பா!"

"காலையிலேயே அந்த முருகேசப் பய வாய்க்கு வந்தபடி பேசிட்டுப் போனான். எவனாவது பெண் கேட்டு வந்தா உசிரோட திரும்ப மாட்டீங்கன்னு எச்சரிக்க வந்தானாம். எங்கிட்டயே சொல்றான்."

"அப்பா! அப்ப ஒன்னு பண்ணலாம்," - என்றான் சந்திரன்.

"என்னப்பா செய்யலாம்?"

"முதல்ல நான் மட்டும் போயி அத்தகிட்டப் பேசுறேன். அவங்க என்ன முடிவு பண்ணியிருக்காங் கன்னு கேட்டுட்டு... அப்புறமா நாம..."

"ஐயய்யோ! அடப் பாதகத்தி மகளே! இந்தப் படுபாவிப்பய வேண்டாம்ன்னு சொன்னான்னு இப்படி அரளி விதையை அரைச்சுக் குடிச்சிட்டியே... உன்னை இப்படி எமன்கிட்ட கொடுக்கவா நான் இந்த ஊருக்கு வந்தேன்?

"ஐயோ! போச்சே! போச்சே! நான் பெத்த ஒன்னு என் தலையில மண் அள்ளிப் போட்டுட்டுப் போயிடுச்சே! என்னை அநாதையா விட்டுட்டு எம்மவ போயிட்டாளே!" - முத்தரசியின் அலறலில் அனைவரும் தீயால் சுட்டதைப் போல் துடித்துத் திரும்பினர்.

அவளது அலறலில் ஊரே கூடியது.



# 17



கொதிக்கும் மணலில்
நடக்கும்போது நம் கால்கள்
ஒரு நிழலைத் தேடும்! - அப்படி
நான் தேடும் நிழல்தான் நீ!

**வா**னத்தை அண்ணாந்து பார்த்தாள் சூரியகாந்தி. நண்பகல் பன்னிரண்டு ஆகியிருந்தபோதும் சூரியனைக் காணவில்லை. கார்மேகக் கூட்டங்கள் ஆதவனை முற்றுமாய்ச் சூழ்ந்திருந்தன. பலமாய்க் காற்று வீசிக் கொண்டிருக்க, கரிய மேகங்கள் கரும் பூதங்களாய் உருவெடுத்து அங்கும் இங்கும் நகர்வதாய் மிரட்டிக் கொண்டிருந்தன.

எந்த நேரமும் மழையைக் கொட்டுவேன் என்ற கார்மேகத்தைப் போல் சூரியகாந்தியின் கருவிழிகளும் கண்ணீரைச் சிந்தத் தயாராய் இருந்தன.

காலையில் பெண் கேட்டு வருவதாய்ச் சொன்ன ஆதவனிடமிருந்து இதுவரை எந்தத் தகவலும் வரவில்லை. காத்திருந்து பார்த்துவிட்டு, ஒருவேளை வேலைக்கு வந்திருப்பானோ என்ற ஆவலில் இங்கு வந்தால்... அவன் வேலைக்கும் வந்திருக்கவில்லை.

அவன் மட்டுமல்ல... மேலத் தெருக்காரர்கள் ஒருவருமே வந்திருக்கவில்லை. சூரியகாந்தியின் அடிவயிறு

கலங்கியது. ஏதேனும் அசம்பாவிதம் நடந்திருக்குமோ? அவர்களது வீட்டில் பிரச்சினை வெடித்து யாருக்கும் ஏதேனும் ஆகியிருக்குமோ?

நினைக்கும்போதே உடல் உதறிக் கொண்டது. இல்லை... அப்படி எதுவும் ஆகியிருக்காது. தனக்குத் தானே சொல்லிக் கொண்டாலும் மனம் தவித்துக் கொண்டேதான் இருந்தது.

சூரியனைத் தூது விடலாம் என்று வானத்தைப் பார்த்துக் கொண்டே நின்றவளுக்குத் தன் முகத்தைக் காட்டவேயில்லை சூரியன். என்றாலும் விடாமல் பிடிவாதமாய் நின்றாள் சூரியகாந்தி. கழுத்து வலிக்கத் துவங்கியது.

"ஏ புள்ள சூரி! என்ன பண்ணிட்டு நிக்க? செங்கல் எடுத்தா புள்ள!" - மேஸ்திரியின் குரலில் திடுக்கிட்டுத் திரும்பினாள்.

"எம்புட்டு நேரமா மானத்தையே பார்த்திட்டு நிப்ப? மழை எந்த நிமிஷமும் கொட்டும். அதுக்குள்ள இந்த வேலையை முடிச்சாகணும். சுளுவா வா!"

"இ... இதோ... வந்திட்டேன்." - கையிலிருந்த பாண்ட்டோடு செங்கல் அடுக்கி வைத்திருக்கும் இடத்தை நோக்கி நகர, மிதமிஞ்சிய வேகத்தோடு வந்த இருசக்கர வாகனம் அவள் முன் வந்து நின்றது.

ஆதவன்தான் வந்துவிட்டான் என உற்சாகமாய் நிமிர்ந்தவளின் முகம் வெளிறிப்போனது. கண்களில் உக்கிரத்தோடு வண்டியில் அமர்ந்திருந்தான் சுடலை.



உட்கார்ந்த நிலையிலேயே கையை நீட்டித் திகைப்பாய் நின்றவளின் குரல்வளையை இறுகப் பற்றினான் சுடலை.

"ஏன்டி! அன்றாடங் காய்ச்சி நாயே! நீ கெட்ட கேட்டுக்கு உனக்கு என் மாப்பிள்ளை கேட்குதா? பெண் கேட்டு வரச் சொன்னியாமே! எத்தனை நெஞ்சழுத்தம் உனக்கு?

"அவன் என் தங்கைக்குத்தான்னு எப்பவோ முடிவாகிப் போச்சு. அவனை நினைச்சிக்கிட்டு ஒருத்தி வீட்டோடயே உட்கார்ந்திருக்கா. நீ என்னன்னா வேலைக்கு வந்த இடத்தில அவனை வளைச்சிப் போடப் பார்க்கிறியா? நீ செத்தாத்தான் என் தங்கச்சிகூட அவன் வாழ்வான்னா உன்னைக் கொல்லவும் தயங்க மாட்டேன்டி..." - பேசிக்கொண்டே கைகளை அழுத்த, சூரியகாந்தியின் விழிகள் பிதுங்கின.

மூச்சுக்குத் திண்டாடினாள். கண்களில் நீர் சுரந்து வழிந்தது. அவன் என்ன செய்கிறான் என்பதைப் புரிந்து பணியில் இருந்தவர்கள் தங்களது வேலையை அப்படியே போட்டுவிட்டு, அதட்டலுடன் ஓடிவர, சுடலையின் பிடி இறுகியது.

"எனக்கு எப்போதோ உன்மேல சந்தேகம்தான்டி. நான் கூட இருக்கும்போதே அவன்கூட ஜாடையில பேசுவியே, இந்தக் கண்ணு... இந்தக் கண்ணுதானே எம் மாப்பிள்ளைகூட கதை பேசுது?

"இந்தக் கண்ணை அப்படியே தோண்டி எடுத்திட்டா... இனி எந்த ஆம்பிளையையும் பார்க்க முடியாதில்ல...?" -

ஆவேசமாய்க் கேட்டுக்கொண்டே, வலது கையை அவள் கண்களுக்கு அருகே கொண்டு செல்ல, ஓடி வந்தவர்கள் சுடலையை மொத்தி எடுத்தனர்.

"யார் மேலடா கைவெக்கிற எச்சல்கல நாயே! எங்க தெருப் பொண்ணு மேல கைவெக்கிற அளவுக்கு உன் உடம்புல திமிர் ஏறிப் போச்சா?"

சீறிக்கொண்டு எழுந்தான் சுடலை. "யோவ்! திமிர் ஏறினது எனக்கில்ல. உன் ஊருப் பொண்ணுக்குத்தான். அதான் என் தங்கச்சிக்குப் பார்த்து வெச்சிருக்கற மாப்பிள்ளைக்கு வலை வீசுறா!"

"ஏலேய்! வார்த்தைய அளந்து பேசு. பொட்டப் புள்ளையப் பத்தித் தப்பாப் பேசின நாக்கை அறுத்திடுவேன்."

"யோவ்! நான் ஒன்னும் தப்பாப் பேசல. உண்மையைத்தான் சொல்றேன். ஆதவன் என் தங்கைக்கு நிச்சயிக்கப்பட்டவன். இவதான் அவனை மயக்கி..."

"வாயை மூடுல. எங்க பொண்ணைப் பத்தி எங்களுக்குத் தெரியும்."

"என்னய்யா தெரியும் உங்களுக்கு? இந்தப் பரத்தைதான் அவன்கிட்டச் சொல்லி பொண்ணு கேட்டு வரச் சொல்லியிருக்கா. உண்டா இல்லையான்னு கேளுங்கய்யா?"

"எ...ன்ன?" - அனைவரும் வியப்பாய் திகைப்பாய்ச் சூரியகாந்தியின் புறம் திரும்ப, அவளிடம் சற்றும்



அசைவில்லை. சுடலை உதறிய வேகத்தில் தரையில் விழுந்தவளை இரண்டு பெண்கள் தண்ணீர் தெளித்து எழுந்து உட்கார வைத்திருந்தனர்.

கண்களும் கழுத்தும் கன்றிச் சிவந்திருக்க, சிலையாய் இறுகிப் போய் அமர்ந்திருந்தவளை நெருங்கினான் ரங்கநாதன்.

"ஏ புள்ள சூரி... இவன் சொல்றதெல்லாம் உண்மையா?"

"......"

"உங்கிட்டதான் கேட்கிறோம். மேலூர்க்காரனை நீதான் பெண் கேட்டு வரச் சொன்னியா?"

இப்போதும் அவளிடம் அசைவில்லை. கண்கள் நிறைய நீரோடு கல்லாய் இருந்தவளுக்காகப் பரிந்து கொண்டு வந்தாள் துளசி.

"ஏண்ணே! இந்தப் பொறம்போக்குப் பய சொன்னான்னு இவகிட்ட வந்து கேள்வி கேட்கிறியே. இந்த நாய் குடிச்சிட்டு வந்து உளறுதோ என்னவோ? முதல்ல அதை அடிச்சி விரட்டு."

"வாடி என் அயித்த மகளே! நீயும்தானே அவளுக்கு உடந்தை? கூட்டுக் கள்ளிங்கதானேடி ரெண்டு பேரும்!"

"இந்தா! வாடி போடின்னா பல்லு பேந்திடும்."

"பேசுவடி பேசுவ. நீ பல்லைப் பேத்திடற வரைக்கும் எங் கை என்ன புளியங்கா பறிச்சிட்டு இருக்குமா?"

"ஏலேய் சுடலை! எங்க வந்து என்னலே பேசுற? மரியாதையா ஓடிப்போயிடு. இல்ல வெட்டி முக்கிடுவேன். ஜாக்கிரதை!"

"யோவ்! நான் போறேன்யா. அதுக்கு முன்னால அவகிட்ட சொல்ல வேண்டியதச் சொல்லிட்டுப் போறேன்."

"எது பேசுறதா இருந்தாலும் எங்ககிட்டப் பேசு."

"ஓ.கே. அந்த ஓடுகாலிகிட்ட சொல்லி வையுங்க. இனி என் மாப்பிள்ளை இருக்கிற பக்கம்கூட அவ திரும்பக் கூடாது. மனசாலகூட அவனை நினைக்கக் கூடாது."

"அவ ஏன்டா உன் மாப்பிள்ளைய நினைக்கப் போறா?"

"நினைக்கக் கூடாதுன்னுதான் சொல்றேன். ஏன்னா அவன் இப்ப என் தங்கச்சியோட புருஷன்!" - சுடலை அழுத்திச் சொல்ல, வானில் இடி முழக்கத்தோடு மின்னல் வெட்டியது.

அந்த இடி தன் தலையில் இறங்கியதைப் போல அதிர்ந்து நிமிர்ந்தாள் சூரியகாந்தி.

"என்னடி பார்க்கிற? இன்னிக்கு என் தங்கச்சி மரிக்கொழுந்துக்கு கல்யாணம். மாப்பிள்ளை யார் தெரியுமா?" - கேள்வியாய் அவன் நிறுத்த, சூரிய காந்தியின் இதயம் தாறுமாறாய்த் துடித்தது.

அவளது நடுக்கம் கண்டு ஆதரவாய் அவளைப் பற்றிக் கொண்டாள் துளசி.



"உன் தங்கச்சிக்குக் கல்யாணம் நடந்தா என்ன? கருமாதி நடந்தா என்ன? அதை ஏன்டா எங்ககிட்ட வந்து சொல்ற?"

"ரொம்ப எகிறாதடி. மாப்பிள்ளை ஆதவன். அதாவது ஆதவன் இப்போ கல்யாணமானவன். அவன் மேல எவளாவது ஆசைப்பட்டீங்கன்னு தெரிஞ்சது..."

"என்னலே! நானும் பார்த்திட்டே இருக்கேன்... ரொம்ப ஓவராப் பேசுற. எங்க வீட்டுப் பொண்ணுங்கள என்ன உன் ஆத்தா மாதிரி நினைச்சியா?" - ஒரு இளவட்டம் கோபமாய்ச் சுடலையின் இடுப்பில் ஒரு உதைவிட, மீண்டும் அங்கே கலவரம் தொடங்கியது.

ஆண்கள் அவனைப் புரட்டி எடுக்க, பெண்கள் ஓடிப்போய்த் தடுக்க, இவை எதையும் உணரமுடியாத அதிர்ச்சியில் உறைந்து போயிருந்தாள் சூரியகாந்தி. அவளது நிலை பயத்தை உண்டாக்க, தோழியின் முகம் வருடினாள் துளசி.

"சூரி! சூரி! நீ ஒன்னும் பயப்படாதே. இவன்... உன்னை மிரட்டத்தான் பொய் சொல்லியிருக்கான். நீ நம்பிடாதே!"

"து... ள... சி...!"

"என்ன சூரி?"

"அவருக்குக் கல்யாணம் ஆயிடுச்சா?"

"சேச்சே! அப்படியெல்லாம் எதுவும் ஆகியிருக்காது."

"இ... ல்ல... எதுவோ... ஆ...கியிருக்கு இல்லேன்னா... இவன் இவ்வளவு உறுதியாச் சொல்ல மாட்டான்."

"இவனெல்லாம் ஒரு மனுஷன்னு இவன் பேச்சை நம்புறியா? எழுந்திரு நீ. முதல்ல முகத்தை அலம்பு."

"து...ள...சி...! அப்போ... எம் மாமன்... இனி... எனக்கில்லையா?"

"ஐயோ! சூரி! ஏன் இப்படிக் கேட்கிற? உனக்கே நம்பிக்கை இல்லன்னா எப்படி?"

அதற்குள் கட்டடத்தின் சொந்தக்காரர் வந்துவிட, அனைவரும் சுடலையை ஒதுக்கிவிட்டு விலகி நின்றனர்.

"ஏய்! என்னப்பா இது? மழை வரப்போகுது. நீங்க கலந்து வெச்ச கலவையைக் காலி பண்ணாம இப்படிப் பிரச்சினை பண்ணிட்டு இருக்கீங்க... கலவை வீணாப் போயிடுமேய்யா!"

"ஒன்னுமில்லங்கய்யா... குடிகாரப் பய, குடிச்சிட்டு வந்து புலம்பி எங்க வேலையைக் கெடுக்கிறான். அவனைப் போகச் சொல்லுங்கய்யா... நாங்க இப்ப வேலையை முடிச்சிடுவோம்," - என்றவாறு மற்றவர்கள் தங்கள் வேலையைத் தொடங்க விலகிச் செல்ல, சுடலையைத் தனியே அழைத்தார் அவர்.

"இதோ பாருய்யா... நீ அசலூர்க்காரன். ஆதியோட முகத்துக்காகத்தான் உன்னை இங்க வேலையில சேர்த்தேன். இந்த மாதிரி குடிச்சிட்டு வந்து ரகளை பண்ணினா அது நல்லா இருக்காது, சொல்லிட்டேன்."



"சார்! நான் ஒன்னும் பிரச்சினை பண்ண வரல ஸார். என் தங்கைக்கு இன்னிக்குக் கல்யாணம். திடீர்னு முடிவானதால உங்ககிட்ட லீவு சொல்ல முடியல. அதான் எங்க ஆட்கள் சார்பா என்னைச் சொல்லிட்டு வான்னு அனுப்பினாங்க."

"என்ன? கல்யாணமா?"

எழுந்து நின்ற சூரியகாந்தி திடுக்கென நிமிர்ந்தாள். சுடலையின் முகம் திருப்தியாய்ப் புன்னகைக்க, தனக்குள் மறுத்தாள்.

'இல்ல... இவன் பொய் சொல்கிறான். நிச்சயமாய் இதில் உண்மை இருக்காது. ஆதி என்னை விட்டுட்டு வேறு யாரையும் மணம் முடிக்க மாட்டான். எனக்கு நம்பிக்கை இருக்கிறது.'

'யார் என்ன சொன்னாலும் நம்பிடாதே!' - என்ற ஆதவனின் வார்த்தை காதில் ஒலிக்க, நம்பிக்கையோடு நிமிர்ந்தாள். இவன் ஏதோ சூழ்ச்சி செய்கிறான். இதற்குப் பலியாகிவிடக் கூடாது என்ற முடிவுடன், கண்களில் துளிர்த்திருந்த நீரைத் துடைத்துவிட்டுச் செங்கலை நோக்கி நடக்க, துளசி தன் இடத்திற்குத் திரும்பினாள்.

தனது வார்த்தையை அவள் நம்பவில்லை என உணர்ந்தவனாய் முகம் கடுக்க, குரலை உயர்த்தியே பேசினான் சுடலை.

"அவசரமாக் கல்யாணம் பண்ணணும்னு நாங்களும் நினைக்கல. இந்த பில்டிங் வேலை முடிஞ்சப் பிறகு வெச்சிடலாம்னுதான் இருந்தோம். ஆனா சூழ்நிலை

கொஞ்சம் சரியில்லாததால உங்ககிட்ட கூட சொல்ல முடியல சார்."

"பரவாயில்ல... விடுப்பா! ஆதி கூட ஒரு வார்த்தை சொல்லலையே!"

"அவருக்கு அதுக்கெல்லாம் அவகாசமே கிடையாது சார். எம் மாமா... அதான் ஆதியோட அப்பா ஒரு வார்த்தை சொன்னா தட்டாமக் கேட்கிறவர் மாப்பிள்ளை. மரிக்கொழுந்து கழுத்தில தாலி கட்டுடான்னு சொன்னதும் நல்ல நாள், நேரம் எதுவுமே பார்க்காம தாலியைக் கட்டிட்டான்."

சூரியகாந்தியின் இதயம் பலமாய் அதிர்ந்தது. "அவன் அப்பன் சொன்னா அடுத்த நிமிஷமே அவன் அத்தை மக கழுத்தில தாலியக் கட்டிடுவான்." - முருகேசனின் குரல் இடற, நடை தள்ளாடினாள்.

"அப்போ பொண்ணெல்லாம் ஏற்கெனவே பார்த்து வெச்சிருந்ததா? உன் தங்கைன்னா... ஓ! முறைப் பொண்ணா?"

"ஆமா ஸார். ஏற்கெனவே முடிவு பண்ணினதுதான். ஆனா திடீர்னு பண்ண வேண்டியதாப் போச்சி. அதான் சொல்லிட்டுப் போகலாம்னு வந்தேன். அதுக்குள்ள இவனுங்கதான் பிரச்சினை பண்ணிட்டாங்க."

"சரி சரி... நீ போ. நாளைக்கு வந்திடுவீங்களா?"

"மத்தவங்க வந்திடுவாங்க. மாப்பிள்ளை வர ஒரு பத்து நாளாகும்." - சுடலை சத்தமாகவே சொல்ல,



செங்கல்களைச் சுமந்து கொண்டு வந்த சூரியகாந்தியின் நடை தள்ளாடியது.

"சூரி! நடையை எட்டிப் போடு. மழை சொட்டுப் போடுது." - சுப்பம்மாள் குரல் கொடுக்க, வேகமாய் நடந்து செங்கலை இறக்கிவிட்டு மீண்டும் செங்கல் குவியலை நெருங்கினாள்.

அதற்குள் கீழே சரிந்து கிடந்த வண்டியை நிமிர்த்தியவாறே அவளருகே வந்தான் சுடலை.

"உன் நல்ல நேரம்டி. நேத்து நான் வீட்ல இல்லாமப் போயிட்டேன். இருந்திருந்தேன்னு வை... உன் ஒட்டு மொத்தக் குடும்பத்தையும் மண்ணுக்குள்ள அனுப்பி யிருப்பேன்."

கண்ணில் தோன்றிய கலக்கத்தை அவனிடம் காட்டாமல் குனிந்து செங்கல்களை இரண்டிரண்டாய் எடுத்து பாண்டில் அடுக்கத் துவங்கினாள்.

"பூனை மாதிரி இருந்துக்கிட்டு புலியை வளைச்சுப் போடலாம்னு நினைச்சியா? நான் இருக்கிற வரைக்கும் அது நடக்குமா?"

"நான்கு... ஆறு..."

"எந் தங்கையும் என்னை மாதிரி புத்திசாலிதான். அதான் எம் மாமனைச் சம்மதிக்க வைக்க, அவ அரளி விதையையே அரைச்சிக் குடிச்சிட்டா."

"எட்டு... பத்து..."

"எப்படியோ எல்லாருமாச் சேர்ந்து காப்பாத்திட்டோம். அதே சூட்டோடு ஆதவன் கையால தாலியும் வாங்கிட்டா" - சுடலை வெற்றிக் களிப்போடு சொல்ல, குனிந்திருந்த சூரியகாந்தியின் விழிகளில் நீர் நிறைந்து செங்கலில் விழுந்து சிதறியது. பற்களைக் கடித்துக் கொண்டே, மேலும் செங்கலை அடுக்கினாள். 'இல்ல... நம்பக்கூடாது.'

"பன்னிரண்டு... பதினாலு... பதினாறு..."

"எந்தங்கை கழுத்துல தாலி ஏறினதால நீ தப்பிச்ச. இனிமேலும் என் மாப்பிள்ளை பக்கம் உன் பார்வை திரும்பிச்சு... உசுரோட இருக்க மாட்டே... சீக்கிரமே உன்னை எம் பொண்டாட்டி ஆக்கிக் காட்டுறேன்.

"அப்ப நீ அவனுக்குத் தங்கை முறை ஆயிடுவ. நானும் மரிக்கொழுந்துவும் எதை நினைச்சும் பயப்பட வேண்டாம் பாரு. சரி... நான் கிளம்புறேன். சாந்தி முகூர்த்தத்துக்கு ஏற்பாடு பண்ணணுமில்ல. வரட்டா?" - வண்டியை உசுப்பிக் கொண்டு விர்ரெனப் புறப்பட்டான் சுடலை.

"இருபது... இருபத்திரண்டு... இருபத்து நாலு..."

"ஏ சூரி...! என்ன இது, இம்புட்டு செங்கலை அடுக்குற?"

"தூக்கிட்டுப் போகத்தான்!"

"இதை எப்படித் தூக்குவ?"

"எம்புட்டுப் பாரமா இருந்தாலும் சுமந்துதானே ஆகணும்!" - எனக் குனிந்து பாண்டைத் தலையில் தூக்கினாள். மலையை ஏற்றி வைத்தது போல் தலை கனத்தது. அழுத்தமாய் நடக்கத் துவங்கினாள்.



சாந்துக் கலவையை மண்வெட்டியால் கோதிக் கொண்டிருந்த தேனம்மாளிடம் சுப்பக்கா பேசிக் கொண்டிருந்தது காதில் விழ, நகராமல் நின்று செவி மடுத்தாள்.

"சுடலை சொன்னது எல்லாம் மெய்தான் தேனம்மா. நமக்குத்தான் எதுவும் தெரியாம இருந்திருக்கு."

"என்ன சுப்பு சொல்ற?"

"கட்டுனாச் சூரியத்தான் கட்டுவேன்னு ஒரே நிலையாய் நின்னானாம் ஆதி. வீட்ல பெரிய சண்டையாம். சாமிக்கண்ணு அரிவாளைத் தூக்கிட்டு மகனை வெட்டப் போயிட்டாராம்."

"ஐயோ!"

"யார் என்ன சொன்னாலும் கேட்க மாட்டேன்னு பிடிவாதமாச் சொல்லிட்டவனை அவன் மாமியாக்காரிதான் ஏதோ தில்லுமுல்லு பண்ணிச் சம்மதிக்க வெச்சாளாம்."

"யாரு? முத்தரசியா?"

"ஆமா! ஊரை அடிச்சு உலையில போடுறவளாச்சே. ஆதவனை விட்டு வைப்பாளா? மக மருந்தைக் குடிச்சிட்டான்னு அழுது ஆர்ப்பாட்டம் பண்ணி அண்ணன்காரனைப் பயமுறுத்திக் காரியத்தைச் சாதிச்சிட்டாளாம்."

சூரியகாந்திக்குப் பூமியே தலைகீழாய்ச் சுற்றுவது போலிருந்தது. காற்றுப் பலமாய் வீச, மின்னல் வெட்டியது.

சடசடவெனப் பெருந்துளிகளாய் மண்ணைத் தொட்டது. நடக்க மறந்து அப்படியே நின்றாள்.

அவளது சூரியன் அஸ்தமித்துப் போனது. ஆதவனின் வார்த்தைகளும் பார்வையும் நேசமும் அவளைச் சுற்றிச் சுழற்றியடித்தன.

அதுவரை தேங்கி நின்ற கண்ணீர் உடைப்பெடுத்துக் கொள்ள, மழையும் முழு வீச்சில் பொழியத் துவங்கியது. மற்றவர்கள் அழைப்பதைக் காதில் வாங்காமல் நின்றவளின் கால்கள் தொய்ந்தன. கண்கள் இருட்டின.

இனி ஆதவன் தனக்கில்லை என்ற எண்ணமே அவளைச் சுக்குநூறாக்க, தலையில் உள்ள சுமையைத் தவறவிட்டாள். தலையில் இருந்த இருபத்து நான்கு செங்கலும் பாண்டோடு சேர்த்து மொத்தமாய்ச் சரிய, அசையாமல் நின்றவளின் பாதத்தில் விழுந்தன.

"அம்மா... ஆஆ..." - சூரியகாந்தியின் வீறிடலில் மழை இன்னும் ஆவேசமாய்க் கொட்டத் துவங்கியது.

# 18



எல்லோரின் இதயத்திலும்
காயங்கள் உண்டு! - அதை
வெளிப்படுத்தும் விதம்தான் வேறு!
உரிமை உள்ளவர்களிடம் கண்ணீராக...
மற்றவர்களிடம் புன்னகையாக...!



வலது பாதம் முழுதுமாய்ச் சிதைந்து போயிருக்க, பெரிய கட்டோடு மருத்துவமனையில் படுத்திருந்த சூரியகாந்தி இன்னும் அழுது கொண்டேயிருந்தாள்.

அவள் வலி தாளாமல்தான் அழுது துடிக்கிறாள் என எண்ணிய கனகம் மருத்துவரிடம் மன்றாடிக் கொண்டிருந்தாள்.

"டாக்டரய்யா! எம்புள்ள வலி தாளாம அழறாளே... ஏதாவது ஊசி போடுங்கய்யா. என்னால கண்கொண்டு பார்க்க முடியலய்யா."

"வலி இருக்கத்தாம்மா செய்யும். இது லேசான காயம் இல்லை. பாதத்தில உள்ள எலும்பு நரம்பு எல்லாமே சிதைஞ்சி போச்சி."

"ஐயா சாமி! என்னய்யா சொல்றீங்க?"

"இதோ பாரும்மா. இது சின்ன ஆஸ்பத்திரிதான். அவசரத்திற்கு முதலுதவி பண்ணியிருக்கேன். எதுக்கும் நீங்க உடனே தூத்துக்குடி பெரிய ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போயிடுங்க."

"சாமி! நடக்க முடியாத பிள்ளைய நான் எப்படி அவ்ளோ தூரம் கூட்டிட்டுப் போவேன்?"

"இங்க ஆம்புலன்ஸ் வசதி இல்ல. ஏதாவது கார் பிடிச்சிக் கூட்டிட்டுப் போங்க. உடனடியா ட்ரீட்மெண்ட் பண்ணலைன்னா... ம்ப்ச்! வேறு ஒன்னும் பண்ண முடியாது."

"சா... மி...!"

"காலையே எடுக்க வேண்டியதாகிடும்." - மருத்துவர் சற்று வருத்தமாய்ச் சொல்ல, வீறிட்டாள் கனகம்.

"ஐயோ! எம்புள்ள... எம்புள்ள... கால் போயிடுமா?"

"பதறாதீங்கம்மா! உடனடியாச் சிகிச்சை பண்ணினா காலைக் காப்பாத்திடலாம். அதனால நீங்க இங்க நின்னு அழுதிட்டு இருக்காம, போய் ஏதாவது கார் ஏற்பாடு பண்ணுங்க!" - சொல்லிவிட்டு மருத்துவர் நகர்ந்துவிட, அழுகையும் ஆற்றாமையுமாய் மகளை நெருங்கினாள் கனகம்.

அழுது வீங்கிப் போன முகத்துடன், விழிகளில் நிற்காத நீருடன் படுக்கையில் கிடந்த மகளைக் கட்டிக் கொண்டு கதறினாள்.

"என் தங்கமே! உன்னை எப்படிக் காப்பாத்தப் போறேன்?"

"வேண்டாம்மா! என்னை... இப்படியே... விட்டுடு. நான் போயிடுறேன்."

"அட... என் செல்வமே! உன்னை எமன்கிட்ட கொடுத்திட்டு நான் என்ன பண்ணுவேன்? என் உசிரும் போயிடுமே ஆத்தா! சூரி! என் தங்கமே!"

"வேண்டாம்மா... எனக்கு உயிர் வாழ ஆசையில்லை. பூமிக்குப் பாரமா இருக்கிறதைவிட ஒரேயடியா போயிடுறேம்மா. என்னை வீட்ல கொண்டு போட்டுடு."

"ஆத்தி! நான் பெத்த மகளே! என்னை விட்டுட்டுப் போக உனக்கு எப்படி ஆத்தா மனசு வந்தது? நீ என்



குலக்கொழுந்து தாயீ!" - என மகளைக் கட்டிக்கொண்டு கதறினாள் கனகம். நர்ஸ் அதட்டினாள்.

"ஏம்மா இப்படிக் கத்திக் கூச்சல் போடுற? பக்கத்தில உள்ளவங்க எல்லாம் தூங்க வேண்டாமா?"

"மன்னிச்சிடுங்க நர்சம்மா. ஏதோ மனக் கொதிப்புல கத்திட்டேன்."

"இங்க இருந்து அழுதா உன் பொண்ணு சரியாகிடுவாளா? டாக்டர் சொன்னதைக் கேட்டல்ல... போ! போய்ப் பெரிய ஆஸ்பத்திரியில சேர்க்கிற வழியைப் பாரு."

"கா... ரு... காருக்கு நான் எங்கே போவேன்?"

"பஸ் ஸ்டாண்ட் பக்கத்தில டாக்ஸி ஸ்டாண்ட் இருக்கும். வரிசையாக் கார் நிற்கும். அங்க போய் இப்படி தூத்துக்குடி ஆஸ்பத்திரிக்குப் போகணும்னு சொல்லி வாடகை பேசிக் கூட்டிட்டு வா!"

"வா...ட...கையா? அது எவ்வளவு கேட்பாங்க?"

"அது... காரைப் பொறுத்துக் கேட்பாங்க. எப்படியும் ஒரு ரெண்டாயிரம் கேட்பான்."

"ரெ...ண்... டாயிரமா?" - திகைத்தாள் கனகம்.

"ஏம்மா வாயைப் பொளக்குற? கவர்ன்மெண்ட் ஆஸ்பத்திரியில இலவசமாத்தானே பார்க்கப் போற? டாக்ஸி செலவுகூடப் பண்ண மாட்டியா? இது உம் பொண்ணுதானே!"

"என்னம்மா இப்படிக் கேட்கிறீக?"

"பிறகு... செலவு பண்ண இப்படி யோசிக்கிற?"

"வெச்சிக்கிட்டு யோசிக்கலம்மா. என்ன பண்றதுன்னு தான் யோசிக்கிறேன்." - என்றவளின் கண்களில் நீர் நிற்காமல் வழிந்தது. கனகத்தின் கோலம் பரிதாபமாய்த் தோன்ற, நர்ஸ் சற்று இறங்கி வந்தாள்.

"சரி சரி... அழாதேம்மா. நீ வீட்டுக்குப் போய் உன்னால முடிஞ்ச அமௌண்ட் ரெடி பண்ணிக் கொண்டு வா. எனக்குத் தெரிஞ்ச டிரைவர் ஒருத்தர் இருக்கார். அவர்கிட்டப் பேசிப் பார்க்கிறேன்."

"ரொம்ப நன்றிங்கம்மா!"

"முதல்ல வீட்டுக்குப் போயி எவ்வளவு சீக்கிரம் முடியுமோ அவ்வளவு சீக்கிரமா பணத்தோட வா. தாமதிக்கிற ஒவ்வொரு நிமிஷமும் உன் பொண்ணுக்குத்தான் ஆபத்து."

"இல்லம்மா! இதோ இப்ப வந்திடுறேன். நான் வர்ற வரைக்கும் எம் பொண்ணைப் பார்த்துக்கங்கம்மா."

"நான் பார்த்துக்கிறேன். நீ போயிட்டு வா."

"சூரி! படுத்துக்க ஆத்தா! அம்மா இப்ப வந்திடுறேன்."

"அம்மா!"

"என்னம்மா?"

"பணத்துக்கு என்னம்மா பண்ணுவ?"

"தெரியலைம்மா! அண்ணன்கிட்டத்தான் கேட்கணும்."



"பத்துப் பைசாக்கூடத் தர மாட்டாம்மா."

"தருவாம்மா. என்ன இருந்தாலும் கூடப் பொறந்தவ நீ. இப்படிப் படுக்கையில கிடக்கும்போது கணக்குப் பார்ப்பானா?"

"பார்ப்பாம்மா... அவன் வியாபாரி."

"சரி... அவன் தராட்டி போகட்டும். நான் வேற யார்கிட்டயாவது..."

"அம்மா! வீணாச் செலவு பண்ணாதம்மா."

"சூரி!"

"என்னை இப்படியே விட்டுடு."

"இன்னொரு தரம் அப்படிச் சொல்லாதே தாயீ! யாரும் தராட்டாலும் என் கம்மலை அடகு வெச்சாவது பணத்தோட வர்றேன். நீ எதுக்கும் கலங்காதே. அம்மா இப்ப வந்துடுவேன்," - பொங்கிய கண்ணீரைத் தன் புடவைத் தலைப்பால் துடைத்தபடி கனகம் வெளியேற, வேதனையாய்க் கண்களை மூடிக்கொண்டாள் சூரியகாந்தி.

"இன்னும் இந்த உயிர் இருக்க வேண்டுமா? இத்தனை வருடமாய்ச் செய்த தவம் பொய்த்துப் போனது. எந்த ஜீவனுக்காக ஏங்கித் தவித்தேனோ அந்த ஜீவன் இன்று இன்னொருத்தியுடன் ஐக்கியமாகிவிட்டது. இனி என் நிலை என்ன? ஆதவனைப் பிரிந்த பின்னும் இந்த இதயம் எதற்காகத் துடிக்கிறது?

இறைவா! இப்போதே இந்த இதயம் தன் துடிப்பை நிறுத்திக் கொள்ளட்டும். இந்த வலியை என்னால் தாங்க

முடியாது. என்னால் சுவாசிக்க முடியாது. வேண்டாம்... எனக்கு இந்த உயிர் வேண்டாம்."

முகத்தை மூடிக் கொண்டு அழத் துவங்கினாள் சூரியகாந்தி.

மகன் வேலை முடிந்து வரும் வரைக்கும் காத்திருக்க அவகாசம் இல்லாமல் அவனைத் தேடி அவன் அலுவலகத்திற்கே சென்று விட்டாள் கனகம். நைந்த துணியாய்க் கண்ணீரும் கதறலுமாய் வந்து நின்றவளைக் கண்டதும், அவளைத் தனியே அழைத்துக் கொண்டு போய்ச் சீறினான் முருகேசன்.

"என்னைக் கேவலப்படுத்தணும்னா இவ்வளவு தூரம் வந்த? உன்னை யார் என் ஆபீசுக்கு வரச் சொன்னது?"

"ஏய்யா! நான் சும்மா வரலய்யா... சூரிக்கு..."

"வாயை மூடும்மா. இப்ப உங்கிட்ட பேச எனக்கு டயமில்லை. நீ வீட்டுக்குப் போ."

"முருகேசா! என் நிலமை புரியாம..."

"எதுவா இருந்தாலும் நான் வீட்டுக்கு வந்த பிறகு பேசிக்கலாம். போம்மா. பெரிய ஆபீசர் வர்ற நேரம். போ!"

"ஏம்பா! நான் சொல்றதைக் கொஞ்சம் கேளுய்யா. சூரி வேலைக்குப் போன இடத்தில செங்கல் விழுந்து..."

"என்ன? செத்துட்டாளா?"



"முருகேசா...!" - அதிர்ந்தாள் கனகம்.

"அப்படியே அவ செத்தாக்கூட என்னால இப்ப வீட்டுக்கு வரமுடியாது. முதல்ல நீ கிளம்பு!" - கடுப்பாய்க் கூறிவிட்டுத் தன் இருக்கைக்குச் சென்ற மகனை நம்ப முடியாத அதிர்வோடு பார்த்துக் கொண்டு நின்றாள் கனகம்.

தன் மகள் இவனைப் பற்றி எத்தனை துல்லியமாய்க் கணித்திருக்கிறாள்! நான்தான் எதையும் புரியாத மட்டியாய் இருந்திருக்கிறேன். இவனுக்கு இதயத்தை வைக்கும் இடத்தில் கடவுள் இரும்பை வைத்து விட்டானோ?

தான் ஆடாவிட்டாலும் தன் சதையாடும் என்பார்களே! இவனுக்கு அப்படி எதுவும் ஆடவில்லையே! உடன்பிறந்தவளுக்கு ஒன்றென்றால் இவன் இரத்தம் கொதிக்கவில்லையே! இவன் என் பிள்ளைதானா?

"யாரும்மா அது? வழியில நிக்கிறது?"

"மன்னிச்சிடுங்கய்யா. வழி மாறி வந்திட்டேன்!" - என்றவள் விடுவிடுவென வெளியேறி, வழியில் தென்பட்டவர்களிடம் விசாரித்து வழி கேட்டுப் போய் நின்றது ஓர் அடகுக் கடை.

காதில் கிடந்த அரை சவரன் கம்மலைக் கழற்றி நீட்டினாள். தங்கத்திற்கு மதிப்பு இருந்தது. அடுத்த பத்தாவது நிமிடம் கையில் பணத்தோடு மருத்துவ மனையை அடைந்து செவிலியரின் உதவியோடு

சூரியகாந்தியைக் காரில் ஏற்றிவிட்டு, உதவி செய்த செவிலிக்கு நன்றி உரைத்துவிட்டுத் தானும் காரில் ஏற முனைகையில் பரிச்சயமான குரல் கேட்டது.

"அத்தே!" - ஆதவனின் குரல் கேட்டுக் கனகம் மட்டுமல்ல, காரினுள் அமர்ந்திருந்த சூரியகாந்தியும் வியப்பாய்த் திரும்பினாள்.

அதற்குள் தகவல் தெரிந்து தன்னைப் பார்க்க வந்துவிட்டானா? ஆவலும் கண்ணீருமாய் இருக்கையில் சாய்ந்து அமர்ந்திருந்தவள் பின் பக்கம் கண்ணாடி வழியாகப் பார்த்தாள்.

ஆனால் ஆதவனின் முகத்தில் எந்த விதமான பதட்டமோ வருத்தமோ தென்படவில்லை. மாறாக உற்சாகமான புன்னகையோடு கனகத்தை நேராய்ப் பார்த்துக் கேட்டான்.

"அத்தே! என்ன அத்தே இந்தப் பக்கம்?"

"ஆதவா! நீ இன்னிக்கு வேலைக்குப் போகலையாப்பா?"

"இல்லத்தே! வீட்ல ஒரு சின்னப் பிரச்சனை. அதைச் சரிபண்ணவே நேரம் சரியாப் போச்சு. ஆமா! நீங்க எங்க இங்கே? அதுவும் கார்ல...!"

கனகத்திற்குக் கண்ணீரைக் கட்டுப்படுத்த முடியவில்லை. "ஆதவா! உனக்கு விஷயமே தெரியாதா?"

"என்ன அத்தே? ஏன் அழறீங்க? என்ன பிரச்சினை?"



"நான் என்னன்னு சொல்வேன். இந்தப் பிள்ளக்கி இப்படியெல்லாம் ஆகணுமா?" - கனகத்தின் கண்ணீர் அதிகரிக்க, ஆதவன் பதறினான்.

"என்ன அத்தே! யாருக்கு என்ன? சூர்யாவுக்கு... எதுவும்..."

"ஆமாம்ப்பா! இன்னிக்கு வேலைக்குப் போன இடத்தில..." - கனகம் சொல்லி முடிக்கும் முன் சுடலையின் குரல் குறுக்கிட்டது.

"மாப்பிள்ள! இங்க என்ன பண்ணிட்டு இருக்க? மாமா உன்னைத் தேடுறாங்க!"

"நீ போ! நான் வர்றேன்."

"கையோட கூட்டிட்டுப் போயாகணும். இல்லன்னா மாமா என்கிட்டத்தான் கத்துவார்."

"சுடலை... நீ போ! நான் பேசிட்டு வர்றேன்."

"யார்கிட்ட?" - என்றவாறு கனகத்தைப் பார்த்தவனது புருவம் உயர்ந்தது.

"அட... என்ன மாப்பிள்ளை இது? நம்ம வீட்ல நடந்ததெல்லாம் மறந்து போச்சா? எல்லாப் பிரச்சினைக்கும் காரணமானவகிட்ட என்ன பேச்சு வேண்டிக் கிடக்கு?"

"சுடலை! கொஞ்சம் மரியாதையாப் பேசு!" - ஆதவனின் குரலில் கடுமை ஏறியது. அலட்சியமாய் உதட்டைச் சுழித்தான் சுடலை.

"இதுகளுக்கெல்லாம் என்ன மாப்பிள்ளை மரியாதை? வா... நாம போகலாம்."

"அத்தே! ஏதோ சொல்ல வந்தீங்களே! என்னன்னு சொல்லுங்க!"

"ஆதவா! நம்ம சூரிக்கு..."

"ஏம்மா! உங்களுக்கெல்லாம் வெட்கம் மானம் சூடு சுரணை எதுவுமே கிடையாதா?"

"சுடலை!"

"நீ சும்மா இரு மாப்பிள்ளை. ஏற்கெனவே ஊரு ரெண்டாப் போச்சு. இவளுகளால நம்ம குடும்பமே கலவரமாகி இப்பத்தான் அமைதியாகி இருக்கு. திரும்பவும் இவங்ககூட நின்னு நீ பேசுறத மாமா பார்த்தா என்ன ஆகும்?"

"எதுவும் ஆகாது. அப்படியே ஆனாலும் அதை நான் பார்த்துக் கொள்கிறேன். நீ கிளம்பு."

"அதெப்படி... உன்னைத் தனியா விட்டுட்டுப் போறது?"

"என்ன உளர்ற?"

"நீ இப்பத் தனியாள் இல்ல மாப்பிள்ளை. உன்னை நம்பி வீட்ல ஒருத்தி இருக்கா. அந்த நினைப்பிருக்கட்டும்." - சுடலை காருக்குள் நோட்டமிட்டவாறே சற்று உரத்த குரலில் சொல்ல, ஆதவனின் முகம் மாறியது.

"என்ன சொல்ற?"



"என் தங்கை மரிக்கொழுந்தைச் சொல்றேன்."

"இப்ப ஏன் நீ சம்பந்தம் இல்லாம உளறிட்டு இருக்க. நகரு! அத்தே! நீங்க சொல்லுங்க... சூர்யாவுக்கு என்ன?"

"யாருக்கு என்ன ஆனா நமக்கென்ன மாப்பிள்ளை? நீ ஏன் கண்டவங்ககிட்டயும் பேசி நேரத்தை வீணாக்குகிறாய்? நமக்கு ஆயிரம் வேலை..." - என்றவனின் வார்த்தை ஆதவனின் கடுமையான பார்வையால் தடைப்பட்டது.

ஒற்றை விரலை நீட்டி எச்சரித்தான் ஆதவன். "உன் வேலை எதுவோ அதைப் பார்த்திட்டுக் கிளம்பு. இதுக்கு மேல வாயைத் திறந்தே, தொலைச்சிடுவேன்." - பற்களைக் கடித்தவாறே அவன் சொன்னதும் சுடலையின் முகம் அவமானத்தால் சிறுத்துப் போனது.

தனது கோபத்தைக் கனகத்தின் மீது காட்டினான். "போதுமா? இப்ப ஆத்தாளுக்கும் பொண்ணுக்கும் குளுகுளுன்னு இருக்குமே. எங்க குடும்பத்தைச் சீர்குலைக்கணும்னே கங்கணம் கட்டிட்டு இருக்கீங்களா ரெண்டு பேரும்!"

"சுடலை... நான் என்ன சொல்லிட்டு இருக்கேன்!"

"அம்மா! வாம்மா போலாம்!" - சூரியகாந்தியின் நைந்த குரலில் திடுக்கிட்டுக் காரினுள் எட்டிப் பார்த்தான் ஆதவன்.

"சூர்யா! நீ இவ்வளவு நேரம் இங்கேயா இருந்த? உன் உடம்புக்கு என்ன சூர்யா?"

"அம்மா! கார்ல ஏறு!"

"சூர்யா...!"

"அம்மா! நீ ஏறுறியா? நான் இறங்கவா?" சூரியகாந்தி குரலை உயர்த்த, பதறிப் போனாள் கனகம்.

"வேண்டாம்மா... காலை அசைக்காதே! ஆதவா... நகருப்பா. இப்ப எதுவும் பேச வேண்டாம்."

"அத்தே! என்ன நடக்குது இங்கே? சூர்யா ஏன் என் முகத்தைக்கூடப் பார்க்க மாட்டேங்கிறா?"

"அவ கிடக்கிறா... விடு மாப்பிள்ளை. நீ இப்படி வா"

"விடுடா என்னை! சூர்யா... ஏன் சூர்யா பேச மாட்டேங்கிற? நான்..." - ஆதவன் பதட்டமான குரலில் கேட்க, கதவை முழுக்கத் திறந்து உள்ளே ஏறி, மகளின் காயம் பட்ட காலை மெதுவாய்த் தூக்கித் தன் மடியில் வைத்துக் கொண்டாள் கனகம்.

சூரியகாந்தியின் காலைக் கண்டதும் பலமாய் அதிர்ந்தான் ஆதவன்.

"ஐயோ! சூர்யா! என்னாச்சு உனக்கு? அத்தே! நீங்களாவது சொல்லுங்களேன். எவ்ளோ பெரிய காயம். இது எப்படி ஆச்சு? இப்ப எங்கே போறீங்க?"

"டிரைவர் அண்ணே! காரை எடுங்க."

"சூர்யா! என்ன சூர்யா இது? ஏன் எங்கிட்ட பேசமாட்டேங்கிற? அத்தே! என்ன ஆச்சுன்னு நீங்களாவது சொல்லுங்களேன்."



"ஆதவா! இன்னிக்கு..."

"அம்மா! சும்மா இரு. டிரைவர் அண்ணே! நீங்க வண்டிய எடுங்க."

"ஏன்டி... அந்தப் புள்ள இப்படித் துடிக்குது. நீ பாட்டுக்கு..."

"யாரும் நமக்காகத் துடிக்க வேண்டாம்மா. அவங்கவங்களுக்குன்னு துடிக்க ஆள் இருக்கு. நமக்குத்தான் யாரும் இல்ல..."

"சூ...ர்...யா...!"

"நமக்கு யாரும் இல்லம்மா. யாரும் வேண்டாம். யாரையும் பார்க்கவும் வேண்டாம். டிரைவரண்ணே..."

"இதோ எடுத்திட்டேம்மா..." - டிரைவர் வண்டியை ஸ்டார்ட் செய்ய, புகையைக் கக்கிக் கொண்டு புறப்பட்டது அந்த அம்பாஸிடர். கூடவே நடந்து வந்த ஆதவனைத் திரும்பியும் பாராமல் கண்களை இறுக மூடிக்கொண்டு இருக்கையில் சாய்ந்து கொண்டாள் சூரியகாந்தி.

மூடிய விழிகளில் இருந்து கரகரவெனக் கண்ணீர் வழிய, தாயுள்ளம் பதறியது.

மகளின் மனதில் ஏதோ இனம் புரியாத வலி இருக்கிறது என்று புரிந்தது. அது எதனால் ஏற்பட்ட வலி என்று புரியாமல் குழம்பிப் போனது கனகம் மட்டுமல்ல, ஆதவனும்தான்.

# 19



காலங்கள் காத்திருப்பதில்லை!
ஆனால் உன்னை நேசிக்கும் என்
இதயம் நிச்சயம் காத்திருக்கும் - மறு
ஜென்மத்திலாவது உன்னைச் சேர!

முழுதாய் மூன்றரை மாதத்திற்குப் பிறகே தரையில் காலூன்றினாள் சூரியகாந்தி. சிதைந்து போயிருந்த பாதத்தைக் கொஞ்சம் இருந்த சதையை ஒட்டுப்போட்டு ஒரு விதமாகத் தைத்து முடித்திருந்தனர் மருத்துவர்கள்.

ஆனால் தெளிவாய்ச் சொல்லி விட்டனர். காலை எடுக்காமல் காப்பாற்ற முடியுமே தவிர பழையபடி காலை ஊன்றி நடக்க வைக்க இயலாது. இடது காலை ஊன்றி வலது காலைத் தாங்கியபடிதான் நடக்க முடியும் என்று.

மொத்தத்தில் தன் மகளால் பழையபடி துள்ளித் திரிய முடியாது என்று முடிவானதும் அழுது கரைந்து போனாள் கனகம். முருகேசன் வந்து இதற்கு மேலும் ஊனமான இவளை வைத்துக் கொண்டு தன்னால் போராட முடியாது. என் வழியைப் பார்த்துக் கொண்டு நான் போகிறேன் என்று சென்றதோடு சரி.

இன்று வரை வந்து பார்க்கவில்லை. கடன்காரர்களின் நச்சரிப்பு ஒரு புறம். குழந்தைகள் அல்லாடிக் கொண்டிருந்தது ஒரு புறம். உயிரினும்



மேலான ஆதவனை இழந்தது. உடன்பிறந்தவனின் உதாசீனம். தாயின் கண்ணீர் எனத் தன்னைச் சுற்றிலும் நடந்த நிகழ்வுகளால் பாறையாய் இறுகிப் போயிருந்தாள் சூரியகாந்தி.

அவளைப் பொறுத்தவரை இந்த ஊனமோ வலியோ பெரிதாய்த் தோன்றவில்லை. ஆதவனின் இழப்பைவிட இதொன்றும் பெரிய வலி இல்லை. யார் எதைச் சொன்னாலும் நம்பாதே என்றவன் தனது ஒட்டுமொத்த நம்பிக்கையையும் தூளாக்கி விட்டிருந்தான்.

இன்று வந்துவிட மாட்டானா, நாளை வரமாட்டானா எனத் தினமும் மருத்துவமனை வாசலைப் பார்த்துக் காத்திருந்து கண்கள் பூத்துப் போனதுதான் மிச்சம். கிட்டத்தட்ட ஒரு மாதமாய் எதிர்பார்த்துக் கடைசியாய் மனதில் மண்டிய வெறுப்போடு தன்னைத் தானே தேற்றிக் கொண்டாள்.

புதிதாய்த் திருமணமானவன். தன் புத்தம் புது மனைவியுடன் தேன் நிலவு கொண்டாடுவானா? தன்னைத் தேடி இத்தனை தூரம் வருவானா? அதோடு இப்போது அவன் தன் ஆதவன் இல்லையே! மரிக்கொழுந்தின் கணவன்.

இன்னொருத்தியின் கணவன் தன்னைப் பார்க்க வரவில்லையே என ஏங்குவது எத்தனை பெரிய மடத்தனம்! அவனது எண்ணம் வரும்போதெல்லாம் இந்த வார்த்தையைத் தனக்குள்ளேயே சொல்லிச் சொல்லி ஆதவனின் நினைப்பை வெகுவாய் ஒதுக்கித் தள்ளினாள்.

தாயின் கண்ணீரும் அலைச்சலும் அவளது வேதனையும் நெஞ்சை உலுக்கியது. தம்பி தங்கையின் நலிந்த உடலைக் கண்டு உள்ளம் துடித்தது.

இனி இவர்களைக் காப்பதே என் கடமை. இனி யாருக்காகவும் எதற்காகவும் கலங்கப் போவதில்லை. நான் நன்றாக இருந்தால்தான் இவர்களை வளர்த்து ஆளாக்க முடியும்.

இவர்களைத் தவிர வேறு எந்த எண்ணமும் வரக்கூடாது எனத் தன்னைத் தானே இரும்பாக்கிக் கொண்டாள். அன்னை தந்த உணவை மறுக்காமல் வாங்கி உண்டாள்.

மருந்து மாத்திரை வேளாவேளைக்குச் சாப்பிட்டதில் காயங்கள் ஆறிக் காலைத் தரையில் ஊன்ற முடிந்தது. சதைகள் பிய்ந்து கோடு கோடாய்த் தையல்கள் போடப் பட்ட காலைப் பார்க்கையில் கலங்கிய கண்களை அதட்டி அடக்கினாள்.

இந்தக் காயத்தோடு போனதே. கால் போயிருந்தால் தன்னால் உழைக்க முடியுமா? தன் குடும்பத்தைக் காப்பாற்ற முடியுமா? போனது போகட்டும். இதுகூட நல்லதற்குத்தான். இல்லை யென்றால் அம்மாவோ அண்ணனோ நிச்சயம் திருமணப் பேச்சை எடுப்பார்கள்.

இனி அந்தக் கவலை இல்லை. ஊனமுற்ற பெண்ணை எப்படி விலை பேச முடியும்? இங்கென்ன கொட்டியா கிடக்கிறது? தட்சிணையும் இல்லாமல் ஊனமான பெண்ணைக் கேட்டு வர எந்த மகான்



வருவான்? இறுதிவரை இப்படியே இருந்து விடலாமே! யாருடைய நச்சரிப்பும் இருக்காது. மறுக்க வேண்டிய இக்கட்டும் நிகழாது.

பெருமூச்சோடு கட்டிலை விட்டு இறங்க முயற்சிக்கையில் ஓடி வந்தாள் கனகம். மகளைக் கைத்தாங்கலாய்ப் பற்றிக் கொண்டாள்.

"பார்த்து ஆத்தா! அம்மாவைப் பிடிச்சிக்க. மெதுவா..."

"வேணாம்மா. நானே மெதுவா நடந்து பார்க்கிறேன்."

"வலிக்கும் ராசாத்தி!"

"பழகிக்கிறேம்மா. உன் தோளைப் பிடிச்சிட்டு நடந்தா எப்பவும் உன் துணையைத் தேடணும். நான் தனியே நடந்து பழகணும்மா!"

"இப்ப என்ன அவசரம் ஆத்தா? கொஞ்ச நாள் போகட்டும்."

"இல்லம்மா! இப்பவே நிறைய நாள் போயிடுச்சி. இனியும் படுத்தா வேலைக்காகாது. சரி... டாக்டர் என்ன சொன்னார்?"

"வூட்டுக்குப் போலாம்னு சொல்லிட்டாக. பதினைஞ்சி நாள் கழிச்சி வந்து காட்டணுமாம். மாத்திரை மருந்தும் தந்து விட்டாக."

"சரிம்மா! வீட்டுக்குப் போலாமா?"

கனகம் தயங்கினாள். "சூரிம்மா... நீ கொஞ்ச நேரம் படுத்துக்க. அம்மா வீடு வரைக்கும் போயிட்டு வர்றேன்."

"எதுக்கும்மா?"

"இல்ல... சும்மாதான்."

"ஏம்மா தயங்குற? சும்மா சொல்லு!"

"வந்து... இந்தக் காலோட உன்னால அலைய முடியாது. அதனால கார் பிடிச்சிட்டுப் போக... பணம் வேணுமே... அதான்!"

விரக்தியாய்ச் சிரித்தாள் சூரியகாந்தி. "என்னம்மா... என்னவோ வீட்ல பணத்தை அடுக்கி வெச்சிருக்கிற மாதிரிப் பேசுற? வீட்டுக்குப் போனா பணம் எப்படி வரும்?"

"யார்கிட்டயாவது... கைமாத்தாக் கேட்டுப் பார்க்கலாம்னு..."

"வேணாம்மா... இதுவரைக்கும் வாங்கின கடன் போதும். இனி யார்கிட்டயும் கையேந்த வேண்டாம்."

"சூரி...!"

"பஸ்ஸுக்குக் காசு இருக்காம்மா?"

"பஸ்ல உன்னால எப்படியம்மா ஏற முடியும்?"

"முடியும்மா. ரெண்டு கால் இல்லாதவங்களே தவழ்ந்து ஏறலையா? எனக்குத்தான் ஒரு கால் முழுசா இருக்கே. அதோட உதவியால நடந்திடுவேன். வாம்மா... பஸ்லயே போயிடலாம்."

"வேண்டாம்மா! யாராவது மிதிச்சிட்டா போச்சு... இப்பத்தான் காயம் ஆறியிருக்கு."



"பரவாயில்லம்மா. எனக்கு எதுவும் ஆகாது. நீ சாமானெல்லாம் எடு, போகலாம். பாவம்! செண்பகமும் கதிரேசனும் தேடிட்டு இருப்பாங்க."

"அப்போ... பஸ்லயே போகலாம்ன்றியா?"

"போலாம்மா!"

"பஸ் ஸ்டாண்டுக்குக் கொஞ்சம் தொலைவு நடக்கணுமே!"

"நடந்திடுவேம்மா. தினமும் இந்த ரூமுக்குள்ள நடந்து பழகியிருக்கேனில்ல. எனக்கொன்னும் சிரமமில்ல."

"சூரி! டாக்டர் ஒரு குச்சி வாங்கிக்கச் சொன்னாரும்மா. அதைக் கையில வெச்சி ஊன்றினா நடக்கச் சுளுவா இருக்குமாம்."

"அதெல்லாம் எதுக்கும்மா வீண் செலவு? நான் சும்மாவே நடந்திடுவேன். வா, போலாம்."

"அது ஒன்னும் ரொம்ப விலையிருக்காதாம்."

"வேண்டாம்மா. அதை வாங்கி என்ன பண்றது? வேலைக்குப் போகும்போது அதைக் கூட வெச்சிட்டு எப்படி வேலை செய்ய முடியும்?"

"என்ன? வேலைக்கா? நீயா?" - கனகம் அதிர்ச்சியாய்க் கேட்டாள்.

"என்னம்மா இப்படிக் கேட்கிற?"

"நீ எப்படி ஆத்தா இனிமே வேலைக்குப் போவே?"

"ஏம்மா! ஒரு கால்தானே போச்சு. கை ரெண்டும் நல்லாத்தானே இருக்கு. வேலை செய்ய இது போதாதா?"

"வேண்டாம்மா. இனிமேலும் நீ கஷ்டப்பட வேண்டாம். என் உடம்புல தெம்பு இருக்கிற வரைக்கும் நான் உழைச்சிக் கஞ்சி ஊத்துறேன்."

"ஹும்... இதே வார்த்தையை நான் சொல்லணும்மா. நீயும்தான் எத்தனை காலமா கஷ்டப்படுற?"

"அது என் தலையெழுத்து ஆத்தா!"

"என் தலையெழுத்தும் அப்படியே ஆகிப் போச்சும்மா. நம்ம புள்ளைங்க தலையெழுத்தாவது நல்லதா மாறட்டுமே. நீ உழைக்கிறத வெச்சி கடனை அடைப்போம். என் சம்பாத்தியத்தை வெச்சி நம்ம வயித்துப் பாட்டையும் பிள்ளைக படிப்புச் செலவையும் பார்த்துக்குவோம்."

கனகத்திற்குக் கண்ணீர் பொங்கியது. "அந்தச் சண்டாளப் பாவி நம்மள எட்டிக்கூடப் பார்க்கலையே. வீட்டுக்கே வராம இருந்திட்டானே. அவனுக்கு இறைச்ச பணமெல்லாம் வீணாப் போச்சே!"

"அழாதேம்மா. நீ மட்டுமில்ல... உன்னை மாதிரி நிறையப் பெத்தவங்க இப்படித்தான் ஏமாளியா இருக்கீங்க. ஆம்பிளைப் புள்ளைதான் கஞ்சி ஊத்துவான்னு நம்பி எல்லா உழைப்பையும் அவனுக்கே கொட்டுனீங்க. உங்க இரத்தத்தை உறிஞ்சி வளர்ந்திட்டு, இப்ப சுயமாச் சம்பாதிக்க ஆரம்பிச்ச உடனே உன்னை உதறிட்டுப் போயிட்டான் பார்த்தியா?



"அவன் பிள்ளை இல்லம்மா. அட்டைப் பூச்சி. ஒட்டுண்ணி. இனி அவனைப் பத்திப் பேசி வேதனைப்படுறதவிட, இனிமே ஆக வேண்டியதைப் பார்ப்போம். வா! போலாம்." - மெல்ல இடது காலை ஊன்றி, வலது முட்டியில் கை ஊன்றி நடக்க ஆரம்பித்தாள்.

கனகத்தின் கண்ணீர் இன்னும் அதிகமானது. மகளின் காலைக் கண்டு வாயை மூடிக் கொண்டு அழுதாள். எத்தனை தூரம் ஓடி ஆடிய கால்கள். சிறு வயது முதலே ஓடிஓடி உழைத்த கால்கள். இப்போது இப்படி ஆகிவிட்டதே!

"அம்மா! சும்மா அழாதேம்மா. நீ அழுதா மட்டும் என் கால் சரியாகிடுமா? வாம்மா!"

"சூரி! பெத்த வயிறு கொதிக்குதடி. உன்னை இந்தக் கோலத்தில பார்க்க வெச்சிட்டானே அந்தக் கடவுள்."

"கடவுளைப் பழிக்காதேம்மா. ஆண்டவனோட எல்லாச் செயல்களுக்கும் ஒரு காரணம் இருக்கும். ஒரு நன்மை இருக்கும்."

"எது? எது நன்மை? எம் புள்ள காலை ஊனமாக்கினது ஒரு நன்மையா? யார் கேட்டது இந்த நன்மையை?"

"கேட்கிறது எல்லாத்தையும் அவரால தர முடியாதும்மா. அதான் சில சமயம் கேட்காததையெல்லாம் கொடுத்து நம்ம வாயை அடைச்சிடுறார்."

"சூரி...!"

"வாம்மா! இங்கு நின்னு பொழுதைக் கழிக்கிறதை விட, பஸ் ஸ்டாண்டுக்காவது போலாம்."

"சரித்தா! நீ மெள்ளப் போ. அம்மா பையை எல்லாம் எடுத்திட்டு வர்றேன்."

"ம்..." - என்றவாறு சுவரோரமாய்க் காலைத் தாங்கியவாறே வெளிவாசலை அடையும் முன் ஏராளமான பரிதாபப் பார்வையை எதிர்கொள்ள வேண்டியிருந்தது. சூரியகாந்தியிடம் இருந்து ஒரு பெருமூச்சு வெளியானது.

இது ஆரம்பம்தான். இன்னும் இது போன்ற எத்தனை பரிதாபப் பார்வைகளை, பரிகாசப் பேச்சுக்களை எதிர்கொள்ள நேருமோ? எதுவாக இருந்தாலும் தாங்கிக் கொள்ளத்தான் வேண்டும்.

'இறைவா! இத்தனை வலிகளைத் தந்த நீயே இவற்றையெல்லாம் தாங்கும் மனத்திடத்தையும் எனக்குக் கொடு. இனி நான் எதற்கும் கலங்கக் கூடாது. உடைந்துவிடக் கூடாது.'

"போலாமா ஆத்தா?"

"போலாம்மா!" - தாயின் உதவியோடு இரண்டு பேருந்தில் ஏறி இறங்கி, ஊர் போய்ச் சேர்ந்தபோது ஊரே மாறிப் போயிருந்தது.

சாலையோரமாய் நின்ற சிறிய மரக்கன்றுகள் கிளையும் இலையுமாய்ப் பரந்து விரிந்திருந்தன. எப்போதும் நடமாட்டமும் கலகலப்புமாய் இருக்கும் தெரு முழுவதும் வெகு அமைதியாய்த் தெரிந்தது.



தன் ஊரை ஆசைதீரப் பார்வையைச் சுழற்றிப் பார்த்தாள். பல ஆண்டுகளாய்க் காணாமல் காண்பது போல் அத்தனை ஆனந்தமாய் இருந்தது. செடி கொடிகளின் பசுமை மழையின் செழிப்பை உணர்த்த மனம் முழுக்க இனம் புரியாத உணர்வோடு வீட்டை அடைந்தாள்.

வாசலிலேயே அமர்ந்திருந்த தம்பியும் தங்கையும் ஓடிவந்து கட்டிக் கொள்ள, தன்னையும் மீறிக் கண்கள் கசிந்தன. இருவரையும் அணைத்துக் கொண்டு வீட்டினுள் நுழைந்து தரையில் அமர்ந்தாள்.

"அக்கா! உனக்குக் கால் ரொம்ப வலிக்குதா? உன்னால நடக்க முடியுதா?"

"அக்கா! இனிமே எங்கேயும் போகாதேக்கா. அம்மா! நீயும்தான்! எங்களுக்கு வீட்ல தனியா படுக்கப் பயமா இருந்தது."

"நோட்டு வாங்காமப் போனதால டீச்சர் என்னை அடிச்சாங்க தெரியுமா?"

"தலைக்குத் தேய்க்க எண்ணெய்கூட இல்லக்கா!" - இருவரும் மாறிமாறிப் பேச, பொங்கி வந்த கண்ணீரை அடக்கியவாறே கேட்டுக் கொண்டாள்.

"சரிசரி... இனிமே இப்படி யெல்லாம் நடக்காது. சரியா?"

"சரிக்கா!"

"சரி! போய் வீட்டுப் பாடம் இருந்தா செய்யுங்க. நான் கொஞ்சம் வெளிய போயிட்டு வர்றேன்."

"எங்கே போறக்கா?"

"துளசியப் பார்த்து வேலைக்குப் போகும்போது கூப்பிடச் சொல்லணும். மேஸ்திரியப் பார்த்துப் பேசணும்."

"அக்கா! உனக்கு விஷயமே தெரியாதா?"

"என்னடா?"

"துளசியக்காவுக்கு எப்பவோ கல்யாணமாயிடுச்சே. அவுக இப்ப வேற ஊருக்குப் போயிட்டாங்க."

"என்ன?" - சூரியகாந்தி வியப்பாய்க் கேட்க, அடுப்பைப் பற்ற வைத்துக்கொண்டிருந்த கனகம் குரல் கொடுத்தாள்.

"ஆமா சூரி! உனக்குக் காலுக்கு ஆபரேஷன் பண்ணின அன்னிக்குத்தான் அவளுக்கும் கல்யாணம். நான்தான் ஏதோ நினைப்பில சொல்ல மறந்திட்டேன்."

"என்னம்மா நீ! இதைக்கூடவா மறப்ப?"

"நான்தான் உன் கவலையிலயே மூழ்கிக் கிடந்தேனே ஆத்தா! வேற நினைப்பு எப்படி வரும்?"

"அக்கா! உனக்கு இன்னொன்னு தெரியுமா?"

"என்னது?"

"நம்ம அண்ணனுக்கு..."

"ஏய் செம்பா! வந்ததும் வராததுமா என்ன இதி நொய் நொய்னு.... போ. போய் வீட்டைக் கூட்டு." - அடுக்களையிலிருந்து வேகமாய் வெளியே வந்த அன்னையைக் குழப்பமாய் ஏறிட்டாள் சூரியகாந்தி.



"ஏம்மா பதறுற? செம்பா! நீ சொல்லு... அண்ணனுக்கு என்ன?"

"நம்ம அண்ணன்..."

"ஏய்! நான் சொல்லிட்டே இருக்கேன். நீ என்ன கதையளந்திட்டு இருக்க? எந்திச்சிப் போ!" - கனகத்தின் முகத்தில் பதட்டமும் பயமும் தெரிய, மெல்லக் காலூன்றி எழுந்தாள் சூரியகாந்தி.

தம்பியையும் தங்கையையும் போகச் சொல்லிவிட்டு, தாயின் தோளைப் பற்றித் திருப்பினாள். கனகத்தின் கண்களில் கண்ணீரைக் கண்டதும் மனம் பதறியது.

"அம்மா! ஏம்மா அழற? என்ன நடந்தது?"

"இ... இல்லையே! ஒன்னும் நடக்கலையே!"

"எங்கிட்ட எதையும் மறைக்காதேம்மா... சொல்லு!"

"நான்... சோறு ஆக்கிட்டு..."

"சொல்லிட்டுப் போம்மா!" - நகர்ந்த தாயின் கரத்தைப் பற்றி நிறுத்தினாள்.

"சூரிம்மா! நீ இப்பத்தான் ஆஸ்பத்திரியில இருந்து வந்திருக்க. உடனே இதை யெல்லாம் பேசணுமா? உன்னால தாங்கிக்க முடியாது ஆத்தா!"

"அடப் போம்மா! எவ்வளவோ பெரிய இடியை யெல்லாம் தாங்கிட்டேன். நீ என்ன அதைவிடப் பெரிய அதிர்ச்சியையா சொல்லப் போற? சும்மா சொல்லும்மா. உன் பையன் என்ன செய்தான்?"

கனகத்தின் அழுகை பெரிதானது. "சூரி! நாம மோசம் போயிட்டோம்டி. உன் அண்ணன் நம் எல்லார் தலையிலும் கல்லைத் தூக்கிப் போட்டுட்டான்."

"என்னம்மா சொல்ற?"

"உன் அண்ணன் நம்மகிட்டச் சொல்லிக்காம கல்யாணமே செய்துகிட்டான்டி!"

"அ...ம்...மா..." - சூரியகாந்தி உண்மையில் திகைத்துத்தான் போனாள். இது அவள் எதிர்பாராதது.

"என்னம்மா சொல்ற?"

"என்னத்தைச் சொல்ல? இந்தப் பாவிப் பயகூட வேலை பார்க்கிற ஆபீஸர் வீட்டுக்கே மருமகனாப் போயிட்டான். இதுவரைக்கும் வாங்கின சம்பளத்த வெச்சி ஆபீஸ் பக்கத்திலேயே இடம் வாங்கி வீடு கட்டியிருக்கான்.

"இப்ப புதுப் பொண்டாட்டிகூட குடித்தனம் போயிட்டானாம். நீ இந்த நிலைமையில இருக்கிறது தெரிஞ்சதும் எங்கிட்ட காச்மூச்சுன்னு கத்திட்டுப் போனவன்தான். பிறகு இந்தப் பக்கம் வரவே இல்லம்மா."

"பிறகெப்படிம்மா இந்த விஷயம் தெரிஞ்சது?"

"இந்தப் பய கல்யாணம் பண்ணின பொண்ணு மேலத் தெருக்காரனோட சொந்தக்காரன் பொண்ணாம். பெரிய ரகளையாப் போச்சு. அடிதடின்னு இறங்கிட்டானுங்க."

"ஐயோ!"



"பெவாண்ணு வீடு பெரிய இடமாம். பொண்ணோட அப்பன் வந்து பேசினதும் எல்லாவனும் அடங்கிட்டான். உன் அண்ணன்காரன், இனி எனக்கும் எங்க வீட்டுக்கும் எந்தச் சம்பந்தமும் இல்லன்னு சொல்லித்தான் கல்யாணம் பண்ணினானாம்."

"ஓ...!"

"நம்ம உறவையே அறுத்துட்டுப் போயிட்டான்டி. நான் என்ன பண்ணுவேன்?" - எனக் கதறிய தாயை அணைத்துக் கொண்டாள்.

"விடும்மா! நான்தான் ஏற்கெனவே சொன்னேன்ல. அவனை நம்பி எந்தக் கனவும் காணாதேன்னு!"

"என்னால முடியல சூரி. அவன் ஒரு சுயநலவாதின்னு தெரியும். ஆனா... நெஞ்சில ஈரமே இல்லாதவன்னு தெரியாமப் போச்சே!"

"அழாதேம்மா!"

"வயசுக்கு வந்த தங்கை இருக்கா. விபரம் புரியாத தம்பி இருக்கான்னுகூட யோசிக்காம இப்படி அம்போன்னு விட்டுட்டுப் போயிட்டானே படுபாவி!"

"எனக்குத் தெரியும்மா. இப்படி விட்டுட்டுப் போகணும்னுதானே நம்மகிட்ட ஒட்டாமலே நின்னான். சரி விடு. அவனாவது நல்லா இருக்கட்டும்."

"சூரி!"

"கலங்காதம்மா! நான் எப்பவுமே அவனை நம்பினதில்ல. நீதான் ரொம்ப நம்பி ஏமாந்திட்ட. கொஞ்ச

நாள் வருத்தம் இருக்கத்தான் செய்யும். அதையெல்லாம் மறந்திடும்மா. மறக்க முயற்சி செய்.

"நமக்கு இன்னும் எவ்வளவோ கடமை இருக்கும்மா. நடந்ததை நினைச்சி அழுதா நடக்கிறது தானா நடக்குமா? காலம் எல்லாக் காயத்தையும் ஆத்தும். போம்மா... போய் வேலையைப் பார்!" - தன் மனதிற்கும் சேர்த்தே சொல்லியவாறு தாயின் கண்ணீரைத் துடைத்து விட்டாள்.

"சூரி! உன் அண்ணனைப் பத்தி பேசும் போதெல்லாம் பூடகமாப் பதில் சொல்வியே... அப்படின்னா... உனக்கு அவனைப் பத்தி ஏற்கெனவே எல்லாம் தெரியுமா?"

"இல்லம்மா! இடம் வாங்கியிருக்கான். வீடு கட்டப் போறான்னு தெரியும். இந்தக் கல்யாண விஷயம் எதுவும் தெரியாது."

"வீட்ல பொட்டப் புள்ளய வெச்சிட்டு எப்படி அவனுக்குக் கல்யாணம் பண்ணிக்க மனசு வந்தது?"

"ம்ப்ச்! ஏம்மா சொன்னதையே சொல்லிட்டு இருக்க. போகட்டும், விடும்மா. அவன் வாழ்க்கையை அவனே தேடிக்கிட்டான். இதுல தப்பு சொல்லி என்ன ஆகப் போகுது. போ... போய்ச் சோறு ஆக்கு. புள்ளைங்க பசியோடு இருக்கு."

"சூரி... உனக்கு வருத்தமே இல்லையா?"

விரக்தியாய்ப் புன்னகைத்தாள் சூரியகாந்தி. "ஹூம்! இதென்னம்மா வருத்தம்? இது ஏற்கெனவே எதிர் பார்த்ததுதான். ஆனா எதிர்பாராத எத்தனையோ



அதிர்ச்சிகளையே நான் மென்னு முழுங்கிட்டு இன்னும் நடமாடிட்டு இருக்கேனே!"

"சூ...ரி...! என்ன ஆத்தா சொல்ற?"

"அதை விடும்மா. நீ சோறு ஆக்கு. நான் போய் மேஸ்திரியப் பார்த்து வேலைக்குப் போறதைப் பத்தி பேசிட்டு வர்றேன். இனிமே நாம உழைச்சாத்தான் நம்ம குடும்ப வண்டி ஓடும்."

"சூரி...! உனக்கு... ஒரு கல்யாணத்தைப் பண்ணிடணும்னு..."

"அடப் போம்மா! ஆக வேண்டியதப் பார்ப்போம்!" - என்றவாறே காலை இழுத்தபடியே அவள் நடந்து வெளியேற, மனம் கனக்க, கண்களில் நீரோடு மகளைப் பார்த்துக் கொண்டு நின்றாள் கனகம்.

'ஏன் விரக்தியாகவே பேசுகிறாள்? என்ன ஆயிற்று இவளுக்கு?' கடந்த சில நாட்களாய் மகளின் முகத்தில் புன்னகையோ துளி சிரிப்போ தென்படாதது அப்போது தான் அவளுக்கு உறைத்தது.

# 20



காற்றைப் போல் உன்னைத்
தொடர்வேன், நீ என்னையே
சுவாசிக்க வேண்டும் என்பதற்காக!

**தா**ன் பணி புரிந்து கொண்டிருந்த ஏழு மாடிக் கட்டடமும் முழுமையடைந்து வண்ணப் பூச்சோடு காட்சி தர, அதை மனநிறைவோடு பார்த்துக் கொண்டிருந்தாள் சூரியகாந்தி.

கட்டடத்தின் இடது புறமாய் வரிசையாய்ப் பன்னிரண்டு கடைகள் கட்டுவதற்கான பணி நடை பெற்றுக் கொண்டிருந்தது. தன் ஊரார்களோடு வேறு சிலரும் தென்பட, அமைதியாய் ஓரமாய் நின்று கொண்டாள். அவளுக்குச் சற்றுத் தள்ளி மேஸ்திரி கட்டடத்தின் உரிமையாளரோடு சூரியகாந்திக்காகப் பரிந்து பேசிக் கொண்டிருந்தார்.

"அதெல்லாம் சரிதான் ஆறுமுகம். இப்படி ஒத்தக்காலோட நின்னு இந்தப் பொண்ணு எப்படி வேலை செய்யும்?"

"செய்யும் சார். முன்ன மாதிரி செங்கல், கல் சுமக்க முடியாட்டியும் கல் உடைக்கிறது, கலவை கலக்குறது, கம்பி வளைக்கிறதுன்னு ஏதாவது ஒரு வேலையைக் கொடுக்கலாம் சார்."

"என்னவோப்பா! எனக்கு இதுல அவ்வளவு நம்பிக்கை இல்ல."

"அப்படிச் சொல்லாதீங்க சார். பத்து வயசில இருந்து எங்கூடவே வேலைக்கு வந்திட்டு இருக்கா சூரி. காலக் கொடுமை. அதோட கால்ல அடிபட்டுப் போச்சு. அதுவும் நம்மகிட்ட வேலை செய்யும்போதுதான்..."



"அதுக்காக என்னால முடிஞ்ச பண உதவியைச் செய்திருக்கேன்யா!"

"அதை மறக்க முடியுமா சார். ஆனா இந்த உதவியையும் நீங்க செய்தா அவ குடும்பம் ரெண்டு வேளைக் கஞ்சியாவது குடிக்குமே!"

"ஆறுமுகம்! எனக்கும் மனச்சாட்சி இருக்கு. ஆனா அந்தப் பொண்ணு ரொம்பச் சிரமப்படுவாளேன்னு பார்க்கிறேன்."

"வேலை இல்லன்னா அதைவிடச் சிரமப்படுவா சார்!" - சற்று வயதான மேஸ்திரி சூரியகாந்திக்காக மன்றாட, சூரியகாந்தி மெல்ல நடந்து அவர்களை நெருங்கினாள்.

"சார்! மேஸ்திரிக்காக எனக்கு நீங்க வேலை போட்டுத் தர வேண்டாம். இன்னிக்கு ஒரு நாள் இவங்களோட சேர்ந்து வேலை செய்யறேன். உங்களுக்குத் திருப்தியா இருந்தா தொடர்ந்து வர்றேன். இல்லன்னா..."

"உனக்கு வேலை தர யோசிக்கலம்மா. ஏற்கெனவே அடிபட்டு குணமாகி இப்பத்தான் ஆஸ்பத்திரியில இருந்து வந்திருக்க. வேலை செய்யும் போது கால்ல எதுவும் அடிபட்டா கஷ்டமாச்சேம்மா."

"நான் எச்சரிக்கையா இருந்துக்கிறேன் சார்!"

"கால்ல வலி இருக்காம்மா?"

"இல்ல சார்... சரியாகிடுச்சு!"

"சரிம்மா... நீ போய் வேலையைப் பாரு!"

"ரொம்ப நன்றி சார்!" - கைகூப்பினாள். மேஸ்திரி குரல் கொடுத்தார்.

"சூரி! வடக்குப் பக்கமா ஜல்லி கொட்டிக் கிடக்கு. அதில கருங்கல் கிடக்குது. அதைப் பிரித்தெடுத்து உடைச்சிட்டு இரு. நான் இப்ப வந்திடுறேன்."

"சரி அண்ணே!" - என்றவாறு வடக்குப் புறமாகச் சென்றவளைக் கல் உடைத்துக் கொண்டிருந்த தேனம்மா பாட்டி வெற்றிலை வாயோடு சிரித்து வரவேற்றாள்.

"சூரி! வாத்தா! உன்னைப் பார்த்து எம்புட்டு நாளாச்சு!"

"நல்லா இருக்கியா பாட்டி?"

"எனக்கென்னத்தா! எப்பவும் போல இருக்கேன். உன்னைத்தான் இப்படிப் பார்க்கச் சங்கடமா இருக்கு!"

"இந்தா! அவளே மறந்தாலும் நீ கிளறிவிட்டுடுவ போலிருக்கே. சூரி! நீ வா. வேலைக்குச் சேர்ந்திட்டியா?" - சுப்புலட்சுமி செங்கலைச் சுமந்து கொண்டே கேட்க, புன்னகையோடு தலையாட்டினாள்.

"ஆமாக்கா... கல் உடைக்கச் சொன்னாரு!"

"ம்... உடை. அப்படி உட்கார்ந்துக்க!" - என்றதும் தேனம்மாளின் அருகே கிடந்த கற்குவியலை நெருங்கினாள். இதுவும் பழக்கமான வேலைதான். பெரிய கல்லை நகர்த்திப் போட்டுச் சுத்தியலோடு அமர்ந்த நேரம் தன்னையும் மீறி மனம் தவித்தது.



என்ன இது? ஏன் என் மனம் இப்படித் தவிக்கிறது? இந்தத் தவிப்பிற்கு நிச்சயம் ஆதவன்தான் காரணம். இங்குதான் எங்கோ இருக்கிறான். என்னைப் பார்க்கிறான். அதனால்தான் இந்தப் பாழும் மனம் இப்படிக் கிடந்து துடிக்கிறது.

கூடாது. அவனைப் பார்க்கக் கூடாது. ஆறிய ரணத்தை அதிகமாக்க வேண்டாம். கண்களையும் மனதையும் தன் கட்டுப்பாட்டிற்குள் இழுத்துப் பிடித்துக் கொண்டு கற்களை உடைக்க ஆரம்பித்தாள்.

சுற்றுப்புறம் மறந்து நேரம் செல்வதை உணராமல் யாரிடமும் ஒரு வார்த்தை பேசாமல், அக்கம் பக்கம் பாராமல் அவள் வேலை செய்த விதம் திருப்தியைத் தர, உரிமையாளர் தன் வேலையைக் கவனிக்கச் சென்றுவிட, சூரியகாந்தி வேலையில் ஆழ்ந்து போனாள்.

மதிய உணவு இடைவேளை நெருங்க, அனைவரும் வேலையை நிறுத்திவிட்டு, கைகால் அலம்பச் செல்ல, தன் வேலையை நிறுத்திவிட்டு எழுந்தாள் தேனம்மாள்.

"சூரி! சாப்பாடு வேளையாச்சு. உடைச்சது போதும்... வா, சாப்பிடலாம்!"

"வேணாம் பாட்டி. நீ போ. நான் மிச்சத்தையும் உடைச்சிட்டு வர்றேன்."

"அட! வயித்தைக் காயப் போட்டுட்டா உழைப்ப? வா... எழுந்திரு."

"இல்ல பாட்டி. வேலைக்குச் சேர்ப்பாங்களோ என்னவோன்னு நான் சாப்பாடு எடுத்திட்டு வரல்ல."

"அதுக்கென்ன... நம்ம சாப்பாட்டைப் பகிர்ந்து சாப்பிடலாம்!"

"வேணாம் பாட்டி! இன்னிக்கு அம்மாவுக்கு லீவுதான். இப்ப சாப்பாடு எடுத்திட்டு வந்திடும். வந்ததும் சாப்பிட வர்றேன்."

"கனகம் வந்திடுவாளா?"

"வந்திடும் பாட்டி. நீங்க எல்லாம் சாப்பிடுங்க. நான் வர்றேன்."

"சரி... அம்மா வரலன்னா நீ வா. நாம பகிர்ந்துக்கலாம்."

"ம்..." - தலையாட்டிவிட்டுத் தன் வேலையைத் தொடர்ந்தாள். இதுவரை கேட்ட ஓசைகள் அடங்கிவிட, அனைவரும் கட்டடத்தின் பின்னே இருந்த மரத்தினடியில் அமர்ந்து சாப்பிடத் துவங்கியிருந்தனர்.

"சூர்யா...!" - தன் முதுகின் பின்னே மென்மையாய் ஒலித்த குரலில் உடல் சில்லிட்டுப் போக, கையை உடைக்க ஓங்கிய வலக்கரம் அப்படியே நின்றது. காது மடல்கள் சிலிர்த்தன. நெஞ்சம் விம்ம, கண்கள் சட்டெனக் கலங்கின.

எத்தனை ஆண்டுகளாய் விரும்பிக் கேட்ட குரல். ஒரு நாளாவது பேசிவிட மாட்டானா என ஏங்க வைத்த குரல். ஆயுள் முழுக்கக் கேட்டுக் கொண்டே இருக்க விரும்பிய குரல். இன்று வெகு அருகே ஒலித்ததும் உள்ளம் தன் கட்டுப்பாட்டை மீறத் துவங்கியது.



புத்தி அதைத் தட்டி அடக்கியது. இல்லை... இவன் தனக்குச் சொந்தமானவன் இல்லை. இன்னொருத்தியின் கணவன். இவனைப் பார்ப்பதோ... பேசுவதோ தவறு. கூடாது. பார்க்கக்கூடாது. இவனைப் பார்த்தால் என் மன உறுதி தகர்ந்துவிடும்.

என் மனக் குளம் அலைபாயத் துவங்கிவிடும். வேண்டாம். இவனைப் பார்க்கவும் வேண்டாம். இவன் குரலைக் கேட்கவும் வேண்டாம். மனதை இறுக்கியவாறே சுத்தியலால் ஓங்கிக் கற்களை உடைக்கத் துவங்கினாள்.

திரும்பியும் பாராமல் இடைவெளியின்றி அவள் அடித்து உடைத்துக்கொண்டே இருக்க, அவளுடைய வலக்கரம் பற்றப்பட்டது. திடுக்கிட்டு நிமிர்ந்தாள்.

தன் எதிரே நின்றவனைக் கண்டதும் உடல் பதற, உள்ளம் துடிக்க, எழ முயற்சித்துத் தடுமாறினாள். சட்டென அவளைப் பற்றி அமர வைத்தான் ஆதவன். சூரியகாந்தியின் விழிகள் சற்றும் நகராமல் அவனது முகத்தில் நிலைத்துப் போயின.

ஆதவன் நிறைய மாறியிருந்தான். கட்டுமஸ்தான அவனது தேகம் மெலிந்து போயிருந்தது. கண்களில் குடியிருக்கும் ஒளி மங்கி, கண்கள் உள்ளடங்கியிருந்தன. சரியாகச் சவரம் செய்யப்படாத முகத்துடன் நோயாளி போல் காட்சியளித்தான்.

என்ன ஆயிற்று இவனுக்கு? புதிதாய்த் திருமணமானவன் போலவா இருக்கிறான்? அந்த மரிக்கொழுந்து என்னதான் செய்து கொண்டிருக்கிறாள்?

சாப்பாடு போடுவாளா மாட்டாளா? ஐயோ! உடம்பிற்கு ஏதேனும் செய்கிறதோ?

ஒரே கணத்தில் தோன்றிய பல கேள்விகளில் விழிகளில் நீரோடு நின்றவளைப் பார்த்துப் பரிதாபமாய்க் கேட்டான் ஆதவன்.

"பேசமாட்டியா சூர்யா? இத்தனை நாளா எங்கே போயிட்ட? உன்னை எங்கெல்லாம் தேடினேன். அன்னிக்குக் கால்ல பார்த்தப்பகூட எங்கிட்ட ஒரு வார்த்தை பேசலையே! ஏன் சூர்யா? நான் என்ன தப்பு பண்ணினேன்?

"கால்ல அடிபட்டதைக்கூட நீயோ அத்தையோ ஏன் எங்கிட்ட சொல்லல? கூடவே இருந்து பார்த்திருப்பேனே! ஏன் எங்கிட்ட சொல்லல? நான் உனக்கு வேண்டாதவனா ஆகிட்டேனா? சொல்லு... உங்கிட்டதான் சூர்யா கேட்கிறேன். பதில் சொல்லு!"

"என்ன சொல்லணும்?" - முகத்தில் எந்த உணர்வையும் காட்டாமல் கேட்டாள் சூரியகாந்தி.

"பதில் சொல்லு! ஏன் எங்கிட்ட எதையும் சொல்லல?"

"சொன்னா...?"

"சொன்னால் கூடவே இருந்து கவனிச்சிருப்பேனே! துணைக்கு எந்த ஆளும் இல்லாம நீயும் அத்தையும் எவ்வளவு கஷ்டப்பட்டீங்களோ? நான் வந்திருந்தா..."

"எப்படி வருவ?"

"என்ன?" - புருவம் சுருக்கினான் ஆதவன்.



"உன்னால எப்படி வர முடியும்?"

"ஏன்? ஏன் வர முடியாது? ஓ! ஊருக்காகப் பயந்தியா? நான் ஒரு நாளும் பயப்பட மாட்டேன்னு உனக்குத் தெரியாதா?"

"ஊருக்குப் பயப்படமாட்ட. ஆனா... உன் வீட்டுக்கு... உன் வீட்டு எஜமானிக்குப் பயந்துதானே ஆகணும்!"

"எஜமானியா? யாரைச் சொல்கிறாய்?"

"வேறு யார்? மரிக்கொழுந்துதான்!"

"என்ன? மரியா? அவள் எஜமானியா? யார் சொன்னது? ஆமா... நான் ஏன் அவளுக்குப் பயப்படணும்?"

"அதானே! நீ ஏன் மாப்பிள்ளை பயப்படப் போற? உன் மனசில் பயம் இருந்தா இப்படி பட்டப்பகல்ல இவகூட கொட்டமடிப்பியா?" - நக்கலாய்க் கேட்ட குரலில் திடுமெனத் திரும்பினாள் சூரியகாந்தி.

கையில் சாப்பாட்டுக் கூடையோடு கண்களில் கோப வெறியோடு நின்றிருந்தான் சுடலை. சட்டென எழுந்தான் ஆதவன்.

"சுடலை... வார்த்தையை யோசிச்சுப் பேசு!"

"நீ யோசிச்சியா மாப்பிள்ளை. வீட்ல ஒருத்தி உனக்காக உட்கார்ந்து சுடச்சுட சமைச்சி அனுப்பிட்டு இருக்கா. நீ என்னன்னா... யாரும் இல்லாத நேரத்தில இவகூட வந்து கள்ளத்தனமா..."

சூரியகாந்தி சீற்றமாய் நிமிர்ந்தாள். "ஏய்! மரியாதையாய்ப் பேசு. இல்ல... வாயைக் கிழிச்சிடுவேன்."

"ம்... நீ கிழிப்பம்மா. உன்னைப் பார்த்தாலே தெரியுதே. நீ எதையும் செய்வேன்னு. அதான் என் மாப்பிள்ளைய விடாம விரட்டிட்டே இருக்கிறியே!"

"சுடலை..."

"உனக்கு ஒரு கால் போச்சுன்னு கேள்விப் பட்டேனே... கால் போயும் உன்னால வீட்டோட இருக்க முடியல இல்ல. எப்படி இருப்ப? என் மாப்பிள்ளையப் பார்க்காம உன்னால இருக்க முடியாதே!"

"சுடலை... வர வர உன் பேச்சு எதுவும் சரியில்ல. இனி ஒரு வார்த்தை பேசின... அத்தை மகன்னு பார்க்க மாட்டேன். பல்லைக் கழற்றிவிடுவேன்."

"ம்... நான்தான் எல்லாருக்கும் இளப்பமாச்சே! இந்தக் கருமம் எல்லாம் என் கண்லதானே படுது."

"இப்ப இங்க என்ன நடந்ததுன்னு இப்படிக் கத்துற?"

"ஏன் மாப்பிள்ள! நீ செய்யுறது சரின்றியா?"

"இதுல என்ன தப்பு? சூர்யா என் அத்தை பொண்ணு. அவகிட்ட நான் பேசுவேன். இதைக் கேட்க நீ யார்?"

"அப்போ என் தங்கை? அவ யார் மாப்பிள்ள?"

"சுடலை! இப்ப எதுக்கு அவ பேரை இழுக்கிற நீ?"

"நீதான் இவளைப் பார்த்தாலே எல்லாத்தையும் மறந்திடுறியே! வீடு... வீட்டுல உள்ளவங்க... யார் நினைப்பும் உனக்கு வர மாட்டேங்குதே. அப்படி என்ன தான் மாயம் பண்ணினாளோ... இவ நினைப்புலதானே என் தங்கைய ஒதுக்குற!"

"போதும்! போதும்!" - காதுகளை மூடிக் கொண்டாள் சூரியகாந்தி.

"சூர்யா!"

"தயவுசெய்து ரெண்டு பேரும் போயிடுங்க. உங்களால நான் நிறைய இழந்திட்டேன். மிச்சம் இருக்கிறது இந்த உசிரு மட்டும்தான். அதையும் இப்படிப் பேசியே கொன்னுடாதீங்க.

"எங் குடும்பத்துக்காக நான் வாழணும். நான் உழைக்கணும். தயவுசெய்து என் பொழப்புல மண் அள்ளிப் போட்டுடாதீங்க. போங்க... போயிடுங்க."

"சூர்யா! இவன் சொல்றான்னு..." - எனத் தொடங்கிய ஆதவனிடம் சீறினாள்.

"உங்களுக்கு ஒரு தரம் சொன்னாப் புரியாது? ஏன் என்னை இப்படிச் சித்திரவதை பண்றீங்க? உங்களுக்குத்தான் வீட்ல ஒருத்தி இருக்காளே. பிறகேன் என்கிட்ட வர்றீங்க? என்ன நினைப்புல பேச வந்தீங்க?"

"சூ...ர்...யா...!"

"இவன் சொல்ற நினைப்புலதான் வந்தீங்களா?" - சூரியகாந்தி கடுமையாகக் கேட்க, அதிர்ந்த முகத்தோடு மறுப்பாய்த் தலையசைத்தான் ஆதவன்.

"சூர்யா! என்ன பேசுற நீ? நானா...?"

"போதும்... நான் யாரையும் பார்க்கவோ பேசவோ வேலைக்கு வரல்ல. என் குடும்பத்தோட வயித்துப் பாட்டுக்காக வந்திருக்கேன். இனிமே இப்படி வந்து பேசி என்னைக் கொச்சைப்படுத்தாதீங்க.

"கண்டவனும் பல்லு மேல நாக்கைப் போட்டுப் பேசுற அளவுக்கு நான் ஒன்னும் தரங்கெட்டுப் போயிடல. மானம் மரியாதையோட வாழணும்னு நினைக்கிறேன். அதைக் கெடுத்திடாதீங்க. உங்களுக்குப் புண்ணியமாய்ப் போகட்டும். போயிடுங்க." - கோபமாய்த் துவங்கிக் கண்ணீரோடு கைகூப்பினாள்.

சுடலை திருப்தியாய்ப் புன்னகைக்க, ஆதவனின் முகம் இருண்டு போனது. கலங்கிய கண்களோடு அவளது வலது பாதத்தை ஒருகணம் பார்த்தான். மனம் தாளாமல் கண்களை இறுக மூடிக் கொண்டு, ஒரு நீண்ட பெருமூச்சோடு விடுவிடுவென விலகிப் போனான்.

கண்களில் நீரோடு நின்று கொண்டிருந்தவளின் முன் சொடுக்குப் போட்டான் சுடலை.

"இதே சூடு சுரணையோட இரு. நான் அப்படிப் போனதும் எம்மாப்பிள்ளைகிட்டப் போயிடாதே. அப்புறம் நான்..."

"அடச்சீ... இன்னொருத்தியோட புருஷன் மேல் ஆசைப்படுற அளவுக்கு நான் ஒன்னும் கேவலமானவ இல்ல. போடா!"

"ம்... இந்த எண்ணம் இருந்தாப் போதும். வரட்டுமா?" - அவன் போன பின்னும் அவன் பேசிய



வார்த்தைகள் தீயாய் எரிந்தன. முதன் முறையாய் மாமனைக் கடுமையாய்ப் பேசியது மனதை வருத்தியது.

பொறுமையாய் அழ அவகாசமின்றி அதற்குள் சாப்பிடப் போனவர்கள் வந்துவிட, அவசரமாய்க் கண்களைத் துடைத்துக் கொண்டு தன் இடத்தில் அமர்ந்து விட்ட வேலையைத் துவங்கினாள்.

மனம் சத்தமாய் ஓலமிட்டு அழத் துவங்கியது.

# 21



உன்னைக் காணாமல் வாடும்
என் கண்களை உறக்கம்கூட
வெறுக்கிறது! இமைகள் கூட
ஒன்று சேர மறுக்கின்றன!

இரவு உணவைத் தாமரை பரிமாறிக் கொண்டிருக்க, சாமிக்கண்ணுவும் சந்திரனும் சாப்பிட அமர்ந்தனர். செல்லாத்தா கட்டிலில் முடங்கிப் போயிருக்க, வெளித் திண்ணையில் அமர்ந்து வெற்றிலையைக் குதப்பிக் கொண்டிருந்தாள் முத்தரசி.

சாப்பாட்டை வைத்துக் குழம்பை ஊற்றினாள் தாமரை. சந்திரன் மூச்சை இழுத்துப் பிடித்தான்.

"என்ன தாமரை! மீன் குழம்பா?"

"ஆமாங்க!"

"என்ன மீனு?"

"வாள மீனு மச்சான். குருவிகுளத்தில போய் வாங்கிட்டு வந்தேன்." - சிகரெட் வாடையோடு உள்ளே நுழைந்தான் சுடலை.

"எங்கேல போன? வா, சாப்பிடலாம்!" - சாமிக்கண்ணு அழைக்க, தலையைச் சொறிந்தவாறே மறுத்தான் சுடலை.

"நானும் அம்மாவும் அப்பவே சாப்பிட்டாச்சு மாமா. நேரமாகிச் சாப்பிட்டா ஜீரணமாக மாட்டேங்குது."

"வேலை செய்தாத்தானே ஜீரணமாகும்." - சாப்பிட்டுக் கொண்டே சொன்னான் சந்திரன்.

"சந்திரா... இப்படியெல்லாம் பேசக்கூடாது. சரிடா... நீ போய்ப் படு."

"மாமா! உங்களுக்கொரு விஷயம் தெரியுமா?"

"என்னடா?"

"நம்மூரு புதுப் பணக்காரரு... அதான் அந்த முருகேசனோட மாமனார் சின்னச்சாமி இருக்காரில்ல..."

"அவனுக்கென்ன இப்போ?"

"அவரு சர்க்கரை ஆலை கட்டப் போறாராம். அதுவும் எங்கே? கிழக்குப் பக்கமாக் கிடக்கே அந்த இடத்தில!"

"கட்டிட்டுப் போகட்டுமே... நமக்கென்ன?"



"என்ன மாமா இப்படிச் சொல்லிட்டீங்க. கிழக்குத் தெருவில கட்டி அங்க உள்ளவனுங்களுக்கும் வேலை போட்டுத் தரப் போகிறாராம். இதை நாம தட்டிக்கேட்க வேண்டாமா?"

"எதுக்குத் தட்டிக் கேட்கணும்?" - புருவம் உயர்த்தினான் சந்திரன்.

"என்ன மச்சான் லூசுத்தனமாக் கேட்கிற? ரெண்டு ஊருக்குள்ளயும் உள்ள பகை தெரிஞ்சும் அந்த சின்னச்சாமி ஏன் இப்படிப் பண்றான்? ரெண்டு ஊரையும் ஒற்றுமையாய் இணைக்கும் பாலமாம். நம்ம ஊரை ஒன்னு சேர்க்க இவன் யாரு?"

"சுடலை..."

"சொல்லு மச்சான்!"

"எனக்கு ரொம்ப நாளாவே ஒரு சந்தேகம்..."

"என்ன மச்சான்?"

"இல்ல... எங்க ஊரு ஒன்னாச் சேர்றதுல உனக்கு என்ன பிரச்சினை?" - சந்திரன் நேரிடையாய்க் கேட்க, திருதிருவென விழித்தான் சுடலை. சட்டெனச் சமாளித்துக் கொண்டு சிரித்தான்.

"என்ன மச்சான்... என் ஊரு உன் ஊருன்னு பிரிச்சுப் பேசுற? இது நம்ம ஊரு மச்சான்."

"இல்லடா! இது எங்க ஊரு. உன் ஊரு வயலூர்ப்பட்டி. ஆயிரம் இருந்தாலும் நீ அசலூர்க்காரன்."

"மச்சான்!"

"எங்க ஊர்ல வெட்டிக்குவோம். நாளைக்குச் சேர்ந்துக்குவோம். இதுல நீ ஒன்னும் நாட்டாமை பண்ண வேண்டாம். வயித்தை நிறைச்சாச்சா... போ. போய்ப் படு."

வெளித் திண்ணையிலிருந்த முத்தரசி வெற்றிலையைத் துப்பிவிட்டு எழுந்து வந்தாள்.

"ஏன்டாப்பா! இப்ப எம் புள்ள என்ன தப்பாச் சொல்லிட்டான்னு அவனை விரட்டுற? இந்த ஊர்ப் பயலுகளுக்கு ரோசம் இருந்தா அந்தச் சின்னச்சாமிய தட்டிக் கேளுங்க!"

"அத்தே! சுடலைக்குச் சொன்ன பதில்தான் உங்களுக்கும்... போய்ப் படுங்க!"

"அண்ணே! பார்த்தியாண்ணே! உம் மகன் என்னை எவ்வளவு அலட்சியமாப் பேசுறான்னு!"

"சந்திரா! உங்கிட்ட எத்தனை தரம் சொல்லி யிருக்கேன். அத்தைய மதிப்பில்லாமப் பேசாதன்னு!"

"இனி பேசலப்பா!"

"முத்து! நீ போய்ப் படு ஆத்தா. மரிக்கண்ணு சாப்பிட்டாளா?" - சாமிக்கண்ணு பரிவாய்க் கேட்க, இல்லாத கண்ணீரைத் துடைத்தாள் முத்தரசி.

"எங்கே சாப்பிட்டா? நாளு பூரா அழவே அவளுக்குப் பொழுது சரியாப் போயிடுது. பிறகெப்படி சாப்பாடு இறங்கும்?"



"ஏன் அமுதா? கூப்பிடு அவளை!"

"மாமா! அவ ஆதிக்குச் சாப்பாடு எடுத்து வெச்சிட்டு இருக்கா."

"ஓஹோ! எனக்குத் தெரியாம இந்த வீட்ல இதெல்லாம் நடக்குதா? நான்தான் அவன்கூட யாரும் பேசவே கூடாதுன்னு சொன்னேனே! என் வார்த்தைக்கு இந்த வீட்ல என்ன மதிப்பு இருக்கு?"

"அண்ணே! கோபப்படாதேண்ணா! நீ பாட்டுக்கு அவனை வெளியே அனுப்பிட்ட... நாங்களும் அப்படியே விட முடியுமா? அதுவும் அவன் மேல உசுரையே வெச்சிருக்கா எம்மவ. அவன் சாப்பிட்டாத்தான் இவளும் சாப்பிடுறா!"

"எப்படியோ போங்க!" - என்றவாறு கைகழுவி விட்டு எழுந்தார் சாமிக்கண்ணு. தாமரை தயக்கமாய் அழைத்தாள்.

"மாமா!"

"ம்..."

"வந்து... அத்தை இன்னிக்கும் சாப்பிடல."

"என்ன?" - விரைப்பாய் அவர் கேட்க, சாப்பிடுவதை நிறுத்திவிட்டு நிமிர்ந்தான் சந்திரன்.

"என்ன தாமரை சொல்ற? இன்னிக்குமா?"

"ஆமாங்க! அத்தை நாலு நாளா சாப்பிடவே இல்ல. எவ்வளவோ சொல்லிப் பார்த்திட்டேன்."

"என்ன... பட்டினி கிடந்து சாகப் போறாளாமா? ஏ செல்லாத்தா... எழுந்து வா இப்படி!" - என்றவாறே மனைவியை நோக்கி அவர் செல்ல, அவசரமாய்க் கை கழுவிவிட்டு எழுந்தான் சந்திரன். அதற்குள் அடுக்களையில் இருந்து ஆதவனுக்குச் சாப்பாட்டை எடுத்து வைத்துக் கொண்டிருந்த மரிக்கொழுந்தும் வந்துவிட, செல்லாத்தா கண்களைத் திறவாமல் படுத்திருந்தாள்.

"இந்தா! எழுந்திருடி. ஒரு வாய் சாப்பிடு."

"எனக்கு வேண்டாம்."

"ஏன்? ஏன் வேண்டாம்?"

"எனக்கு வேண்டாம். சாப்பிடுறவங்க சாப்பிடுங்க."

"எம்மா! என்னம்மா சின்னப் புள்ள மாதிரி அடம் புடிக்கிற. வாம்மா... சாப்பிடு!" - சந்திரன் அழைத்ததும் சட்டெனக் கண்களைத் திறந்தாள். கண்கள் நீரால் நிறைந்திருந்தன.

"நான் எதுக்குய்யா சாப்பிடணும்? சாப்பிட்டு என்ன ஆகப் போகுது? சொல்லு!"

"என்னம்மா இப்படிக் கேட்கிற?"

"வேற என்ன பேசுறது? பெத்தது மூனு. அதுல ஒன்னு தனிக்குடித்தனம் போறேன்னு போயிடுச்சி. நீ உன் அப்பன் கூடவே சுத்தப் போயிடுற. எம்புள்ள... எம்புள்ள ஆதி... ஆயி அப்பன் இருந்தும் அநாதையா வெளியே கிடக்குது. சாப்பிடுறானா இல்லையான்னு கூடத் தெரியலையே! பிறகெப்படி எனக்குச் சாப்பாடு இறங்கும்?"



"அதான் மரிக்கொழுந்து எடுத்திட்டுப் போறாளே! பிறகென்ன?" - அலட்சியமாய்க் கேட்ட கணவரை வெடுக்கென முறைத்தாள்.

"அவ எடுத்திட்டுப் போறான்னு தெரியுது. அவன் சாப்பிடுறானா இல்லையான்னு தெரியுமா?"

சந்திரன் மருக்கொழுந்திடம் திரும்பினான். "மாரி! ஆதி சாப்பிடுறானா இல்லையா?"

"நான் போனாலே எரிஞ்சு விழுது மாமா. சாப்பாட்டைத் தொடுறதே இல்ல."

"இதை ஏன் எங்கிட்ட சொல்லல?"

"பதறாத மச்சான்... வெளிய எங்காவது சாப்பிட்டு வந்திருப்பான்."

"நீ வாயை மூடுடா!"

"எதுக்கெடுத்தாலும் எம்புள்ள வாயையே அடைங்க. வெளியே மகனும் உள்ள ஆத்தாளுமா உண்ணாவிரதம் இருக்கிற மாதிரி நடிக்கிறாக."

"அத்தே! எங்க அம்மாவுக்கு ஒன்னும் நடிக்க வேண்டிய அவசியம் இல்ல... உங்கள மாதிரி!" - சந்திரன் வெடுக்கெனச் சொல்ல, மரிக்கொழுந்தின் முகம் கறுத்தது. திடுக்கிடலாய்த் தாயை ஏறிட்டாள்.

முத்தரசி உடனே பெருங் குரலெடுத்து அழத் துவங்கினாள்.

"அண்ணே! பார்த்தியா? நான் நடிக்கிறேனாம். உன் சின்ன மகன் மாதிரி இவனும் பேசுறான் பாரு.

இதையெல்லாம் கேட்டுட்டு இன்னும் நான் இங்கே இருக்கணுமா? மாரி! சுடலை! கிளம்புங்கம்மா. நாம எங்கேயாவது போயிடலாம்."

"அட இருத்தா! கோபப்படாதே. சந்திரா! நீ என்ன நினைப்புல இப்படிப் பேசிட்டு இருக்க. அத்தைகிட்ட மன்னிப்புக் கேளு."

"சும்மா இருங்கப்பா! உங்களுக்கு உங்க தங்கை பெரிசுன்னா எனக்கு எங்க அம்மா பெரிசு!"

"சந்திரா!" - கர்ஜித்தார் சாமிக்கண்ணு.

"தப்புதாம்ப்பா... பெத்தவரை எதிர்த்துப் பேசுறது தப்புதான். ஆனா அப்படிச் சொல்லிக் கொடுத்து வளர்த்த அம்மாவையே வேண்டாத பொருளா தூக்கிப் போட்டுட்டீங்களே!"

"என்னடா சொல்ற? நான் உன் அம்மாவைச் சாப்பிடாம இருக்கச் சொல்லவில்லை. அவ பிள்ளை மேல உள்ள கண்மூடித்தனமான அன்பால இப்படி அவளையே வருத்திக்கிறா!"

"ஹூம்... அப்படிப் பார்த்தாலும் உங்களை விட அம்மா பரவாயில்லப்பா."

"சந்திரா?"

"தன் புள்ள மேல உள்ள பிரியத்தால தன்னையே வருத்திக்கிறாங்களே தவிர அந்த வேதனையை வெறுப்பா யார் மேலயும் காட்டல. ஆனா நீங்க உங்க தங்கை மேல உள்ள கண்மூடித்தனமான அன்பால எத்தனை பேரைத் தண்டிக்கிறீங்க?"



"ஏலேய்! நீ... நீ... என்ன சொல்ற?"

"உண்மையைத்தான் சொல்றேன். உம் மக எம் மருமகன்னு நீங்க அத்தைகிட்ட வாக்குக் கொடுக்கிறதுக்கு முன்னால ஆதிகிட்ட ஒரு வார்த்தை கேட்டீங்களா?"

"எ...ன்ன?"

"அவன் மனசுல என்ன இருக்குன்னு தெரியாம வாக்குக் குடுத்தது பெரிய தப்பு. அதைவிட இப்ப அவன் மனசில என்ன இருக்குன்னு தெரிஞ்சும் அவனைக் கட்டாயப்படுத்துறது ரொம்பப் பெரிய தப்பு."

"என்னடா? அப்பனுக்கே பாடம் நடத்திறியா?"

"நீங்க பேசாதீங்க அத்தே! இன்னிக்கு எங்க குடும்பம் இப்படிப் பிரிஞ்சி கிடக்கக் காரணமே நீங்கதான்!"

"என்ன? நானா?"

"ஆமா! உங்க ஆர்ப்பாட்டத்தை நம்பி எதையும் ஆராயம எங்க அப்பா என் தம்பிய வெளியே அனுப்பிட்டாங்க. அவன் நினைப்புலயே என் அம்மாவை நோயாளி ஆக்கிட்டீங்க. கூடப் பொறந்த தம்பி. அவன்கிட்ட ஒரு வார்த்தை பேச விடாம எனக்கும் கட்டுப்பாடு விதிச்சாச்சு.

"இவ்வளவு செய்தும் உங்களுக்கு இன்னும் கோபம் அடங்கலையா? எப்பல்லாம் வாய்ப்பு கிடைக்குதோ அப்பல்லாம் எங்க அப்பாவைத் தூண்டிவிட்டே எங்களுக்கு எதிரியாக்கிட்டுறீங்க! இன்னும் என்னவெல்லாம் செய்யப் போறீங்க?"

"சந்திரா!" - பற்களைக் கடித்தவாறே மகனின் கன்னத்தில் ஓங்கி அறைந்தார் சாமிக்கண்ணு. ஒட்டு மொத்தமாய் அனைவரும் நடுங்கிப் போக, நம்ப முடியாமல் தந்தையை ஏறிட்டான் சந்திரன்.

"அ...ப்...பா..."

"பேசாதே! என் தங்கையை மதிக்காத எவனும் என்கிட்ட பேசக் கூடாது."

"அப்பா!"

"இவளை மதித்து இந்த வீட்ல இருக்கிறதா இருந்தா இந்த வீட்ல இரு. இல்லன்னா இப்பவே உன் தம்பிய மாதிரியே வெளியே போயிடு."

செல்லாத்தா நெஞ்சிலறைந்து கொண்டு அழுதாள். "அனுப்பிடுங்க... இப்படி எம் புள்ளைகள எல்லாம் அனுப்பிட்டு என்னை அனாதைப் பொணமாக்கித் தெருவில போட்டுடுங்க."

"அம்மா! அழாதேம்மா!"

"தோளுக்கு மேல வளர்ந்த புள்ளைய அவன் பொண்டாட்டி முன்னாலயே கைநீட்டி அடிச்சா என்னடா அர்த்தம்? நாம யாரும் இவருக்குத் தேவையில்லன்னு தானே அர்த்தம்?"

"ஆமாண்டி! நீங்க யாரும் தேவையில்ல. எல்லாரும் வெளியே போங்க. எங்கண்ணு முன்னால யாரும் நிற்கக்கூடாது. போங்க!" - இரைந்தவாறே தோளில் கிடந்த துண்டை உதறிவிட்டு விடுவிடுவென வெளியேறினார்.



செல்லாத்தா மகனைக் கட்டிக் கொண்டு அழ, முத்தரசி மகளிடம் திரும்பினாள்.

"ஏய்! சாப்பிடுறதா இருந்தா சாப்பிட்டு வந்து படு. வாயைப் பார்த்திட்டு நிக்காதே!" - என்றவாறு மகனோடு தன் அறைக்குள் நுழைந்து கொண்டாள்.

மரிக்கொழுந்து அசையாமல் நிற்க, தாமரை கண்ணீரைத் துடைத்துக் கொண்டே, சாப்பிட்ட பாத்திரங்களை ஒதுக்கத் துவங்கினாள்.

"தாமரை! தட்டுல சாப்பாடு போட்டுக் கொண்டா. அம்மாவைச் சாப்பிட வைக்கலாம்."

"வேண்டாம்யா! இந்தக் கொடுமை யெல்லாம் கண்ணால பார்த்திட்டு என்னால சாப்பிட முடியுமா? என்னை இப்படியே விட்டுடு. நான் பட்டினி கிடந்தே செத்திடுறேன்."

"அம்மா!"

"அவர் பேசுனதைக் கேட்டு நீயும் என்னை விட்டுட்டுப் போயிடாதய்யா. அம்மாவுக்குக் கொள்ளி போட்டுட்டுப் போய்யா!" - அழுத அன்னையை நெஞ்சில் சாய்த்துக் கொண்டான் சந்திரன்.

"இப்படியெல்லாம் பேசாதம்மா. உன்னை விட்டுட்டு எங்கேயும் போக மாட்டேன். அழாதம்மா."

"எம்புள்ள ஆதி எப்படி இருக்கானோ? எம்புள்ளன என்னை எட்டிக்கூடப் பார்க்காம இருந்திட்டானே! கடைசி வரைக்கும் அவனைப் பார்க்காமலே போயிடுவேன்

போலிருக்கே. எங்குடும்பத்துக்கா இப்படி ஒரு சோதனை வரணும்?

"நானும் எம்புள்ளைகளும் ஒரு ஈ எறும்புக்குக்கூட தீங்கு செய்யலயே! எம் புள்ளயப் பார்க்க விடாம பண்ணிட்டாங்களே! ஆதி! எப்பா! நீ எப்படிய்யா இருக்க?" - தாயின் புலம்பல் நிற்காமல் தொடர, மனைவியை அழைத்தான் சந்திரன்.

"தாமரை! ஆதி வந்திட்டானா பாரு!"

"இல்லங்க... வீடு பூட்டித்தான் இருக்கு. லைட் கூட எரியல."

"சரி! நீ அம்மாவைப் பார்த்துக்க. அவன் ரோட்டுக் கடையில நின்னா கூட்டிட்டு வர்றேன்." - என்றவாறே எழுந்தான்.

"என்னங்க! மாமா வராந்தாவில படுத்திருக்காங்க."

"இருக்கட்டும்."

"இப்ப வேணாங்க. பிரச்சினை இன்னும் பெரிசாகிடும். மாமா தூங்கட்டும். ஆதி வந்த பிறகு போய்க் கூட்டிட்டு வாங்க!" - தாமரை பயந்த குரலில் சொல்லிக் கொண்டிருக்க, மரிக்கொழுந்து எந்திரத்தனமாய் நடந்து வந்து சமையலறையை அடைந்தாள்.

ஆதவனுக்காக எடுத்து வைத்திருந்த சாப்பாடு அப்படியே இருந்தது. இதைக் கொண்டு போனால் சாப்பிடுவானா? நிச்சயமாய் மாட்டான். அதோடு தாறுமாறாய்த் திட்டியும் அனுப்புவான். என்மீது உள்ள



கோபத்தில் சாப்பாட்டை வெறுத்து நாளுக்கு நாள் இளைத்துக் கொண்டே போகிறானே!

நாள் பூரா உழைப்பவன் அதற்கேற்ற உணவை உண்ண வேண்டாமா? இங்கு அத்தை ஒருபுறம் சாப்பிடாமல் படுத்த படுக்கையாய்க் கிடக்கிறார். அங்கே மாமன் நடைபிணமாய் இருக்கிறான். இதற்கெல்லாம் யார் காரணம்? நான்தானே!

மொத்தக் குடும்பத்தையும் பிரித்து அழவைத்து இவர்களின் கண்ணீருக்கு நடுவே நான் வாழ வேண்டுமா? அப்படி ஒரு வாழ்க்கை தேவையா? தாயின் பேச்சைக் கேட்டுத் தவறு செய்துவிட்டோமோ? முதன் முறையாய்க் குற்ற உணர்வு தலை தூக்கியது.

"மரி!" - தாமரையின் அழைப்பில் திரும்பினாள்.

"அக்கா!"

"ஆதி வந்தாச்சுன்னு நினைக்கிறேன். வீட்ல லைட் எரியுது. போய்ச் சாப்பாடு கொடுத்திட்டு வாம்மா!"

"அக்கா!"

"என்ன மரி?"

"உங்களுக்கு எம் மேல கோபமோ வெறுப்போ வரலையா?"

"கோபமா? உம் மேலயா... எதுக்கு?"

"இந்த வீட்ல நடக்கிற மொத்தப் பிரச்சினைக்கும் நான்தானே காரணம். என் பிரச்சினையாலதான் இன்னிக்கு மாமா சந்திரன் மாமாவைக் கைநீட்டி..."

"அதுக்கு நீ எப்படிக் காரணமாவே மரி?"

"இல்ல... என்னாலதான் ஆதி மாமா வீட்டை விட்டுப் போச்சு. அதனாலதான் அத்தைக்கு உடம்புக்கு முடியாமப் போச்சு. இன்னிக்குக் கூட..."

"இதுக்கெல்லாம் காரணம் நீயில்லம்மா. உன் அம்மா!"

"அக்கா?"

"நீ சின்னப் பொண்ணு மரி... உன் அம்மாதான் உம்மனசில தேவையில்லாத ஆசைகளை விதைச்சாங்க. சொந்தம் விட்டுப் போகக் கூடாதுன்னு அவங்க நினைச்சிருக்கலாம். அதுக்காக இப்படி ஒன்னா இருந்த குடும்பத்த துண்டாடியிருக்கக் கூடாது."

"அ...க்...கா!"

"எங்கே? உம் மனசைத் தொட்டுச் சொல்லு. ஆதி என்னிக்காவது ஒரு நாள் உங்கிட்ட ஆசை வார்த்தை பேசியிருப்பாரா? சும்மா பேசுற மாதிரியாவது நீதான் என் பொண்டாட்டின்னு சொல்லியிருப்பாரா? உன்னைத் தொட்டு விளையாடியிருக்கிறாரா?"

இருண்ட முகத்துடன் மறுப்பாய்த் தலையசைத்தாள் மரிக்கொழுந்து.

"இல்லயில்ல... அவர் அப்படிச் செய்திருக்க மாட்டார். ஏன்னா அவர் மனசில ஏற்கெனவே அந்தப் பொண்ணு பதிஞ்சி போயிட்டா. நீ வர்றதுக்கு முன்னாலயே அவதான் தன்னோட மனைவின்னு முடிவு பண்ணி மனசால அவகூட வாழவே தொடங்கிட்டார்."



"அக்கா!"

"இப்ப நீ ஆசைப்படுறது இன்னொருத்தியோட புருஷனை. இது தப்பு இல்லையா மரி?"

தாமரை இயல்பாகவே கேட்க, மரிக்கொழுந்து நொறுங்கிப் போனாள்.

"நம்ம ஊர்ல ஊரைக் கூட்டிச் சீர்செய்தவன்தான் மாப்பிள்ளைன்னு முடிவு பண்ணிடுவாங்க. அப்படிப் பார்த்தா இன்னொருத்திக்கு நிச்சயமானவனை மனசால நினைக்கிறது கூட பாவமில்லையா?"

"அக்கா... நான்..."

"நான் உன்னைத் தப்பு சொல்லமாட்டேன் மரி. நீ குழந்தை. உனக்கு இந்த விவரம் எதுவும் தெரியாது. ஆனா எல்லாம் தெரிஞ்ச உன் அம்மா ஏன் மனசைக் கெடுத்தாங்க? அடுத்தவளோட தாலியப் பிடுங்கித் தன் மகளுக்குக் கட்டணும்னு உங்கம்மா நினைக்கிறாங்க. ஆனா நான்... ரெண்டு பேருக்கும் இல்லாம அந்தத் தாலி பறிபோயிடுமோன்னு நினைச்சிப் பயப்படுறேன்."

"அக்கா!"

"ஆதியோட நிலையைப் பார்த்தியா? அந்த முகத்தில தெரியுற வேதனையைப் பார்த்தியா? இப்படி எல்லாருமாச் சேர்ந்து அவரை வேதனைப்படுத்தினா அவரோட மனசு என்ன பாடுபடும்? துக்கம் தாளாம ஏதாவது விபரீத முடிவெடுத்திட்டா!"

"இல்ல..." - வீறிட்டாள் மரிக்கொழுந்து. "இல்ல... அப்படி எதுவும் ஆகக்கூடாது. மாமா! எம்மாமா உசுருக்கு எந்த ஆபத்தும் வந்திடக் கூடாது."

"மரி! உன் அன்பும் உயர்வானது. ஆதியோட அன்பு உயிரானது. எதையும் குறைச்சி மதிப்பிட முடியாது. ஆனால் உன் நேசம் ஒரு பக்க ஆசை. ஆதியோட நேசம் இரண்டு உசிரு ஒன்னாச் சேர்ந்ததுக்குச் சமம். அதைப் பிரிச்சா இன்னொரு உசிரு போயிடாதா?"

"அக்கா!" - காதைப் பொத்திக் கொண்டாள் மரிக்கொழுந்து. கண்களில் இருந்து கரகரவென நீர் கொட்டியது. அதைத் துடைத்தாள் தாமரை.

"மனசுக்குப் பிடிச்சவனோட வாழத்தான் எந்தப் பொண்ணும் ஆசைப்படுவா. ஆனா அவன் மனசுல நாம இருக்கணுமே!"

"அப்போ... மாமா மனசில நான் இல்லையாக்கா?"

"அவர் மனசுல சூர்யா இருக்காம்மா. அழுத்தமாப் பதிஞ்சு உயிரோட உதிரத்தோட கலந்து இருக்காம்மா! பிறகெப்படி உனக்கு இடம் கொடுப்பார்?"

"ஐயோ! நான் என்ன பண்ணுவேன்?" - முகத்தை மூடிக்கொண்டு கதறியழ ஆரம்பித்தாள் மரிக்கொழுந்து. பரிவாய் அவளது தலையைக் கோதினாள் தாமரை.

"அழாதே மரி. உம் மனசு படுற வேதனை எனக்குப் புரியுது. ஆனா வலுக்கட்டாயமாகத் தாலியக் கட்ட வெச்சு ஆதி ஏதாவது தவறுதலா முடிவெடுத்திட்டா அந்தப் பழி



உன் ஆயுசுக்கும் உன்னை விடாதே. குற்ற உணர்வே உன்னைக் கொஞ்சம் கொஞ்சமாக் கொன்னுடுமே!

"ஒரு உசிரு போனா அதைத் தாங்க இயலாம அந்தப் பொண்ணும் போயிட்டா அப்புறம் உன்னோட நிலை என்ன? கொலைகாரின்ற பட்டத்தோட வாழ முடியுமா?"

"அப்படி ஒரு நிலை வந்தா... நான்... செத்திடுவேன்."

"எதுக்கும்மா? எதுக்காக இத்தனை உயிர் போகணும்? இதனால யாருக்கு என்ன லாபம்? எல்லாருக்குமே இழப்புதானே! எல்லாரோட பெத்தவங்களும் கதறித் துடிப்பாங்களே! அப்படி ஏன் மத்தவங்களைக் கதற வைக்கணும்?"

"அக்கா!"

"அதுக்குப் பதிலா நாம ஆசைப்பட்டவனாவது மனசுக்குப் பிடிச்சவளோட சந்தோஷமா வாழட்டும்னு விட்டுக் கொடுக்கலாமே!"

"எ...ன்...ன...?" - கண்ணீரோடு நிமிர்ந்தாள்.

"நீ ஒருத்தி விட்டுக் கொடுத்தா ரெண்டு குடும்பமும் குறிப்பா உன் மாமா சந்தோஷமா இருப்பாரில்ல? அதோட உம் மேல உள்ள வெறுப்பும் மாறி உம் மேல அன்பு வருமில்ல."

"அக்கா!"

"எல்லாருக்கும் நல்லவளா வாழுறது தெய்வப் பிறவி மரி. அதை எல்லாராலும் வாழ முடியாது. ஆனா உனக்கு அந்த வாய்ப்புக் கிடைச்சிருக்கு. உன் ஒருத்தி

முடிவால நம்ம குடும்பத்தில இழந்த நிம்மதி சந்தோஷம் எல்லாம் திரும்பக் கிடைச்சிடும். என்ன சொல்ற?" தவிப்பாய்க் கேட்டாள் தாமரை.

மரிக்கொழுந்தின் மனக் குளம் ஆர்ப்பரிக்கத் துவங்கியது. தீவிரமாய்ச் சிந்திக்கத் துவங்கினாள்.

# 22



ஒவ்வொரு நொடியும் நான்
உன்னை நினைத்துக் கொண்டே
இருக்கிறேன்! ஒரு நொடியாவது
நீ என்னை நினைப்பாயா என்று!

**வெ**ளி முற்றத்தில் கயிற்றுக் கட்டிலில் படுத்திருந்தான் ஆதவன். இரு கரங்களையும் மடித்துத் தலையணையாக்கி அதில் தலை வைத்து வெறித்த பார்வையோடு படுத்திருந்தவனைச் சற்றுத் தயக்கமாய் நெருங்கினாள் மரிக்கொழுந்து.

ஆதவனிடம் அசைவில்லை. அவனது விழிகள் வானத்து நிலவை மூடுவதும் விலகுவதுமாய் இருந்த மேகத்தை வெறித்துக் கொண்டிருந்தன.

வளர்பிறை நிலவு பிரகாசமாய்ப் பளபளக்க... காற்றில் மிதந்து வந்த மேகம் அதை மூடிக் கொள்ள, சுற்றுப்புறம் இருளானது.



உற்றுப் பார்த்தும் நிலவு புலப்படவில்லை. ஆதவனின் கண்கள் கசிந்தன. இதே போல்தானே சூர்யாவும் மறைந்து கொண்டாள்? எதற்காக? ஏன் என் மீது அத்தனை வெறுப்போடு கோபப்பட்டாள்?

அடிபட்டு மருத்துவ மனையில் கிடந்தவளைப் போய்ப் பார்க்கவில்லை என்பதாலா? எத்தனை மருத்துவமனைகளில் போய்த் தேடினேன்? அவள் எங்கு சென்றாள் என்றே தெரியாமல் உண்ணவும் முடியாமல் உறங்கவும் முடியாமல் எப்படித் திண்டாடினேன்?

இதை ஏன் அவள் உணரவில்லை? அவளைப் பற்றி யாரிடமும் விசாரிக்கவும் முடியாமல் அவள் நிலையை அறியவும் முடியாமல் நான் தவித்த தவிப்பு! அதைக் கூடக் காது கொடுத்துக் கேட்கவில்லையே? துளசியும் இல்லை. அவள் இருந்தாலாவது தன் நிலையைச் சொல்லித் தூது அனுப்பலாம்.

இப்போது யாரிடம் சொல்வது? என் மனதை அவள் எப்படிப் புரிந்து கொள்வாள்? எதற்காக என்னிடம் பேசாமல் ஒதுங்குகிறாள்? - தோன்றிய அனைத்துக் கேள்விகளுக்கும் விடை தெரியாமல் பெருமூச்சு வெளியானது.

"மாமோய்!" - மரிக்கொழுந்தின் மென்மையான அழைப்பில் திடுக்கிட்டுத் திரும்பினான்.

எழ மனமின்றிப் படுத்தபடியே கேட்டான். "என்ன?"

"சாப்பிட வா மாமா!"

"வேண்டாம். பசிக்கலை."

"மதியமும் கொடுத்து விட்ட சாப்பாட்டைச் சாப்பிடலையே மாமா! மீன் குழம்பு வெச்சிருக்கேன். ஒரு வாய் சாப்பிடு மாமா!"

"பசிக்கலைன்னு சொல்றேன்ல?"

"ஏன் மாமா இப்படி வயித்தைக் காயப் போடுற? நீ சாப்பிடாம எனக்கு மட்டும் சாப்பாடு இறங்குமா? வா மாமா, சாப்பிடலாம்!" – மரிக்கொழுந்து கெஞ்சுதலாய் அழைக்க... சுள்ளென எரிந்து விழுந்தான்.

"உனக்குப் பசிச்சா... நீ போய்ச் சாப்பிடு. என்னை ஏன் இம்சை பண்ற... போ."

"கோபமா இருக்கியா மாமா?"

"இல்லை. குளுகுளுன்னு ரொம்பச் சந்தோஷமா இருக்கேன்."

"மாமா!"

"இதோ பார். பேசாமப் போயிடு. ஏதாவது பேசி என்கிட்ட வாங்கிக் கட்டிக்காதே. நான் தூங்கணும்!" - என்றவாறு ஒருக்களித்துப் படுத்தவாறு கண்களை இறுக மூடிக் கொண்டான்.

ஒரு கணம் தயங்கி நின்றவள்... அவனது கட்டிலின் அருகே தரையில் அமர்ந்து அவனது காலைப் பிடித்துவிட ஆரம்பித்தாள். சட்டெனக் காலை உதறிக் கொண்டே எழுந்து அமர்ந்தான் ஆதவன்.

"ஏய்! என்ன பண்ற நீ?"



"பகலெல்லாம் உழைக்கிறியே மாமா! உன் கை கால் எல்லாம் வலிக்குமே! அதான் பிடிச்சி விடுறேன் மாமா. நீ தூங்கு மாமா!"

"ஏய்! என்ன நினைப்புலடி இதெல்லாம் பண்ற?"

"மாமா!"

"உன் அண்ணனும் ஆத்தாளும் சொல்லி அனுப்பினாங்களா? போய் அவன் காலைப் பிடின்னு..."

"என்ன மாமா... இப்படிக் கேட்கிற?"

"வேற எப்படிக் கேட்கிறது? நீதான் உன் ஆத்தா என்ன சொன்னாலும் கேட்பியே. நாடகமாடுறது உனக்கும் உன் ஆத்தாளுக்கும் கைவந்த கலையாச்சே!" - வெறுப்பாய்ச் சொல்ல... மரிக்கொழுந்தின் முகம் வாடிப் போனது.

"ஏன் மாமா! இப்படியெல்லாம் பேசுற?"

"இந்தா! இந்த மாதிரி அப்பாவியா நடிச்சா நான் ஒன்னும் ஏமாந்திட மாட்டேன். போ... போய் உன் ஆத்தாகிட்டயும் அண்ணன்கிட்டயும் சொல்லு. இனி எந்த நாடகம் போட்டாலும் ஆதவன் ஏமாற மாட்டான்னு..."

"மாமா! அப்போ... என்னை... என் அன்பை நாடகம்னு சொல்றியா?" - கண்களில் நீர் தளும்பக் கேட்டாள்.

"நாடகம்தான்டி. என்னைச் சுத்தி இருக்கிற எல்லாருமே நாடகம்தான் போட்டு என்னை ஏமாத்துனீங்க? அன்னிக்கு எத்தனை தூரம் பக்குவமா

எடுத்துச் சொன்னேன். சூர்யாதான் என் மனைவி. அவளைத் தவிர இன்னொருத்தியை மனசாலகூட நினைக்க மாட்டேன்னு...

"அவளையே கட்டிக்க மாமான்னு பெருந்தன்மையா சொல்லிட்டு... உன் அம்மாகூடச் சேர்ந்து தற்கொலை நாடகமாடி எல்லாத்தையும் கெடுத்திட்டியேடி... நான்கூட உன்னை நல்லவள்னுதான் நினைச்சிட்டு இருந்தேன்.

"உம்மேல இரக்கமும் அன்பும் வெச்சிருந்தேன். மொத்தமாக் கொன்னுட்டியேடி. இன்னும் எதுக்காக இப்படி வந்து நாடகமாடிட்டு இருக்க? நீ எவ்வளவு பரிதாபமா வேஷம் போட்டாலும் சரி. என் நிழல்கூட உன்மேல படாது. போடி!"

மரிக்கொழுந்து கண்களில் நீர் மல்க... மறுப்பாய்த் தலையசைத்தாள்.

"இ...ல்ல... மாமா! நீ நினைக்கிற மாதிரி நான் எந்தத் தப்பும் பண்ணலை. அம்மாதான்..."

"உன் அம்மா சொன்னா... உனக்கெங்கேடி போச்சு புத்தி? வலுக்கட்டாயமா தாலி கட்டிக் குடும்பம் நடத்த முடியுமா? கல்யாணம்னா ரெண்டு மனசும் இணையணும். சத்தியமா என் மனசு உன்கூட இணையாது."

"மா...மா!"

"நீங்க அன்னிக்குப் பண்ணின சூத்தால மறுநாள் நான் பெண் கேட்டுப் போக முடியாமப் போச்சு. அதனால என் சூர்யாவுக்கு என்னவெல்லாமோ ஆகிப் போச்சு. கால்



போச்சு. அதைக் காரணம் காட்டி அவ அண்ணனும் போயிட்டான்.

"அந்தக் குடும்பமே நிலை குலைஞ்சு போச்சு. இப்ப... அவ என்கிட்ட ஒரு வார்த்தை பேச மாட்டேங்கிறா. என் முகத்தைக் கூட பார்க்க மாட்டேங்கிறா. எத்தனை வருஷ நேசம் தெரியுமா? உன்னால... உன்னால... எல்லாமே மண்ணாப் போச்சு."

மரிக்கொழுந்து நொறுங்கிப் போனாள். இத்தனை ஆண்டுகளாய் இவன்தான் மாப்பிள்ளை எனச் சொல்லிய அன்னையின் பேச்சை வேதமாய் ஏற்றுக் கொண்டது எத்தனை பிழை! மாமன் மனதில் இன்னொருத்தி இருக்கிறாள் எனத் தெரிந்த பிறகாவது ஒதுங்கியிருக்க வேண்டும்.

ஒதுங்கத்தான் நினைத்தாள். ஆனால் முத்தரசி விடவில்லையே... தன் மகளைத் தவிர இன்னொருத்தி இந்த வீட்டுக்கு மருமகளாய் வரக்கூடாது. அப்படி வந்தால் தங்களை வெளியேற்றி விடுவாள் என்று மகளை நம்ப வைத்து... அவளை மயக்கமடைவது போல் நடிக்க வைத்து அழுது ஆர்ப்பாட்டம் செய்து ஊரைக் கூட்டினாள்.

சாமிக்கண்ணுவின் குடும்பமும் அதை உண்மை என்று நம்பிப் பதறித் துடித்தது. தங்கையின் கண்ணீரையும் தங்கை மகளின் நிலையையும் கண்டு பயந்து கையில் மஞ்சள் கயிறோடு மகனிடம் வந்தார் சாமிக்கண்ணு.

ஆனால் யார் என்ன சொல்லியும் ஆதவன் அந்தத் தாலியைத் தொடவே இல்லை. கடைசிவரை கல்லாகவே

நின்று விட்டான். மொத்தக் குடும்பமும் மன்றாடியும் அவன் அசைவதாக இல்லை. கோபத்தில் வீட்டை விட்டு வெளியேற்றினார் சாமிக்கண்ணு.

சற்றும் அசராமல் தன் துணிமணிகளோடு தான் கட்டிக் கொண்டிருந்த வீட்டுக்கு வந்துவிட்டான் ஆதவன். அன்றிலிருந்து இன்று வரை அவனிடம் யாரும் பேசுவதில்லை. ஆனால் மரிக்கொழுந்தால் அப்படி இருக்க முடியவில்லை.

தந்தையின் இழப்பிற்குப் பிறகு தன் பன்னிரண்டாவது வயதில் மாமன் வீட்டில் நுழைந்ததில் இருந்தே ஆதவனின் மீது கொள்ளைப் பிரியம் வைத்தவள்... அவனை உதறவோ ஒதுக்கவோ முடியாமல் திண்டாடினாள்.

ஒதுங்கவும் முத்தரசி விடவில்லை. 'போ! போய்ப் பேசு. அவன்தான் உனக்குன்னு முடிவு பண்ணியாச்சு. இனி எவனும் உன்னைக் கட்டிக்க வர மாட்டான். எப்படியாவது அவன்கிட்ட பேசிச் சம்மதிக்க வை!' - எனத் தூபம் போட்டுக் கொண்டே இருந்தாள்.

சுடலை ஒருபுறம் நச்சரித்துக் கொண்டே இருந்தான். 'அந்தச் சூரியை நானும் விரும்புறேன். அவ எனக்கு வேணும். நீ இவனைக் கட்டினாத்தான் அவ எனக்குக் கிடைப்பாள். நான் அவளைக் கட்டிக்கிட்டா... இவனுக்கு அவ தங்கை முறையாகிடுவா. அதுக்கப்புறம் இவனுக்கு அவ நினைப்பே வராது.

'அவ கொஞ்ச நாளா வேலைக்கு வர்றதில்லை. இனி வரவும் மாட்டா. இதுதான் நல்ல சமயம்.



எப்படியாவது உன் மாமனை வசியம் பண்ணி அவன் கையால தாலியை வாங்கிடு. மத்ததெல்லாம் நான் பார்த்துக்கிறேன்!' - எனத் தூண்டிக் கொண்டே இருந்தான்.

'அவர்கள் இருவருக்குமிடையே மாட்டிக் கொண்டு, ஆதவனை மறக்கவோ இழக்கவோ மனமும் இன்றி என்றாவது ஒரு நாள் நிச்சயம் மாறி... தன்னை ஏற்றுக் கொள்வான் என்ற நம்பிக்கையில் அவன் எத்தனை முறை உதாசீனம் செய்தாலும் சிறுபிள்ளை போல் அவன் காலடியையே சுற்றி வந்தாள் மரிக்கொழுந்து.

இன்று அந்த நம்பிக்கை பொய்த்துப் போனது. இவன் மனதில் அந்தச் சூரி இருக்கும்போது தன்னை எப்படி ஏற்றுக் கொள்வான்? அந்தச் சூரி கொடுத்து வைத்தவள். தனக்கு அந்தக் கொடுப்பினை இல்லை.

இனியும் அம்மாவும் அண்ணனும் சொல்வதை நம்பி மாமனைக் காயப்படுத்தக் கூடாது. தனக்குத்தான் விரும்பியவன் கிடைக்கவில்லை. அந்தச் சூரியாவது விரும்பியவனுடன் வாழட்டுமே... அவளுடன் வாழ்ந்தால் தான் மாமன் வாழ்வு இனிக்கும்.

வீம்புக்காக இவனை மணந்து தங்கள் வாழ்க்கையும் வீணாகிச் சூரியின் வாழ்க்கையையும் வீணாக்குவதா? நிச்சயம் தன் அண்ணனை மணந்தால் அவள் வாழ்க்கை நன்றாய் இருக்காது. அதுவும் விரும்பியவன் வீட்டிலேயே வந்து இன்னொருவனுடன் வாழ முடியுமா?

இதை ஏன் நான் இத்தனை நாட்களாய் யோசிக்கவில்லை? மாமனின் மனம் மாறும் என

நினைப்பது எத்தனை பெரிய முட்டாள்தனம். அவள் நினைப்பில் இப்படித் துரும்பாய் இளைத்துப் போய் விட்டாரே! முதலுக்கே மோசமாகி விடும் போலிருக்கிறதே!'

கண்கள் கலங்க அசையாமல் அமர்ந்திருந்தவளை வெறுப்பாய் நோக்கினான்.

"இன்னும் போகலையா நீ? உங்க சங்காத்தமே வேண்டாம்னுதானே இங்க வந்து ஒதுங்கிக் கிடக்கேன். என்னை நிம்மதியா இருக்க விடமாட்டியா? போ... எழுந்து போ."

"போறேன் மாமா! அதுக்கு முன்னால எனக்கு ஒரே ஒரு பதில் சொல்லு மாமா!"

"என்ன?"

"உனக்கு ஏன் மாமா என்னைப் பிடிக்கலை?"

"என்ன?"

"நான் அழகா இல்லையா? அடக்கமான பொண்ணு இல்லையா? ஏன் மாமா உனக்கு என்னைப் பிடிக்கலை?"

கடுப்பாய் முறைத்தான் ஆதவன். "கோவிச்சிக்காதே மாமா. அப்பனை இழந்தவ நான். இங்கே வந்த நாள் முதலா உன்னைத்தான் உலகமா நினைச்சிட்டு இருக்கேன். உன் கூடவே ஒரே வீட்டில இருக்கேனே... உனக்கு எப்படி மாமா என்னைப் பிடிக்காமப் போச்சு?

"எனக்கு உன்னைத் தவிர வேற யாரையும் தெரியாதே. அந்தச் சூர்யா கறுப்பா சிவப்பான்னு தெரியாது. எனக்கு அவ மேல எந்த விரோதமும்



கிடையாது. நீதான் என்னைக் கட்டிக்கப் போறவன்னு என் அம்மா சொன்னதாலதான் நான் உன்னை விரும்புறேன். இதில என் தப்பு என்ன மாமா? ஏன் உனக்கு என்னைப் பிடிக்கலை?"

தொண்டை அடைக்கக் கேட்டவளைக் கண்டு சற்று மனம் இரங்கினான். உண்மைதான். இதில் இவள் தப்பு எதுவும் இல்லையே! என் மனம் புரியாமல் இவளை மருமகளாக்கிக் கொள்கிறேன் என்றது என் தந்தையின் தவறு.

அறியாத வயதில் இவள் மனதில் ஆசையை வளர்த்து விட்டது இவள் தாயின் தவறு. இதில் இவள் என்ன செய்ய முடியும்? இவளும் என்னைப் போல் இடையில் மாட்டிக் கொண்டு தவிப்பவள்தானே! உள்ளே கனன்று கொண்டிருந்த கோபம் லேசாய்த் தணிந்துவிட... கனிவாய் அவளை ஏறிட்டான்.

"மரி!"

"மாமா!"

"எனக்கு உன் மேல எந்த வெறுப்பும் கிடையாது மரி. உன்னை எனக்கும் பிடிக்கும்!" - ஆதவன் மென்மையான குரலில் சொன்னதும் முகம் முழுக்க மலர்ச்சியாய் நிமிர்ந்தாள் மரிக்கொழுந்து.

"மா...மா! நிசமாவா... சொல்ற?"

"ஆமா மரி. நீ இந்த வீட்டுக்கு வரும்போது சின்னப் புள்ள. எங்க வீட்டுல மூனு பேருமே ஆம்பிள

புள்ளைகதான். அக்கா தங்கச்சி கிடையாது. அதனால நீ வந்ததும் எங்க வீட்டுக்கு ஒரு தங்கச்சி வந்துட்டா. எனக்குத் தங்கச்சி கிடைச்சிட்டான்னுதான் எல்லார்கிட்டயும் சொல்லிச் சந்தோஷப்பட்டேன்."

"மா...மா!" - திகைத்துப் போனாள்.

"ஆமா மரி. என் கண்ணுக்கு நீ அப்படித்தான் தெரிஞ்ச. என் அப்பா மனசிலயோ உன் அம்மா மனசிலயோ என்ன இருந்ததுன்னு எனக்குத் தெரியாது. ஆனா என் மனசுல நீ வர்றதுக்கு முன்னால இருந்தே சூர்யாதான் இருக்கா."

"மாமா!"

"மரி! எங்களோட நேசம் ஒரு நாள் ரெண்டு நாள் நேசமில்ல. விபரம் தெரிஞ்ச நாள் முதல்... கிட்டத்தட்ட பத்துப் பதினைஞ்சு வருஷமா வளர்ந்த நேசம். எனக்கு அவ. அவளுக்கு நான்னு முடிவு பண்ணின பிறகுதான் ஊரே ரெண்டாப் போச்சு. ஆனா எங்க மனசு இன்னும் ஒன்னாத்தான் இருக்கு மரி!"

மரிக்கொழுந்தின் கண்களில் நீர் நிறைந்து வழிந்தது. பேச்சற்றுச் சிலையாய் உறைந்து போனாள்.

"உன் மனசைக் கஷ்டப்படுத்தணும்னு நினைக்கலை மரி. என் மனசுல உள்ளதை நீ புரிஞ்சுக்கணும். ஆணுக்கும் கற்பு உண்டு மரி. இது சூர்யாவுக்காக வளர்ந்த உடம்பு. இதை அவளைத் தவிர யாரையும் தொட விடமாட்டேன். மீறித் தொட்டா என் உசிரு போயிடும் மரி!"



"மாமா!" - வீறிட்டாள் மரிக்கொழுந்து. "வேண்டாம் மாமா! இப்படியெல்லாம் பேசாதே."

"ஆனா உண்மை இதுதான் மரி. அவளை நினைச்ச இதயம் தன்னோட கடைசித் துடிப்பு வரைக்கும் வேற யாரையும் நினைக்காது. ஊருக்காகவோ உறவுக்காகவோ என் இதயத்தைக் கொன்னுட்டு என்னால வாழ முடியாது மரி!

"என்னை என் அப்பாவோ அண்ணனோ யாருமே புரிஞ்சுக்கலை. நீயாவது புரிஞ்சுக்க. தங்கையா நினைச்ச உன்னை என்னால தாரமாக்க முடியாது. சூர்யாவை இழந்து என்னால வாழவும் முடியாது. நான் என்ன செய்யட்டும்? நீயே சொல்லு!"

"மா...மா!"

"உன் அண்ணனோட செயல்பாடு வரம்பு மீறிப் போகுது. எப்பவும் என்னை நிழல் மாதிரித் தொடர்ந்து இம்சிக்கிறான். சூர்யாகிட்ட ஒரு வார்த்தை பேச விட மாட்டேங்கிறான். எந்த எண்ணத்தில இப்படிப் பண்றான்னு புரியலை. என்னைச் சுற்றி என்ன நடக்குதுன்னே எனக்குப் புரிய மாட்டேங்குது.

"படுத்தாத் தூங்க முடியலை. கண்ணை மூடினா சூர்யாவோட முகமும் கண்ணீரும்தான் நினைவு வருது. ஒரு பக்கம் உன்னைப் பார்க்கவும் வருத்தமாகத்தான் இருக்கு. வீட்டில யாரும் என்னோட பேசுறதில்லை. நான் என்ன செய்யுறது?

"இதை யெல்லாம் யோசிச்சு யோசிச்சு எனக்குப் பைத்தியமே பிடிச்சிடும் போலிருக்கு. மூச்சே முட்டுது. இப்படி மூச்சு முட்டித்தான் கண்ணப்பன் மாடியில இருந்து குதிச்சிருப்பானோ? அவனைப் போய்க் கோழைன்னு சொன்னேன்.

"ஆனா... போற போக்கைப் பார்த்தா நானும் அவனை மாதிரி!" - என்றவனைத் தன் விரல்களால் வாயை மூடினாள் மரிக்கொழுந்து. கண்களில் நீர் தளும்பிற்று.

"வேண்டாம் மாமா! இந்த வார்த்தை உன் வாயில இருந்து வரக் கூடாது."

"நான் வேற என்ன பண்றது? உன்னை விட்டுட்டு சூர்யாவைக் கட்டிக்கிட்டா உன் மனசைக் கொல்றதுக்குச் சமம். சூர்யாவை நம்ம வீட்டுல யாரும் ஏத்துக்கப் போறதுமில்ல. உன் அண்ணன் பண்ற கூத்துல சூர்யாவும் என்னை வெறுத்து ஒதுக்கிட்டா.

"இப்படி என்னைச் சுற்றி எல்லாமே தப்புத் தப்பா நடக்கும்போது நான் என்ன பண்ணுவேன்? என்னால என்ன செய்ய முடியும்? போராடித் தளர்ந்திட்டேன் மரி! என் உடம்புலயோ மனசிலயோ இப்பப் போராடுற தெம்பு இல்லை."

"வேண்டாம் மாமா! இனி நீ போராட வேண்டாம். உன் கஷ்டத்துக்கெல்லாம் நான் முற்றுப் புள்ளி வைக்கிறேன்!" - உறுதியான குரலில் சொல்லியவாறு தன் கண்ணீரைத் துடைத்துக் கொண்டே எழுந்தாள் மரிக்கொழுந்து.



நம்ப முடியாத பார்வையோடு தானும் எழுந்தான் ஆதவன். "மரி! நீ... என்ன சொல்ற?"

"நீ அமைதியாத் தூங்கு மாமா. உன் பிரச்சனைகளை நான் தீர்த்து வைக்கிறேன்."

"ஏய்! ஏதாவது ஏடாகூடமா செய்து எங்களைக் கலங்க வெச்சிடாதே. என் கஷ்டம் என்னோட போகட்டும்."

"பயப்படாதே மாமா! நான் சாக மாட்டேன்."

"என்ன செய்யப் போற மரி? எதுவா இருந்தாலும் சொல்லிட்டுச் செய்."

"சொல்றேன் மாமா. அதுக்கு முன்னால என் பக்கம் உள்ள தப்பைச் சரி பண்ணிடுறேன்."

"என்ன?"

"ஆமாம் மாமா. அம்மாவும் அண்ணனும் அடிக்கடி கூடிப் பேசிக்கிறாங்க. எனக்கே தெரியாம ஏதோ பண்றாங்க. அது என்னன்னு தெரிஞ்சிட்டு முதல்ல அதைச் சரி பண்ணினா... உன்னோட சூர்யா உன்னை வெறுக்க மாட்டான்னு நினைக்கிறேன்."

"மரி! நீ... என்ன சொல்ற?"

"ரெண்டு மூனு நாளாவே எனக்கு ஒரு சந்தேகம். நான் சந்தேகப்பட்டது சரின்னா... சூர்யாவோட வெறுப்புக்கு முழுக் காரணம் சுடலையாத்தான் இருக்கும்..." - உறுதியான குரலில் மரிக்கொழுந்து சொல்ல... திகைத்துப் போனான்.

"மரி... அப்படின்னா?"

"பொறு மாமா! நீ படுத்துத் தூங்கு. நான் இன்னிக்கே இதுக்கான விடையைக் கண்டுபிடிக்கிறேன்."

"மரி!"

"நான் வீட்டில இல்லைன்ற தைரியத்தில தாயும் மகனும் இந்நேரம் பயமில்லாமப் பேசுவாங்க. நான் போய்க் கேட்டுட்டு... அதுக்கப்புறம் என்ன செய்யலாம்னு முடிவெடுக்கிறேன்!" - என நகர்ந்தாள்.

"மரி! ஒரு நிமிஷம்..."

"என்ன மாமா?"

"உனக்கு என் மேல... எந்தக் கோபமும் இல்லையே?"

"இல்லை மாமா! என்னால உன்னைக் கோவிச்சுக்கவோ வெறுக்கவோ முடியாது மாமா. நீ எந்தத் தப்பும் பண்ணலையே?"

"ரொம்ப நன்றி மரி!"

"கலங்காதே மாமா. இது என்னால ஏற்பட்ட பிரச்சனை. இதுக்கான தீர்வை நான்தான் எடுக்கணும். இனி உன்னை எதுக்கும் கலங்க விடமாட்டேன். என் மாமன் வீரன். உன் கம்பீரம் குறையக்கூடாது மாமா! நான் குறைய விடமாட்டேன்.

உன் சந்தோஷம்தான் மாமா என் சந்தோஷம். உன் மனசைக் கொன்னு உன்கூட வாழ விரும்பலை நான்.



உன் மனம் போல வாழுவ நீ! நான் வாழ வைப்பேன். நீ எதைப் பத்தியும் யோசிக்காம நிம்மதியாத் தூங்கு. நான் வர்றேன்!" - என்றவள் விடுவிடுவென நடந்து எதிரே இருந்த வீட்டை அடைந்தாள்.

வெளி வராந்தாவில் படுத்திருந்த சாமிக்கண்ணு ஆழ்ந்த உறக்கத்தில் இருக்க... அவரது உறக்கம் கலைந்து விடாமல் ஓசையின்றி மெதுவாய்ப் பாதம் பதித்து... தங்கள் அறையை அடைந்தாள்.

வீடு முழுக்க இருளாய் இருக்க... தங்கள் அறையில் மட்டும் விளக்கொளி தெரிந்தது. தாயும் மகனும் இன்னும் உறங்கவில்லை என்று புரிய... வந்த சுவடு தெரியாமல் வலப் பக்கம் உள்ள அடுக்களைக்குள் நுழைந்து மற்றொரு வாசல் வழியாகத் தன் அறைக்குள் நுழைந்தாள்.

அடுக்களைக்கும் தங்கள் அறைக்கும் இருந்த வழியில் திரைச்சீலை மட்டுமே மறைவாய் இருக்க... அதன்பின்னே நின்று கொண்டு பார்வையை அறைக்குள் செலுத்தினாள்.

அவள் எதிர்பார்த்தது போலவே கட்டிலில் அமர்ந்து சுடலையும் முத்தரசியும் மெல்லிய குரலில் உரையாடிக் கொண்டிருந்தனர்.

மரிக்கொழுந்து காதைத் தீட்டிக் கொண்டாள்.

முத்தரசி மகனிடம் கேட்டாள். "நிசமாத்தான் சொல்றியா? அவ நம்பிட்டாளா?"

"நம்பாட்டி விட்டுடுவேனா? அவ வாயாலேயே சொல்லிட்டாம்மா. இன்னொருத்தி புருஷனுக்கு ஆசைப்பட மாட்டேன்னு..."

"அப்போ நம்பிட்டா!" - வெற்றிகரமாய்ப் புன்னகைத்தாள் முத்தரசி.

"சொன்னது யாரு? இந்தச் சுடலையாச்சே!" - கர்வமாய்ச் சொன்ன மகனை முகத்தைத் தடவி திருஷ்டி கழித்தாள்

"அதானே! நீ எம் புள்ளையாச்சே! அது சரி. ஒருவேளை... இந்த ஆதவன் பயகிட்ட வந்து அவ கேட்டுட்டான்னா..."

"கேட்க மாட்டாம்மா... ஆதி பக்கமே அவ திரும்ப மாட்டா."

"எப்படிடா இவ்வளவு உறுதியாச் சொல்ற?"

"இன்னிக்கு மதியம் கூட அவகிட்ட போய்ப் பேசினான் ஆதி!"

"ஐயோ! அப்போ உண்மை தெரிஞ்சிருக்குமே?"

"அதெப்படி? சரியான நேரத்துக்கு நான் போயிட்டேன்ல. போனது மட்டுமில்ல. உனக்காக வீட்ல ஒருத்தி இருக்கான்னு மறந்திட்டியான்னு ஆதிகிட்டயே கேட்டுப் பேச்சைத் திசை திருப்பிட்டேன். அந்தச் சூரி முகத்தில ஈயாடலை."

மரிக்கொழுந்து புருவம் சுருக்கினாள். 'என்ன பேசுகிறார்கள்? தலையும் புரியவில்லை. வாலும்



புரியவில்லை. கொஞ்சம் சீக்கிரமாய் வந்திருக்க வேண்டுமோ?'

"அப்புறம் என்ன ஆச்சு?" - ஆர்வமாய்க் கேட்டாள் முத்தரசி.

"அப்புறம் என்ன? கொஞ்சம் ஓவராவே பேசிட்டேன். உடனே அந்த மானஸ்தி ஆதியைப் பிடிச்சி வாங்கு வாங்குன்னு வாங்கிட்டாள். பய மூஞ்சி செத்துப் போச்சி. ஒரு வார்த்தை கூடப் பேசாமப் போயிட்டான். இனிமே அவ இருக்கிற பக்கமே திரும்ப மாட்டான். பாரேன்!"

"இது போதும்டா. இதே சூட்டோட மரிக்கும் அவனுக்கும் கல்யாணத்தைப் பண்ணி வெச்சிடணும். நாளைக்கே என் அண்ணன்கிட்ட பேசிடறேன். நீ இது எதுவும் அந்தச் சூரிக்குத் தெரியாமப் பார்த்துக்க."

"அதெல்லாம் தெரியாதும்மா. ஆதி தன்னை விட்டுட்டு மரியைக் கட்டிக்கிட்டான்னு தெரிஞ்சதுமே அவ நடைபிணமாகிட்டா. இனி அவளால எந்தப் பிரச் சனையும் வராது. நீ தைரியமா கல்யாண ஏற்பாட்டைச் செய்யும்மா!"

சுடலை உற்சாகத்தோடு குரலைச் சற்று உயர்த்தியே பேச...

மரிக்கொழுந்துவின் செவியில் அது துல்லியமாய்க் கேட்க...

அதிர்ந்து போனாள்.

# 23



நினைவில் வைத்துக் கனவில்
காண்பதல்ல நேசம்! - மனதில்
வைத்து மரணம் வரையிலும்
தொடர்வதுதான் உண்மையான நேசம்!

மரிக்கொழுந்து அசைவற்றுப் போனாள். சூரியகாந்தியின் விலகலுக்கும் மாமனின் வேதனைக்கும் காரணம் புரிந்துவிட, பொசுபொசுவெனக் கோபம் ஏறியது. பற்களைக் கடித்தவாறே அவர்கள் பேசுவதைக் கவனித்தாள்.

"இந்த ஆதிப் பய பிடி கொடுத்தே பேச மாட்டேங்கிறானே! என் அண்ணனும் ரோஷத்தில் அவன் முகத்திலயே விழிக்காம இருக்காரு. நடுவில மாட்டிட்டு முழிச்சிட்டு இருக்கேன் நான்."

"நீ ஒன்னும் பயப்படாதேம்மா. அந்தச் சூரி நினைப்பிலதான் அவன் நம்ம மரியை ஒதுக்கினான். இப்பத்தான் அவளே இவனை விரட்டிட்டாளே... இனி இவனுக்கு வேற போக்கிடம் ஏது? தன்னால நம்ம வழிக்கு வந்திடுவான்."

"எப்படியோ நம்ம மரியை இந்த வீட்டு மருமகளாக்கிடணும். அவ கல்யாணம் நடக்காம எனக்குச் சோறு தண்ணி இறங்காது."



"யம்மோவ்! மக கல்யாணம் முடிஞ்சதும் என்னை அப்படியே விட்டுடாதே. எனக்கு அந்தச் சூரியைக் கட்டி வை."

"டேய்! அவளைக் கட்டிட்டு என்னடா பண்ணப் போற? உனக்கு வேற நல்ல பொண்ணாப் பார்த்து..."

"வேணாம்... வேணாம். எனக்கு அவதான் வேணும்."

"ஏலேய்! கீழத் தெருவில போய்ப் பொண்ணு கேட்கக் கூடாதுன்னு நாமதானே என் அண்ணன்கிட்ட சொன்னோம். இப்ப எப்படிப் பேசுறது?"

"யம்மா! அது அப்போ. இப்ப இந்த ஊரு எவ்வளவோ மாறிப் போச்சு."

"என்னடா சொல்ற?"

"அதாம்மா! அந்த முருகேசன் பய கண்ணாலம் கட்டினான்ல. அந்த வீட்டுச் சொந்தக்காரனுங்க இப்ப கீழூர்ல பேச்சு வார்த்தை வெச்சிக்கிட்டாங்க. நல்லது கெட்டதுக்கு ஒன்னாக் கலந்துகிடுறானுங்க."

"அட! இது எப்ப இருந்து நடக்குது?"

"அது ஒரு மாசமா நடக்குது. பெரிய இடத்து விவகாரம்ங்றதால எவனும் ஒரு வார்த்தை எதிர்த்துக் கேட்கிறதில்ல. இன்னும் கொஞ்ச நாள்ல ரெண்டு ஊர்க்காரனும் மாமன் மச்சான்னு பழையபடி ஒட்டி உறவாடப் போறானுங்க."

"அவனுங்க எப்படியோ போறானுங்க. அதை விடு. இப்ப நம்ம கதைக்கு வா. நாளைக்கு என்ன செய்யப் போற?"

"விடிஞ்சதும் முதல் வேலையா மரிக்கொழுந்தை அழுது ஆர்ப்பாட்டம் பண்ணச் சொல்லு."

"எதுக்குடா?"

"வீட்டில உள்ளவங்க எல்லாம் கேட்பாங்க. இவ தயங்காம ஒரு பொய்யைச் சொல்லணும்."

"என்ன சொல்லணும்?"

"ஆதி என்னைக் கெடுத்திட்டான்னு சொல்லணும்!" - சாதாரணமாய்ச் சுடலை சொல்ல... நெஞ்சில் கை வைத்து அதிர்ந்தாள் மரிக்கொழுந்து. முத்தரசி கூட ஆடிப் போனாள்.

"ஏய்! என்னடா சொல்ற?"

"வேற வழியில்லைம்மா. மயிலே மயிலேன்னா அவன் இறகு போட மாட்டான். இப்படி எதையாவது அதிரடியா செய்தாத்தான் நாம நினைச்சது நடக்கும்."

"இ...துக்கு... மரி சம்மதிப்பாளா?"

"சம்மதிச்சுத்தான் ஆகணும். மூச்சுக்கு முன்னூறு தரம் மாமா... மாமான்னு புலம்பினா போதுமா? அவன் கையால தாலி வாங்கணும்னா இப்படி எதையாவது சொல்லித்தான் ஆகணும்.

"அப்பத்தான் மாமாவும் பிடிச்ச பிடிக்குள்ள விஷயம் வெளியே கசியாம சட்டுன்னு கல்யாணத்தைப் பண்ணி



வைப்பார். இல்லன்னா நம்ம கதை இலவு காத்த கிளி கதையாகிடும்..."

"நல்லா இருக்குண்ணா. ரொம்ப அருமையான திட்டம்!" - கை தட்டியவாறே வந்தாள் மரிக்கொழுந்து.

"அட! வா மரி. என்ன, ஆதி சாப்பிட்டானா?"

"அதிருக்கட்டும். இப்ப என்னவோ சொன்னியே... அதைத் திரும்பச் சொல்லு. என் காது குளிரக் கேட்கணும்!" - தங்கையின் குரலில் தெரிந்த வித்தியாசத்தைக் கண்டு குழப்பமாய்த் தாயைப் பார்த்தான் சுடலை.

"என்ன மரி! ஒரு மாதிரி... பேசுற?"

"நீ யெல்லாம் ஒரு அண்ணனா? கூடப் பொறந்தவளையே கெட்டுப் போயிட்டேன்னு பொய் சொல்லச் சொல்றியே... உனக்கு வெட்கமாயில்ல?"

முத்தரசி பதறினாள். "ஏய்! இப்ப எதுக்குடி கத்துற? யாராவது முழிச்சிக்கப் போறாங்க."

"விழிக்கட்டும். தூங்குற எல்லாரும் விழிக்கட் டும்னுதான் கத்துறேன்!" - பலத்த குரலில் மரிக்கொழுந்து கத்த... வராந்தாவில் படுத்திருந்த சாமிக்கண்ணுவின் உறக்கம் கலைந்தது.

வீட்டுக்கு வெளியே தவிப்பாய் நின்ற ஆதவன் காதிலும் விழ... திடுக்கிட்டுப் போய் வீட்டினுள் நுழைந்தான். மகனைக் கண்டதும் சாமிக்கண்ணுவின் உறக்கம் சுத்தமாய் விலகிவிட... எழுந்து ஆத்திரமாய் வாயைத் திறக்க... கப்பென அவரது வாயை மூடினான் ஆதவன்.

"சத்தம் போடாதீங்கப்பா. இப்படி வாங்க!" என்றவாறு அத்தையின் அறை அருகே தந்தையை அழைத்து வந்து நிறுத்தினான். அதற்குள் உறக்கம் கலைந்து எழுந்து வந்த அன்னையையும் அண்ணனையும் வாயில் விரல் வைத்து எதுவும் பேச வேண்டாம் என எச்சரித்தான்.

அனைவரும் குழப்பமாய்த் தந்தையை ஏறிட... அவரும் குழம்பிப் போய் இருந்தார். அதற்குள் அறைக்குள்ளிருந்து முத்தரசியின் குரல் ஒலிக்க... அனைவரின் கவனமும் அங்கே சென்றது.

"மரி! சத்தம் போடாதடி. எல்லாரும் எழுந்திடப் போறாங்க."

"ஏம்மா! எல்லாருக்கும் உன் உண்மையான சொரூபம் தெரிஞ்சிடும்னு பயப்படுறியா?"

"என்னடி பேசுற?"

"ஏம்மா! நீயெல்லாம் ஒரு தாயா? ஏம்மா என் மனசில வேண்டாத எண்ணத்தையெல்லாம் விதைச்ச? நானே தப்பான வழியில போனாலும் அடிச்சுத் திருத்த வேண்டிய நீயே என்னைத் தப்புத் தப்பா நடக்க வெச்சிட்டியே...!"

"மரி! ஆதவன் உன் முறை மாப்பிள்ளை."

"எனக்கு முன்னாலேயே அவருக்கு இன்னொரு முறைப் பொண்ணு இருக்காம்மா. அவ வாழ்க்கையைக் கெடுத்துட்டு உன் பொண்ணு வாழணும்னு ஆசைப் படலாமா?"



"ஏய் மரி! யாரு... அந்தச் சூரியையா சொல்ற? அவ உனக்குச் சக்களத்தி இல்லம்மா. உன் மதினி. புரியலை? நான் கட்டிக்கப் போறவ!" - சுடலையின் குரலில் ஆதவனின் நரம்புகள் புடைத்தன. பற்களைக் கடித்தான்.

"ச்சீ வாயை மூடு. அவ மனசில மாமா இருக்கிறது தெரிஞ்சும் இப்படிப் பேசுறியே! உனக்கு அசிங்கமாத் தெரியலை?"

"எனக்கு எந்த அசிங்கமும் கிடையாது. என்னைக் கண்டாலே முகத்தைத் திருப்பிட்டுப் போறாளே. அவளைக் கல்யாணம் பண்ணிக் காலம் பூரா என் முகத்தை மட்டும் பார்க்க வைக்கிறேன். அதுவும் அந்த ஆதிப் பய முன்னாலயே நான் குடும்பம் நடத்தப் போறேன்."

"ச்சீ! நீயெல்லாம் ஒரு மனுஷனா? இவ்வளவு வக்கிரப் புத்தியோட இருக்கிற உன்னை என் அண்ணன்னு சொல்லவே கேவலமா இருக்கு."

"ஏய்! என்னடி வாய் நீளுது!"

"ஆமாண்டா! நீ கேவலமான பிறவிதான். இல்லன்னா கூடப் பிறந்த தங்கையையே கெட்டுப் போயிட்டான்னு பொய் சொல்லச் சொல்றியே! அதுவும் என் மாமன் மேல பழி போடச் சொல்றியே! இந்த வீட்டு உப்பைத் தின்னவன்தானே நீ? உன் புத்தி ஏன் இவ்வளவு கேவலமாப் போச்சு?"

"ஏன்டி இப்படிக் கத்தி ஆர்ப்பாட்டம் பண்ற? எல்லாம் உன் நல்லதுக்குத்தானே சொல்றான்?"

"எதும்மா நல்லது? என் மாமனைக் களங்கப் படுத்தித்தான் நான் அவர்கூட வாழணும்னா அப்படி ஒரு வாழ்க்கையே எனக்குத் தேவையில்லை."

சுடலை எகிறினான்.

"பைத்தியம் மாதிரி பேசாதே மரி. இப்படி எதுவும் சொன்னாத்தான் உன் கல்யாணம் நடக்கும். என்னவோ கொலைக் குற்றம் பண்ணச் சொல்ற மாதிரி குதிக்கிற?"

"இது கொலைக் குற்றத்தை விடப் பெரிசு. என் மாமன் உத்தமன். அவர் மேல சாணியடிக்க என்னால முடியாது."

"இந்தா! சும்மா கத்தாதே. நீதானே அவன் வேணும்னு ஒத்தைக் கால்ல நிக்கிற. நினைச்சது வேணும்னா என்ன வேணா செய்யலாம்."

"ச்சீ! நீயெல்லாம் ஒரு மனுஷனா... நீ நினைச்சது உனக்குக் கிடைக்கணும்னுதானே என்னைப் பகடைக் காயாக்குற?"

"மரி!"

"நீ வாயை மூடும்மா. நான் அன்னிக்கே மாமன் மனசு போல வாழட்டும்னு சொல்லிட்டேன். நீ விட்டியா? சும்மா இருந்த என்னை மயங்கி விழுந்ததாச் சொல்லி அரளி விதையைக் குடிச்சிட்டான்னு சொல்லி மொத்தக் குடும்பத்தையே கதிகலங்க வைச்சிட்டியே! ஏன் அப்படிப் பொய் சொன்னே?"



அறைக்கு வெளியே நின்ற ஒட்டு மொத்தக் குடும்பமும் உறைந்து போனது. சாமிக்கண்ணு திகைப்பாய் ஆதவனை ஏறிட்டார்.

கையில் மஞ்சள் கயிறோடு மரிக்கொழுந்துவின் கழுத்தில் கட்டு என்று மகனை மிரட்டியபோது அவன் சொன்னது நினைவிலாடியது.

'அப்பா! மரி இந்த மாதிரி முட்டாள்தனமான காரியம் எதுவும் செய்ய மாட்டாள். அத்தைதான் ஏதோ நாடகமாடுறாங்க. அத்தை நடிப்புல நீங்க வேணா ஏமாறலாம். நான் ஏமாற மாட்டேன். தாலியும் கட்ட மாட்டேன்!' என்றானே... அது எத்தனை உண்மை. தன் தங்கை தன்னிடம் நாடகமாடினாளா? எதற்காக?

முத்தரசியின் குரல் ஓங்கி ஒலித்தது. "ஆமாண்டி. பொய்தான் சொன்னேன். யாருக்காக? உனக்காகத்தானே! நீ இந்த வீட்டில ராணி மாதிரி வாழணும்னுதானே சொன்னேன்."

"இல்லம்மா! நீ எனக்காக மட்டும் சொல்லலை. எங்கே இன்னொருத்தி இந்த வீட்டுக்கு வந்தா... உன்னால இங்க ஆட்சி செய்ய முடியாதோங்கிற பயம் உனக்கு. இவனுக்கு அந்தச் சூரி மேல உள்ள வெறி. அதான் உங்க ரெண்டு பேரோட சுயநலத்துக்காகவும் என்னைப் பயன் படுத்திகிட்டீங்க."

"ஏய் மரி! உனக்கு என்ன ஆச்சி? எதுக்காக இப்படி நேரங்கெட்ட நேரத்துல கண்டதையும் உளறிட்டு இருக்க?"

"இப்பத்தானே உங்க வேஷம் எனக்குத் தெரிஞ்சிருக்கு. அது மத்தவங்களுக்குத் தெரிய வேண்டாம்?"

"இதோ பார். ஒழுங்கா மரியாதையா நான் சொன்ன பேச்சைக் கேட்டு நட. இல்ல... கூடப் பொறந்தவன்னு கூடப் பார்க்க மாட்டேன்."

"தெரியும்டா! உன் சுயநலத்துக்காக நீ என்ன வேணா செய்வேன்னு எனக்குத் தெரியும். ஆனா நான் உயிரோட இருக்கிற வரைக்கும் நீ நினைக்கிறது நடக்காது."

"என்னடி உளர்ற?"

"சூரியகாந்தி என் மாமனுக்குத்தான். அவ உனக்குக் கிடைப்பான்னு கனவு காணாதே!"

"ஏய்! என்னடி சொல்ற?"

"விடிஞ்சதும் நான் மாமாகிட்ட சொல்லி அவளையே பேசி முடிக்கச் சொல்லிடுவேன். என் மாமனோட சந்தோஷம்தான் எனக்கு முக்கியம்!"

"பைத்தியக்காரி! இது மாதிரி ஏதாவது பண்ணணும்னு நினைச்சே... இப்பவே உன் கழுத்தைத் திருகி உத்திரத்தில மாட்டிட்டு ஆதியாலதான் என் தங்கச்சி செத்தான்னு சொல்லி ஊரைக் கூட்டிச் சொல்லுவேன்.

"அவனை ஜெயிலுக்கு அனுப்பிட்டு சூரியைக் கட்டிக்குவேன். நீ செத்தாத்தான் சூரி எனக்குக் கிடைப்பான்னா உன்னைக் கொல்லவும் தயங்க மாட்டேன்



நான்!" - என்ற சுடலையின் வார்த்தையில் கொதித்துப் போனான் ஆதவன்.

இவன்தானா? இவன்தான் என் சூர்யாவின் பிரிவுக்குச் சூத்திரதாரியா? இவனை இத்தனை காலம் விட்டு வைத்ததே தவறு. ஆத்திரமாய் அறைக் கதவைத் தட்ட முயன்றவனை... தமையனும் தந்தையும் அடக்கினர்.

"அவசரப்படாதே! பொறு."

மகனின் வார்த்தையில் பொறி கலங்கிப் போனாள் முத்தரசி. வாய் உலர்ந்து போயிற்று. "ஏலேய்! என்னலே பேசுத? அவ உன் தங்கச்சி."

"தங்கச்சியாவது அக்காளாவது! உன் மககிட்ட சொல்லி வைம்மா. ஒழுங்கா நான் சொன்ன மாதிரி கேட்டு நடந்தா ஆதவனைக் கட்டிக்கிட்டு குடும்பம் நடத்துவா. இல்லன்னா சுடுகாட்டுக்குப் போயிடுவா."

"ஏலேய்! அரக்கன் மாதிரிப் பேசாதடா. ஒத்தைப் பொட்டப் புள்ளையப் பெத்து அது சந்தோஷமா வாழணும்னுதான் நான் இவ்வளவு பாடுபட்டு என் சொந்த அண்ணனை ஏமாத்திட்டு இருக்கேன். நீ என்னன்னா..."

"யம்மா! இவ ஆதவனைக் கட்டுவாளோ அவன் அப்பனைக் கட்டுவாளோ....? அதைப் பற்றி எனக்கு அக்கறையில்லை. நான் சூரியைக் கட்டணும்னா யாரை வேணா பலி கொடுப்பேன்."

"சுடலை!"

"நான் எவ்வளவு பாடுபட்டு ஆதிக்கும் என் தங்கைக்கும் கல்யாணமாயிடுச்சின்னு சொல்லி இப்பத்தான் ரெண்டு பேரையும் பிரிச்சிருக்கேன். இதே சூட்டோடு இவ கல்யாணத்தையும் பண்ணி வெச்சிட்டா... என் லைன் கிளியராகிடும்னு நான் காத்துக் கிடக்கேன்.

"இவ என்னன்னா பெரிய தியாகி மாதிரி பேசிட்டிருந்தா... ஆத்திரம் வராது?" – சுடலை தெனாவட்டாகப் பேசிக் கொண்டிருக்க... அதற்கு மேலும் வெளியே நிற்கப் பொறுமையின்றி... கதவைக் காலால் எட்டி உதைத்தான் ஆதவன்.

"வரும்டா! உனக்கு ஆத்திரம் வரத்தான் செய்யும். ஏன்னா எப்ப நீ உன் எல்லையை மீறிப் பேச ஆரம்பிச்சியோ... அப்பவே உன் வாயை உடைச்சிருந்தா இந்த ஆத்திரம் வந்திருக்காது.

"உன் உடம்பில எவ்வளவு திமிர் ஏறிப் போயிருந்தா என் சூர்யாவையே மிரட்டியிருப்ப? அவ்வளவு துணிச்சல் எங்கிருந்துடா வந்தது நாயே!" – கண்களில் உக்கிரத்தோடு சுடலையின் கழுத்தைப் பற்றினான் ஆதவன்.

முத்தரசி பதறிப் போனாள். "யப்பா ஆதவா! எம் புள்ளைய வுட்டுடு. அவன் ஏதோ தெரியாமப் பண்ணிட்டான். வுட்டுடுய்யா!"

"அத்தே! உங்க புள்ளைய இப்படி விட்டு விட்டுத்தான் இன்னிக்குக் கூடப் பொறந்தவளையே கொல்லுற அளவுக்குத் திமிரெடுத்துப் போயிருக்கான். ஆதி! அவனை என்கிட்ட விடு. நான் போடுற போட்டுல



அவன் ஜென்மத்துக்கும் எழுந்து நடமாட முடியாது!" - சந்திரன் கோபமாய் உறும... முத்தரசி பயந்து போனாள்.

இறுகிப் போய் நின்றிருந்த சாமிக்கண்ணுவின் கால்களைப் பற்றிக் கொண்டாள். "அண்ணே! என் புள்ளையைக் காப்பாத்துண்ணே! ரெண்டு பயல்களும் சேர்ந்து என் புள்ளையை அடிச்சே கொன்னுடுவாங்க போலிருக்கு."

சாமிக்கண்ணு சற்றும் அசையாமல் நின்றார். அவரது மனம் கொந்தளித்துக் கொண்டிருந்தது. தங்கை மீது வைத்திருந்த கண் மூடித்தனமான அன்பால் கட்டியவளையோ பெற்ற பிள்ளைகளையோ இதுவரை ஒரு பொருட்டாய் மதிக்கவில்லையே!

அவர்களின் மன உணர்வுகளைப் புரிந்து கொள்ளவில்லையே! இவளது நடிப்பைக் கண்டு ஏமாந்து பெற்ற பிள்ளையை வீட்டை விட்டு வெளியே அனுப்பி... தாயையும் பிள்ளையையும் பிரித்தேனே! மனைவியின் கண்ணீரைக் கண்டுகூட நான் மனமிரங்கவில்லையே!

எது என் கண்ணை மறைத்தது? நான் இவள் மீது வைத்திருந்த அளவு கடந்த அன்புதானே? அந்த அன்பை அவள் தனக்குச் சாதகமாக்கிக் கொண்டு என்னை ஏமாளியாய் ஆக்கிவிட்டாளா?

இந்தச் சுடலையும் அப்படியே தாயைப் போலவே இருந்து விட்டானே. என் மகனை நானே வெறுத்து ஒதுக்கும்படி செய்து விட்டானே! என் பிள்ளை தன்னந்தனியாய் எத்தனை நாள் வெட்ட வெளியில்

படுத்திருந்தான்? அதைக் கண்ணால் பார்த்தும் கல் நெஞ்சத்தோடு இருந்து விட்டேனே!

"அண்ணே! செ...ல்லுங்கண்ணே! ஐயோ... என் புள்ளை பல் உடைஞ்சு இரத்தம் ஊத்துதே. அண்ணே! என் புள்ளையைக் காப்பாத்துண்ணே!" – காலைக் கட்டிக் கொண்டு கதறியவளைக் கண் கொண்டும் பாராமல் பாறையாய் இறுகி நின்றார் சாமிக்கண்ணு.

தாமரை ஓடிச் சென்று கணவனையும் மச்சினனையும் சுடலையிடமிருந்து பிரிக்க... செல்லாத்தா முத்தரசியின் தோளைப் பற்றி எழுப்பினாள்.

"என்ன மதினி நீங்க? கால்ல எல்லாம் விழுந்துகிட்டு..."

"என்னை மன்னிச்சிடுங்க மதினி. நான்... எம்மவ நல்லா இருக்கணும்னுதான்... இப்படியெல்லாம்?"

"சரி விடுங்க. அழாதீங்க. வாங்க... இப்படி உட்காருங்க. ஆதவா! அவனை விட்டுடுங்கப்பா. என்ன இருந்தாலும் அவனும் நம்ம வீட்டுப் பிள்ளை."

"இல்லம்மா. இவன் நச்சுப் பாம்பு. இவனுக்கு இத்தனை நாளா நாம பால் வார்த்ததே தப்பு. இவனை அடிச்சே கொல்லணும்."

"ஆதவா!" - உரக்க அழைத்தார் சாமிக்கண்ணு.

அடிப்பதை நிறுத்தி விட்டுத் திரும்பினான்.

"இங்கே வா."



சுடலையை உதறிவிட்டுத் தந்தையின் முன் வந்து நின்றான். "என்னப்பா?"

"நான் நிறையத் தப்புப் பண்ணியிருக்கேன். அதுக்கு நிவர்த்தி செய்ய வேண்டியதிருக்கு."

"அப்பா!"

"அவனையும் அவன் அம்மாவையும் உடனே கிளம்பச் சொல்லு."

"அண்ணே!"

"அவன் பிறந்த ஊருக்குப் போகச் சொல்லுடா. இனிமே அவன் என் கண்ணில பட வேண்டாம். உசிரு மேல ஆசையிருந்தா இனி அவன் இந்தத் திசைப் பக்கம் வந்திடக் கூடாதுன்னு சொல்லி அனுப்பிடு."

"மாமா!" – கண்ணீரோடு அருகே வந்தாள் மரிக்கொழுந்து.

"நீ அழாதே தாயி! உன்னை என் மகளாத்தான் வளர்த்தேன். நீ எங்க கூடவே இரு. உனக்கு ஒரு நல்ல வாழ்க்கையை நான் அமைச்சுத் தர்றேன்."

"வேணாம் மாமா. நானும் அம்மாவோடவே ஊருக்குப் போயிடுறேன்."

"மரி!"

"அம்மா செய்தது தப்புதான். ஆனா அதுக்கான காரணம் நான்தான். நானே அம்மாவை வெறுக்க முடியுமா மாமா?"

"இல்லம்மா. நான் என்ன சொல்றேன்னா..."

"அதோட நான் இங்க இருந்தா என்னைப் பார்க்கும்போதெல்லாம் மாமனோட மனசு உறுத்திட்டே இருக்கும். என்னாலயும் இங்கே உரிமையா உட்கார முடியாது. அதனால நாங்க போயிடுறோம்... மாமா!"

ஆதவன் அவசரமாய்க் குறுக்கிட்டான். "அவசரப் படாதே மரி! நானே உனக்கு மாப்பிள்ளை பார்த்து உன் கல்யாணம் முடிஞ்ச பிறகு நான் கல்யாணம் பண்ணிக்கிறேன்."

"வேணாம் மாமா! ஏற்கெனவே ஊர்ப் பிரச்சனை, வீடு கட்டறேன், என்னோட பிரச்சனைன்னு காலம் கடந்து போச்சு. இனிமே எதுக்காகவும் காலம் கடத்தாதே. எவ்வளவு சீக்கிரம் முடியுமோ அவ்வளவு சீக்கிரமா கல்யாணத்தை முடிச்சிடு. சந்தோஷமா இரு மாமா!"

"மரி! நீ... நீ..."

"கவலைப்படாதே மாமா! எனக்குன்னு எவனாவது பொறந்திருப்பானில்ல? அவன் என் கண்ணில படும்போது நான் கல்யாணம் பண்ணிக்கிறேன். நீ உனக்குன்னு பிறந்தவளை இன்னும் காக்க வைக்காதே. சந்திரன் மாமா!"

"என்ன மரி?"

"இதுவரை ஊர்ப் பிரச்சனை, அது இதுன்னு... ஆதி மாமாவைத் தவிக்க வெச்சது போதும். சூரி உங்க அத்தை மகதானே! உரிமையோட போய்ப் பெண் கேளுங்க.



பாவம்! மனசொடிஞ்சு போயிருப்பா. இனிமேலாவது அவ கண் கலங்காம வாழட்டும்."

"சரிம்மா!"

"மாமோய்!"

"என்ன மரி?"

"விடிஞ்சதும் மொத வேலையா சூரியைப் பார்த்து எல்லாக் குழப்பத்துக்கும் சுடலைதான் காரணம்னு சொல்லிடுங்க. இனி இவனால எந்தப் பிரச்சனையும் வராதுன்னும் சொல்லிடுங்க.

"அதையும் மீறி இவனால உங்களுக்கு ஏதாவது பிரச்சனை வரும்னு தெரிஞ்சா நானே இவனைக் கொன்னுடுவேன்!" - இரத்தம் வழியும் வாயோடு தரையில் அமர்ந்திருந்த சுடலையைப் பார்த்துக் கொண்டே சொன்னாள்.

சுடலையின் முகம் வெதும்பியது. கடுமையாய் முறைத்தவனை ஒற்றை விரல் நீட்டி எச்சரித்தாள் மரிக்கொழுந்து. "என்ன பார்க்கிற? நானும் உன் தங்கைதானே! உன் உடம்பில ஓடுற இரத்தம்தானே என் உடம்பிலும் ஓடுது? என் மாமனோட சந்தோஷத்திற்காக நான் என்ன வேணா பண்ணுவேன்."

கண்கள் கசிய மரிக்கொழுந்தின் கைகளைப் பற்றிக் கண்களில் ஒற்றிக் கொண்டான் ஆதவன்.

"மரி! நீ... எத்தனை உசந்த மனசு கொண்டவ. உன்னை நான் நிறையக் காயப்படுத்தியிருக்கேன். என்னை மன்னிச்சிடும்மா!"

"இல்லை மாமா! நான்தான் உன் மனசு புரியாம உன்னை ரொம்ப சங்கடப்படுத்தியிருக்கேன். ஆனா நீ ரொம்ப நல்லவன் மாமா! உத்தமன். கடைசி வரை உன் மனசைத் தடுமாற விடலையே! நீ கெடைக்க அந்தச் சூரி கொடுத்து வெச்சிருக்கணும். நீ நல்லா வாழ்வே மாமா!" - என்றவளின் கண்களும் கலங்கின.

மகளின் தெளிவான பேச்சில் முத்தரசி குன்றிப் போனாள்.

# 24



உன் கண்களைத் திற,
இனிய உலகம் தெரியும்!
மௌனத்தையும் கலைத்து விடு,
இனிய கீதம் இசைக்கும்!

**வி**டிந்த பிறகும் எழ மனமின்றிப் படுக்கையில் கண்மூடிப் படுத்திருந்தாள் சூரியகாந்தி. நேற்று முழுக்க வேலை செய்ததில் கால்கள் வலித்தன. மனமோ அதிகமாய் வலித்தது.

ஆதவனின் முகமும் சுடலையின் பேச்சும் இதயத்தை அறுத்துக் கொண்டே இருந்தது.

இன்றும் அவன் முகத்தில் விழிக்க வேண்டுமே! இன்னும் எத்தனை காலம் அவன் பார்வையில் படாமல்



ஒதுங்க முடியும்? இந்த வேதனையும்தான் எத்தனை நாள் தாங்குவது?

கண்களைத் திறவாமல் நெற்றியில் கை வைத்து அழுத்திக் கொண்டிருந்தபோது வாசலில் துளசியின் உற்சாகக் கூக்குரல் கேட்டது.

"சூரி! சூரி! பெரியம்மா...!"

சூரியகாந்தி சட்டெனக் கண்களைத் திறந்தாள். படுக்கையை விட்டு எழ முயற்சிக்கையில் உள்ளே வந்து நின்றாள் துளசி. புதுப் பொலிவுடன் மஞ்சள் பூசிய முகத்துடன் நின்றவளின் கைகளைப் பற்றித் தன் அருகே அமர்த்திக் கொண்டாள்.

"துளசி! வாடி. எப்படி இருக்க? எப்போ வந்தே?"

"இப்பத்தான் வந்து நேரே உன் வீட்டுக்குத்தான் வாரேன்."

"உன் புருஷன் வரலையா?"

"அவுகதான் வந்து விட்டுட்டுப் போனாக. சாயந்திரம் வேலை முடிஞ்சி போகும்போது கூட்டிட்டுப் போயிடுவாக."

"என்ன வேலை பார்க்கிறாரு?"

"சின்ன வலசையில சர்க்கரை ஆலையில வேலை பார்க்கிறாக. நீ எப்படி இருக்க சூரி? எங்கே காலைக் காட்டு!" - சூரியகாந்தியின் வலக்காலை எடுத்துத் தன் மடிமீது வைத்து வருடினாள். கண்களில் நீர் சுரந்தது.

"ரொம்ப வலிச்சுதா சூரி?"

"ம்... இப்பத்தான் சரியாப் போச்சே. அழாதடி."

"மன்னிச்சிடு சூரி. நீ இப்படிக் காயம்பட்டுக் கிடக்கும்போது வந்து பார்க்க முடியலையே!"

"பரவாயில்லை. விடுடி. நீ பொம்பளைப் புள்ள. உன்னால எப்படி வர முடியும்? சரி. அதை விடு. காபி குடிக்கிறியா? அம்மா... அம்மா! துளசி வந்திருக்கா. காபி கொண்டாம்மா."

"யாரு துளசியா? வாடிம்மா. எப்போ வந்தே?" - அடுக்களையில் இருந்து வெளியே வந்தாள் கனகம்.

"இப்பத்தான் பெரியம்மா!"

"வீட்ல எல்லாரும் சௌக்கியமா? உன் புருஷன் உன்னை நல்லா வெச்சிருக்கிறாரா?"

"மாரியாத்தா புண்ணியத்துல ஒரு குறையில்லை பெரியம்மா!"

"அதான் வேணும். சரி... ரெண்டு பேரும் பேசிட்டு இருங்க. நான் போய்ப் பால் வாங்கிட்டு வர்றேன்."

"சரி பெரியம்மா!" - என்றவள் கனகம் வெளியேறும் வரை பொறுமையாய் இருந்து விட்டு... அவள் வெளியேறியது தெரிந்ததும் உற்சாகமாய்ச் சூரியகாந்தியிடம் திரும்பினாள்.

"அப்புறம் சூரி! உன் ஆளு எப்படி இருக்காரு?"

"யாரு?"



"ஏய்! இதானே வேண்டாங்கிறது? உன் ஆளுன்னா யாருன்னு தெரியாதா? அதான்டி ஆதி மாமா!"

"ம்ப்ச்! வேற ஏதாவது பேசு துளசி!" - சூரியகாந்தியின் முகம் வேதனையாய்ச் சுருங்க, முகம் மாறினாள் துளசி.

"சூரி! என்ன ஆச்சு உனக்கு?"

"ஏன்? நான் நல்லாத்தான் இருக்கேன்."

"அப்படின்னு உன் வாய்தான் சொல்லுது. மூஞ்சி சொல்லலையே... ஏய்! உனக்கும் அவருக்கும் ஏதாவது ஊடலா? இல்லையே! உன்கிட்ட அவர் கோவிச்சிக்க மாட்டாரே? வேற என்னடி பிரச்சனை?"

"இன்னிக்கே கிளம்பிடுவியா துளசி? ஒரு ரெண்டு நாள் இருந்திட்டுப் போயேன்."

"பேச்சை மாத்தாதே சூரி! ஒழுங்கா நான் கேட்டதுக்கு மட்டும் பதில் சொல்லு."

"வேண்டாம் துளசி! நான் நிறைய விஷயங்களை மறக்கணும்னு நினைக்கிறேன். அதைப் பற்றிப் பேச வேண்டாமே!"

"என்ன? எதை மறக்கணும்னு சொல்ற?"

"எல்லாத்தையும்தான்."

"எல்லாத்தையும்னா...? ஆதவனையுமா?"

"ம்..." - கண்கள் கலங்கத் தலையாட்டினாள் சூரியகாந்தி.

துளசியின் முகத்தில் கோபம் குடியேறியது. "ஏய்! உனக்கென்ன பைத்தியமா பிடிச்சிருக்கு?"

"துளசி!"

"பின்னே? வருஷக்கணக்கா நேசிச்சவனை ஒத்தை நாள்ல மறந்திட முடியுமா? மறந்திட்டு உன்னால உசுரோட நடமாட முடியுமா?"

"முடியணும். முடிஞ்சுதான் ஆகணும். வேற வழியில்லை."

"ஏன்? அப்படி என்ன நடந்தது?"

"என்னவெல்லாமோ நடந்து போச்சு துளசி! உனக்குத் தெரியாதா?"

"தெரிஞ்சா... கேட்பேனா? சொல்லித் தொலை."

"எல்லாம் கைமீறிப் போச்சுடி. எல்லாமே கனவா... கானல் நீராப் போச்சு. என் உசுரு மொத்தமாப் பறிபோயிடுச்சு!" - விம்மி வெடித்தவளை அதிர்ச்சியாய் ஏறிட்டாள் துளசி.

"ச்...சூரி! என்னடி? என்ன நடந்தது?"

"இந்தக் காலு எப்படிப் போச்சுன்னு தெரியுமா?"

"ஏன்? நான்கூட அன்னிக்கு இருந்தேனே. செங்கல் பாண்டு விழுந்துதானே இப்படி ஆச்சு?"

"அது மட்டும்தான் உனக்குத் தெரியும். அதுக்கு முன்னாலயே என் தலையில இடி இறங்கிடுச்சு. அது தெரியுமா உனக்கு?"



"சூரி! என்னடி சொல்ற?"

"அன்னைக்கு சுடலை வந்தானில்ல?"

"ஆமா!"

"அவன் போகும்போது என்ன சொன்னான்னு தெரியுமா?"

"என்ன சொன்னான்?"

"அவன் தங்கச்சிக்கும் ஆதி மாமனுக்கும் கல்யாணம் ஆயிடுச்சாம்."

"எ...ன்ன?"

"மரிக்கொழுந்தும் அவ அம்மாவும் ஏதோ தற்கொலை நாடகமாடி என் மாமனைத் தாலி கட்ட வெச்சிட்டாங்களாம். இவரும் கட்டிட்டாராம்."

"அப்படின்னு அந்தப் பய சொன்னானா?" - துளசி கோபமாய்க் கேட்க... பொங்கிய கண்ணீரோடு தலையாட்டினாள் சூரியகாந்தி.

"போடி இவளே! வாயில நல்லா வந்திடப் போகுது."

"துளசி!"

"உனக்குத் தலையில என்ன களிமண்ணா இருக்கு? எதையும் யோசிக்கவே மாட்டியா?"

"என்னடி?"

"ஏன்டி! அவனே ஒரு அண்டப்புளுகிணிப் பய. அவன் சொன்னான்னு நம்பினியா?"

"அவன் சொன்னதை நானும் நம்பலை."

"பின்னே?"

"இந்த விஷயம் நம்மளைத் தவிர மத்த எல்லாருக்கும் தெரிஞ்சிருக்கு. அவங்க பேசினதை என் காதால கேட்டேன்."

"யாரு பேசினதை?"

"சுப்பக்கா தேனம்மாகிட்ட சொல்லிச்சு..."

"முழுசாக் கேட்டியா?"

"என்ன?"

"நீ கேட்டிருக்க மாட்ட. நடந்தது என்னன்னு நான் சொல்றேன்... கேளு. முதல்ல கண்ணைத் துடை!" - தன் புடவைத் தலைப்பால் தோழியின் கண்ணீரைத் துடைத்து விட்டாள் துளசி.

"என்னன்னு சொல்லு துளசி?"

"உனக்கு அடிபட்டதுக்கு மறுநாள் ஆதவன் என்னைத் தேடி வந்தார்... எங்க வீட்டுக்கே..."

"என்ன?"

"ஆமா! உன்னை ஆஸ்பத்திரி வாசல்ல கார்ல பார்த்தாராம். நீ எதுவுமே பேசலையாமே... உனக்கு என்ன நடந்ததுன்னு கேட்க வந்தாரு. நானும் சொன்னேன். ஆனா உன்னைப் பெரிய ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போனது எனக்குத் தெரியாது. அதனால அதை மட்டும் சொல்லலை."



"ஏன் பொண்ணு கேட்டு வரலைன்னு கேட்டியா?"

"நான் கேட்காமலேயே சொன்னார். வீட்ல எல்லார்கிட்டயும் பேசினாராம். மரிக்கொழுந்துகூட விட்டுக் கொடுத்திட்டு ஒதுங்கிட்டாளாம். சந்திரன் மாமா கூட கொஞ்சம் இறங்கி வந்து உன் அம்மாகிட்ட நேர்ல பேசறேன்னு சொன்னாராம்."

"எ...ன்ன?"

சூரியகாந்தியின் முகம் மலர்ந்தது.

"எல்லாரையும் சமாதானம் பண்ணி எல்லாம் கூடி வர்ற நேரத்தில அந்த முத்தரசிதான் காரியத்தையே கெடுத்திட்டாளாம்."

"எ...ன்ன பண்ணினாளாம்?"

"எம் மக அரளி விதையை அரைச்சிக் குடிச்சிட்டா. இந்த ஆதிப் பயலாலதான் என் மக சாவைத் தேடிக் கிடக்கான்னு ஊரையே கூட்டி ஒப்பாரி வைச்சிருக்கா."

"ஐயோ! அப்ப அவன் சொன்னது உண்மைதானா?"

"மண்ணாங்கட்டி! மரிக்கொழுந்து எதையும் குடிக்கலையாம். எல்லாம் முத்தரசியோட நாடகம். இப்படி அழுது ஆர்ப்பாட்டம் பண்ணினா... தன் அண்ணன் மனசு இரங்கி எப்படியாவது தன்னோட மகனை மிரட்டிக் கல்யாணம் பண்ணி வெச்சிடுவார்ன்னு கணக்குப் போட்டிருக்கா."

"அச்சோ! அப்புறம்?"

"அவ நினைச்சது மாதிரியேதான் நடந்திருக்கு. மகன் கையில தாலியைக் கொடுத்துக் கட்டச் சொல்லியிருக்கார் மாமா. அதுக்கு ஆதி என்ன சொன்னாராம் தெரியுமா?"

"என்ன சொன்னாராம்?"

"கல்யாணம்னு ஒன்னு நடந்தா... அது சூர்யா கூடத்தான். மீறி என்னை மரிக்குக் கல்யாணம் பண்ணி வெச்சா பொணமாகிடுவேன்னு சொன்னாராம்!" - துளசி நிறுத்தி நிதானமாய்ச் சொல்ல... விழிகள் விரிய அதிர்ந்தாள் சூரியகாந்தி.

"என்ன?"

"ம்... கடைசிவரை தாலியைக் கட்டவே மாட்டேன்னு சொல்லிட்டாராம். அதனால மாமாவுக்குக் கோபம் வந்து ஆதியை வெளியே போகச் சொல்லிட்டாராம். அத்தையைக்கூடப் பேச விடலையாம்.

"பாவம் ஆதி மாமா! உனக்காக ஒரு வீடு கட்டுறாராமே... அங்கேதான் தனியே இருக்காராம். உனக்குக் கால் எப்படி இருக்கு? நீ எங்கே போனேன்னு தெரியாம அவர் பட்ட பாடு இருக்கே! அதை வார்த்தையால சொல்ல முடியாதுடி... கண்ணால பார்த்தவ நான்.

"உனக்காக அவர் தன் குடும்பத்தையே பிரிஞ்சி ஒத்தையா நிக்கிறாரு. நீ என்னன்னா... மறக்கணும்னு ரொம்ப சுலபமா சொல்லிட்டியே. இந்த வார்த்தை மட்டும் அவர் காதுல விழுந்தா என்ன ஆகியிருக்கும்?"



"ஐயோ துளசி! இதை விடக் கொடுமையா அவர்கிட்ட பேசிட்டேனே... ஐயோ! தப்பு பண்ணிட்டேனே... என் மாமன் மனசை நானே காயப்படுத்திட்டேனே...!" - பட்பட்டென முகத்தில் அறைந்து கொண்டு அழுதாள் சூரியகாந்தி.

"ஏய்! என்னடி சொல்றே?"

"துளசி! நேத்து வேலை செய்யுற இடத்தில ஆதி என்கிட்ட பேச வந்தார்."

"பேசினியா?"

"இல்லை. அதுக்குள்ள அந்தச் சடலை வந்து வீட்டுல உனக்காக ஒருத்தி காத்துக் கிடக்கா. அது இதுன்னு சொன்னதும் நான் மாமனை ரொம்பத் திட்டி அனுப்பிட்டேன். கோபமாப் பேசிட்டேன்."

"நல்ல காரியம் பண்ணியிருக்கடி. ஒரு மனுஷனை எத்தனை பேர்தான் பந்தாடுவீங்க? அந்தக் கேடுகெட்ட பய சொன்னான்னு இப்படி ஒரு உத்தமமான மனுஷனைத் தூக்கியெறிஞ்சிட்டியே பாவி!"

"அவளைத் திட்டாதே துளசி!" - வாசலருகே கேட்ட மென்மையான குரலில் இருவரும் திடுக்கிட்டுத் திரும்ப... கனகத்துடன் வந்து நின்றான் ஆதவன்.

அவனைக் கண்டதும் தடுமாறி எழுந்தாள் சூரியகாந்தி.

"மாமா! வந்திட்டியா மாமா... உள்ளே வா... மாமா!"

"வாய்யா! இப்படி உட்காரு. நான் காபி போட்டுக் கொண்டாறேன்!" - என்றவாறே கனகம் அடுக்களைக்குள் நுழைய... ஆதவனின் தோளில் சாய்ந்து கண்ணீர் விட்டாள் சூரியகாந்தி.

"என்னை மன்னிச்சிடு மாமா! அந்தப் பய சொன்னதை நான் நம்பியிருக்கக் கூடாது. அன்னிக்கு நீயும் வேலைக்கு வரலையே! அதான் கொஞ்சம் பயந்திட்டேன். மன்னிச்சிடு மாமா!"

"அழாதே சூர்யா! கூடவே இருந்த என்னாலயே அவனோட சூழ்ச்சியைக் கண்டுபிடிக்க முடியலை. எத்தனை பொய் சொல்லியிருக்கான்! நீயும்தான் என்ன பண்ணுவ? சூழ்நிலை அப்படி ஆயிடுச்சு."

"இல்ல மாமா! நான் நம்பியிருக்கக் கூடாது. உன்கிட்ட ரொம்பக் கோபப்பட்டுட்டேனே .. உன்னை என்னவெல்லாம் பேசிட்டேன். எனக்கு மன்னிப்பே கிடையாது."

"ம்... இப்ப அழு. யார் என்ன சொன்னாலும் நம்பிடுறதா? ஆதி மாமன் மேல எனக்கிருந்த நம்பிக்கை கூட உனக்கு இல்லாமப் போச்சே!" - பொய்யாய்க் கோபித்துக் கொண்டாள் துளசி.

"விடு துளசி! பாவம்... அவளும்தான் என்ன செய்வாள்? நான் ஆஸ்பத்திரியில கூடப் போய்ப் பார்க்கலையே! அதனால உண்மைன்னு நம்பியிருப்பா..."

"ம்க்கும். நீ இவளை விட்டுக் கொடுப்பியா?"



"மாட்டேன். யார்கிட்டயும் என் சூர்யாவை விட்டுக் கொடுக்க மாட்டேன்..." - எனச் சூரியகாந்தியைத் தோளோடு சேர்த்து அணைத்துக் கொண்டான்.

"எப்படியோ... நான் இன்னிக்கு வந்ததும் நல்லதாப் போச்சு. இல்லன்னா இவ அழுதே செத்திருப்பா."

"ம்ஹூம்... அந்த அளவிற்கு விட மாட்டேன். நேற்று முழுக்க எங்க வீட்டில பெரிய பெரிய காரியமெல்லாம் நடந்து போச்சு. ஆனா முடிவு நல்ல முடிவா ஆயிடுச்சு."

"என்ன மாமா ந்டந்தது?"

"அதைச் சொல்லணும்னு தொடங்கினா இன்னிக்கு முழுக்கச் சொல்லலாம். முதல்ல நான் வந்த விஷயத்தைச் சொல்லிடுறேன். அத்தே!"

"இதோ வந்திட்டேம்ப்பா!" - கையில் காபியோடு வந்தாள் கனகம்.

"அத்தே! இன்னிக்கு உங்க அண்ணன் தன் குடும்பத்தோடு வந்து உங்க மகளைப் பெண் கேட்கப் போறாங்க..."

"என்ன? என்னப்பா சொல்ற?" - கனகம் நம்ப முடியாமல் கேட்க... சூரியகாந்தி தோழியை நெருங்கி நின்றாள். முகத்தில் வெட்கமும் சந்தோஷமும் போட்டி போட்டன.

"ஆமா அத்தே! இதுக்கு மேலயும் நாங்க காத்திருக்கப் போறதில்ல. முடிஞ்சா நாளைக்கே கல்யாணத்தை வெச்சிடணும்..."

"அடேயப்பா! மாப்பிள்ளைக்கு ரொம்பத்தான் அவசரம் போலிருக்கு!" - துளசி சூரியகாந்தியின் தோளில் இடித்தாள்.

"இருக்காதா? இவளுக்காகக் கிட்டத்தட்ட பதினைஞ்சு வருஷமா ஒத்தக் கால்ல தவம் இருக்கேன்."

"ரெண்டு பேருமே தவம் இருக்கோம்னு சொல்லுங்க."

"அது என்னவோ உண்மைதான்!" - என்ற ஆதவனைப் பார்த்து ரகசியமாய்ப் புன்னகை பூத்தாள் சூரியகாந்தி.

"ஆமா! என்ன நம்ம ஊர்க்காரங்க சமரசமாகிட்டாங்களா? பட்டப் பகல்லயே ஆதி மாமா நம்ம வீட்டுக்கு வந்திருக்கு. ஊர்ல யாரும் பார்க்கலையா?"

"நான் வரும்போதே ஏழெட்டுப் பேர் பார்த்திட்டாங்க. அதுல மூனு பேர் சீறினாங்க. எதுவா இருந்தாலும் என் அப்பாகிட்ட பேசுங்க. நான் என் அத்தை வீட்டுக்குப் போக உங்க யாரோட அனுமதியும் தேவையில்லைன்னு சொல்லிட்டு வந்திட்டேன்."

"ஆஹா! அப்போ இன்னிக்குப் பஞ்சாயத்துக் கூடிடுமே!"

"அதையெல்லாம் என் அண்ணன் பார்த்துப்பான். சூர்யா! உன் வீட்டுப் புழக்கடையில செம்பருத்தி மொட்டு விட்டிருக்கா?"



"ஆமா!" - குழப்பமாய்த் தலையாட்டினாள்.

"நான் பார்க்கணுமே... வந்து காட்டேன்!" - என்றதும், துளசியின் முகம் கேலியாய்ப் புன்னகைத்தது.

"பெரியம்மா! உன் மருமகன் ரொம்ப சாமர்த்திய சாலிதான்."

"ஏன் கண்ணு அப்படிச் சொல்ற?"

"நாம இடைஞ்சலா இருக்கோம்னு பொண்டாட்டியைத் தனியாக் கூட்டிட்டுப் போறாரே!"

"துளசி! உன்னைச் சித்தி தேடப் போறாங்க. நீ இன்னும் உங்க வீட்டுக்குப் போகலையே?" - சூரியகாந்தி சீரியஸாய்க் கேட்க... அவளது முகத்தில் செல்லமாய் இடித்தாள் துளசி.

"ஏய்! காரியம் முடிஞ்சதும் கழற்றி விடுறியாக்கும். போடி! என் வீட்டுக்குப் போக எனக்குத் தெரியும். நீ போய் உன் மாமனுக்கு நீ நின்னு தவம் பண்ணுற இடத்தைக் காட்டு."

"தவமா?"

"ஆமா மாமா! இவ தினமும் உன்னைப் பார்த்துப் பேசுவாளோ என்னவோ... ஆனா கிணத்தடியில நின்னுகிட்டு வானத்தில் தெரியுற ஆதவனைப் பார்த்து மணிக்கணக்கா கதை பேசுவா. உண்டா இல்லையான்னு கேளு!"

"ஏய்! மானத்தை வாங்காதடி... போ."

"சரி... நான் போறேன். இந்த நல்ல விஷயத்தை அம்மாகிட்ட சொல்லணும். வரட்டுமா? மாமா! நான் கிளம்புறேன்."

"சரிம்மா!"

"சூரி! போய்ச் செம்பருத்தி மொட்டைக் காட்டுடி."

"எனக்குத் தெரியும்... நீ போ. வா மாமா!" - என்றவாறு ஆதவனின் கைகோத்துக் கொண்டு நடந்த மகளைக் கண்டு கனகத்தின் கண்கள் பனித்தன.

கிணற்றடியில் உள்ள ஒவ்வொரு பூச்செடியையும் காட்டிச் சூரியகாந்தி பேசிக்கொண்டே இருக்க, ஆதவன் தன் மனம் விரும்பிய பூவின் வெட்கப் புன்னகையை இமைக்காமல் ரசித்துக் கொண்டிருந்தான். அவர்களது ஒட்டுதலைக் கண்டு வானத்துச் சூரியனும் பிரகாசித்தது.